விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI
தமிழ்த்தந்தி
තමිල්ත්තන්ති

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/ thamilthanthi

Follow@thamilthanthi

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக
தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 36 ஞாயிற்றுக்கிழமை 04.08.2019 Sunday 04th August 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

# இந்தியாவின் நலனே கூட்டமைப்பின் அக்கறை



இந்தியாவின் சொற்படியே முடிவெடுப்போம் என்று பலதடவைகள் கூறிய மாவை சேனாதிராஜா

அனல் மின் நிலையத்திற்கு காணிகளை சுவீகரிக்கும் பொழுது வாய் திறக்காத கூட்டமைப்பு



பலாலி விமான தளம்



திருமலை

தமிழரின் பிரதேசங்களை இந்தியாவிற்கு தாரை வார்க்கும் கூட்டமைப்பு

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்

தமிழ் தேசிய கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிப்பதற்கு காரணம் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக வருபவர் இந்தியாவின் நலன்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பார் என்ற ஒரேயொரு காரணத்திற்காகத்தான்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பானவர் இந்தியாவின் நலன்களுக்கு இடையூறு இல்லாமல் இருப்பார் என்ற காரணத்தினால் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

மேலும் எதிர்த்தரப்பு சீனாவின் பக்கம் செல்லக்கூடும் என்ற காரணத்தினாலும், ஐக்கிய தேசிய கட்சி தரப்பு முழுமையாக இந்திய மேற்கு நாடுகளின் நலன்களோடு ஒத்துழைப்பார்கள் என்பதற்காகவும்தான் இவர்கள் இந்த முடிவுக்கு வருகின்றார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் யார் ஆட்சிக்கு வந்தாலும், தமிழ் மக்களுக்கு

02 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் மக்கள் தோற்கடிப்பார்கள்



மஹிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சசீந்ர ராஜபக்ஷ ஆகியோரை வீட்டுக்கு அனுப்பிய ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கத்தின் பிரதமர் ஒருவர் இருக்கும் போது அடுத்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தலின் வெற்றியை அனுபவிக்கும் உரிமை எமக்கு உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

காலி, படதுவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டில் மனித

02 ஆம் பக்கம் பார்க்க

## நெருக்குதல் அரசியலை கூட்டமைப்பு கையிலெடுக்க வேண்டும்



முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டது அனைவரும் அறிந்ததே. ஆனால் நாங்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தோம் அரசாங்கம் தமிழ் மக்களின் நியாயமான கோரிக் கைகளுக்கு இடம்கொடுக்க மாட்டார்கள் என்று.

இவ்வாறு முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் ஒன்று சேர்ந்து ஒருமித்து பயணித்தால், எல்லாவற்றையும் பெறலாம் என்ற முறையில் தான் சம்பந்தன் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்.

அதற்கேற்றவாறு அவர்களைக் கோபப்படுத்திவிடுவோம் என்று

02 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் நீலிக்கண்ணீரை தமிழ் மக்கள் அறிய வேண்டும்!



எங்களது சுழற்சி முறை உணவு தவிர்ப்புப் போராட்டம் 900 நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. எங்களது போராட்டம் எங்களின் பிள்ளைகளுக்கானது மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் சேர்த்துக் குரல் கொடுத்து வருகின்றோம்.

இவ்வாறு தமிழர் தாயகத்தின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அந்த வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இப்பொழுதுதான் இந்த

02 ஆம் பக்கம் பார்க்க


## ஆண்டின் செலவு வீதம் அதிகரிப்பு

இந்த ஆண்டின் கடந்த நான்கு மாத காலத்திற்குள் 962 பில்லியன் செலவு விகிதமாக கணிக்கப்பட்டுள்ளது. 2018ம் ஆண்டு வருடத்தின் முதல் நான்கு மாத செலவிலும் பார்க்க 100ற்கு 10.1 வீதம் அதிகமாக செலவாகியுள்ளதாக நிதியமைச்சர்கள் கூறுகின்றனர் இந்த ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திற்குள் செலவு 756 பில்லியனாகும் ஏனைய செலவுகளாக 211பில்லியன் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

ஏனைய செலவுகளில் அதிகமான செலவு விகிதமாக காணப்படுவது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியமாகும் இதன் செலவு 218 பில்லியனாகும் 2018ம் ஆண்டு

02 ஆம் பக்கம் பார்க்க

## இன்று ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்றைய தினம் இடம்பெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடாளாவிய ரீதியில் 2995 பரீட்சைநிலையங்களில் இந்தப்பரீட்சை நடைபெறவுள்ளது. அத்துடன் 495 இணைப்பு

02 ஆம் பக்கம் பார்க்க

## சுயாதீனமாக தீர்மானம் எடுக்க வேண்டி வரும்



ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் புதிய கூட்டணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் தீர்மானிக்கப்படுவதாக இருந்தால், அக்கூட்டணியின் கட்சித் தலைவர்களுடன் முன்னெடுக்கப்படும் விரிவான கலந்துரையாடலின் பின்னரே அது இடம்பெற வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் ஜனாதிபதி

02 ஆம் பக்கம் பார்க்க

## மரண தண்டனையை ஒழிக்கும் சட்டத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வர முயற்சி



ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற துரதிஷ்டவசமான சம்பவத்தின் பின்னர் பயங்கரவாதத்தை முற்றாக துடைத்தெரியும் புதிய சட்டங்களை கொண்டுவர வேண்டுமென இன, மத பேதமின்றி சமூகத்தில் கருத்து நிலவிய போதும் மூன்று மாதங்கள் கடந்த பின்னரும் அந்த சட்டத்தை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்காத சிலர் மரணதண்டனையை ஒழிப்பதற்கான சட்டங்களை விரைவாக பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு முயற்சிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

02 ஆம் பக்கம் பார்க்க

## ஆகஸ்ட் 11 வேட்பாளர் அறிவிக்கப்படுவார்



ஐக்கிய தேசிய கட்சியினருக்கு மற்ற கட்சிகளுடன் கூட்டணி அமைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டிய பகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரச்சார நடவடிக்கைகள் (03) ஆரம்பமான போதே பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த

02 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர் உற்சவம் நாளை மறுதினம் ஆரம்பம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் உற்சவாகால முன் ஆயத்தமாக நாளை (05.08.2019) மதியத்திலிருந்து 01.09.2019 நள்ளிரவு வரை வீதித்தடை நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

02 ஆம் பக்கம் பார்க்க

## வங்காள விரிகுடாவில் காற்றின் வேகம் அதிகரிப்பு

வங்காள விரிகுடாவின் வடக்கு மற்றும் மத்திய கடற்பகுதிகளில் நாளை (05) முதல் எதிர்வரும் 09 ஆம் திகதி வரை கடற்றொழில் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆபத்தானது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டை சூழவுள்ள கடற்பிரதேசங்களில் மணித்தியாலத்திற்கு 70-80 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே, 05 ஆம் திகதி

02 ஆம் பக்கம் பார்க்க

## மருமாதா உற்சவம் செவ்வாய் ஆரம்பம்

**ரூபன்**

கத்தோலிக்க மக்களின் மடுத்திருத்தலத்தின் ஆவணி மாத திருநாள் இம்மாதம் 6 ஆம் திகதி செவ்வாய் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நவநாள் வழிபாடுகள் 14 ஆம் திகதி வியாழன் வரை மாலையில் நடைபெறும்.14 ஆம் திகதி மாலை நற்கருணை ஆராதனை,பவனி, ஆசிர் இடம்பெறும்.15 ஆம் திகதி புதன் காலை



02 ஆம் பக்கம் பார்க்க

# காலநிலை மாற்றத்தால் அவதியுறும் மீனவர்கள்



**பாறுக் ஷிஹான்**

காலநிலை மாற்றங்கள் தொடர்ந்து கடந்த இரு தினங்களாக நிலவுவதால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த வெள்ளிக்கிழமை(2) மருதமுனை, பாண்டிருப்பு,பெரியநீலாவணை சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, நிந்தவூர், ஒலுவில், பொத்துவில் போன்ற பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரிப்பு காற்றின் திசை மாற்றம் , கடல் நீரின் தன்மை வழமைக்கு மாறாக குளிர்ச்சியாக காணப்படுதனால் மீன்பிடி குறைவடைந்துள்ளது.

மேலும் இதனால் கரைவலை மீனவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாயவலை மீனவர்கள் சில இடங்களில் மீன்பிடியில் ஈடுபட்டு வருமானம் ஈட்டி வருகின்றனர்.அத்துடன் மீன்பிடி உபகரணம் உள்ளிட்ட படகுகள் கரையோரங்களில் மூடி வைக்கப்பட்டுள்ளது.

மீனவர்களில் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்;

திடீரென கடலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் மீன்பிடித்தொழில் வீழ்ச்சியடைந்திருப்பதாகவும், அன்றாட மீன்பிடி குறைவடைந்துள்ளதனால் நாளாந்த வருமானமும் பாதிப்புற்றுள்ளது.

கடல் நீரோட்டத்தின் தன்மையின் மாற்றம் காற்றின் வேகம் , நீரின் தன்மையின் மாறுதல் போன்ற காரணிகளால் கடற்றொழில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக எமக்கு தெரிவித்துள்ளனர்.

# புகையிரத சேவைக்காக 1500 பேரை நியமிப்பதற்கு தீர்மானம்

இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு சேவையாளர்கள் 1500பேரை நியமிப்பதற்கு சிவில் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் அர்ஜின ரணத்துங்க அவர்கள் தீர்மானித்திருப்பதாக புகையிரத திணைக்கள செய்திகள் கூறுகின்றன தற்பொழுது 5 வருட காலமாக சேவையில் ஈடுபட்டிருப்பவர்களையும்,தற்காலிக ஈடுபட்டிருப்பவர்களையும் நிரந்தர சேவையாளராக்குவதற்கு வேண்டுகோல் விடுத்திருப்பதாக தெரியவருகின்றது.

புகையிரத திணைக்களத்திற்கு புதிய சேவையாளர்கள் நியமிப்பதற்கு பெயர் பட்டியலினை அனுப்பி வைப்பதாக புகையிரத தொழிற்சங்க தலைவர் அமைச்சருக்கு தகவல் வழங்கியிருப்பதாக கூறப்படுகின்றது.

# ஆடிபூரத்தினை முன்னிட்டு மலையக ஆலயங்களில் விசேட பூஜைகள்

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

ஆடிப்பூரம் அம்பாளுக்குரிய விசேஷ தினமாகும். ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் இந்த விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த நல்ல நாளில்தான் உமாதேவி அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன.

உலக மக்களை காப்பதற்காக அம்பாள், சக்தியாக உருவெடுத்த தினம் ஆடிப்பூரம் என்று கூறப்படுகிறது. ஆடிப்பூரம் விழா சைவ ஆலயங்களில் மட்டுமல்லாது, வைணவ தலங்களிலும் வெகு சிறப்பாக நடைபெறும். ஏனெனில் ஆண்டாள் அவதரித்த தினம் ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரம் ஆகும். பூமா தேவியே ஆடிப்பூர நாளில் ஆண்டாளாக அவதரித்தாள் என்கின்றன புராணங்கள்.

இதனையொட்டி மலையக ஆலயங்களில் நேற்று விசேட பூஜைகள் இடம் பெற்றன.

ஹட்டன் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் ஆடி பூரத்தினை முன்னிட்டு கும்ப பூஜை ,திரவிய அபிசேகம்,குங்கும அர்ச்சனை,அலகார பூஜை ஆகிய இடம்பெற்று அம்பாள் உள் வீதி வலம் வந்த பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.



## நெருக்குதல்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

அமைதியாக இருந்தார். ஆனால் நாங்கள் எப்பொழுதுமே சொன்னோம் இது நடக்காது என்று. தமிழ் மக்களை அழிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கும் சிங்கள தலைவர்கள் எங்களுக்கு எதையும் கொடுக்க மாட்டார்கள்.

கொடுப்பதாகக் காட்டிக் காட்டி, கடைசியாக எதையுமே கொடுக்க மாட்டார்கள். அதுதான் எங்களின் தற்போதைய நிலைமை. கடந்த கால சரித்திரமும், அண்மைய சரித்திரமும் அப்படித்தான்.

ஆகவே அந்த அடிப்படையில், அவர்கள் அதை விமர்சனம் செய்கின்றார்கள். அதை விமர்சனம் செய்ய வேண்டிய அவசியமில்லை. இதன் உண்மைத் தத்துவத்தை புரிந்திருந்தால். இதன் அடுத்த கட்டமாக இதன் உண்மைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டு, எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதுதான் எங்களின் பிரச்சினையாக இருக்க வேண்டும்.

மக்களுக்கு முன்னால் ஒன்றைக் கூறிவிட்டு மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்தால் மக்கள் அவர்களை அடையாளம் கண்டு, அவர்களை வெறுப்பார்கள். அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. ஏனென்றால் தேர்தலுக்காக சில நடவடிக்கைகளை எடுத்துவிட்டு, தேர்தலின் பின்னர் யாராவது ஒருவருடன் சேர்ந்து இணக்க அரசியல் என்று சொல்லிப் போனார்கள் என்றால் மக்கள் அவர்களைத் தூற்றுவார்கள்.

ஆகவே இனி இணக்க அரசியலுக்கு இடமில்லை. அதற்காகத்தான் நான் சொல்லிக் கொண்டு வருகின்றேன். நெருக்குதல் அரசியல்தான் தற்பொழுது தேவை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மடுமாதா...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

மரியன்னையின் விண்ணேற்பு திருநாள் கூட்டுத்திருப்பலி ஆயர்களால் ஒப்புக்கொடுக்கப்படும்.

அதனைத்தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும்,வழிபாடும்,ஆசீரும் இடம்பெறும். கடந்த ஆடி திருநாளைவிட இத்திருநாளுக்கு அதிக பக்தர்கள் வருவார்கள் என அருட் தந்தை ஒருவர் தெரிவித்தார்.

## நல்லூர்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## வங்காள...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

முதல் 09 ஆம் திகதி வரை வங்காள விரிகுடாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதியை பயன்படுத்த வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையும் பொத்துவில் முதல் மட்டக்களப்பு வரையிலான கடற்பிராந்தியங்களிலும் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 முதல் 65 கிலோமீட்டர் வரை அதிகரிக்கும் எனவும் குறித்த கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை முதல் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையிலும், ஹம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையிலான கடற்பிராந்தியங்களும் கொந்தளிப்பாகக் காணப்படும் என திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மரண...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு என்ற கருப்பொருளில் இடம்பெற்ற வடமேல் மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா குருணாகலை சேர். ஜோன் கொத்தலாவல மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக உலகத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்காதிருப்பது அவர்களது உயிர் அச்சுறுத்தல் ஏற்படும் அல்லது தமது ஆட்சி அதிகாரத்திற்கு இந்த கடத்தல்காரர்களினால் பாதிப்பு ஏற்படும் என்று அறிந்திருப்பதன் காரணத்தினாலாகும் என்றும் இதனை அறிந்து தான் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை தான் ஆரம்பித்திருப்பதாகவும் எந்த தடைகள் வந்தாலும் தனது இந்த போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை அதைரியப்படுத்தும் நோக்குடன் தனக்கெதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் முன்வைத்து வருவது அரசியல்வாதிகளினால் பலம்பெற்றுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களே என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்கால தலைமுறையினரை பாதுகாப்பதற்கு தனது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி போதையிலிருந்து விடுதலைபெற்ற நாட்டை உருவாக்கும் எண்ணக்கருவிற்கேற்ப போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக பாடசாலை பிள்ளைகளுக்கு அறிவூட்டி போதைப்பொருளுக்கு எதிரான எதிர்கால தலைமுறையொன்றை உருவாக்கும் நோக்குடன் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதனுடன் இணைந்ததாக வடமேல் மாகாண ஆளுநர் பேசல ஜயரட்னவின் வழிகாட்டலில் போதையிலிருந்து விடுபடுவோம் என்ற கருப்பொருளின் கீழ் இந்த போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

## ஆகஸ்ட்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

அளுத்கமகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ஆகஸ்ட் 11 ஆம் திகதி அறிவிக்கப்படுவார் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியினருக்கு கூட்டணி அமைக்காது ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளரை நிறுத்த முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் யோசனைகளுக்கு கட்சிக்குள் பெரும்பான்மையாக எதிர்ப்புகள் உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

## சுயாதீனமாக...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

வேட்பாளர் ஒருவரை கூட்டணி ஊடாக களமிறக்குவதாயின் தனக்கு சுயாதீனமாக தீர்மானம் எடுக்க வேண்டிவரும் எனவும் அமைச்சர் கூறினார்.

தற்போது ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கடும் குழப்பம் எழுந்துள்ள நிலையில் அவர் தனது நிலைப்பாட்டை கூறியுள்ளார்.

## ஆண்டின்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

எல்லா ஆண்டுகளையும் விட இந்த ஆண்டின் நுற்றிற்கு 3.9 வீத்தில் அதிகரித்திருப்பதாக தெரியவந்துள்ளது.

அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய சம்பளமாக இவ் வருட நான்கு மாத காலத்திற்குள் பில்லியன் செலவாகியுள்ளது. 2018ம் ஆண்டின் காலப்பகுதியுள் 62 பில்லியன் மாத்திரமே செலவாகியுள்ளது.அதன் அடிப்படையில் ஓய்வூதிய சம்பளத்திற்காக 2018 ஆண்டில் ணற்றில் 17.8 வீதம் செலவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

## இன்று...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப்பரீட்சையில் 3,39,369 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.இரண்டு வினாத்தாள்களை கொண்டதாக அமையும் இந்தப்பரீட்சை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். முதலாவது வினாத்தாள் 45 நிமிடங்கள் நடைபெறும். அடுத்த வினாத்தாள் நிமிடங்கள் கழித்து அடுத்த வினாத்தாள் ஒருமணிநேரம் 15 நிமிடங்களை கொண்டதாக அமையும்.

இரண்டு வினாத்தாள்களுக்குமிடையில் 30 நிமிடநேர ஓய்வு அளிக்கப்படும்.

இதன்படி முதலாவது வினாத்தாள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். இரண்டாவது வினாத்தாள் முற்பகல் 10.15 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவுபெறும்.பரீட்சார்த்திகள் அனைவரும் 9 மணிக்கு முன்னர் பரீட்சை நிலையங்களுக்கு முன்னர் சமுகம் தர வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பரீட்சார்த்திகளின் வலது கரம் பக்கத்தில் சுட்டெண் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பரீட்சார்த்திகள் கட்டாயம் தமது சுட்டெண்களை விடத்தாளில் எழுதுதல் வேண்டும். பரீட்சையின்போது பென்சில் அல்லது கறுப்பு பேனையை பயன்படுத்தலாமெனவும் பரீட்சைகள் திணைக்ளம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாளை உயர்தரப்பரீட்சை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

உரிமைகள் மீறப்பட்டு, ஊடகவியலாளர்களின் கை, கால்களை உடைக்கப்பட்டதாகவும், தந்தையின் மரண வீட்டிற்கு வந்த போத்தல ஜயந்த, எனக்கு இன்னும் பயமாக இருக்கிறது பழைய அவதார் மீண்டும் வந்து எங்கள் வாழ்க்கையை அழித்து விடும் எனவும் கூறியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதனால் அப்படிப்பட்டவர்கள் நாட்டில் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற முயற்சித்தால் மக்கள் அவர்களை தோற்கடிக்க தயாராக இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பின்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

அரசாங்கம் தமிழர்களுக்கு தீர்வினைத் தராது என்ற ரீதியில் விமர்சிக்கத் தொடங்கியுள்ளார்கள். அதன் உச்சக்கட்டமாக இன்று (நேற்று) அவர்கள் யாழ்ப்பாணத்தில் பௌத்த மேலாதிக்கத்திற்கு எதிராக போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தார்கள்.

அதன் போலித்தன்மையை, அதாவது பௌத்த மேலாதிக்கத்திற்கு அடித்தளமிட்டுவிட்டு, அதற்கெதிராக போராடுவது வேடிக்கையானது. அதை அம்பலப்படுத்தும் முகமாக நாங்கள் யாழ்ப்பாணம் சென்று அவர்களுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியிருந்தோம்.

இப்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பு பௌத்தத்திற்கு முதலிடம் வழங்கிவிட்டு தற்பொழுது அதற்கெதிராக போராட்டம் நடத்துவது தமிழர்களை அடிமுட்டாளாக்கும் செயல். தமிழர்களுக்கு எதிராக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தற்பொழுது அவர்களின் உண்மை முகம் தமிழர்களுக்கு தெரிந்ததால் அதிலிருந்து தப்புவதற்காக இந்த நாடகங்களை அரங்கேற்றுகின்றார்கள்.

வடக்கு, கிழக்கு இணைப்பினைக் கைவிட்டார்கள், நாவற்குழியிலே பௌத்த விகாரை அமைப்பதற்கு மாவை அனுமதி வழங்கினார், நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் பௌத்த விகாரை அமைக்கும் பொழுது இவர்கள் அமைதியாக இருந்தார்கள், கன்னியா விவகாரத்தில் சிறு குரலைக் கூட எழுப்பாத சம்பந்தனும், சுமந்திரனும் அமைதியாக இருக்கின்றார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எங்கு தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளை ஆரம்பித்தாலும் அங்கே நாங்கள் இருப்போம். அவர்களின் முகத்திரையை கிழிப்போம் என்ற எச்சரிக்கையையும் விட்டு வந்திருக்கின்றோம். அத்துடன் தமிழ் மக்கள் எல்லோரும் இவர்களின் இந்த செயற்பாட்டைக் கண்டு அனைவரும் புறக்கணிக்கவேண்டும். இந்தப் போலிகளை தமிழ் தேசிய அரங்கிலிருந்து அகற்ற வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியாவின்

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

எதிரான சிங்களக் குடியேற்றங்கள், வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கல் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறும். பொறுப்புக் கூறல் நடைபெறப் போவதுமில்லை, அபிவிருத்திகளும் நடைபெறவில்லை. புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளும் நடைபெறப் போவதுமில்லை. காணாமல் போனவர்களுக்கு நீதி கிடைக்கப் போவதுமில்லை. காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் ஒருபொழுதும் நடைபெறப் போவதில்லை.

இந்திய மேற்கு நாடுகளுக்கு சார்பானவர் ஒருவர் வந்தால், போர்க்குற்ற விசாரணைகள் தேவையில்லை, அதெல்லாம் சிறப்பாக நடக்கின்றது என்று மேற்கு நாடுகள் சொல்லும். மற்றத் தரப்பு வந்தால் அவர்கள் தாங்களாக செய்ய மாட்டார்கள். ஆகவே மொத்தத்தில் ஒன்றும் நடைபெறப் போதில்லை.

ஆகவே இந்தஇடத்தில் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமல், எந்தவொருவரும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட முடியாத நிலைமைதான் இருக்கின்றது. ஜனாதிபதியாக வெற்றிபெறுபவருக்கு தமிழ் மக்களின் வாக்குகள் கண்டிப்பாகத் தேவை.

ஆகவே இந்தத் தருணத்திலாவது தமிழ்த் தரப்பு பேரம் பேசவேண்டும். அதாவது தமிழ் தேசம் அங்கீகரிப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை முன்வைத்து, அந்த நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக் கொள்ளுமாக இருந்தால், அந்தத் தரப்பிற்கு வந்து நாங்கள் ஆதரவு கொடுப்பதற்கு சிந்திக்க முடியும்.

அப்படி அவர்கள் எந்த ஒரு நிலைப்பாட்டினையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்று சொன்னால், குறிப்பாக இந்தியா அதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அப்படி ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் குறிப்பாக இந்தியா அதை ஏற்றுக் கொள்ளுமாக இருந்தால் இந்தியா விரும்புவரை ஆதரிப்பதைபற்றி நாங்கள் யோசிக்கலாம்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டு தலைமையை விமர்சிப்பது எல்லாம் இந்தியா விரும்புவரை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதற்காக மக்கள் முன் போடும் நாடகம். குறிப்பாக சம்பந்தன் ஆதரிக்கும் தரப்பை இவர்கள் எல்லாம் ஆதரிப்பார்கள். இந்தியா விரும்பும் நபருக்கு சம்பந்தன் கண்ணைமூடிக் கொண்டு ஆதரிப்பார். எந்த வித நிபந்தனைகளும் விதிக்காமல். அந்தத் தரப்பை இவர்கள் எல்லாரும் ஆதரிப்பார்கள்.

தமிழ் மக்கள் நலன்சார்ந்த எந்த பிரச்சினைகளுக்கும் கூட்டமைப்பு தீர்வினைப் பெற்றுத் தராது. ஏனெனில் அது சம்பந்தமாக எந்தவித பேரம் பேசல்களையும் அரசாங்கத்துடன் இவர்கள் பேசவில்லை. அப்படி செய்வதாக வெளியில் சொல்வதெல்லாம் பொய்.

கடந்த காலங்களில் மாவை சேனாதிராஜா பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறார் தாங்கள் இந்தியாவுடன் கதைத்துப் பேசித்தான் பல விடயங்களில் செயற்படுகின்றோம் என்று. ஆனால் அவர்கள் கதைத்துப் பேசி எடுத்த எந்தவொரு முடிவும் தமிழ் மக்களுக்கு சாதாகமானதாக இருக்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் நலன்களைப் பலியிடுவதாகத் தான் அமைந்திருக்கிறது.

இவ்வாறு இவர்கள் முடிவுகள் எடுத்து மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் இந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்த அரசாங்கத்தைப் பயன்படுத்தி இந்தியா தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

உதாரணமாக பலாலி விமான நிலைய விஸ்தரிப்புப் பணிகளை இந்தியாவுக்கு சாதகமான வகையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல திருகோணமலை துறைமுகத்தையும் எதிர்காலத்தில் அந்த எண்ணெய் தாங்கிகளை கையாளுவதற்கான வாய்ப்புகளையும், இந்தியா பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமைகளை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

அதில் எங்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அந்த விடயங்களில் நாங்களும் ஒத்துழைப்பதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால் இவற்றை நாங்கள் இந்தியாவிற்காக செய்கின்ற பொழுது, தமிழ் தேசத்தை இந்தியா அங்கீகரிக்கின்ற முடிவுக்கு வரவேண்டும். அப்படியில்லாமல் தொடர்ச்சியாக எங்களுடைய மக்களை நடுத்தெருவில் விட்டு, எங்களின் மக்கள் வறுமையில் வாடுகின்ற பொழுது, மக்களின் பொருளாதாரம் அழிந்து கொண்டிருக்கின்ற பொழுது, எங்களின் மக்களின் வாக்குகளைப் பற்றி வெறுமனே இந்தியாவிற்கு சார்பான அரசாங்கத்தை தக்க வைப்பதற்காக மட்டும் செயற்பட்டுக் கொண்டிருப்பதை ஒருபொழுதும் அனுமதிக்க முடியாது.

சீனாவின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், சீனா இந்தியாவின் தேசிய பாதுகாப்பை ஒடுக்கும் முகமாக உள்நுழைகின்ற சீனாவின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அந்த விடயத்தில் நாங்கள் ஒத்துழைப்பதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால் இந்தியாவின் நலன்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற தமிழ் மக்களின் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்தியாவின் நலன்களுக்காக முடிவெடுக்கின்ற பொழுது இந்தியா தமிழ் தேசத்தை அங்கீகரிக்க முடிவை எடுக்க வேண்டும். அதில் நாங்கள் மிக இறுக்கமாக இருப்போம்.

முந்தைய அரசாங்கத்தை குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ போரை நிறைவு செய்தவுடன் அவரை இலங்கை பாராளுமன்றத்தில் முதலில் பாராட்டியது சம்பந்தன்தான். அதன்பின் மகிந்த ராஜபக்ஷ சீனாவுடன் அதிகமாக நெருக்கம் காட்டியபொழுது அவரை கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்கா ஜெனீவாவில் வைத்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்த பொழுது, அதை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, ஒரு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி, ராஜபக்ஷ என்றைக்குமே தப்பித்துக் கொள்ள முடியாத ஒரு சூழலை உருவாக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்த பொழுதும், அதைச் செய்யாமல் வெறுமனே வந்து, ராஜபக்ஷ மீது சர்வதேச விசாரணை வருவுதை தடுத்து வைத்திருந்தது வந்து, மாவை சேனாதிராஜா தலைமையிலான ஜெனீவாவிற்கு சென்ற குழுதான்.

சம்பந்தனின் பணிப்பின் பேரில், மாவை சேனாதிராஜா தலைமையில், சுமந்திரனோடு இணைந்து ஜெவீவா சென்ற பதினைந்து பேரும்தான் இவர்கள் எந்த அரசாங்கம் வரக்கூடாது என்று சொல்கின்றார்களோ, அந்த அரசாங்கம் இன்றை வரைக்கும் அவர்கள் பதவியில் இருப்பதற்கும், சுதந்திரக் கட்சியை உடைத்துக் கொண்டு மொட்டுக் கட்சியை உருவாக்கி, அந்தக் கட்சி இன்றைக்கு பூதாகரமாக வளர்ந்து நிற்பதற்கும் அடித்தளமிட்டவர்கள் மாவை சேனாதிராஜா தலைமையில் ஜெனீவாவிற்கு சென்ற குழுவினர்தான் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பாலத்தை நிர்மாணிப்பதில் தாமதம் - மக்கள் அவதி

**சுஜீவன் தலவாக்கலை**



நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அக்கரபத்தனை மற்றும் லிந்துலை பிரதேசங்களிலுள்ள பாலங்கள் சில மக்களின் போக்குவரத்திற்கு பொருத்தமானதாக இல்லாத நிலைமை தோன்றியுள்ளது. அதேவேளை சில பாலங்கள் பல வருடங்களாக பழுது பார்க்காமையினால் அவற்றினூடாக பயணிப்பது தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் அக்கரபத்தனை பிரதேசசபை நிர்வாகத்திற்குட்பட்ட பசுமலை நகரிலிருந்து பச்சை பங்களா தோட்டத்திற்கு செல்லும் வழியில் காணப்படும் பிரதான பாலம் ஒன்றினை கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் நிர்மாணப் பணிகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருவதன் காரணமாக குறித்த பாலம் இல்லாத நிலையில் அவ்விடத்தில் தற்காலிகமாக ஒரு பாலத்தை உருவாக்கியுள்ள போதிலும் அதன் ஊடாக பயணிப்பதில் பல்வேறு சிரமங்களுக்கு பாடசாலை மாணவர்கள் உட்பட பிரதேச மக்கள் போக்குவரத்து வருவதாக தெரிவிக்கின்றனர் . அத்தோடு குறித்த பாலத்தினை பச்சை பங்களா தோட்ட மக்கள் மாத்திரமன்று மேலும் அப்பிரதேசத்திலுள்ள பல தோட்டங்களைச் சேர்ந்த மக்களும் பயன்படுத்துகின்றனர். குறித்த பாலத்தினூடாக தினமும் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமானோர் பயணித்து வரும் நிலையில் இப்பாலத்தின் நிர்மாண பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

குறித்த பாலம் பழுதடைந்த நிலையில் தற்பொழுது நிர்மாணப் பணிகளும் மந்த கதியில் நடைபெற்று வரும் நிலையில் இப்பிரதேச மக்கள் மாற்று வழியை பயன்படுத்தி வருகின்றனர். அதற்கமைய பசுமலை நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தமது கிராமத்திற்கு பயணித்த மக்கள் தற்பொழுது தமது வசிப்பிடங்களுக்கு செல்வதற்காக சுமார் 12 கிலோமீற்றர் தூரம் வரை பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இதற்கு முன் முச்சக்கரவண்டி நூறு ரூபா மாத்திரமே செலவிட்டதாகவும் தற்பொழுது ரூ 700 முதல் ரூ1000 வரை செலவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்தோடு தற்காலிகமாக இப்பிரதேசத்தில் போடப்பட்டுள்ள பாலமானது அபாயகரமானதாக காணப்படுகின்ற நிலையில் இவ்வழியாக பயணிப்பதில் பாடசாலை மாணவர்கள் வயோதிகர்கள் நோயாளிகள் என பலரும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வது பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர்.

எனவே குறித்து பாலத்தின் நிர்மாண பணிகளை துரிதப்படுத்தும் அதனூடாக பிரதேச மக்கள் அனுபவிக்கும் சொல்லனா துயரங்களை விரைவில் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அத்தோடு அக்கரகந்த பெயார்வெல் ஆகிய பிரதேசங்களில் உள்ள பாலங்களும் மிக மோசமான நிலையில் இருந்து வருகின்றனர். அவற்றினை பழுது பார்ப்பதிலும் அல்லது புதிதாக நிர்மானிப்பதிலும் இதுவரை காலமும் நுவரெலியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகளோ அல்லது அரசு அதிகாரிகளோ எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். குறித்த பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையில் அப்பாலங்கள் இன்று மிக மோசமான நிலையில் இருந்து வருவதாகவும் பாலங்கள் ஊடாக பயணிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் அச்சத்துடனேயே செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# வரட்சியிலும் இரட்டிப்பு வருமானம்

**வவுனியா நிருபர்**

வவுனியா அரசாங்க விதை உற்பத்தி பண்ணையில் இவ்வருடம் முதல் ஆறு மாதத்திலும் கடும் வரட்சிக்கு மத்தியிலும் இரட்டிப்பு வருமானப்பெருக்கம் காணப்படுவதாக விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவின் பிரதி மாகாணப் பணிப்பாளர் ஏ.சகிலாபானு தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற அபிவிருத்திகுழு கூட்டத்தின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

விவசாய பண்ணையில் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வருமானமானது செலவிலும் குறைவாக அல்லது செலவுக்கு சமானமாகவே காணப்பட்டது. இதற்கு பல காரணங்கள் உள்ளது. எனினும் இவ்விருடம் முதல் ஆறு மாதத்திலும் கடும் வரட்சியான காலநிலை காணப்பட்ட போதிலும் வருமான பெருக்கம் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. இவற்றில் நெல் அறுவடையின் மூலம் அதிகளவான வருமானம் பெறப்பட்டுள்ளது.

ஊடகங்களில் தற்போது இப்பண்ணையில் ஊழல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டு வரும் நிலையிலேயே இவ் வருமானப்பெருக்கம் ஈட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இவ் அபிவிருத்தி குழு கூட்டத்தில் உண்மை நிலையினையும் வருமான பெருக்கத்தினையும் வெளிப்படுத்துகின்றேன் என தெரிவித்தார்.



பெரியகல்லாறு வடபத்திரகாளி அமமன் ஆலயத்தின் ஆடிப்பூர. பெருவிழாவை முன்னிட்டு நேற்று ((03) சனியன்று சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பாற்குடபவனி வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தை வந்தடைந்ததும் அங்கு பாலாபிஷேகம் செய்து வைக்கப்படுவதை படங்களில் காணலாம்.

படம்: பெரியகல்லாறு நிருபர்

# உயர்பீட தீர்மானத்திற்கு மாற்றமாக அமைச்சுப் பதவி ஏற்கவில்லை

**பைஷல் இஸ்மாயில்**



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்சின் தலைமை அமைச்சுப் பதவியேற்றது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களது வேண்டுகோளுக்கு அமைவாக மாத்திரமே என முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எ.எல்.எம்.நஷீர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட தீர்மானத்திற்கு மாற்றமாக அமைச்சுப் பதவி ஏற்கப்பட்டுள்ளதா என வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் உயர்பீடத்தில் பொருத்தமான தீர்மானத்தினை மேற்கொண்டு கட்சியையும், சமூகத்தையும் வழிநடாத்தும் பொறுப்பு தலைவரிடம் உள்ளது. சமூகத்தின் தேவைகள் குறித்து முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

வழமை போன்று முஸ்லிம் காங்கிரசை விமர்சித்து சந்தோசம் அடையும் கூட்டத்தினர் அதை தொடர்ந்தும் செய்து கொண்டே இருக்கின்றார்கள். அவர்களுக்கு தேசிய அரசியல் பற்றியோ முஸ்லிம் மக்களின் நலன் குறித்தோ எவ்விதமான ஆர்வமும் கிடையாது.

விசேடமாக அமைச்சரவையில் எமது தலைமையின் தேவைப்பாடு கடந்த மூன்று மாதங்களுக்குள் மிக பலமாக உணரப்பட்டுள்ளது. இந்நிலையில் மாகாண சபை தேர்தல் தொடர்பிலான விவகாரங்களும் மிகவும் இறுக்கமான நிலைக்கு வந்துள்ளன.

மாத்திரமின்றி, நமது மக்களின் காணி விவகாரங்களையும், பிரதேச சபைகள், செயலகங்கள் என்பன தொடர்பிலான தீர்க்கமான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. கல்முனை செயலகம், வாழைச்சேனை சபை தொடர்பிலாக பேசப்பட்டுள்ளது. தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன. தமிழ் கூட்டமைப்பினருடனான பேச்சுவார்த்தை வெற்றி பெற்றுள்ளது. அமைச்சர் வஜிர அபேவர்த்தன மிக சாதகமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

எனவே முஸ்லிம்களின் நிலை குறித்து பேசுபவர்களின் அழுத்தங்களையும் கொண்டே இந்த அமைச்சுப் பதவி ஏற்பு இடம்பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

# வருடாந்த பரிகலவேள்வி

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டைபறிச்சான் அம்மன்நகர் அருள் மிகு அம்மச்சியம்மன் கோவிலின் வருடாந்த பரிகல வேள்வி 06-08-2019 செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணிக்கு கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் கோவிலிருந்து மடைப்பெட்டி எடுத்து 07-08-2019 புதன் கிழமை விஷேட பூஜை நிகழ்வுகள் நடைபெற்று, பரிகல வேள்வி எல்லாம் வல்ல பராசக்திக்கு இடம் பெறவுள்ளது.

அம்மச்சியம்மன் அடியார்கள் அன்றைய தினம் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து விழாவில் கலந்து சிறப்பிக்கின்றமை சிறப்பாகும்.

# அல் ஹிஜ்ரா மத்திய வீதியை இரகசியமாக அலீம் வீதி என பெயர் மாற்றம்

**முள்ளிப்பொத்தானை நிருபர்**



திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உற்பட்ட முள்ளிபொத்தானை பகுதியில் 'அல் ஹிஜ்ரா மத்திய வீதி' பிரதேச சபையில் அனுமதிக்கப்பட்ட வீதியாகும்.

தற்போது ஹிஜ்ரா நகர் கிராம 228/எ வடக்கில் உள்ள ஹிஜ்ரா நகர் கிராம அபிவிருத்தி சங்க தலைவரும், முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு அமைப்பாளருமான எம் அலீம் அவர்களின் தன்னிச்சையின் பயணாக சட்ட விரோதமாகவும், இரகசியமாகவும், தனது சொந்த பெயரையும் இவ் வீதிக்கு வைத்துள்ளார்.

அத்தோடு அரசாங்கத்தினால் முன்னெடுத்து வரும் வேலைதிட்டத்தின் கீழ் பாரளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீகின் நிதி ஒதிகீட்டின் பத்து இலட்சம் ரூபா செலவில் செயப்பட்ட கம்பெரலிய வேலை திட்டத்தின் கீழ் இவ் வீதி தொகை மாற்றமாக பெயர் பலகையில் ஒரு கோடி ருபாவாக மாற்றி கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சட்ட விரோத செயலில் ஈடு பட்டு வருவதாக பொது மக்கள் விசனம் தெரிக்கின்றனர்.

இது தொடர்பாக அரச அதிகாரிகளை இவ்வாரன செயலில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தமிழ் மொழி மூல அரச ஊழியர்களுக்கு சிங்கள பாடநெறி



**பெரியநீலாவணை நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அரச ஊழியர்களுக்கு தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் அனுசரணையோடு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடாத்தி வந்த இரண்டாம் மொழி சிங்கள பாடநெறி பூர்த்தி விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மருதமுனை பொது நூலக மண்டபத்தில் (02.08.2019) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பிரதம அதிதியாகவும் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் எம்.சி.எம் அன்சார், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.எம்.லத்தீப், கல்முனை வடக்கு பதில் பிரதேச செயலாளர் என். நவநீதராஜா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டு படநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்தனர்.

தொடர்ச்சியாக 12 நாட்கள் நடைபெற்ற இந்த பாடநெறியை கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் கலந்துகொண்ட அதிதிகளும் இங்கு கௌரவிக்கப்பட்டார்கள்.

சிங்கள மொழி பாடநெறியை பூர்த்தி செய்து கொண்ட அரச ஊழியர்களின் கலை கலாசார நிகழ்வுகள் அனைவரினதும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருந்தன.

பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டிய அரச ஊழியர்கள் இரண்டாம் மொழியை கற்றிருக்க வேண்டியதன் அவசியம் பற்றி அதிதிகள் இங்கு விளக்கி கூறினார்கள்.

# யானைகளின் அட்டகாசம்

**துரைவந்தியமேடு நிருபர் இ.சுதாகரன்**

வெல்லாவெளி பிரதேச செயலக நிருவாக எல்லைக்குட்பட்ட கிராமங்களில் இரவு வேளைகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதாகவும் இதனால் மக்கள் மத்தியில் பயப்பீதி ஏற்பட்டுள்ளது.கடந்த இரு தினங்களுக்கு முன்னர் விளாந்தோட்டக் கிராமத்தினுள் இரவு வேளையில் நுழைந்த யானைக் கூட்டமானது வீட்டுத் தோட்டப் பயிர் செய்கை மற்றும் குடியிருப்புக்கள் கிராமத்திலுள்ள பாடசாலையின் வகுப்பறைக் கதவுகளையும் சேதப்படுத்தியிருக்கின்றன.

பாடசாலையின் சேத விபரங்கள் தொடர்பாக பாடசாலையின் அதிபர் வெல்லாவெளிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்திருக்கின்றார்.

# பாலம் வேண்டும்

**துரைவந்தியமேடு நிருபர்**

மண்டூர் முதல் குருமண்வெளி வரையான சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரங் கொண்ட ஓடத்துறைக்கு நிரந்தரமான தரைமார்க்கமான பாலம் அமைப்பது தொடர்பாக கடந்த காலங்களில் பரவலாகப் பேசப்பட்ட போதிலும் இது வரைக்கும் பாலம் அமைக்கப்படாமல் மௌனம் காப்பதன் நோக்கம் என்ன என்பது மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும்.

குறித்த நீர் மார்க்கமான பாதையானது எழுவான் கரையிலிருந்து படுவான் கரைக்கு அதிகளவான பிரயாணிகள் தினமும் பயணம் செய்யும் பிரதான பாதையாகும். கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற சின்னக்கதிர்காமம் என்று சிறப்பிக்கப்படும் மண்டூர் முருகன் ஆலயத்திற்கு செல்லும் பிரதான பாதையாகும்.

குறித்த நீர்மார்க்க பாதைக்கு பாலம் அமைப்பதற்கு சுமார் மூன்று தடவைகளுக்கு மேல் அடிக்கல் நடப்பட்டிருப்பதாகவும் இதன் கட்டுமாணப்பணிகள் இது வரைக்கும் ஆரம்பிக்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றமை மக்கள் மத்தியில் ஏமாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது.

# மஸ்கெலியாவில் மனித உரிமை மீறல் பற்றிய செயலமர்வு

**மஸ்கெலியா மேலதிக நிருபர்**

மனித உரிமை செயற்பாட்டாளர்களினால் மஸ்கெலியாவில் மனித உரிமை மீறல் பற்றிய செயலமர்வு ஜுலை 27,28ம் திகதி மஸ்கெலியா றோயல் கலாச்சார பிரதான மண்டபத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் மஸ்கெலியா பிரதேசத்தில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கான பயிற்சி நெறி நடைபெற்றது.

மேற்படி செயலமர்வில் சமூக நல உத்தியோகஸ்தர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் தோட்ட வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். இந்நாட்டில் பிறந்த சகலருக்கும் இன, மத, மொழி, சாதி, அரசியல்கொள்கைகள்,பிறப்பிடம் காரணமாக ஓரங்கட்ட முடியாது எனவும் மற்றும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதோ மற்றும் மனிதாபமற்ற முறையில் நடத்துவதோ குற்றம் எனவும் இதை மீறுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய வழிமுறைகள் மக்கள் உரிமைகளை பாதுகாத்தல் மேம்படுத்தல் உரிமைகள் மீறப்படாது தடுத்தல் சம்பந்தமாகவும் இச்செயலமர்வு நடைபெற்றது.

மேற்படி இச்செயலமர்வில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவை சார்ந்த திரு.ம. கணகராஜ் (பிராந்திய இணைப்பாளர்- யாழ்பாணம்) திரு. கபிலன் (மனித உரிமை கல்வி அதிகாரி -கொழும்பு) திரு. அருண் சிவஞானம் (விசாரணை அதிகாரி-திருகோணமலை) ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறிப்பாக இலங்கை பொலிசாரால் ஒருவர் கைது செய்யுமிடத்து கைது செய்யப்படும் நபரின் குடும்ப அங்கத்தவர்கள் பொலிசாரிடம் கைது செய்யப்படுவதற்கான காரணம் ஏன் அதற்கான அத்தாட்ச்சி தருமாறும் எங்கு கொண்ட செல்கின்றீர்கள் நீதவான் முன்னிலையில் எப்போது நிருத்துவீர்கள் என கேட்கும் உரிமை உண்டு எனவும் மலையக பகுதியை பொருத்த மட்டில் தற்போது மலையகத்தில் அமைத்து வரும் இல்லங்கள் முறையாக இடம் பெருகின்றதா அதன் விபரம் பற்றியும் பிரதேச சபைகள் ஊடாக இடம் பெறும் ஊழல்கள் சம்பந்தமாகவும் எமக்கு புகார்கள் வந்துள்ளது.

அதே போல் அரச பாடசாலைகள் வைத்தியசாலைகள் வங்கிகள் மிருக வைத்தியசாலை போன்றவற்றின் புகார்கள் கிடைத்துள்ளது இது பற்றிய விபரம் உயர் பீடம் வரை கொண்டு சென்றுள்ளோம். யார் ஒருவர் லஞ்சம் கேட்டால் அவர்கள் பற்றியும் நீங்கள் எமக்கு முறைபாடு செய்யுங்கள் என அங்கு கூடியிருந்தவர்களுக்கு எடுத்து கூறினார் (இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தலைமைக் காரியாலயம்) ஆர். ஏ.டி மெல்மாவத்தை கொழும்பு 04 என்ற முகவரிக்கு புகார்களை கடிதம் மூலம் அனுப்புமாறு கோரியுள்ளனர்.



# ரஷ்யாவுடன் செய்த அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியது அமெரிக்கா



ரஷ்யா - அமெரிக்கா இடையே பனிப்போர் காலத்தில் செய்து கொள்ளப்பட்ட மத்திய தூர அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து முறைப்படி விலகிவிட்டது அமெரிக்கா.

ஆயுதப் போட்டி மூளும் என்ற அச்சத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

மத்திய தூர அணு ஆயுத ஒப்பந்தம் (இன்டர்மீடியேட் ரேஞ்ஜ் நியூக்ளியர் ஃபோர்சஸ் டிரீட்டி) 1987-ம் ஆண்டு அப்போதைய அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் மற்றும் சோவியத் ஒன்றியத் தலைவர் மிகயீல் கோர்பச்சேவ் இடையே கையெழுத்தானது.

500 கி.மீ. முதல் 5,500 கி.மீ தூரம் சென்று தாக்கவல்ல ஏவுகணைகளை இந்த ஒப்பந்தம் தடை செய்தது.

புதியவகை சீரியங்கு ஏவுகணைகளை (குரூய்ஸ் மிசைல்) பயன்பாட்டுக்கு கொண்டுவந்ததன் மூலம் இந்த ஒப்பந்தத்தை ரஷ்யா மீறுவதாக அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் இந்த ஆண்டுத் தொடக்கத்தில் இருந்தே குற்றம்சாட்டிவந்தன. ஆனால், இதை ரஷ்யா மறுத்துவந்தது.

# சௌதி பெண்கள் தனியே பயணிக்க அனுமதி இனி ஆண்கள் துணை கட்டாயமில்லை



ஆண் பாதுகாவலரின் துணையின்றி பெண்கள் வெளிநாடு பயணிப்பதற்கு சௌதி அரேபியாவில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

21 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் ஆண் பாதுகாவலரின் அனுமதியின்றி கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம் என்று (வெள்ளிக்கிழமை) சௌதி அரேபிய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சௌதி அரேபியாவின் ஆண்களை போன்றே பெண்களும் எவ்வித வேறுபாடுமின்றி வெளிநாட்டு பயணம் மேற்கொள்வதற்கு இதன் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, சௌதி அரேபிய பெண்கள் தங்களது திருமணம், குழந்தை பிறப்பு மற்றும் விவாகரத்தை பதிவு செய்யும் உரிமையும் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணையில் மூலம், அந்நாட்டில் பணியிடத்தில் பெண்களுக்கான வாய்ப்புகளை அளிப்பது தொடர்பான மாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம், சௌதி அரேபியாவை சேர்ந்த அனைவரும் பாலினம், வயது, மாற்றுத்திறன் உள்ளிட்ட எவ்வித வேறுபாடுமின்றி பணிவாய்ப்புகளை பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சௌதி அரேபியாவை பொறுத்தவரை, ஒரு பெண் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றாலோ அல்லது வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்ள வேண்டுமென்றாலோ தனது தந்தை அல்லது பாதுகாவலர் அல்லது உறவினர் ஒருவரது அனுமதியை பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சௌதி அரேபியாவை காலத்திற்கேற்றவாறு மேம்படுத்தும் நோக்கில் பெண்களை கார் ஓட்ட அனுமதிப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அந்நாட்டின் பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான் செயல்படுத்தி வருகிறார்.

இதுதொடர்பாக, 2016 ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட தொலைநோக்கு திட்டத்தில், 2030ஆம் ஆண்டுக்குள் பணியிடத்தில் பெண்களின் பங்களிப்பை 22 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக உயர்த்துதல் போன்ற அறிவிப்புகளை வெளியிட்டார்.

இருப்பினும், சௌதி அரேபியாவை சேர்ந்த பெண்கள் தாங்கள் பாலின அடிப்படையில் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுத்தாக தெரிவித்து கனடா போன்ற நாடுகளில் தஞ்சம் கோரும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்தாண்டின் தொடக்கத்தில், தனது குடும்பத்தினரிடம் இருந்து தப்பி சென்று தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கின் விமான நிலையத்தில் தடுக்கப்பட்ட சௌதி பெண்ணுக்கு அவரது கோரிக்கையின் அடிப்படையில் கனடா தஞ்சம் அளித்தது.

சௌதி அரேபியாவில் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அவ்வப்போது குற்றஞ்சாட்டி வருகின்றன.

# பூனைகளுக்கு அன்பு காட்டியதால் சிறை தண்டனை



பலமுறை எச்சரித்த பிறகும் உள்ளூர் சட்டத்தை மீறி ஆதரவற்ற பூனைக்கு உணவளித்த காரணத்தால் அமெரிக்காவை சேர்ந்த 79 வயது மூதாட்டிக்கு பத்து நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நான்சி சென்குலா எனும் அந்த மூதாட்டியின் அண்டை வீட்டார் தங்களது பகுதியில் சுற்றித் தெரியும் ஆதரவற்ற பூனைகள் குறித்து 2015 ஆம் ஆண்டு முதலே புகாரளித்து வருகின்றனர். தனக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது குறித்து அறிந்துக் கொண்ட பிறகு பாக்ஸ் 8 செய்தி நிறுவனத்திடம் பேசிய நான்சி, ‘எனக்கு பூனைகள் என்றால் மிகவும் பிடிக்கும்என்று கூறினார். வரும் 11ஆம் தேதி முதல் நான்சி தனது 10 நாள் தண்டனை காலத்தை அனுபவிக்கத் தொடங்க வேண்டுமென்று ஒஹாயோவிலுள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நான்சியின் செயல்பாட்டின் காரணமாக ஆதரவற்ற பூனைகள் கூடுவது எங்களுக்கு பிரச்சனையை ஏற்படுத்துவதாக அவருடைய அண்டை வீட்டார் கடந்த நான்காண்டுகளாக தொடர்ந்து புகாரளித்து வருவதாக ஒஹாயோ மாகாணத்தின் கிளைவ்லேண்ட் பகுதிக்கு அருகிலுள்ள கார்பீல்டு ஹைட்ஸ் பகுதியை சேர்ந்த காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

உள்ளூர் சட்டவிதியின்படி, ஆதரவற்ற விலங்குகளுக்கு உணவளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அதை மீறிய குற்றத்திற்காக, 2015 ஜூலையில் நான்சி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, 2017 ஆம் ஆண்டு மே மாதமும் இவர் மீது அதே போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

# 220 காதல் தோல்விகளால் விரக்தி நாயை திருமணம் செய்த மாடல் அழகி



இங்கிலாந்து நாட்டின் கிழக்கு எஸ்கார்ட் பகுதியை சேர்ந்தவர் எலிசபெத் ஹோட். பிரபல மாடல் அழகியான எலிசபெத்துக்கு தற்போது வயது 49 .

மாடலிங் துறையில் பிரபலமான இவர் கடந்த வாரம், தான் வளர்க்கும் நாயுடன் திருமணம் செய்துகொள்ளப் போவதாக அறிவித்தார். இது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அறிவித்தது போலவே இன்று தனது நாயை திருமணம் செய்து கொண்டார்.

4 முறை நிச்சயதார்த்தம் வரை சென்ற அவரது திருமண வாழ்வு கல்யாணத்தில் சென்று முடிவடையவில்லை. இதுவரை 220 ஆண்களை காதலித்தும் எந்த காதலும் வெற்றி அடையவில்லை.

எனவே ஆண்கள் மீது விரக்தியான அவர் திருமணம் செய்துகொள்வதில் ஈடுபாடு இல்லாமல் இருந்து வந்தார். கடந்த வாரம் எலிசபெத் இந்த அறிவிப்பை வெளியிட்டதும் பிரபலமான தனியார் தொலைக்காட்சியில் அவர் திருமணம் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

திருமண நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பு என்றும் அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் இந்த நிகழ்ச்சியை பார்க்க தொலைக்காட்சி முன் ஏராளமானோர் குவிந்தனர்.

எலிசபெத் தன்னுடைய ‘லோகன்’ என்ற நாயை அறிமுகப்படுத்தி, மோதிரம் மற்றும் பிரேஸ்லெட் மாற்றி திருணம் செய்துகொண்டார். ‘நான்கு முறை நிச்சயதார்த்தம் முடிந்து திருமணம் நின்றுபோனநிலையில், நாயை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தேன். அந்த திருமணம்தான் இது’ என்று நிகழ்ச்சி தொகுப்பாளர்களிடம் எலிசபெத் தெரிவித்தார்.

‘நான் லோகனை காணும் முன்வரை உடைந்திருந்தேன். என்னை லோகன் காப்பாற்றியது, நான் அதை காப்பாற்றினேன்’ என்றும் கூறினார்.

ஒருவருடத்துக்கு முன்புதான் அந்த நாயை எலிசபெத் வாங்கியுள்ளார். ‘என்னுடைய தோழிகள் பலரும், ஆண்களை காட்டிலும் நாயை திருமணம் செய்துக்கொள்ளலாம் என விரும்பி இருக்கிறார்கள்’ என்று விநோதமான இந்த நடைமுறைக்கு விளக்கம் கொடுத்துள்ளார் எலிசபெத்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இந்த நிகழ்ச்சி குறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. ‘அந்த பெண்ணுக்கு மருத்துவ உதவி தேவை’என்றெல்லாம் பார்வையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மற்றொரு தரப்பினர், சரியான முடிவு. அவர், தனது வாழ்க்கைக்கான முடிவை எடுத்திருக்கிறார் என்று வரவேற்றும் பேசிவருகின்றனர்.

# பிரிட்டனில் தப்பி வாழும் துபாய் இளவரசி கட்டாயத் திருமண உறவிலிருந்து பாதுகாக்க கோரிக்கை



மத்திய கிழக்கு நாடுகளில் அதிகாரம் மிக்க தலைவர்களில் ஒருவரான துபாயை ஆளும் ஷேக் முகமது அல் மேக்டூமை விட்டு சென்றுவிட்ட அவரது ஆறாவது மனைவி, முழு சம்மதமில்லாமல் கட்டாயப்படுத்தி தாம் ஈடுபடுத்தப்படுத்தப்பட்ட திருமண உறவில் இருந்து தன்னை பாதுகாக்க வேண்டுமென்றும் பிரிட்டன் நீதிமன்றத்தில் கோரியுள்ளார்.

ஷேக் முகமது அல் மேக்டூமின் மனைவியான இளவரசி ஹயா பின்ட் அல்-ஹூசைன், கணவரை விட்டு சென்று நீதிமன்றத்தை நாடும் மூன்றாவது பெண்ணாவார்.

இளவரசி ஹயா அவரது உயிருக்கு பயந்து லண்டனில் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருப்பதாக இந்த மாதம் தகவல் வெளியானது. செவ்வாய்க்கிழமை லண்டனில் இந்த வழக்கு தொடங்கியுள்ளது.

நீதிமன்றத்தில் நடந்தது என்ன?

ஐக்கிய அரபு எமிரேட்டில் இருந்து தப்பி வந்தபோது, தாம் அழைத்து வந்த அவரது குழந்தைகளுக்கு தன்னையே பாதுகாவலராக நியமிக்க வேண்டுமென்றும், கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைக்கப்பட்ட உறவில் இருந்து தன்னை பாதுகாக்க வேண்டுமென்றும் இளவரசி ஹயா கோரியுள்ளார்.

இந்த மனுவில் இளவரசி கோரியுள்ள விவரங்கள் தெரியவில்லை.

இதே வேளையில், குழந்தைகளை துபாய்க்கு திருப்பி அனுப்ப வேண்டுமென ஷேக் முகமது விண்ணப்பித்துள்ளார். மேலும், இந்த ஆணையின் விவரங்களை வெளியிட கட்டப்பாடுகளை நீதிமன்றம் விதிக்க வேண்டுமெனவும் அவர் விண்ணப்பித்துள்ளார். இந்த இரண்டாவது வேண்டுகோளை நீதிபதி மறுத்துள்ளார்.

ஜோர்டானில் பிறந்து, பிரிட்டனில் கல்வி பயின்ற 45 வயதான இளவரசி ஹயா, கோடால்பின் குதிரை பந்தய திடலின் உரிமையாளரான ஷேக் முகமதை 2004ம் ஆண்டு திருமணம் செய்து, அவரது ஆறாவதும், இளைய மனைவியுமாக மாறினார்.

வெவ்வேறு மனைவிகளிடம் இருந்து ஷேக் முகமது 23 குழந்தைகளை கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

துபாய் நகரம் அமைந்துள்ள ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை அதிபராகவும், பிரதமராகவும் ஷேக் முகமது அல் மேக்டூம் செயல்படுகிறார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இளவரசி ஹயா ஜெர்மனியில் தஞ்சம் கோரி கணவரை விட்டு பிரிந்து சென்றார்.

லண்டனின் மத்திய பகுதியிலுள்ள கென்சிங்டன் பேலஸ் கார்டன்ஸிலுள்ள 85 மில்லியன் யூரோ மதிப்புள்ள வீட்டில் இளவரசி ஹயா இப்போது வாழ்ந்து வருவதாக கூறப்படுகிறது.

இளவரசி ஹயா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, சட்ட போராட்டத்திற்கு இப்போது தயாராகி வருகிறார்.

இளவரசி ஹயா உயிருக்கு பயந்து வாழ்வது ஏன்?

துபாயை ஆளுகின்ற ஒருவருடைய மகள்களில் ஷேய்கா லத்தீஃபா என்ற பெயருடையவர், கடந்த ஆண்டு மர்மமான முறையில் துபாய் திரும்பி வந்தது தொடர்பாக கவலை அளிக்கக்கூடிய உண்மைகளை இளவரசி ஹயா சமீபத்தில் கண்டறிந்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸை சேர்ந்த ஒருவரின் உதவியோடு கடல் வழியாக ஐக்கிய அரபு எமிரேட்டை விட்டு தப்பி சென்ற ஷேய்கா லத்தீஃபாவை, இந்திய கடலோர காவல் படை தடுத்து மீண்டும் துபாய்க்கு அனுப்பி வைத்தது. அப்போது அயர்லாந்து அதிபர் மேரி ராபின்சனோடு சேர்ந்து இளவரசி ஹயாவும் இந்த சம்பவம் தொடர்பாக துபாய்க்கு ஆதரவாக பேசினார்.

ஷேய்கா லத்தீஃபா தப்பிச்செல்வதால் ‘பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது’ என்றும், தற்போது ‘துபாயில் பாதுகாப்பாக இருப்பதாகவும்’ துபாய் அதிகாரிகள் கூறினர்.

ஆனால், அவரது விருப்பத்திற்கு மாறாக ஷேய்கா லத்தீஃபா கடத்தப்பட்டு துபாய்க்கு திருப்பி அனுப்பப்பட்டார் என்று மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்போது முதல் இந்த சம்பவம் தொடர்பாக இளவரசி ஹயா புதிய உண்மைகளை அறிய வந்துள்ளதாக கூறப்பட்டது.

இதன் விளைவாக, கணவரின் குடும்பத்தினரிடம் இருந்து வெறுப்புணர்வையும், அழுத்தங்களையும் எதிர்கொண்ட இளவரசி ஹயா, அங்கு தான் பாதுகாப்பாக இல்லை என்பதை உணர்ந்தார்.

இந்த விவகாரம் இரு தனிப்பட்ட நபர்களுக்கு இடையிலானது என்று கூறி, லண்டனிலுள்ள ஐக்கிய அரபு எமிரேட்டின் தூதரகம் இது குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது.

ஆனால், இந்த சம்பவத்தில் விரிவான சர்வதேச அம்சமும் உள்ளது.

டோர்செட்டிலுள்ள பிர்யான்ஸ்டன் பள்ளியிலும், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்ற இளவரசி ஹயா, பிரிட்டனில் வாழ விரும்புவதாக நம்பப்படுகிறது.

ஆனால், அவர் கைவிட்டு சென்ற கணவர், இளவரசி ஹயா திரும்பி வர வேண்டுமென கோரினால், ஐக்கிய அரபு எமிரேட்டோடு நெருங்கிய உறவு வைத்திருக்கும் பிரிட்டனுக்கு இது பெரிய ராஜீய தலைவலியாகிவிடும்.

ஜோர்டன் அரசர் அப்துல்லாவின் உறவினராக இளவரசி கஹயா இருப்பதால் ஜோர்டனுக்கும் இது நல்லதாக தோன்றவில்லை.

சுமார் பத்து லட்சம் ஜோர்டன் மக்கள் ஐக்கிய அரபு எமிரேட்டில் வேலை செய்து, ஜோர்டனுக்கு பணம் அனுப்பி வருகிறார்கள். எனவே, துபாயோடு இருக்கும் உறவில் சிக்கல் தோன்றுவதை ஜோர்டனும் விரும்பவில்லை.

# மலேசியா-சீனா உறவில் பாலமாக விளங்கும் ‘யீயீ’ பாண்டா




மலேசியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கிடையே நட்பினை வலுப்படுத்தும் விதமாக பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றாக இருப்பது, பாண்டாக்களை இரு நாடுகளுக்கும் இடையே பரிமாறிக் கொள்வது.

இந்த ஒப்பந்தத்தின்படி, சீனாவில் இருந்து மலேசியாவிற்கு பரிமாறப்படும் பாண்டாக்கள் இனப்பெருக்கம் செய்து, அந்த பாண்டாக்களுக்கு 2 வயதானதும் மீண்டும் சீனாவிற்கு அனுப்புவதே முக்கிய நோக்கமாகும்.

இதன்படி மலேசியாவில் பிறந்த பாண்டா ஒன்றுக்கு பெயர் சூட்டு விழா நடத்தப்பட்டது. இந்த விழா கோலாலம்பூரில் நடைப்பெற்றது. இதில் கலந்துக் கொண்ட அந்நாட்டு அமைச்சர் சேவியர் ஜெயக்குமார் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், ‘சீன மொழியில் ‘யீயீ’ என பெயர் சூட்டப்பட்டுள்ளது. ‘யீயீ’ என்றால், நட்பு என்பது பொருள். இதனை பறைசாற்றும் விதமாகவே இப்பெயர் சூட்டப்படுகிறது’ என கூறினார்.

# அமெரிக்கா மற்றும் கனடாவில் 10 கோடி பேரின் தனிப்பட்ட தரவுகள் திருட்டு

அமெரிக்கா மற்றும் கனடாவில் 106 மில்லியன் கணக்கான மக்களின் தனிப்பட்ட தரவுகள் திருடப்பட்டுள்ளதாக ‘கேபிடல் ஒன்’ என்னும் நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு, ஹேக் செய்ததாக கூறப்படும் நபரை திங்களன்று கைது செய்தபின் வெளியாகியுள்ளது.

கிரெடிட் கார்ட், கடன்கள், வங்கி மற்றும் சேமிப்பு கணக்குகள் தொடர்பான சேவைகளை வழங்குகிறது கேபிடல் ஒன் நிறுவனம். கிரெடிட் கார்ட் வாங்குவதற்கு பதிவு செய்த நபர்களின் பெயர்கள், முகவரிகள், அலைப்பேசி எண்கள் அனைத்தும் திருடப்பட்டு விட்டதாக கேபிடல் ஒன் தெரிவித்துள்ளது.

ஆனால் ஹேக் செய்த நபருக்கு கிரெடிட் கார்ட் எண்கள் கிடைக்கவில்லை என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தகவல் திருட்டால் அமெரிக்காவில் 100 மில்லியன் பேரும் கனடாவில் 6 மில்லியன் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் ஜூலை 19ஆம் தேதியன்று கண்டறியப்பட்டது. நிறுவனத்தின் உள்கட்டமைப்பின் பாதுகாப்புத்தன்மையில் இருந்த குறைப்பாட்டை ஹேக் செய்தவர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர் என கேபிடல் ஒன் நிறுவனம் தெரிவித்துள்ளது. பெயர்கள், பிறந்த தேதி உட்பட க்ரேடிட் ஸ்கோர்ஸ், அளவு, மீதமுள்ள தொகை, பொருட்களுக்கு பணம் செலுத்திய தகவல் மற்றும் தொடர்பு எண்ணங்கள் ஆகியவையும் திருடப்பட்டுள்ளதாக கேபிடல் ஒன் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த தகவல்கள் மோசடிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றும், இருப்பினும் இந்த தகவல் திருட்டு குறித்து விசாரிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டவர்களின் தகவல்கள் வெளியிடப்பட மாட்டாது என்றும், அவர்களுக்கு இலவச வழிகாட்டுதல் வழங்கப்படும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த நிறுவனத்தின் தலைவர் ரிசார்ட் டி. பேர்பேன்க்,‘இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர் பிடிப்பட்டார் என்பது குறித்து நன்றிடன் உணர்வதாகவும், தகவல் திருட்டு குறித்து தான் மிகவும் வருத்தம் தெரிவிப்பதாகவும்.’ அவர் தெரிவித்தார்.


இந்த சம்பவத்தால் ஏற்படக்கூடிய கவலை குறித்து நான் மன்னிப்பு கோருகிறேன். இதை சரி செய்வது எனது கடமை எனவும் தெரிவித்தார். இந்த தகவல் திருட்டு தொடர்பாக சீட்டல் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் மென்பொறியாளர் ஒருவரை கைது செய்துள்ளதாக அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது. பேஜ் தாம்ஸன் என்னும் அந்த 33 வயது நபர், கம்ப்யூட்டர் மோசடி மற்றும் தாக்குதல் குற்றத்தில் திங்களன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆகஸ்ட் ஒன்றாம் தேதி அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

தாம்ஸனுக்கு அதிகபட்சமாக ஐந்து வருடங்கள் சிறைதண்டனையும், இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டாலர்கள் அபராதம் விதிக்கப்படும்.

# விமான பணிப்பெண்ணின் வினோத செயல்- புகார் அளித்த பயணி

அமெரிக்காவின் டென்னிசி மாகாணத்தின் தலைநகர் நேஷ்வில்லேவில் இருந்து பிலடெல்பியாவுக்கு சவுத்வெஸ்ட் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் புறப்பட்டு சென்றது. விமானம் வானில் பறந்து கொண்டிருந்த போது பயணி ஒருவர் தனது சூட்கேசை வைப்பதற்காக ‘லக்கேஜ்’ பகுதியை திறந்தார். அப்போது ‘லக்கேஜ்’ பகுதிக்குள் விமான பணிப்



பெண் ஒருவர் படுத்திருந்ததை பார்த்து திகைத்துப் போனார்.

பின்னர் அந்த பயணி, பணிப்பெண்ணை கீழே இறங்க அறிவுறுத்திய போது, 10 நிமிடங்களுக்கும் மேலாக அவர் இறங்க மறுத்து அடம் பிடித்தார். பயணிகளுக்கு வேடிக்கை காட்டுவதற்காக பணிப்பெண் இவ்வாறு செய்ததாக விமான ஊழியர்கள் கூறினர். ஆனாலும் இதனை சகித்துக் கொள்ளாத பயணி ஒருவர், விமானம் பிலடெல்பியாவில் தரையிறங்கியதும் சவுத்வெஸ்ட் ஏர்லைன்ஸ் நிறுவனத்திடம் இதுதொடர்பாக புகார் அளித்தார்.

இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள அந்நிறுவனம் வாடிக்கையாளர்களை சிரிக்க வைக்கும் நோக்கிலேயே பணிப்பெண் அவ்வாறு செய்தார். எங்கள் பணிக்குழுவினர் அவ்வப்போது இதுபோன்ற வேடிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம்தான். அதே சமயம், பயணிகளின் பாதுகாப்பில் நாங்கள் எவ்வித சமரசமும் செய்வதில்லை என தெரிவித்துள்ளது.

THAMILTHANTHI
தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 04.08.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# தேர்தல் வியூகங்கள்

தேர்தலுக்கான காலம் நெருங்கத் தொடங்கி விட்டது. அரசியற் கட்சிகள் தமக்கான வியூகங்களை வகுப்பதில் மும்மரமாகியுள்ளன. ஐக்கிய தேசிய கட்சி தன்னுடைய அடையாளத்தோடு தேர்தல் களத்தில் இறங்காமல் புதிய தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் தேர்தலில் இறங்குவதற்கு முயற்சிக்கிறது. இதைப்போலவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கவர்ச்சிகரமான வேறொரு பெயரைத் தேடிக் கொண்டிருக்கிறது. பொதுஜன பெரமுன பத்துக் கட்சிகளைச் சேர்த்து வைத்துக் கொண்டு பாரிய அணியாக தன்னை தயார்படுத்த முனைகிறது. தற்போது 16 அரசியற் கட்சிகள் தங்களுக்கு ஆதரவளித்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார். அத்தோடு தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் ஆதரவு தமக்கே எனவும் ராஜித சேனாரத்ன கூறுகிறார். அதற்கு சவால் விடும் முகமாக பொதுஜன பெரமுனவின் பிரமுகர் மகிந்தானந்த அளுத்கமகே கருத்து வெளியிட்டுள்ளார். இத்தகைய அரசியல் அரசல் புரசல்கள் தற்போது சூடுபிடித்துள்ளது.

தேர்தல் அரசியலில் கொள்கை கோட்பாடு என்பதற்கு அப்பால் அவ்வப்போது களநிலவரமும் முந்திய ஆட்சித் தரப்பின் மீதான கோபதாபங்களுமே வாக்களிக்கும் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தும். தனிப்பட்ட மக்களின் விருப்பத் தெரிவாக நாம் கடந்த காலங்களில் பிரித்தானியாவின் பொலிஸ் ஜோன்சனும் அமெரிக்காவில் ட்ரம்பும், இந்தியாவில் மோடியும் பதவியைப் பெற்றுள்ளனர். மேற்படி நபர்கள் பற்றிய விமர்சனங்களின் சாதக, பாதக விளைவுகளே இவர்களின் வெற்றிக்கான அடிப்படையாக அமைந்தது. இதே தளத்தில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோதபாய ராஜபக்ஷவும் அரசியலுக்கான ஆதரவுத் தளத்திலும் இன்னமும் தடுமாற்றமாகவே உள்ளது. ராஜபக்ஷவும் தேர்தலில் இறங்கினால் சுதந்திர கட்சியும் பொதுஜன பெரமுனவும் பிளவுண்டு போகக் கூடிய வாய்ப்புண்டு.

ஐக்கிய தேசிய கட்சியில் சஜித்தைவிட வேறு ஆட்கள் யாரையாவது களமிறக்கிப் பார்க்கட்டும் என ராஜபக்ஷ தரப்பினர் சவால் விடுக்கின்றனர். சஜித் தன்னுடைய தந்தை பிரேமதாசவைப் போல் நடந்து கொள்ளக் கூடாது எனவும் எதிர்த்தரப்பு விமர்சனங்களை எழுப்புகின்றனர்.

இதேநிலையில் ஜே.வி.பி. உள்ளிட்ட ஏனைய இடைநிலைக் கட்சிகளும் தேர்தலில் இறங்குவதில் மும்மரமாக நிற்கின்றன.

வடக்கு , கிழக்கை மையப்படுத்திய தமிழ், முஸ்லிம் கட்சிகளும் மலையக கட்சிகளும் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக பலதரப்பட்ட கேள்விகள் எழுந்துள்ளன. எந்தவொரு கட்சியும் சிறுபான்மை தேசிய இனங்களின் நலன்களிலும் பாதுகாப்பிலும் அக்கறை கொண்டவையாக கடந்த காலத்தில் தம்மை நிரூபிக்கவில்லை. ஆகையால் உடனடியாக சிறுபான்மைக் கட்சிகள் ஒரு முடிவுக்கு வரமுடியாத அரசியல் சூழல் நிகழ்கின்றது.

அதனால்தான் தற்போது உருவாக்கப்படும் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளருக்கு தமது ஆதரவை ஏதாவது அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் இறுதி நேரத்தில் சிறுபான்மைக் கட்சிகள் தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும். சிறுபான்மைக் கட்சிகள் கடந்த காலங்களைப் போல் ஏதோ ஒரு விதத்தில் பெரும்பான்மைக் கட்சிகளின் நிழலில் ஒட்டிக் கொள்ளப் போகின்றன.

இந்நிலையில் கட்சித் தாவல்களுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப் போவதாகவும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எந்தப் பக்கத்தில் எவருக்கான அடையாளங்கள் தெரிகிறதோ அதை நோக்கி சிறுபான்மை கட்சியைச் சேர்ந்தவர்களும் சில அரசியல் வாதிகளும் கட்சி தாவுவார்கள். இதனைத் தடுக்கும் முயற்சியில் பெருங்கட்சிகள் விழிப்புடன் செயற்படுகின்றன. மேலும் வரும் தேர்தலில் அறிமுகமாகும் தேர்தல் முறைமையும் அரசியல் கட்சிகள் கவனத்தில் எடுத்து அதற்கு ஏற்ற விதத்தில் தமது கட்சித் தாவல்களை மேற்கொள்ளவிடுகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட பல தேர்தல்களுக்கு முகங்கொடுக்கத் தயாராகும் அரசியல் கட்சிகள் தமது அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கும் வியூகங்களை கட்டமைக்கும் ஆரம்ப பணிகளில் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றன.

# நிர்வாகக் கட்டமைப்பில் பிளவுபடுகிறதா வட,கிழக்கு?

நக்கீரர்

வட கிழக்கு இணைக்கப்பட வேண்டும், வடகிழக்கு தமிழர்கள் ஒன்றாக நின்று தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்று கூறுகின்ற கிழக்கின் அரசியல் தலைமைகள் வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எடுக்கப்படுகின்ற முடிவுகளை கிழக்கில் நடைமுறைப்படுத்த தவறிவருகின்றனர் என்பது அண்மைக்காலப் போக்குகளிலிருந்து அறியமுடிகின்றது. வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சி வேறு கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சி வேறா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தற்போது மிகத்தீவிரமாக எழத்தொடங்கியுள்ளது.

முஸ்லிம் மக்களும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் தமிழ் மக்கள் உள்ளங்களுடன் நல்லுறவுடன் இருந்து வந்துள்ளமை அரசியல் ரீதியாகவும் பல்வேறு பட்ட பண்பாட்டு கோலங்களிலிருந்தும் தெரியவருகின்றமை நாம் அறிந்ததொரு விடயமே. எனினும் இவ்வாறான தமிழ் முஸ்லிம்களுக்கிடையில் பல முரண்பட்ட கருத்துக்கள் இருந்துவருவது உண்மையே, எனினும் இருசமூகமும் அன்றும் இன்றும் சகோதரர்களாகவே நினைத்து கிழக்கில் செயல்படுகின்றோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு- கிழக்கு, மேற்கு, மத்திய மாகாணங்களில் தமிழ் மக்களுடன் இணைந்து வாழும் இரு சமூகமும் பல கசப்பான சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களே. இருப்பினும், பல முஸ்லிம் தலைவர்ளை தமிழ் சமூகம் அரசியல் ரீதியாக முதன்மை பெற பாரிய பங்களிப்பை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வட கிழக்கிற்கு வெளி மாகாணங்களில் குறிப்பாக தலைநகர் கொழும்பில், மற்றும் கண்டியில் முஸ்லிம் தலைமைகள் அரசியலில் வெற்றி பெற தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பும் உதவியதை மறுக்க முடியாது.

கிழக்கு மாகாணத்தில் மாகாணசபையில் அதிக ஆசனங்களுடன் த.தே.கூ இருந்தும் அரசியல் ரீதியாக முஸ்லிம் காங்கிரசை முன்னைய அரசு ஆசைகாட்டி மோசம் செய்து பிளவுபடும் நிலையில் தத்தளித்த போது அந்த சமூக அமைப்பு சிக்கலில் இருந்து காப்பாற்றி சகோதர பாசத்துடன் ஆதரவு வழங்கி தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருந்த போதும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பான முதலமைச்சருக்கு ஆதரவு வழங்கி தனது நல்லெண்ணத்தை கடந்த வருடம் வெளிப்படுத்தியது..இதன் மூலம் இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திற்கும் வடக்கு முதலமைச்சர் தமிழ் இனத்தையும், கிழக்கின் முதலமைச்சராக முஸ்லிம் இனத்தை உறுதிப்படுத்தியது த.தே.கூட்டமைப்பையே சாரும். அதற்கு கைமாறாக தமிழ் பேசும் மக்களின் நலன்நாடி கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களும், அரசியல் தலைமைகளும் ஒன்றிணைந்து எதிர்காலத்தில் வடகிழக்கு இணைப்பில் ஒற்றுமை காண முன் வர வேண்டும்.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு இணையாவிடின் கிழக்கு மாகாணம் விரைவில் பறிபோய் விடும் என்ற எச்சரிக்கையை பகிரங்கமாக விடுத்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் அதாவது வடக்கும் கிழக்கும் இணையாது பிரிந்து செயற்படுமாயின் கிழக்கு மாகாணம் விரைவில் பறிபோய்விடும். கிழக்கு மாகாணமானது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உரிமை இல்லாத நிலை ஏற்பட்டுவிடும். அவ்வாறான நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகின்றமை நாம் கேட்டும் அறிந்ததுமே. எனவே கிழக்கு மாகாணம் பறி போவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் உடந்தையாக இருக்கக்கூடாது என்பதே கிழக்கு வாழ் மக்களது பாரிய எதிர்பார்ப்பாகும். எனவே இரு மாகாணங்களும் இணைக்கப்படவேண்டியது அவசியமானது. அவசரமான தேவையுங்கூட என்றே கூறலாம். இந்த நிலைப்பாட்டிலேயே த.தே.கூட்டமைப்பு உள்ளது என்ற யதார்த்த பூர்வமான கருத்தொன்றை முன்வைத்துள்ளார் இரா.சம்பந்தன் அவர்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ள இஸ்லாமிய சகோதரர்களும் தமிழ் மக்களோடு ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்ததை வரலாற்றுச் சான்றுகளும் குடிசன மதிப்பீடுகளும் இலக்கிய வடிவங்களும் எடுத்துக்காட்டுவதால் தமிழ் மக்கள் போன்று இஸ்லாமியரது பாரம்பரியப் பிரதேசமாகவும் இருந்து வரும் இவ்விரு மாகாணங்களும் இரட்டைப் பிள்ளைகள் போல காணப்படும் தொன்மையின் அடிப்படை நிலையே சம்பந்தனின் தீர்க்க தரிசனமான கருத்து அமைந்திருக்கிறது என்றே புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் அதாவது நல்லாட்சி அரசாங்கமானது சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கிவரும் அடிப்படை மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைக்காணும் நோக்கில் உருவாகவிருக்கும் அரசியல் சாசன உருவாக்கத்துக்கு இன்று சவாலாக இருக்கும் விவகாரமாக பார்க்கப்படுவதும் பேசப்படுவதும் வட கிழக்கு இணைப்பு என்ற சூடான விவகாரமாகும்.

கிழக்கு மாகாணம் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணமாகும். அவை திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டப் பிரிவுகளை உள்ளடக்கி இன்று காணப்படுகின்றது. இவற்றுள் திருகோணமலை மாவட்டம் திருகோணமலை, மூதூர், சேருவில என்ற மூன்று தேர்தல் தொகுதிகளைக் கொண்டதாகவும் மட்டக்களப்பு மாவட்டம் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய மூன்று தேர்தல் தொகுதியைக் கொண்டதாகவும் அம்பாறை மாவட்டம் அம்பாறை, கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய நான்கு தொகுதிகளைக் கொண்டதாகவும் மொத்தமாக கிழக்கு மாகாணம் 10 தேர்தல் தொகுதிகளைக் கொண்ட மாகாணமாகும்.

மேற்படி மூன்று மாவட்டங்களில் மட்டக்களப்பு தவிர்ந்த திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் போக்குகள் எவ்வாறு மாற்றமடைந்தன என்பதை நோக்குவோமாயின் சுதந்திரத்துக்குப் பின்னுள்ள பறிபோன தன்மைகளைத் தெரிந்துகொள்ள முடியும். டி.எஸ்.சேனாநாயக்க காலத்தில் அபிவிருத்தியென்ற போர்வையில் உருவாக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் சிங்களக் குடியேற்றங்களை உள்நோக்கமாகக் கொண்ட மாவட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்ற இனத்துவ தூரநோக்கு சிந்தனையுடன் அம்பாறை மாவட்டம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் 1961 ஆம் ஆண்டு (10.04.1961) உருவாக்கப்பட்டது.

இம்மாவட்டமானது கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், பாணம, அம்பாறை, உகன, தமண ஆகிய பிரதேசங்கள் பிரித்தெடுக்கப்பட்டு இவற்றுடன் பதுளை மாவட்டத்துடன் இருந்த மஹாஓயா, பதியத்தலாவ என்பவற்றினையும் இணைத்து அம்பாறை என்னும் புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது. இப்புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டதன் காரணமாக கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகத்துக்கு அரசியல் பலம் வலுவிழந்தது. பொருளாதார வளம் தொடர்ந்தும் சூறையாடப்பட்டு வருகின்றது.

காணிப் பறிப்புகள், இனம் சார் குடியேற்றங்கள் பெருக்கெடுத்துக்கொண்டிருக்கின்றன. இது மட்டுமன்றி மதவழிபாட்டு கெடுபிடிகள் நாளுக்குநாள் அதிகரித்து வரும் நிலைமையே அம்பாறை மாவட்டத்தில் கடந்த 55 வருடங்களாக கண்டு கொண்டிருக்கின்றோம். இம்மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டு வரை இருந்த இரண்டு தேர்தல் தொகுதிகளிலும் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளே பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு இருந்துள்ளது.

திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் 1977 ஆம் ஆண்டு வரை தமிழர் ஒருவரே பாராளுமன்றம் செல்லும் நிலைமையும் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியிலிருந்து தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் பாராளுமன்றம் செல்லும் பூரண சந்தர்ப்பம் இருந்து வந்துள்ளது.

ஆனால் இந்த நிலைமையை அவதானித்துக் கொண்ட இலங்கை அரசாங்க பேரினத் தலைமைகள் 1977 ஆம் ஆண்டு மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி உடைக்கப்பட்டு சேருவில எனும் புதிய தேர்தல் தொகுதி திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. உருவாக்கப்பட்ட இத்தேர்தல் தொகுதியிலிருந்து எக்காலத்திலுமே தமிழரோ முஸ்லிமே பிரதிநிதியாக வரமுடியாத அளவுக்கு மிக மதிநுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்டது. இந்த தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதன் காரணமாக முதல்முதல் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு அரசியல், பொருளாதாரம், கலாசாரம், சமயம் என்ற எல்லாவகையிலும் பறிபோன ஒரு மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகின்ற சூழ்நிலையில்தான் வடகிழக்கின் இணைப்பை வலியுறுத்த வேண்டிய தேவை தமிழ்த் தரப்பினருக்கு ஏற்பட்டது என்பது, வரலாற்று ரீதியான நியாயங்களும் உண்மைகளுமாகும். தமிழ் - முஸ்லிம் உறவு என்பது, நேற்று, இன்று உருவாக்கப்பட்ட ஒரு தற்செயலான சம்பவமுமல்ல, உறவுகளுமல்ல. அதற்கொரு வரலாற்றுப் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது என்பது இரு சமூகத்தவரும் ஏற்றுக்கொள்கின்ற உண்மையாகும்.

கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இரும்புத் திரையொன்று போடப்பட்ட காலம் 1985 ஆம் ஆண்டுகளை அண்டிய காலப்பகுதியென ஆழமான உண்மையொன்றை முடிச்சவிழ்த்துக் காட்டியிருந்தார் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர். இவ்வகை உண்மைகளுக்கு அப்பால் வடகிழக்கில் நடந்தேறிய கசப்பான சமபவங்கள் ஒரு சமூகத்தையும் ஒன்றின் மீது ஒன்றை விரோதப் பார்வை பார்க்க வைத்தது என்பது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற உண்மையாகும். ஆனால் இச்சூழ்நிலையும் உடைவும் தொடர்ந்தும் இருக்கவேண்டுமென்று நினைக்கும் தென்னிலங்கை சக்திகள் ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல் சமூகப்பிளவுகளில் குளிர்காய நினைக்கிறார்கள் என்பதை அறிவுபூர்வமாக உணர்ந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது என்பது நியாயமாகும்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவந்தபின் முன்னாள் ஆட்சியாளர்களால் குறிவைத்த சமூகம் முஸ்லிம் சமூகமென்பதற்கு பல ஆதாரங்கள் உரித்துடையதாகிறது. பொதுபல சேனா, சிங்கள ராவய ஆகிய தீவிரவாத அமைப்புகள் உருவாக்கப்பட்டன. முஸ்லிம் மக்களின் மனநிலையில் இன்று குடிகொண்டிருக்கும் பீதியென்;பது வடகிழக்கு இணைப்பின் மூலம் எதிர்கொள்ளக்கூடிய, பீதிகள் எவையென்பதையும் நோக்கும்போது, வடகிழக்கு இணைக்கப்படுமாயின் நாம் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆகிவிடுவோம். அரசியல் பலமற்ற ஒரு சமூகமாக மாறும் நிலை உருவாகும். பொருளாதார வளமற்ற ஒரு சமூகமாக தேய்ந்து போக நேரிடும். வேலை வாய்ப்பு, வளப்பங்கீடு, காணிப்பங்கீடு என்பவற்றில் தமக்கு பாரபட்சம் காட்டப்படும். பண்பாடு மற்றும் பாரம்பரியங்களினால் தாம் ஓரம் கட்டப்பட்டு விடுவோம். எல்லாவற்றுக்கும் அப்பால் வடகிழக்கு இணைப்பு சம;டிமுறையிலான அதிகாரப் பகிர்வு முறையொன்று உருவாகுமாக இருந்தால் அது தமிழ் மக்களை காலப்போக்கில் தனிநாட்டுக்கான நகர்வுக்கு வழிவகுத்து விடும் என்ற காரணங்களின் பின்னணியிலேயே வடகிழக்கு இணைப்பை சில தரப்பினர் சிம்மசொப்பனமாக நினைக்கிறார்கள் என்பது அறியப்பட்ட விடயமே.

மேலே தரப்பட்டவை வெறும் கற்பனாவாத நினைப்புகளாக இருக்கலாம். மாறாகவே அவை உண்மையான காரணங்களாகவும் காட்டப்படலாம். எவ்வாறு இருந்தபோதிலும் மேலே குறிப்பிட்ட சட்டங்கள் எல்லாமே வெறும் கற்பனைப் பயங்களாகவே இருக்க முடியும். இதுபற்றி முஸ்லிம் சமூகம் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை என்பதை தமிழ்த் தரப்பினர் தெளிவாகவும் உறுதியாகவும் கூறிவருகிறார்கள் என்பது முஸ்லிம் மக்கள் அறியாத ஒரு விடயமல்ல.

வடகிழக்கு இணைப்பு என்பது நாங்கள் எதிர்பார்ப்பது போல் வெறும் அரசியல் யாப்பினால் இணைந்துகொள்கின்ற அல்லது சர்வஜன வாக்கெடுப்பினால் நிறைவேற்றிக் கொள்கிற ஒரு வெறும் சம்பிரதாயமாக இருக்குமானால் இவ்விடயத்தில் இரு சமூகங்களும் தோற்றுப்போன சமூகமாகவே ஆகிவிடும். வெறும் அரசியல் யாப்புகளோ தேர்தல் வெற்றிகளோ இரு சமூகத்தின் இணைப்புக்கு பாலமாக இருக்க முடியாது. இம்மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் - முஸ்லிம் சமூகமானது வாழ்வியல் முறையாலும் உறவு முறையாலும் ஒன்றுபட்ட சமூகமாக மாறுகின்றபோதே பூகோள மயப்பட்ட இணைவுகள் சாத்தியமாக முடியும். வெறும் அரசியல் சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்டது.

சமூகங்களுடைய பண்பாட்டு கோலங்களும் இணக்கப்பாடுகளுமாகும். இவ்வகை நியதியில் பார்க்கின்றபோது இவ்விரு சமூகங்களின் இணைவை வலிதாக்குவதில் வடகிழக்கு இணைவு முக்கியமாக இருக்குமென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆணித்தரமாக எடுத்துக்காட்டியுள்ளார். வடகிழக்கு இணைக்கப்பட்ட சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தும் கிழக்கின் தமிழரசுக் கட்சி தொடர்ச்சியாக வடக்கின் அகிம்சை ரீதியான போராட்டங்களில் இருந்து ஒதுங்கியே செல்வதை அவதானிக்க முடிகின்றது. வெறுமனே அரசியலுக்காக வடகிழக்கு இணைப்பு தமிழர் தாயகம் என்று பேசும் கிழக்கின் தமிழரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பு தலைமைகள் அதனை நடைமுறையில் கையாண்டதாக தெரியவில்லை. வடகிழக்கில் உள்ள தமிழர்கள் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் நிற்கின்றார்கள். வடக்கில் அடித்தால் கிழக்கில் வலிக்கிறது கிழக்கில் அடித்தால் வடக்கில் வலிக்கிறது ஆனால் வடக்கில் வேறு நிர்வாகத்தையும் கிழக்கில் வேறு நிர்வாகத்தையும் நடாத்தி அரசாங்கத்தை திருப்திப்படுத்தவே தமிழ் தலைமைகள் முயற்சிக்கின்றார்கள்.

அதாவது தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளையும் உரிமைகளையும் அரசாங்கத்திற்கு வெளிக்காட்டி அதனை திருப்திப்படுத்துவதற்கான தீர்வைப் பெற முனையாது. தமிழர்களை அச்சமடையவைத்து அடக்குமுறைக்குள் வைத்து பயம் காட்டி அடிமையாக இருந்துகொண்டு தமிழர்களின் உணர்வுகளை அடக்கிவைத்துக்கொண்டு பெரும்பான்மையினரை திருப்திப்படுத்துவதற்காக தயாரிக்கப் படப்போகும் தீர்வு திட்டமானது வலிகளை உணராத கூட்டமைப்பு உறுப்பினர்களை திருப்திப்படுத்துமே தவிர அது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் காயங்களுக்கு தீர்வாக அமையாது என்பதே உண்மை.

# மூதூரில் 17 அரச சார்பற்ற நிறுவன பணியாளர்களின் படுகொலை

## கிழக்கில் சிந்திய இரத்தங்கள் 10

2006 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் விடுதலைப் புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடியதை தொடர்ந்து யூலை 26ஆம் திகதி சமாதான ஒப்பந்தம் முடிவடைந்து இலங்கை படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம் ஆரம்பமானது.

இதனை தொடர்ந்து மூதூர் சம்பூர் வாகரை பிரதேசங்களை இராணுவம் கைப்பற்றிக்கொண்டது.

மூதூர் பகுதியை இராணுவம் கைப்பற்றிய வேளையில் தான் இந்த அரசசார்பற்ற நிறுவன பணியாளர்கள் 17பேரும் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டை தலைமையகமாக கொண்ட வறுமைக்கு எதிரான அமைப்பு **(Action Against Hunger)** என்ற அமைப்பை சேர்ந்த பணியாளர்களே கொல்லப்பட்டனர். இந்த பணியாளர்கள் அனைவரும் இலங்கையை சேர்ந்தவர்களாகும்.

இந்த அமைப்பானது வறுமை இல்லாத உலகம் எனும் நோக்கோடு செயல்பட்டு வருகிறது.

இலங்கையில் இந்த அமைப்பு 1996 ஆம் ஆண்டு முதல், பணிகளில் ஈடுபட்டு வந்தது. போர்க் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு அவசர மனிதாபிமான உதவிகளையும் வழங்கி வந்திருக்கிறது.

2006 ஆகஸ்ட் முதலாம் திகதி அளவில் மூதூர் பகுதியில் எறிகணைத்தாக்குதல் ஆரம்பமானது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலை காணப்பட்டது.

மூதூரில் 17 அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களும் மூன்று தினங்களுக்கு மேலாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலை காணப்பட்டது.

ஆகஸ்ட் 4ஆம் திகதி அலுவகத்திற்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர். அனைவரும் நிலத்தில் படுக்க வைக்கப்பட்டு அவர்களின் தலையில் சுடப்பட்டிருந்தது.

இப்படுகொலையில் அந்த அரசசார்பற்ற நிறுவன தொண்டர்களான முத்துலிங்கம் நர்மதன், சக்திவேல் கோணேஸ்வரன், ரிச்சட் அருள்ராஜ் சிங்கராஜா பிறீமஸ், ஆனந்தராஜா மோகனதாஸ் ரவிச்சந்திரன், ரிஷிகேசன், கனகரத்தினம் கோவர்த்தனி, கணேஷ் கவிதா, செல்லையா கணேஷ் சிவப்பிரகாசம் ரொமிலா, வயிரமுத்து கோகிலவதனி, அம்பிகாவதி ஜெயசீலன், கணேஷ் சிறிதரன், துரைராஜா கேதீஸ்வரன், யோகராஜா கோடீஸ்வரன், முரளீதரன் தர்மரட்ணம், ஏ.எல்.மொகமட் ஜப்பா, ஆகியோர் கொலை செய்யப்பட்டார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ரொமிலா என்ற இளம் பெண்ணின் தாய் சாட்சியமளிக்கையில் எனது மகள் ரொமிலா சிவப்பிரகாசம் இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டாள். அவளின் படுகொலைக்கு யார் பொறுப்பு, எவ்வாறு



நடந்தது என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆகஸ்ட் மாதம் 2006ஆம் ஆண்டு முதலாந் திகதி மூதூருக்கு கடமைக்குச் சென்றார். தொலைபேசியில் பேசிய அவர் இங்கு பிரச்சினையாக இருக்கிறது. வீட்டுக்கு வரமுடியாது கூறினார். தகப்பன் மகளைக் கூட்டிவரப் புறப்பட்டபோதும் நிறுவன அதிகாரிகள் நாங்கள் கூட்டிக் கொண்டு வருவோம். நீங்கள் வரவேண்டாமெள தடுத்தார்கள். நாங்கள் அதை நம்பியிருந்தோம். ஆனால் நான்காம் திகதி கொல்லப்பட்டார்கள் என்ற கொடூரமான செய்தி தான் எமக்குக் கிடைத்தது.

சம்பவம் நடைபெறுவதற்கு முதல் நாள் எமது மகள் எம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது அம்மா இங்கு பயமாக இருக்கிறது. சாப்பாடு இல்லை. கஞ்சிதான் குடித்தோம். என அழுதழுது கூறினார். 4ஆம் திகதி தொலைபேசி வேலை செய்யவில்லை. பின்னர் அங்கு இப்படுகொலை நடந்ததாக அறிந்தோம்.



**சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் தமிழ்ப்பத்திரிகை ஒன்றியத் தலைவருமான**

**இரா.துரைரத்தினம்**

இறந்தவர்களின் சடலங்களை எனது மகனும் அவரின் நண்பர்களும் தான் உழவு இயந்திரத்தில் கொண்டு வந்தார்கள் என அப்பெண் தெரிவித்தார்.

திருகோணமலை மனையாவெளியில் இருக்கும் கணேஷ் சிவனேஸ்வரி தனது கணவர் செல்லையா கணேஷ், மற்றும் அவரது மகள் கவிதா கணேஷ் ஆகிய இருவரையும் இச்சம்பவத்தில் பறிகொடுத்திருந்தார்.

இவரது கணவன் 15 வருடங்களுக்கு மேலாக அக் ஷன் பாம் என்ற தொண்டர் நிறுவனத்தில் கடமையாற்றி வந்தார். அவரது மகள் கவிதாவும் அதே நிறுவனத்தில் கடமையாற்றினார்.

இது தொடர்பாக கந்தளாய் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகள் இடை நிறுத்தப்பட்டன.

மூதூர் பொது வைத்தியசாலைக்கு அருகில் இயங்கிவந்த அக் ஷன் பாம் எனும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த மேற்படி 17 பணியாளர்களையும் ஆயுதம் தரித்த சீருடைக்காரர்கள் நிறுவன வளாகத்துக்குள் நுழைந்து நிலத்தில் குப்புறப்படுக்கப் பண்ணி பின்பக்கமாக தலையில் சுட்டு படுகொலை செய்திருந்தார்கள் என அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட போது அவர்கள் பணியாற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தை அடையாளப்படுத்தும் சீருடைகளை அணிந்து இருந்ததுடன் நிறுவன வளாகத்திற்குள்ளேயே பல நாட்கள் தங்கியிருந்தார்கள் என அந்நிறுவனம் தெரிவித்திருந்தது.

மாவிலாறு யுத்தம் மூண்டதன் காரணமாகவும் உக்கிரமான போர் இருதரப்பினருக்குமிடையே வெடித்த நிலையில் வெளியில் செல்ல முடியாமல் வெளியிலிருந்து வந்து யாரும் பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் சுமார் மூன்று நாட்கள் உணவின்றி, உறக்கமின்றி, பாதுகாப்பைத் தேடமுடியாமல் அடைபட்டுப்போய்க் கிடந்த அவர்களுக்குத்தான் ஆகஸ்ட் 4 ஆம் திகதி அந்தக் கொடூரம் நடந்தது. இப்படுகொலையில் பலியானவர்களில் திருமணமாகாத 4 இளம் பெண்களும் 13 ஆண்களும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் 16 பேர் தமிழர்கள். ஒரு ஊழியர் முஸ்லீம் ஆகும்.

ஒரே இடத்தில் அனைவரையும் படுக்க வைத்து தலையின் பின்பக்கமாக சுடப்பட்டிருந்தது. மனித மூளைகள் தரையெல்லாம் சிதறிக் கிடந்தன. என இச்சம்பவம் தொடர்பாக தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் திருகோணமலை மாவட்ட தலைவராக அன்றைய நாளில் பணியாற்றிய யுவோன் என்பவர் தான் வெளியிட்ட அறிக்கையில் இச்சம்பவம் பற்றி பின்வருமாறு கண்டனம் தெரிவித்திருந்தார்.

மூதூர் மக்களுக்கு பெறுமதி மிக்க பணிகளை ஆற்றி வந்த தொண்டர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான மூர்க்கத்தனமான தாக்குதல் இதுவாகும்.

இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் மனிதாபிமான பணிகளையும் தொண்டுகளையும் மிக மோசமாக பாதிக்கும் என தாக்குதல் நடந்து 5ஆம் நாளான 09.08.2006 அன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் இலங்கை அரசாங ;கத்தால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழு இப்படுகொலை உட்பட 16 சம்பவங்களை விசாரணை செய்தது.

சிறிலங்காவின் அமைப்பு முறையில் உள்ள குறைபாடுகளினால் இந்தப் படுகொலைகள் நடந்த பகுதியிலிருந்து சாட்சியமளிக்க எவரும் முன்வரவில்லை என அக்ஷன் பாம் நிறுவனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அனைத்துலக விதிமுறைகளுக்கமைய மூதூர் படுகொலை உள்ளிட்ட 16 வழக்குகளின் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா அனைத்துலக வல்லுநர்கள் குழு அறிக்கை ஒன்றிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றம் பற்றிய சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த அப்போதைய ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஐ.நா.மனித உரிமை கூட்டத்தில் இது தொடர்பான அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தார்.

6 பக்கங்களை கொண்ட இந்த அறிக்கையில் தனது இலங்கை விஜயத்தின் அவதானிப்புக்கள் பற்றியும் மனித உரிமை விடயங்களை மேம்படுத்த சிறிலங்கா அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தெரிவித்தார்.

போர் குற்றங்கள் குறித்து இலங்கை அரசு நம்பகமான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும், விரைவாக அதை செய்யவேண்டும், அப்படி செய்யாவிட்டால் சர்வதேச சமூகம் தனியாக ஒரு விசாரணையை நடத்த வேண்டிவரும் என்று ஐநா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் நவி பிள்ளை எச்சரித்திருந்தார்.

மூதூர் அக்சன் பாம் ஊழியர்களின் படுகொலை, திருகோணமலையில் 5மாணவர்களின் படுகொலை உட்பட அங்கு நடந்த படுகொலைகளுக்கு நீதியான விசாரணை நடத்தப்படவில்லை. குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படாத நிலையே காணப்படுகிறது என அவர் அந்த அறிக்கையில் குற்றம் சாட்டியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் ஒவ்வொன்றிலும் இச்சம்பவம் பற்றி பேசப்பட்டு வருகிறது. ஆனால் இப்படுகொலைக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

சிறிலங்காவில் மனித உரிமை மீறல் குற்றச்சாற்றுகள் பற்றிய விசாரணைகளை மேற்பார்வையிட்டு வந்த சர்வதேச அறிஞர்கள் குழு, தங்களுக்கு அரசிடமிருந்து உரிய ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தால் அந்நாட்டில் இருந்து வெளியேறியிருந்தது

இதுகுறித்து சர்வதேச அறிஞர்கள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், “சிறிலங்கா அதிகாரிகளுக்கும் சர்வதேச அறிஞர் குழுவில் உள்ள சட்ட வல்லுநர்களுக்கும் இடையிலான உறவு மேம்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. சிறிலங்கா அதிகாரிகளின் விசாரணை முறையிலும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

சிறிலங்கா அரசு மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் மட்டுமே, சர்வதேச அறிஞர் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியும்” என்று தெரிவித்திருந்தது.

சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்திருப்பதாக எழுந்த குற்றச்சாற்றுகளை அடுத்து சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவினால் இந்தியாவின் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி பி.என்.பகவதி தலைமையில் இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது, மூதூரில் அக்சன் பாம் பணியாளர்கள் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்டது, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் ஆகியோரின் படுகொலை செய்யப்பட்டது உட்பட 16 மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளின் விசாரணைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இருந்தாலும், மனித உரிமை மீறல் குற்றச்சாற்றுகளை விசாரிப்பதில் சிறிலங்கா அக்கறை காட்டவில்லை என்று இந்தக் குழு குற்றம் சாட்டி நாட்டை விட்டு வெளியேறி இருந்தது.

இலங்கை பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்தவர்களே தொண்டு ஊழியர்களின் கொலைக்குப் பொறுப்பானவர்கள் என்று ‘அக்ஷன் போர்ம்’ மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டி வருகின்றன. அத்தோடு, இலங்கை உள்நாட்டு ஆயுத மோதலின் போது இழைக்கப்பட்ட மிகமோசமான போர்க்குற்றங்களில் இதுவும் ஒன்று என்று ‘அக்ஷன் போர்ம்’ நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது.

மூதூர் படுகொலை தொடர்பாக பல உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் செயற்படுத்தப்பட்டன. இருப்பினும், சுயாதீனமாக இயங்காத காரணத்தால் நீதி மறுக்கப்பட்டது. சுயாதீனமான சர்வதேச விசாரணை இடம்பெற்றால் மாத்திரமே நீதி நிலைநாட்டப்படும் என்று ‘அக்ஷன் போரம்’ தொண்டு நிறுவனம் தெரிவிக்கின்ற போதும், நீதிவிசாரணையில் சர்வதேசத்தின் பங்களிப்பு இருக்காது என்று இலங்கை அரசாங்கம் கூறிவருகிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் நம்பகமான அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் என அங்கு கடமையாற்றிய அக்சன் பாம் நிறுவனத்தின் மனிதாபிமான சட்ட ஆலோசகர் போலின் செற்கியூற்றி வலியுறுத்தி கூறியுள்ளார். இலங்கையில் அரச இராணுவமே பற்பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நிலையில், அந்நாட்டு அரசையே சொந்தமாக விசாரணை நடத்தும்படி கோருவது நகைப்பிற்குரியது. மூதூர் நடைபெற்ற படுகொலைகள் குறித்து இலங்கையின் மூன்று நீதி விசாரணைகளை நெருக்கமாக அவதானித்தோம். ஆனால் அரசியல் தலையீடுகள் மற்றும் தவறுகளால் விசாரணைகள் சரியாக நடத்தப்படவில்லை. இலங்கையில் இடம்பெற்ற போரின் போது தமது 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதற்குப் பொறுப்பானவர்களை அரசாங்கம் கண்டறிந்து அதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது முக்கியமானது. இலங்கையில் எமக்கு உண்மையான அமைதி, நல்லிணக்கம், நீதி தேவையென்றால், எந்தவொரு விசாரணைகளும் வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

**தொடரும்**

# சிறுபான்மை மக்களின் ஆதரவை ஜனாதிபதி தேர்தலில் பெற வேண்டும்

அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்

ஜனாதிபதி தேர்தல் அதனைத்தொடர்ந்து பாராளுமன்ற மற்றும் மாகாணசபைத்தேர்தல்கள் இடம்பெறவுள்ளன. முதலில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இன்று சகல அரசியல் கட்சியினரும் ஒவ்வொரு கருத்துக்களை கூறிவருவதுடன் உஷார் அடைந்துள்ளன. இதனிடையே கிழக்கில் ஒரு அணியாக செயற்படப்போவதாக சில தமிழ் அமைப்புகள் அறிவித்துள்ளன.முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு கூட்டணியை அமைத்துள்ளார்.கருணா உட்பட முஸ்லிம்களும் இதில் இணைந்துள்ளனர்.இதனைவிட மலையகத்தில் ஆறுமுகம் தொண்டமான் ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளார். அதில் முன்னாள் தமிழ் போராளி குழுவும் இணைந்துள்ளது. லையகத்தில் ஏற்கனவே அரசுக்கு ஆதரவான சில அரசியல்வாதிகள் இணைந்த ஒரு முன்னணி உள்ளது. தேர்தல்களை இலக்காகக்கொண்டே இந்த ஒற்றுமையை ஏற்படுத்துகின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சி,முஸ்லிம் காங்கிரஸ்,அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்,ஜாதிக ஹெல உறுமய,தமிழ் முற்போக்கு கூட்டணி, ஐக்கிய இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளை ஒன்றிணைத்து ஜனநாயக தேசிய முன்னணியை உருவாக்க ஐக்கிய தேசிய கட்சி எடுத்த முடிவை அக்கட்சியின் பலர் எதிர்த்துள்ளனர். இது தொடர்பான யாப்பும் தயாரிக்கப்பட்டு பிரதமர் ரணில் தலைமையிலான கூட்டத்தில் இப்பிரச்சினை ஏற்பட்டது.எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டே இந்த முன்னணி 5 ஆம் திகதி அமைக்கப்படவுள்ளது.எனவே இந்த கட்சிகள் ஐக்கிய தேசிய கட்சிக்கே ஆதரவளிப்பர்.

ஜனாதிபதி தேர்தலால் ஐக்கிய தேசிய கட்சி,சுதந்திரக்கட்சி,சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றுக்குள் உட்கட்சி பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள துடன் வேட்பாளர் நியமனத்திலும் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுபவர் 50 வீதம் வாக்குகளைப்பெறவேண்டும்.ஜனாதிபதி சந்திரிகா 28 நவம்பர் 1994 தேர்தலில் 62.28 வீதமான வாக்குகளை பெற்றார்.அவருக்கு வாக்களிக்குமாறு வடக்கு,கிழக்கு உட்பட நாட்டின் தமிழர்களை எவருமே கோரவில்லை. அவர் யுத்தத்தை நிறுத்தி,இனப்பிரச்சினை தீர்வு,சமாதானம் என பிரசாரம் செய்ததால் இந்தளவுக்கு அதிகமான வாக்குகள் கிடைத்தன. அதன்பின் மகிந்த ராஜபக்சவுக்கு 50.3 வாக்குகள் கிடைத்தன. இவை எல்லாம் சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகளும் சேர்ந்தே கிடைத்தன.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா,வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பகிஸ்கரிப்பால் பெரும்பான்மையை பெறமுடியவில்லை.1982 அக்டோபர் 10 இல் நடைபெற்ற தேர்தலில் 52.91 வீத வாக்குகளை பெற்று தெரிவானார். அவர் எழுதிய அரசியல் அமைப்பின்படி முதலாவதாக வரும் வேட்பாளர்,தமக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 வீதமான வாக்குகளை பெற்றிருந்தால் மட்டுமே வெற்றி பெற்றவராக கணிக்கப்படுவார்.அதன்படி இத்தேர்தலில் இந்த விதியின்படி தகமையை பெற்று தெரிவானார்.இந்த தேர்தலை தமிழர்கள் பகிஷ்கரிக்கவேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி அழைப்பு விடுத்திருந்தது.தமிழ்க்காங்கிரஸ் சார்பில் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் மகன் குமார் பொன்னம்பலம் போட்டியிட்டார். தமிழர் விடுதலைக்கூட்டணியில் 1977 தேர்தலில் அவர் யாழ்ப்பாணம் தொகுதியில் போட்டியிட அனுமதி வழங்காததால்,அவர் சுயேட்சையாக போட்டியிட்டதுடன்,கூட்டணியில் இருந்து தமிழக்காங்கிரஸ் விலகிக்கொண்டது.

இதனால்,ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு எதிராக இந்த பகிஸ்கரிப்பு கோரிக்கையை தமிழர் விடுதலைக்கூட்டணி விடுதலைக்கூட்டணி விடுத்ததாக அன்று தெரிவிக்கப்பட்டது. ஆனால்,வடக்கில் குமாருக்கு அதிக வாக்குகளும்,சுதந்திரக்கட்சி வேட்பாளரான கொப்பேகடுவுக்கும் கிடைத்தன. சுதந்திரக் கட்சியின் 1970 ஆட்சியில் நிதியமைச்சர் என்.எம்.பெரேராவின் பொருளதாரக்கொள்கையால் தமிழ் விவசாயிகள் நல்ல பயனை அடைந்திருந்தது இதற்கு காரணம்.கூட்டணியின் பகிஸ்கரிப்பு கோரிக்கையால் பல தமிழர்களும் வாக்களிக்கவில்லை.அதனால்,ஜே.ஆர்.ஜெயவர்த்தனாஅதிக பெரும்பா

னமையை பெறவில்லை.கூட்டணியும் ஒரு வேட்பாளரை களமிறக்கியிருந்தால் ஜே.ஆர். வெற்றியடைந்திருக்க மாட்டார்.அவரின் வாக்கு வீதம் இந்தளவுக்கும் கிடைத்திருக்காது.அதனால் அவரின் வெற்றியும் ஸ்தரமற்ற நிலையை அடைந்திருக்கும்.கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் அந்த நேரம் வெளிநாடு சென்றதால் பகிஷ்கரிப்பு பிரசாரமும் சூடு பிடிக்கவில்லை.திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை ஜே.ஆர்.அரசு நீக்கியதால், அவரால் இத்தேர்தலில் போட்டியிட முடியவில்லை.அதனால் ஹெக்டர் கொப்பேகடுவ சுதந்திரக்கட்சியில் போட்டியிட்டார்.அதுவும் ஜே.ஆர.வெற்றக்கு காரணம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவாக பிரசாரம் செய்து வெற்றி பெறச்செய்தனர். அவரின் சில அரசியல் நடவடிக்கையால்,அவர் ஏமாற்றிவிட்டார் என இன்று கூறுகின்றனர். ஐ.தே.க.ஆட்சிக்கு ஆதரவு அளித்து வந்துவிட்டு இன்று கடைசி நேரத்தில் அதனையும் விமர்சிக்கின்றனர். இதேவேளை தமிழத்தேசிய கூட்டமைப்பு கடந்த உள்ளூராட்சி தேர்தலில் பின்னடைவையும் சந்தித்துள்ளது. இனிவடக்கு,கிழக்கில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி,ஐ.தே.க,மக்கள் விடுதலை முன்னணி,ஈரோஸ்,போரளிகள் கட்சி,தமிழ் மக்கள் கூட்டணி,தமிழ் தேசிய மக்கள் முன்னணி என பல தமிழ் அமைப்புகள் வடக்கு,கிழக்கில் தற்போது தமக்கான ஆதரவு பிரசாரங்களை செய்து வருகின்றன. இதேவேளை சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பியான அங்கஜன் இராமநாதன்,பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை வடக்கே அழைத்து வந்து சிறு பிரசாரத்தை மேற்கொண்டிருந்தார்.இதன் மூலம் வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த அணிக்கு ஆதரவை தேடும் நடவடிக்கையை நாமல் ராஜபக்ச செய்துள்ளார். ஆனால்,ஈ.பி.டி.பியினர் இதில்



கோப்புப்படம்

14 ஆம் பக்கம் பார்க்க....





# மட்டக்களப்பில் கடை விரித்திருக்கும் தமிழ் கட்சிகள்!

## கானல் நீராகப் போகும் கிழக்கு தமிழர்களின் எதிர்பார்ப்பு

இரா.துரைரத்தினம்
சுவிட்சர்லாந்து

கிழக்கில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு அணியாக தேர்தலை சந்தித்து தமிழர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவத்தை பெற வேண்டும் என்ற கோரிக்கை கிழக்கில் முன்வைக்கப்பட்டு வரும் இவ்வேளையில் கடந்த வாரங்களில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் பலரும் மட்டக்களப்பிற்கு படை எடுத்து வந்து தமது கட்சிகளை அங்கு கால் ஊன்ற வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அண்மையில் புதிதாக கட்சி ஆரம்பித்த முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அமைச்சர் மனோ கணேசன், வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் விடுதலைப்புலிகளின் திருகோணமலை அரசியல் பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவியுமான அனந்தி சசிதரன், என பலரும் கிழக்கை நோக்கி படை எடுத்திருக்கிறார்கள். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தை மையப்படுத்தியே அவர்களின் அரசியல் நகர்வுகள் காணப்பட்டன.

முன்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வாகரையில் சி.வி.விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமது அணிகளுடன் தனித்தனியாக மக்கள் சந்திப்புக்களையும் கூட்டங்களையும் நடத்தியிருக்கின்றனர்.

இதன் பின்னர் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டக்களப்பிலும் கல்முனையிலும் பல தரப்புக்களையும் சந்தித்ததுடன் மாமாங்கம் பகுதியில் அலுவலகம் ஒன்றையும் திறந்து வைத்திருக்கிறார்.

மட்டக்களப்பு மக்கள் மத்தியில் முன்னாள் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் நன்கு அறியப்பட்ட ஒருவர் அல்ல. அவருக்கு மட்டக்களப்பில் ஆதரவு தளம் என ஒன்று கிடையாது. தமிழ் மக்கள் கூட்டணி என்ற அவரின் மாவட்ட அமைப்பாளராக இருப்பவர் தற்போது மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினராக இருக்கும் சோமசுந்தரம் என்பவராகும். இவர் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆதரவாளராக இருந்தவர். பொதுத்தேர்தல் ஒன்றிலும் முன்னர் ஒரு தடவை ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியில் மட்டக்களப்பில் போட்டியிட்டவர். இவர் மட்டக்களப்பு மாவட்டம் தழுவிய ரீதியில் செல்வாக்கு கொண்டவரோ அல்லது அறிமுகமானவரோ கிடையாது.

விக்னேஸ்வரனின் கட்சியில் இணைந்து கொண்டிருக்கும் மற்றுமொருவர் வெள்ளிமலை என அழைக்கப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை ஆகும். 2001ஆம் தேர்தலில் இவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் சார்பிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அதன் பின்னர் கடந்த கிழக்கு மாகாணசபை தேர்தலில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அவரும் தற்போது விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியில் இணைந்திருக்கிறார். இது தவிர விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கமும் இணைந்திருப்பதால் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் துரைரத்தினத்திற்கு சொற்ப அளவிலான வாக்கு வங்கி உண்டு. எனவே மட்டக்களப்பில் பெரிய அளவில் விக்னேஸ்வரனின் கட்சிக்கு ஆதரவு தளம் இல்லாவிட்டாலும் பொதுத்தேர்தலோ அல்லது மாகாணசபை தேர்தலோ வருகின்ற போது விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சி மட்டக்களப்பில் போட்டியிடும் என்பது உறுதி.

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடந்த பொதுத்தேர்தலிலும் உள்ளூராட்சி தேர்தலிலும் மட்டக்களப்பில் போட்டியிட்டிருந்தது. பொதுத்தேர்தலில் மிக சொற்ப வாக்குகளை மட்டும் எடுத்திருந்த இக்கட்சி உள்ளூராட்சி சபை தேர்தலில் வாழைச்சேனை பிரதேசசபையில் ஒரு உறுப்பினரை மட்டும் பெற்றிருந்தது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி வேறு கட்சிகளுடன் கூட்டு சேரும் சாத்தியங்களும் இல்லை. அவர்களால் மட்டக்களப்பில் வாக்குகளை பிரிக்க முடியுமே தவிர நாடாளுமன்றத்திற்கோ மாகாணசபைக்கோ ஒரு உறுப்பினரை கூட பெறும் வாய்ப்பு அறவே கிடையாது.

ஏற்கனவே குழப்பி போய் இருக்கும் மட்டக்களப்பு அரசியலில் கொழும்பை தளமாக கொண்டு செயற்படும் அமைச்சர் மனோ கணேசனும் மட்டக்களப்பில் தனது அலுவலகத்தை திறந்திருக்கிறார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கத்தை கொலை செய்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருக்கும் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனையும் சந்தித்திருக்கிறார். பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து மனோ கணேசனின் கட்சியும் மட்டக்களப்பில் தனது வேட்பாளர்களை நிறுத்தும் என கூறப்படுகிறது. பிள்ளையான் மனோ கணேசன் கூட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனும் இணைய உள்ளார்.

மட்டக்களப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்த நிலையில் வாக்குகளை பெறக் கூடிய நிலையில் பிள்ளையான் மற்றும் வியாழேந்திரன் கூட்டு காணப்படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து பிரதி அமைச்சராக பதவி ஏற்ற வியாழேந்திரன் சொற்பநாட்களே பிரதி அமைச்சர் பதவியில் நிலைக்க முடிந்தது. அதன் பின்னர் தமிழர் முற்போக்கு அமைப்பு என்ற பெயரில் ஒரு புதிய கட்சியை ஆரம்பித்திருந்தார்.

இவரின் வாக்கு வங்கி என்பது தனது மாணவர் குழாத்தை மையப்படுத்தியதே ஆகும்.

க.பொ.த உயர் தரம் மற்றும் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கு பிரத்தியேக தனியார் வகுப்புக்களை நடத்தி வரும் இவருக்கு மட்டக்களப்பு மாவட்டம் தழுவிய ரீதியில் மாணவர் குழாத்தின் ஆதரவு காணப்படுகிறது. கடந்த பொதுத்தேர்தலில் விருப்பு வாக்கின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு இந்த மாணவர்களின் ஆதரவுதான் காரணமாகும்.

தன்னிடம் படித்த மாணவர்களை மூலதனமாக கொண்டு வியாழேந்திரன் கடந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பில் வெற்றி பெற்றதை போல 1989 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் ஈரோஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுத்தப்பட்ட சுயேச்சைக்குழுவில் அழகு. குணசீலன் வெற்றி பெற்றிருந்தார். சுயேச்சை குழுவின் தலைமை வேட்பாளராக இருந்த கே.சௌந்தரராசன் தமிழர் விடுதலைக் கூட்டணி வழிவந்த அரசியலில் அனுபவமும் மக்கள் அறிமுகமும் இருந்த போதிலும் மாணவர்களின் ஆதரவு தளத்தை மட்டும் வைத்திருந்த குணசீலன் விருப்பு வாக்கில் முதலாம் இடத்திற்கு வந்து நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

கிழக்கில் தமிழர்களின் வாக்குகள் சிதறக் கூடாது. அனைத்து கட்சிகளும் ஒரே அணியில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான முயற்சிகளும் நடைபெற்றன.

ஆனால் தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் பூச்சிய நிலையிலேயே இன்றும் காணப்படுகிறது.

கிழக்கில் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவத்தை இழந்து விடக்கூடாது என்ற ஆதங்கம் பொதுவாக தமிழ் மக்களிடம் காணப்படுகிறது. கிழக்கு மாகாணம் தமிழ் முஸ்லீம் சிங்களம் என மூன்று இன மக்களும் வாழும் மாகாணமாகும்.

பாராளுமன்ற தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவத்தை தக்க வைக்கும் அதேவேளை கிழக்கு மாகாணசபையில் தமிழர் ஒருவரே முதலமைச்சராக வேண்டும் என்ற கோரிக்கையையும் அண்மைக்காலத்தில் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் முன்வைத்து வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் பிரிந்து நின்று தனித்தனியாக போட்டியிட்டாலும் அங்கு தெரிவு செய்யப்படுபவர் தமிழராகவே இருப்பார். தென்னிலங்கை கட்சிகளாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றில் போட்டியிட்டாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழர் ஒருவரே தெரிவு செய்யப்படுவார். அதற்கு உதாரணமாக விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களின் தெரிவு கூறலாம்.

ஆனால் மட்டக்களப்பிலோ அல்லது அம்பாறை திருகோணமலையிலோ தமிழர்களின் வாக்குகள் பிரிந்தால் வாய்ப்பு ஏனைய இனங்களுக்கே கிடைக்கும். சிறிலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய தென்னிலங்கை கட்சிகளில் தமிழர்கள் போட்டியிட்டாலும் அவர்களால் ஒரு போதும் வெற்றி பெற முடியாது. தென்னிலங்கை கட்சிகளில் போட்டியிடும் தமிழர்கள் வாக்குகளை சேகரித்து ஏனைய இனத்தை சேர்ந்த ஒருவரை தெரிவு செய்வதற்கே உதவுவார்களே ஒழிய தமிழர் ஒருவர் தெரிவாவது நடக்க கூடிய காரியம் அல்ல.

இதனால் தான் கிழக்கில் அனைத்து கட்சிகளின் கூட்டு ஒன்று தேவை என்ற கோரிக்கையை மக்கள் முன்வைக்கிறார்கள்.

தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நடைபெற்ற போதிலும் அது இன்றுவரை கைகூடவில்லை.

தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளை கிழக்கு தமிழர் ஒன்றியம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட அமைப்பு கடந்த வருடம் ஆரம்பித்திருந்தது. இதன் முதலாவது கூட்டம் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி நடைபெற்றது.

த.கோபாலகிருஷ்ணன் மற்றும் சட்டத்தரணி சிவநாதன் ஆகியோரே ஆரம்பத்தில் இக் கூட்டுக்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதில் தமிழர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவை கருத்தில் கொண்டு அப்போது இருந்த தமிழ் கட்சிகளை இணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் உருவாக்கம் மட்டக்களப்பை மையப்படுத்தித்தான் இடம்பெற்றது.

2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பையே பெரும்பான்மையான வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தெரிவு செய்தனர். குறிப்பாக கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்தவர்களாகும்.

தமிழ் மக்களின் ஏகபோக அரசியல் தலைமை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தான் என்ற உயர் நிலைக்கு அக்கட்சியை தமிழ் மக்கள் உயர்த்தி வைத்த போதிலும் அக்கட்சியின் தலைவர்களின் தவறான போக்குகளாலும் உறுதியற்ற தன்மைகளாலும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மதிப்பை இழந்து வருகிறது என்பதுதான் உண்மை. அதனால் தான் வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாக தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் வடக்கில் அரசியல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கின்றன.

அதன் தொடர்ச்சியாகவே விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்றவர்கள் மட்டக்களப்பிலும் கால் பாதித்திருக்கிறார்கள்.

தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என வேண்டுகோள் விடுத்து வரும் கிழக்கு தமிழ் மக்கள் விக்னேஸ்வரன் போன்றவர்களின் வருகையை உவப்பாக பார்க்கவில்லை.

கிழக்கு தமிழர் ஒன்றியம் அனைத்து தமிழ் கட்சிகளையும் அழைத்து பேசிய போதிலும் கிழக்கு தமிழர் ஒன்றியம் உருவாக்கிய கூட்டில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, மற்றும் ஈ.பி.டி.பி ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈரோஸ் என மட்டக்களப்பில் செல்வாக்கில்லாத உதிரிக்கட்சிகளே இணைந்து கொண்டன.

இந்த நிலையில் ‘ஈழத் தமிழர் பேரவை’ என்ற அமைப்பு அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து ஒரு கூட்டத்தை 14.07.2019 அன்று மட்டக்களப்பு நொச்சிமுனையில் உள்ள விடுதி ஒன்றில் நடத்தியது.

இக்கூட்டத்திற்கு பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, கருணாவின் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, வியாழேந்திரனின் முற்போக்கு தமிழர் அமைப்பு, ஈரோஸ், ஈ.பி.டி.பி. ரெலோ, ஜனநாயக போராளிகள் கட்சி, உட்பட சில உதிரிக்கட்சிகளும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

தமிழரசுக்கட்சி இதில் கலந்து கொள்ளவில்லை.

ஆனாலும் அக்கூட்டத்தில் கூட தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி கைகூடவில்லை.

ஏற்கனவே தமிழ் கட்சிகளை ஒன்றிணைப்பதற்காக உருவாக்கப்பட்ட கிழக்கு தமிழர் ஒன்றியம் தற்போது தம்மை ஒரு அரசியல் கட்சியாக அறிவித்திருக்;கிறார்கள். சட்டத்தரணி சிவநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

கிழக்கு தமிழர் ஒன்றியம் உருவாக்கப்பட்ட போது இது ஒரு அரசியல் அமைப்பு அல்ல இது ஒரு மக்கள் அமைப்பாகும். இந்த அமைப்பில் கிழக்கில் இருக்கும் எந்த ஒரு தமிழனும் கட்சி வேறுபாடின்றி அங்கத்தும் பெறலாம் என்று கூறப்பட்டது. கிழக்குத் தமிழர் ஒன்றியம் சமூக நலன் அமைப்பாகவே பதிவும் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் ஆரம்ப காலத்தில் கூறப்பட்டதற்கு முரணாக கிழக்கு தமிழர் ஒன்றியம் ஒரு அரசியல் கட்சியாக இயங்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிணைந்த தமிழ் மக்கள் கட்சி என அதற்கு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

கிழக்கில் தமிழ் கட்சிகள் ஒரே அணியில் போட்டியிட்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்து கொள்ள வேண்டும் என மக்கள் கோரினாலும் தற்போது மட்டக்களப்பில் தளமிட்டிருக்கும் கட்சிகள் ஒன்றிணைவதற்கான வாய்ப்பே இல்லை எனலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியாக இருக்கும் தமிழரசுக் கட்சி தமது அணிக்குள் பிள்ளையான் குழுவை சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். அது போல விக்னேஸ்வரன் அணி, கஜேந்திரகுமார் அணிகளும் தமிழரசுக் கட்சியுடனோ அல்லது பிள்ளையான் குழுவுடனோ இணைந்து கொள்ள மாட்டார்கள்.

பொதுத்தேர்தலோ மாகாணசபை தேர்தலோ வருகின்ற போது கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் ஐந்திற்கு மேற்பட்ட தமிழ் கட்சிகள் போட்டியிடும் நிலை காணப்படுகிறது. இது முஸ்லீம் தரப்பிற்கு பெரு வெற்றியையும் மகிழ்ச்சியையும் தரும் செய்தியாகும்.

76 வீதம் உள்ள தமிழர்கள் இரண்டு அல்லது ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் 24 வீதம் உள்ள முஸ்லீம்கள் நான்கு அல்லது மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றுக்கொள்வார்கள். கிழக்கு மாகாணத்திற்கு தமிழ் முதலமைச்சர் என்ற தமிழர்களின் எதிர்பார்ப்பும் கானல் நீராகவே போகும்.




கோப்புப்படம்

# ஜனநாயகமும் நல்லிணக்கமும்

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

மக்களது பிரச்சினைகள் தமக்கு எவ்வித இலாபத்தையும் பெற்றுத் தராமையால், அரசியல்வாதிகள் இதனை புறந்தள்ளி செயற்படுகின்றனர். ஆனால் தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை கடவுளாக எண்ணி நினைத்த வரத்தை பொய்யான வாக்குறுதிகளை வழங்கி பெற்றுக்கொள்வதில் தமது சாமர்த்தியத்தை வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் போலியான பகட்டான வாக்குறுதிகளை நம்பி மக்களும் ஏமாந்த வரலாறுகளே அதிகம். இதனை இன்று வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் முதலியவை எடுத்தியம்புகின்றன. இந்நிலையில் எதிர்பார்ப்பு மற்றும் நோக்கம் என்ற ஒன்று இல்லாத போது மக்கள் வாழ வேண்டும் என்ற கட்டாயத்திற்காக வாழ்கின்றார்கள். வேறு விதத்தில் கூறினால் மனிதர்களை, வாழ்க்கை வழி நடத்துகின்றது என்றே கூறவேண்டும். இதற்கு மற்றுமொரு பிரதான காரணம் நம் நாட்டில் சிவில் சமூகமானது வலுவிழந்து காணப்படுகின்றமையே ஆகும். இதுவே இன்று எமது நாடு எதிர்கொண்டுள்ள துர்தி;டம் என்றே கூறலாம். மக்கள் நாட்டின் எதிர்கால சந்ததிக்காக அரசியல், பொருளாதார, சமய, கலாசார கல்வி நிலையில் இருந்து தெளிவடைந்து, அவர்கள் இச் சமூகத்தை போணீக்க தவறுகின்றமையே இந்த நிலை ஏற்படப் பிரதான காரணமாகும் என்பதும் நம் நாட்டைப் பற்றிச் சிந்தித்திருப்போருக்கு நன்கு தெரியும்.

இந்நிலையில் வட கிழக்கின் எதிர்கால நகர்வுகள், நல்லிணக்க செயற்பாடுகள், அவற்றின் நிலைப்பாடுகள் குறித்து சிந்திக்கும் போது அவை எதிர்காலத்தில் கேள்விக்குறியாய் நிற்கும் பதில் இல்லா வினாவாகவே அமையலாம் என்றே சிந்திக்க தோணுகின்றது. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு சமூகத்தை புறந்தள்ளிவிட்டு இன்னும் ஒரு சமூகம் தனியாக பயணித்து வெற்றி பெற முடியாது என்பதனை கடந்த 30 வருட காலமாக நடைபெற்ற நிகழ்வுகள் நம் எல்லோருக்கும் உணர்த்தி வந்தது. அத்துடன் நாட்டில் கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலினூடாக ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் போதும் சிறுபான்மையின மக்களின் ஒன்றினைந்த வாக்குப்பலத்தினூடாகவே நாட்டில் நல்லாட்சியை தோற்றுவித்துள்ளமையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாட்டில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தின்பின் சிறுபான்மையினத்திடையே பிளவுகளை ஏற்படுத்தி தங்களின் அரசியல் இருப்பிடத்தை தக்க வைக்கும் நோக்குடன் இனவாத கருத்துக்களை தூண்டி வரும் சில பேரினவாத அரசியல்வாதிகள் இவைகளை நிறுத்திவிட்டு பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்கும் செயற்பாடுகளுக்கு தங்களது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டியதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதன் ஊடாகத்தான் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நாம் எதிர் பார்க்கும் நிரந்தரமான இன உறவுகள் நீடித்து நிலைத்து நிற்கும் நிலையுடன் கூடிய வட கிழக்கு இணைப்பு உருவாகுவதுடன், நீண்ட காலம் தீர்க்கப்படாமல் (கடந்த 30 ஆண்டுகாலமாக) உள்ள அரசியல் தீர்வு விடயத்திலும் நல்லாட்சியில் ஒற்றுமைப்பட்டு செயற்பட்டு சிறுபான்மை சமூகங்கள் திருப்தி அடையும் வகையில் நமக்கான அதிகாரங்களை பெறுவதற்கான நடவடிக்கைகளில் தேசிய அரசாங்கம் ஒற்றுமைப்பட்டு செயல்பட வேண்டிய காலம் உருவாகி உள்ளது.

இந்த நாட்டில் இரண்டு தவணைகளுக்கு மேல் யாரும் ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் வாய்ப்புக்கள் இருந்ததில்லை. தவணைக்கட்டுப்பாட்டை நீக்கி ஆயுள் பூராவும் ஆட்சியில் இருக்கலாம் என்ற நோக்கில் ஒரு ஜனநாயக நாட்டில் செயற்படுவது ஆபத்தானது என்பது கடந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலமாக மிகத் திட்டவட்டமாக நிரூபிக்;கப்பட்டுள்ளது. ஊழல், மோசடி, குடும்ப ஆட்சி போன்ற குற்றச் சாட்டுக்கள் மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அது பெரும்பான்மை மக்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தைப் போன்றே சிறுபான்மை மக்கள் யுத்த வெற்றிக்குப் பிறகு மிக மோசமாக நடத்தப்பட்டோம். அடிப்படையற்ற வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகின்ற போது ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் தீவிரவாதக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவதில் உதாசீனப் போக்குடன் நடந்து கொண்டமை போன்ற விடயங்கள் ஒட்டுமொத்த சிறுபான்மையினங்கள் கடந்த ஆட்சியாளருக்கு எதிராக வாக்களிக்கின்ற சூழலையும் உருவாக்கியிருந்தது.

இன்று கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை சாய்ந்த மருதை தரம் உயர்த்த வேண்டும் என முஸ்லிம் தலைமைகள் சிலர் பாடுபடும் அதேவேளை தமிழ்ப்பிரிவை தரமுயர்த்த முனையும் போது முட்டுக்கட்டை போடுகின்றார்கள் என மக்கள் மத்தியில் பரவலாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. கல்முனை தொகுதியில் அமைந்துள்ள சாய்ந்தமருது பிரதேச செயலகப்பிரிவில் வாழும் மக்கள் தங்களுக்கான தனியான பிரதேச சபையை அமைத்து தருமாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த கோரிக்கை நியாயமானதாகும்; என முஸ்லிம் தலைமைகள் சிலர் கூறிவருகின்றனர். அத்துடன் முஸ்லிம் பிரதேசங்களுக்கு தனியான பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படும் வேளையில் தமிழ் பிரதேசங்களில் தங்களுக்கான தனியான பிரதேச சபை அமைய வேண்டும் என கோரிக்கை விடுப்பதும் நியாயமானதாகும் என்பதை கருத்திற்கொண்டு; தமிழ் முஸ்லிம் மக்களிடையே இன நல்லுறவை பாதிக்காதவகையில் இந்த விடயங்களில் முஸ்லிம், தமிழ் தலைவர்கள் எந்தவொரு சமூகத்திற்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் கலந்துரையாடி புரிந்துணர்வோடு செயல்பட்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும். இதனாலேயே இப்பிரதேசங்களில் நிரந்தர இன உறவை கட்டி வளர்க்கலாம். இதன் மூலம் நல்லாட்சியின் இனங்களுக்கிடையேயான தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு வழிவகுத்துக் கொடுக்கமுடியும். இதன் மூலமே ஏனைய சமூகமும் இணைந்து நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து மக்கள் பிரதிநிதிகளும், புத்திஜீவிகளும் இணைந்து தமிழ், முஸ்லிம் நல்லுறவுகளை வளர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை முன் எடுக்க வேண்டும். குறிப்பாக சந்தேகங்கள் நீங்கி, புரிந்துணர்வோடு செயல்பட்டு, தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளுக்கு முஸ்லிம் மக்கள் மதிப்பளித்து உதவி புரிவதுடன், தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளுக்கு முஸ்லிம் மக்கள் மதிப்பளித்து உதவி புரியும் நிலமையினால் மாத்திரமே சிறுபான்மையிடத்தில் பிளவுபடாத ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

முஸ்லிம் மக்களின் செயற்பாடுகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கும் தமிழ் மக்களின் செயற்பாடுகளில் முஸ்லிம் மக்கள் நம்பிக்கை வைப்பதற்குமான சூழ்நிலையை குறித்த இரு இனங்களினாலும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு சமூகப் பிரதிநிதிகளுமே உருவாக்க வேண்டும். முஸ்லிம் மக்களுடன் இன உறவை பேண வேண்டும் என யதார்த்தமான கருத்துக்களை முன்வைத்துள்ள தமிழ் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான ஏற்பாடுகளை வட கிழக்கில் மேற்கொள்ள வேண்டும்.

பல்லின மக்கள் வாழும் நமது நாட்டில் கடந்த 03 தசாப்த காலமாக நடை பெற்ற நிகழ்வுகள் எல்லா சமூகங்களுக்கும் குறிப்பாக தமிழ்மக்களுக்கு பெரும் படிப்பினையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நமது நாட்டின் ஜனாதிபதிகளாகவும், பிரதம மந்திரிகளாகவும் செயற்பட்டனர். குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்கள் நீண்ட காலமாக ஆளும் கட்சியில் அமைச்சர்களாக பதவி வகித்தனர். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளும், தமிழ் ஆயுதக் குழுக்களும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வடக்கு - கிழக்கு மாகாணங்களை கொண்டு வருவதற்கும் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். இந்நிகழ்வுகளால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த மூவின மக்களும் நிம்மதி இழந்ததுடன், இலங்கை முழுவதும் வாழும் சகல இன மக்களும் நிம்மதி இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை நம் எல்லோருக்கும் ஏற்பட்டது என்பதனை நாம் மறந்து விட முடியாது. எனவே, சகல இனங்களின் நியாயமான உரிமைகளை நாம் எல்லோரும் மதித்து செயல்படும் போதுதான் சகல இன மக்களும் நிம்மதியாகவும் நிரந்தரமான இன ஐக்கியத்துடன் வாழும் சூழ் நிலை உருவாகும் என்பதை யாரும் மறுக்கவியலாது.

முஸ்லிம் சமூகம் தொடர்பாக கசப்பான உணர்வுகளை தமிழ் மக்கள் மத்தியில் தூண்டி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் - முஸ்லிம் சமூகங்களை நிரந்தரமாக பிரித்து வைத்துப் பார்க்கும் செயற்பாடுகளில் சில பேரினவாத அரசியல் வாதிகள் ஈடுபட்டு வருவது குறித்து நாம் எல்லோரும் கவலைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 03 தசாப்த காலமாக நிலவிய கொடூர யுத்தத்தின் காரணமாக சமூக ரீதியில் பிரிந்து வாழ்ந்த இரண்டு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட இன ஐக்கியம் நிலையானதாக அமைவதற்கான செயற்பாடுகளில் நாம் ஈடுபட வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயங்கும் தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் உள்ள பிரச்சினைகளை பேச்சு வார்த்தையின் ஊடாக நிரந்தரமான தீர்வுகளை காண வேண்டும். இல்லையெனில் நமது இரு சமூகங்களையும் மோதவிட்டு நிரந்தரமாக நமது சமூகங்களை பிரிப்பதற்கான ஏற்பாடுகளை நமது நாட்டில் உள்ள இனவாதிகள் மேற்கொள்வார்கள். அவர்களுக்கு வழிவகுத்தவர்களாக காலம் எம்மை பழி கூறாமல் தமிழ் அரசியல்வாதிகளும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

# என்று விடியும் தொழிலாளர்களின் வாழ்க்கை?

மஸ்கெலியா நிருபர்

மலையக பகுதியில் உள்ள சகல தோட்டங்களும் வெள்ளையர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் போது சகல தேயிலை தோட்டங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தது. அப்போது தொழிலாளர்கள் பெரும் பிரச்சினைகளின்றி மாதம் 30 நாட்களும் வேலை செய்து வந்தனர். அக்கால கட்டத்தில் சகல தேயிலைத் தோட்டங்கள் தோறும் தேயிலைத் தொழிற்சாலைகள் இருந்தன. அந்தந்த தேயிலை தோட்ட தேயிலை கொழுந்துகளை அதே தோட்ட தொழிற்சாலைகளில் அரைத்து தேயிலையை நல்ல விலைக்கு பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.



அக்காலத்தில் தோட்டங்களில் இருந்து தெருக்கள் சுத்தமாக இருந்தன். வைத்தியசாலைகள் பராமரிப்பில் இருந்தன. தோட்ட சுத்திகரிப்பாளர்கள் கடமையில் இருந்தனர். தோட்டம் பளிச்சென இருந்தது. இவ்வாறான தேயிலை தோட்டங்களையும் இறப்பர் தோட்டங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்று அரச உடமைகளாக்கியது. அப்போது அரச பெருந்தோட்டயாக்கம் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை என இரண்டு பிரிவுகளின் கீழ் தோட்டங்கள் இயங்கி வந்தன. தேயிலைத் தோட்ட பராமரிப்பு ஓரளவுக்கு சிறந்து காணப்பட்டது.

இவ்வாறான காலக் கட்டத்தில் அரசாங்கம் ஒரு சில தேயிலைத் தோட்டங்களை ஒன்றுடன் ஒன்று இணைத்தது. அவ்வாறு இணைக்கப்பட்ட போது அத்தோட்டங்களில் இருந்து தேயிலை தொழிற்சாலைகளை மூடி விட்டனர். அவ்வாறு மூடப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையில் இருந்த உபகரணங்களை விலை மனு கோரி விற்று விட்டனர். பின்னர் தோட்டங்கள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டன. அவ்வாறு குத்தகைக்கு எடுத்த சிலர் தேயிலை கொழுந்தை மட்டும் பறித்து விற்றனர் ஆனால் தேயிலைத் தோட்டங்களை துப்புரவு செய்யவில்லை.

பல தோட்டங்கள் தற்போது காடாகி வருகின்றன. பராமரிப்பில் அக்கறை குறைந்து வருகிறது. தோட்டங்களில் இருந்து மரங்களை வெட்டி விற்று விட்டனர். அந்தப் பணத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு வழங்கவில்லை முழுமையாக கம்பனிகள் சுருட்டிக் கொண்டன மேலும் அக்காலத்தில் மூடப்பட்ட தேயிலை தொழிற்சாலைகளையும் விலை மனு கோரி விற்பனை செய்கின்றனர். அவ்வாறு விற்பனை செய்யும் பணமும் கம்பனிகாரர்கள்சுருட்டிக் கொள்கின்றனர்.

இவ்வாறாக கிடைக்கப்பெரும் இலாபங்களை தொழிலாளர்களுக்கு ஒரு சதமேனும் வழங்குவது இல்லை. இவ்வாறு தோட்டங்களில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் விற்று தீர்த்த உடன் தொழிலாளர்களுக்கு என்ன மிஞ்சப் போகிறது? இவ்வாறு விற்பனை செய்வதை அரசாங்கமும் தோட்ட தொழிற் சங்கங்களும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் தோட்டங்களில் லயன் அறைகளில் வசிப்போர் உள்ளனர். 8.8 காம்பிராக்களில் வசிக்கின்றனர். அதனை நவீன மயப்படுத்த வேண்டும். துற்காலிக கொட்டில் அமைத்துக் கொண்டு உள்ளனர்.

தோட்ட நிர்வாகம் சம்பாதித்துக் கொண்டு செல்வதை மட்டும் பார்க்காமல் இவர்களுக்கான வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்க முன்வர வேண்டும். சகல வேலைகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் தோட்ட கம்பனிகள் தொழிலாளர் நல விசயங்களை கண்டுக்கொள்வதில்லை. இலாபம் தேடுவதிலேயே குறியாக உள்ளனர். தொழிலாளர்களின் சம்பளத்தை கூட்டிக் கொடுக்க கம்பனிகள் இழுத்தடிப்ப செய்கின்றன.

கம்பனிகாரர்களினால் தான் இது நடக்கின்றது. கிடைக்கும் இலாபம் எல்லாம் எங்கு போகின்றது? ஒரு சில தோட்டங்கள் நஸ்டத்தில் இயங்கினாலும் பல தோட்டங்கள் பாரிய இலாபத்தினை தேடி கொடுக்கின்றன. அதற்கு காரணம் தோட்டத்தை நிர்வாகம் செய்யும் முகாமையாளரும் தோட்ட தொழிலாளரும் தான் காரணம்.

மஸ்கெலியா பகுதியை எடுத்துக் கொண்டால் சீட்டன் தோட்ட தேயிலை தொழிற்சாலை, புரவுண்லோ தேயிலை தொழிற்சாலை, அப்புகஸ்தனை தேயிலை தொழிற்சாலை, பெரிய நடுத்தோட்டம் தேயிலை தொழிற்சாலை, ராணி தோட்ட தேயிலை தொழிற்சாலைஇ மல்லியப்பு தேயிலை தொழிற்சாலை, மினிசிங்லேன் தேயிலை தொழிற்சாலை, நல்ல தண்ணி தேயிலை தொழிற்சாலை, மடுல்கல தேயிலை தொழிற்சாலை, பெயர்லோன் தேயிலை தொழிற்சாலை, மொக்கா தேயிலை தொழிற்சாலை, ஒல்டன் தேயிலை தொழிற்சாலைஇ என்பன மூடப்பட்டுள்ளன.

இதனால் தோட்ட தொழிலாளர்களுக்கு எந்த நன்மையும் கிடையாது கம்பனிகாரர்களுக்கே இதில் இலாபம். ஏனையவற்றையும் இழந்து விடாமல் காப்பாற்றிக் கொள்ள தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் அரசாங்கம் முன்வர வேண்டும்.



# புதிய முஸ்லிம் அமைச்சர்களும் எதிர்காலத் தேர்தல்களில் முஸ்லிம்களின் நிலைப்பாடும்

தந்திமகன்

இலங்கை முஸ்லிம்கள் என்ன பாவம் செய்தார்கள். முஸ்லிம்களில் அமைச்சராக இருந்தாலும் பிரச்சினை, அமைச்சர்களாக இல்லாவிட்டாலும் பிரச்சினை. இப்போது பிரச்சினை பிரச்சினை எந்தப்பக்கம் பார்த்தாலும் முஸ்லிம்களோடுதான் அதிகமான முரண்பாடுகளும், பிரச்சினைகளும் எழுந்துகொண்டிருக்கின்ற ஒரு நிலை பார்க்கப்படுகிறது. வெறுமனே எந்தக் குற்றமும் இல்லை என்கிறார்கள். குற்றம் இருக்கிறது என்கிறார்கள். ஆனால் உள்ளே சிலநாள், வெளியே சிலநாள். யாரையும் யாரும் நம்பும்படியாக இல்லை. நாட்டில் முஸ்லிம்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு காணப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் மீண்டும் ஒரு அமைச்சர் குழு முஸ்லிம்கள் மத்தியில் நடப்பட்டிருக்கிறது. அதுவும் பழையவர்கள் மீண்டும் அதே பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். சிலர் இன்னும் அமைச்சர் பதவிகளை எடுக்கவில்லை. காரணம் சில விடயங்களில் அரசு கவனம் செலுத்த வேண்டும். உறுதிமொழி தரவேண்டும் என்கிற கோதாவில் பதவி எடுக்கவில்லை என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

ஆம், இலங்கையில் நடந்த குண்டு வெடிப்பு தாக்குதல்களையடுத்து, பதவி விலகிய நான்கு முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பதவிஏற்றுள்ளனர். ஏப்ரல் 21ல் ஈஸ்டர் பண்டிகையின் போது பல்வேறு இடங்களில், குண்டு வெடிப்பு தாக்குதல்கள் நடந்தன. இதில், 259 பேர் உயிரிழந்தனர்; ஏராமானோர் படுகாயமடைந்தனர். முஸ்லிம் அமைப்பான தேசிய தவ்ஹீத் ஜமாத் இந்த தாக்குதலை நடத்தியது, விசாரணையில் தெரிந்தது. இந்நிலையில், இந்த அமைப்புடன் தொடர்புள்ளதால், நான்கு முஸ்லிம் அமைச்சர்களை நீக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. அதையடுத்து, ஜூன் மாதத்தில், நான்கு முஸ்லிம் அமைச்சர்களும் பதவி விலகினர். தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், இவர்களுக்கும், அந்த அமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெரிந்தயைடுத்து முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் அமைச்சரவையில் சேர்க்கப்படுவர் என, பிரதமர், ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் தெரிவித்திருந்தார். இந்நிலையில், ரஊப் ஹகீம், ரிஷாத் பாதியுதீன் உட்பட நான்கு முஸ்லிம் அமைச்சர்கள் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இந்தாண்டு டிசம்பரில் எதிர்ப்பார்க்கப்படும் அதிபர் தேர்தலில் முஸ்லிம்களின் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கொள்ளவேண்டுமாக இருந்தால் அவர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்க வேண்டும் என்பதில் ஆளும் அரசின் யுஎன்பி அமைப்பினர் ஒருபுறமும், ஜனாதிபதி ஒருபுறமும் தங்களுடைய காய்களை நகர்த்திச் செல்கின்றனர். இதற்கு விசுவாசமாக அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் பல்வேறு பிரச்சினைகள் அப்படியே இருக்க இந்த அமைச்சர் பதவிகளால் முஸ்லிம்களுக்கு என்ன இலாபம் ஏற்படப்போகின்றது என்கிற கருத்தாடல்களும் மக்கள் மத்தியில் வலுப்பெற்று வருகின்றன.

இதேவேளை எதிர்வரும் சில மாதங்களில் நாட்டில் நடைபெறவிருக்கின்ற தேர்தலின்போது வழமைபோன்று முஸ்லிம்கள் கறிவேப்பிலையாகவே பயன்படுத்தப்படுவார்கள். இது வழமையான ஒரு விடயமாகும். ஆனாலும் அவ்வப்போது கல்முனை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹரீஸ் அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைப்பார்கள். அது நடைபெறாமலே போகும். மீண்டும் அதனை மறந்துவிட்டு தேர்தலில் குதிப்பார். அதேபோன்றொரு பல்லவியைத்தானா இப்போதும் எடுத்திருக்கிறார் என்பது இன்னும் சில நாட்களில் தெரியவரலாம். அதாவது கல்முனைக் கரையோர மாவட்டம் தராவிட்டால் பதவி விலகுவோன் என்பார். பின்னர் அது நடைபெறாது. மீண்டும் முகாவில் இணைந்து தேர்தலில் குதிப்பார். பழைவை மறந்துவிடும். இதே போன்றொரு விடயமாகவே இப்போது ஹரீஸ் அவர்கள் முன்வைத்திருக்கிற குற்றச்சாட்டுக்களுக்கு அரசு பதிலடி கொடுக்குமா என்பது வேறுவிடயம். ஆனால் இந்தக் கோரிக்கைகள் ஏன் அமைச்சர்;களாகியவர்களுக்கு விளங்கவில்லை.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டார்கள். முஸ்லிம்களின் சமயத்தலங்கள் பாதிக்கப்பட்டன. ஆனால் நஷ்டஈடு கிடைக்காமலே மக்கள் மறந்துபோன நிலையில்தான் நாட்டில் ஏற்பட்ட 21 துயரச்சம்பவம். இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள், சமயத்தலங்கள், ஹோட்டல்கள் பொருளாதார மையங்கள் அனைத்துக்குமே நஷ்டஈடு. ஆனால் முஸ்லிம்கள் சார்பாக முன்னரும் கிடைக்கவில்லை. பின்னரும் கிடைக்கவில்லை. காரணம் முஸ்லிம்கள் இன்னும் பயங்கரவாதிகளாகவே பார்க்கப்படுகின்ற ஒரு நிலை.

இந்த நிலைமையை மாற்றக் கோரியும், இன்னும் சில விடங்களை தூக்கிப் பிடித்துக் கொண்டு ஹரீஸ் அவர்கள் நிற்கிறார்கள். என்னநோக்கத்திற்காக முஸ்லிம் அமைச்சர்கள் ஒன்றுசேர்ந்து அமைச்சை விட்டெறிந்தார்களோ அதன் ஊடாக சாதித்தது ஒன்றுமேயில்லை. தேரர்கள் இன்னும்தான் பிரச்சினை. அன்று இருந்த பிரச்சினைகள் எதுவுமே தீர்க்கப்படாத நிலையில் அமைச்சர்கள் பதவியை எடுத்தமை தேர்தலுக்கு இவர்கள் பாவிக்கப்பட போகிறார்கள் என்கிற கருத்தே இப்போது முஸ்லிம் மக்களிடம் பேசப்படுகின்ற கருத்துக்களாகும்.

அரசாங்கத்திடம் முஸ்லிம் சமூகம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கல்முனைப் பிரதேச பிரிப்பு, தோப்பூர் வாழைச்சேனை போன்ற பிரதேச செயலகங்கள் தொடர்பில் இறுதித்தீர்வுக்கு வருதல், திகன போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட இனவாத தாக்குதல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குதல், சமூகத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பு போன்ற இன்னும் பல விடயங்களை முன்னிலைப்படுத்தியே முன்னாள் பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் அமைச்சுப் பதவியை எடுக்க மறுத்திருக்கிறார் என்கிற கருத்துக்கள் மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது. ஆனால் இந்த விடயத்தில் பதவியெடுத்த முஸ்லிம் அமைச்சர்கள் ஒரு தீர்க்கமான முடிவுடன் அமைச்சர் பதவிகளை எடுத்திருக்கலாம்.

இதேவேளை முஸ்லிம் அமைச்சர்கள் விவகாரத்தில், ரத்ன தேர் தெரிவித்து வரும் கருத்துக்களுக்கு பௌத்த சாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா சிறப்பான பதிலடியொன்றை வழங்கியிருந்தார். மீண்டும் மீண்டும் முஸ்லிம் அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவற்றை கண்ட கண்ட இடங்களில் கூறித் திரியாமல் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சென்று முறையிடுமாறு தெரிவித்திருக்கின்றார். இந்நிலையில். ரத்தன தேரர் உட்பட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக்குழுவில் முன்னிலையாக தமது முறைப்பாடுகளை பதிவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் யாருக்குமே உரிமை இருக்கிறது. ரிஷாட் பதியூனுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு உட்பட முறைப்பாடு செய்ய வேண்டிய இடங்களுக்கு சென்று மேற்கொள்ள முடியும். குற்றச்சாட்டுக்கள் இல்லாவிட்டால் என்ன செய்தாலும் பிரச்சினையில்லை. குறிப்பாக மகாநாயக்க தேரர்களும் அவர்களை மீளப் பொறுப்பேற்கும்படியே ஆலோசனை கூறியிருந்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சட்சியமளிக்க வராவிட்டால் நாடாளுமன்றிலும் வெளியிடங்களிலும் குறை கூறித்திரிவதில் பிரயோசனமில்லை. அத்துரலியே ரத்தன தேரரும் இதனையே செய்கின்றார். அவர் ஜே.வி.பியின் நம்பிக்கையில்லா தீர்மானத்தின்போது இந்த குண்டுவெடிப்புச் சம்பவமானது கடவுளின் ஆசிர்வாதம் என்றுகூட கூறியிருந்தார். அவர் வெறுமனே சபையிலும் அதேபோல வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தாமல் நேரடியாக சாட்சியமளிக்க வந்தாலே போதும். அவர் நம்பிக்கையில்லா யோசனை ஒன்றை கொண்டுவருவதாகக் கூறியிருந்தாலும் அதனையும் கொண்டுவரட்டும். அது அவருக்கு கைவந்தக் கலையாகும் எனவும் அமைச்சர் கூறியிருந்தார். இவ்வாறு முஸ்லிம்களுக்கும், அமைச்சர்களுக்கும் தொடரும் இழுபறியை முடிவுக்கு கொண்டுவரவேண்டியது ஆளும் அரசின் கடப்பாடாகவே முஸ்லிம்கள் பார்க்கின்றனர்.

இதேவேளை எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர் இஸ்லாமியர்மீது தொடுக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்களுக்கும் இஸ்லாமிய வழிமுறைகளுக்கும் ஒரு நிரந்தரத்தீர்வினை முன்வைக்க வேண்டிய கடமைப்பாடும் முஸ்லிம் அமைச்சர்களுக்குண்டு. அதாவது, முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் எல்லா முஸ்லிம்களுக்கும் சமத்துவத்தையும், நீதியையும் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் திருத்தப்பட வேண்டும் என முஸ்லிம் பெண்கள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்திருக்கின்றனர். முஸ்லிம் பெண்கள் ஒன்றிணைந்து கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றிய முஸ்லிம் பெண்கள் இந்த ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அதாவது,

அனைத்து முஸ்லிம்களின் திருமண வயதெல்லை 18ஆகவும், பெண்கள் காதிகளாகவோ, ஜூரிகளாகவோ, திருமணப் பதிவாளர்களாகவோ, காதிகள் சபை அங்கத்தவராகவோ நியமிக்கப்பட தகுதியுடையவர்களாக்கப்படல் வேண்டும் எனவும், முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம், அனைத்து முஸ்லிம்களுக்கும் ஒரே மாதிரியானதாக்கப்பட வேண்டும் எனவும், அனைத்து சட்ட ரீதியிலான திருமணங்களின் போது, மணமகன் மற்றும் மணமகள் ஆகிய இருவரின் கையெழுத்து மற்றும் கைவிரல் அடையாளங்களை கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டும். திருமண வயதை எட்டிய அனைத்து பெண்களுக்கும் சுயாதீனமாக திருமணத்தை தீர்மானிப்பதற்கு உறவு முறை ஆண்களின் அனுமதியை பெற வேண்டியது கட்டாயம் கிடையாது எனவும், திருமணம், சட்ட ரீதியில் ஏற்றுக் கொள்வதற்காக, கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். போன்ற விடயங்களில் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இந்த பெண்கள் அமைப்பினர் அறிக்கை ஒன்றை விடுத்திருந்;தனர். இந்த விடயங்களிலும் முஸ்லிம் தலைவர்கள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டியது பாரிய கடமையாகும்.

எது எவ்வாறாக இருந்த போதிலும் முஸ்லிம் சமூகம் சார்பாக நாட்டிலுள்ள உயர் சட்டவாக்க பாராளுமன்றத்தில் அதுவும் அமைச்சர்களாக அமர்ந்திருக்கின்ற தலைவர்கள் தனது மக்களின் துயரிலும், அவர்களின் நல்வாழ்விலும் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும். அரசியல்சாயத்திற்கு மாத்திரம் அடிபணிந்து ஒவ்வொரு தேர்தலின் பின்னும் ருசித்து உண்டு கழித்துவிட்டு வீசியெறியப்படுகின்ற கறிவேப்பிலையாக முஸ்லிம் சமூகம் அனைத்து நபர்களினாலும், அமைப்புக்களினாலும் தீயாக்கப்படுவதை தவிர்க்க வேண்டுமானால் தமிழர் அரசியலில் முஸ்லிம் அரசியல்வாதிகள் படிக்கவேண்டியது இன்னும் நிறையவே உண்டும்.

அபிவிருத்தி அரசியல் இப்போது யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நடந்தேறியே வருகின்ற நிலையில் அபிவிருத்தியல்ல உரிமைப்போராட்டத்திலும் பாராளுமன்ற உறுப்பினர் போல ஒரு தேர்தலில் குதிக்காமல் அப்பிரதேச முஸ்லிம் அரசியல் கட்சிகளை அழுத்தம் கொடுப்பதற்குரிய தேர்தலாக மக்கள் பயன்படுத்தவேண்டியதும் அவசியமான ஒன்றாகும்.

இந்த விடயங்களில் ஒற்றுமை அவசியமான ஒன்றாகும். அதனை முஸ்லிம் அரசியல்வாதிகள், சமூகத்தின்; நலன் கருதி தொடர வேண்டும் என்பதே மக்களினது இன்றைய கருத்தாடல்களாக காணப்படுவதையும் எம்மால் அவதரிக்கக் கூடியதாக இருக்கின்றது.

# இனவாதக் கருத்துகளைக் கொண்டவர்களை ஓரங்கட்ட வேண்டும்

சத்தார் எம் ஜாவித்

மனிதன் என்ற வகையில் அவர் யாராக இருந்தாலும் மற்றவர்களை மதிக்கப்ப பழகிக் கொள்வதுடன் அவர்களின் மனங்களைப் புண் படுத்தாது நடந்து கொள்வதே மிக உயர்ந்த பண்பாகும். இதனைவிட உலகில் வேறு எந்த விடயத்திலும் மனிதன் உயர்ந்து விடவோ அல்லது சாதித்துவிடவோ முடியாது. இவ்வாறான நற்பண்புகள் மூலமே மனிதன் சிறந்தவனாக மட்டுமல்லாது அவன் சார்ந்தவர்களும் நல்லவர்களாகவும் சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாகவும் சமுகத்தில் திகழ முடியும்.

ஆனால் இன்று இலங்கையை எடுத்துக் கொண்டால் மனிதப் பண்புகளும், நற்குணங்களும் சிதறடிக்கப்பட்டு சமுகத்தில் குழப்பங்களும், நிம்மதியற்ற தன்மைகளும் காணப்படுவதுடன் ஒருவரை ஒருவர் குற்ற உணர்வுகளுடனும், பகைமைகளுடனும் வாழும் ஒருவகையான துர்ப்பாக்கிய நிலைமைகளுக்கு உட்பட்டவனாக வாழ வேண்டியதொரு நிலைமைகளுக்குள் மக்கள் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் இன நல்லிணக்கம், சமாதானம் என்பன வேண்டும் என்று ஒருசாரார் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு சில பௌத்த தேரர்கள் தமது சமயம்,மார்க்கம் என்பனவற்றிற்கு ஆபத்து என்ற வகையில் சிறுபான்மை மக்கள் மீது வீண் பழி சுமத்தி மிக மோசமானதும், மனித சமுகத்தால் ஏற்றுக் கொள்ள மடியாதளவு தமது கேவலமான நடவடிக்கைகளை பகிரங்கமாகவே மேற்கொண்டு வருகின்றமை சமாதானத்தையும், இன ஐக்கியத்தையும் விரும்புகின்ற பெரும்பாலானவர்களை கசவை கொள்ளச் செய்துள்ளது.

இலங்கையில் அண்மைக்காலமாக நடந்து கொண்டிருக்கும் சமுக, சமய இன விரிசல்கள் விடயத்தில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நீக்குவதற்கு அரசாங்கமும்இ சமய நல்லிணக்க குழுக்களும்இ சமுக ஆர்வளர்களும் அயராத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் இனவாதஇ மதவாதஇ சமயவாத கொள்ளைகளைக் கொண்ட ஒருசில கடும்போக்குவாத பௌத்த தேரர்கள் இலங்கை வாழ் முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள எதிர்ப்புவாத விடயங்கள் இந்த நாட்டில் அமைதியை சீர்குலைத்து நாட்டை ஒரு ஆபத்தான நிலைமைகளுக்கு அவர்கள் இட்டுச் செல்கின்றார்கள் என்பதே தற்போது நடந்தேறி வருகின்றது.

இலங்கையில் சமாதானத்திற்கு ஏற்பட்டுள்ள இடைவெளியை நீக்குவதற்கும், பல்லின சமுகத்தின் மத்தியில் புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தும் வகையில் கடந்த 30ஆம் திகதி கொழும்பு தாமரைத்தடாகத்தில் சமாதானம், ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய மாநாடு ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்களிப்புடன் நடந்தது. இந்த மாநாட்டில் இலங்கையில் வாழும் சகல சமுகத்தின் சமயத் தலைவர்கள், சமுக ஆர்வலர்கள், சமாதான விரும்பிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டுப் பிரஜைகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் இன நல்லிணக்கம், சமுக ஒற்றுமை, சகவாழ்வு என்ற விடயங்களின் மக்கள் புரிந்துணர்வுடன் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் மாநாடு சென்று கொண்டிருக்கையில் ஓமல்பே சோபித தேரர் பேச்சுக்கே அழைப்பிதழ் இல்லாமல் வேறு ஒருவரின் இடத்திற்கு வந்து மேடையில் பகிரங்கமாக முஸ்லிம் சமுகத்தையும், இஸ்லாத்தையும் கொச்சைப்படுத்தி அவதூறு கூறி உரையாற்றியது முழு முஸ்லிம் சமுகத்தையும் வெறுப்படையச் செய்து விட்டது. மிகவும் கேவலமான முறையில் அவர் ஒரு மத போதகர் என்ற இடத்தில் இருந்து கீழிறங்கி செயற்பட்ட விடயம் அவரின் முழுமையான நாகரீகமற்ற செயற்பாட்டையும், அவரின் சமயப் போதனையின் முட்டாள் தனத்தையும் காட்டிச் சென்று விட்டது எனலாம்.

இந்த தேரர் முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் புனித அல்-குர்ஆன் வசனங்களுக்கும் தவறான கருத்துக்களை காட்டி தனது உரையை நிகழ்த்தியமை முஸ்லிம் சமுகத்தினை இந்த நாட்டில் இருந்து வேறாக்குவதற்குவதற்கான அவரின் மிகமோசமான கபடத்தனம் என்பததைத்தவிர வேறு ஒன்றுமில்லை. புனித குர்ஆனில் உள்ள ஒரு வசனங்களைக்கூட மாற்றுவதற்கோ அல்லது அது தொடர்பான மாற்றுக் கருத்துக்கள் சொல்வதற்கோ அல்லது அது தொடர்பான பிழையான விமர்சனங்கள் செய்வதற்கோ எந்த ஒரு மனிதருக்கும் அருகதையில்லை.

இவ்வாறான நிலையில் சோபித தேரர் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பழிவாங்கும் விதமாக பேசியமை இந்த நாட்டு முஸ்லிம்களை மட்டுமல்லாது முழு முஸ்லிம் சமுகத்தினையும் அவர் உடல், உள ரீதியாக முழுமையான புண்பட வைத்துள்ளார். இதனை ஒருசதவீதமளவேனும் முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ள முடியாது மேடையில் அழைக்கப் படாத ஒருவர் இன்னொருவரின் இடத்திற்கு வந்து பேசுவதென்றால் அதில் வராதவரின் செய்தியை மட்டுமே வாசிக்க வேண்டும். ஆனால் இவர் முஸ்லிம் சமுகத்தை பழிவாங்க வேண்டும் என்ற ஒரு மத வெறியோடே வந்துள்ளமையை அங்கிருந்தவர்கள் நேரில் கண்டு கொள்ள முடிந்ததுடன் அவர் பேசும் போதே அவரின் நாகரீகமற்ற செயற்பாட்டை பற்றி ஏசிக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

இலங்கையில் முஸ்லிம்கள் தீவிரவாதம், வன்முறைகளுக்கு எதிராகவும், சமாதானம் ஏற்பட வேண்டும், அமைதி நிலவ வேண்டும் மக்கள் அனைவரும் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற ஒரு அடிப்படையில் முழு மூச்சாக செயற்பட்டு வரும் நிலையில் இந்த நாகரீகமற்ற தேரர் முஸ்லிம்கள் மீது விரல் நீட்டியமை அவர் அமைதியா வாழும் முஸ்லிம் மக்களுக்கு செய்ய மாபெரும் துரோகமாகும். இவர் அந்தளவிற்கு சமாதான மாநாட்டில் மிகமோசமாக பேசியது மக்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்த நாட்டில் சமாதானம், ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால் சோபித தேரரின் செயற்பாட்டை மகா சங்கத்தினரும், நிக்காயாக்களும் உடன் நடவடிக்கை எடுத்து அவரின் செயற்பாட்டிற்கு தமது கண்டனங்களை தெரிப்பதுடன் இவர் போன்றவர்களை சமுகத்தில் இருந்து ஓரங்கட்ட வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டில் இனவிரிசல்களும், பிரச்சினைகளும் ஏற்படும் என்பதுடன் இவர்கள் போன்றவர்களின் நடவடிக்கைகள் இந்த நாட்டின் எதிர்கால நலன்களுக்கும், முஸ்லிம் நாடுகளின் உதவிகளுக்கும் பாரிய ஆபத்துக்களையும், தடங்கல்களையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்த நாடு பல்லின சமய, சமுக மக்களைக் கொண்ட என்ற வகையில் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமானால் சகலரதும் ஒத்துழைப்புக்கள் வேண்டுமே தவிர ஒரு சமுகத்தினால் மட்டும் சமாதானத்தையோ அல்லது இன ஒற்றுமையையோ ஏற்படுத்த முடியாது. இந்த வகையில் ஒர சமுகத்தை ஓரங்கட்டி சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

குறித்த மாநாட்டில் பங்குபற்றியவர்கள் சமுக, சமய ஒற்றுமையும், சமாதானமும் ஏற்பட வேண்டும் என்ற வகையில் பேசியபோது சோபித தேரர் முஸ்லிம் சமுகத்தினையும், இஸ்லாத்தையும் இலக்கு வைத்து கூகுள் போன்ற இணையத்தளங்களில் இருந்து பொய்யான குர்ஆன் வசனங்களைக் கொண்டு வந்து பேசியது மாபெரும் துரோகமான செயற்பாடாகும். இது முழுமையாக கண்டிக்கத்தக்க சம்பவமாகும். இவர் மீது அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என முஸ்லிம்கள் தமது கண்டனத்தை தெரிவிக்கின்றனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை நிகழ்த்திய மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் இந்த நாடு பௌத்த நாடாக இருந்தாலும் ஏனைய மதத்தவர்களுக்கு அவர்களின் மதத்தை பின்பற்ற சகல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்த உரையாற்றிய அமதரபுர கொடகொட தர்மாவங்ச மகாநாயக்க தேரர் தனது ஆசியுரையில் அடிப்படைவாதிகள் குழப்பங்களை ஏற்படுத்தினாலும் மகாநாயக்க தேரர்கள் அதற்க அனுசரணை வழங்கக்கூடாது என்றும் அடிப்படைவாதிகள் அனைத்து மதங்களிலும் இருக்கின்றனர் என்றும் அதனால் சிங்கள மக்களால் மட்டும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்றும் அனைத்து இன மக்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாக இருந்தது.

இதில் இந்து கத்தோலிக்க சமயத் தலைவர்களும் சமாதானம், ஒற்றுமை. புரிந்துணர்வு தொடர்பாக உரையாற்றினர். ஆதன் பின்னர் உரையாற்றிய அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபைத் தலைவர் றிஸ்வி முப்தி சோபித தேரரின் அவதூறுக்கு பதிலளித்தமை வரவேற்கத்தக்கதானதா இருந்தது. அவர் மேடையில் உடனேயே பதில் கொடுத்து இஸ்லாம் ஒருபோதும் அடிப்படைவாதம், இனவாத்தை அனுமதிக்க வில்லை நல்லிணக்கத்தையே இஸ்லாம் போதிக்கின்றது என்றும் தேரரின் குர்ஆன் வசனங்கள் பிழையானது என்ற விடயத்தையும் உலமா சபைத் தலைவர் பகிரங்கமாக தெரிவித்தமை முஸ்லிம் சமுகத்திற்கு ஓரளவு நிம்மதியைக் கொடுத்ததையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

குறித்த மாநாட்டில் விஷேஷட அதியாக கலந்த கொண்டிருந்த உலக முஸ்லிம் லீக்கின் செயலாளர் நாயகம் தீய சக்திகள் மதத்தை காரணமாக வைத்து வன்முறைகளை ஏற்படுத்த இருப்பதாகவும் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டுமானால் இனவாதக் கொள்கை கொண்டவர்களை ஓரங்கட்டி நாட்டில் நல்ல கருத்துக்கள், செயற்பாடுகளில் ஈடுபடக் கூடியவர்களை சமுகத்தில் முன் கொண்டு வருவதுடன் அவர்களின் நல்ல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் சமுகத்தின் மத்தியில் அமுல் படுத்துவதே இலங்கையின் இன நல்லிணக்கத்திற்கு ஏற்புடையதான விடயங்களாகும் எனலாம்.



# மட்டக்களப்பில் வரட்சியின் உச்சம்!

> விஞ்ஞானிகளை, வைத்தியர்களை, வேறு வேறு துறைசார்ந்தவர்களை உருவாக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கனவு காண்கின்றனரே தவிர அவ்வாறான தமது பிள்ளைகள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த சிந்திக்கவில்லை. பிள்ளைகள் உயிரோடு இருந்தால்தான் அவ்வாறானவர்களை உரு வாக்க முடியும் என்பதனை மறந்து செயற் படுகின்றனர். பல அரியவகை மரங்களை அழித்துவிட்டனர். சிறுவிதையில் முளைக்கும் ஆலமரம் எத்தனைபேருக்கு உதவி செய்கின்றது. எத் தனைபேரை வாழவைக்கின்றது என்பதையும் உணராதவர்களாக உள்ளனர். இன்று சுவாசிக்ககூடிய ஒட்சிசனைக்கூட மரங்களை அழிப்பதனால் பெற்றுக்கொள்ள முடியாத நிலைகூட உருவாகும்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட் டம் வறட்சியால் உழலுகின்றது. இந்த வருடத்தில் எதிர்பார்த்த மழை பெய்யாமையின் காரணமாகவே நீர் நிலைகள் வற்றுண்டு, பச்சைபசேலாக காணப் பட வேண்டிய மாவட்டம் இன்று வறண்டுபோய் தீக்கரை போன்று காட்சியளிக்கின்றது. மட்டக் களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியாக உள்ள பெருநிலப்பகுதி மேடுகளையும், குளங்க ளையும், மலைகளையும், காடுகளையும் கொண்ட பகுதியாகவிருக்கின்றன. இப்பகுதியில் உள்ள மக் கள் இந்த வருடத்தின் சித்திரை மாதத்தில் இருந்தே குடிநீரையும், குளிநீரையும் பெற்றுக்கொள்வதில் போராட்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

படுவான்கரைப்பகுதி விவசாய செய்கைகளை மேற்கொள்கின்ற பகுதியாகவிருக்கின்றன. அதே வேளை கால்நடைகளை வளர்க்கின்ற மேய்ச்சல் தரைகளைக் கொண்ட பகுதியாகவும் இப்பகுதியே உள்ளன. மட்டக்களப்பினது வாழ்வாதாரத்திற்கான தொழிலை மேற்கொள்கின்ற பகுதியாக படுவான் கரைப்பகுதி உள்ள நிலையில், இப்பகுதியில் ஏற்பட்ட வறட்சி நிலையின் காரணமாக சிறுபோக நெற்செய்கையில் பாரிய சரிவினை இப்பகுதி மக் கள் எதிர்கொண்டனர். நெற்செய்கை நிலங்கள் பல அறுவடை செய்யப்படாமலே கைவிடப்பட்டன. குளத்தில் தேக்கி வைத்திருந்த குறைந்தளவிலான நீரினைக்கூட முரண்பட்டும், வாய்த்தக்கங்கள் புரிந்தும், சவால்களுக்கு மத்தியிலும், நீர்பம்பிகள் கொண்டு நீரினை பாய்ச்சிய சம்பவங்களும் நடந் தேறின. விவசாயிகள் அனைவருமே விவசாயத் தினை ஈடேற்ற வேண்டும் என்ற எண்ணச்செயற் பாட்டில் ஈடுபட்டனர். குளங்களிலே காணப்பட்ட நீர்வாழ் உயிரினங்களும் நீரின் மட்டம் குறைவ டைந்தமையால் வெப்பத்தின் காரணமாக இறக் கும் நிலையினை அடைந்தன. அடைந்து கொண்டி ருக்கின்றன.

**முனையூரான்**

சிறுசிறு குளங்களில் நீர்முற்றாக வற்றி, வரண் டுபோய் காட்சியளிக்கின்றன. இதனால் கால்ந டைகள் நீரின்றி தவிக்கின்ற நீருக்காக நீண்ட தூரம் செல்கின்ற, இறக்கின்ற துர்ப்பாக்கிய நிலையி னையும் அடைந்திருக்கின்றன. இதனால் கால்நடை உரிமையாளர்களும் வாழ்வாதாரத்தினை இழக்கும் நிலையினை அடைந்திருக்கின்றனர். மேய்ச்சல்த ரையின் புற்கள் கருகியமையினால் உண்பதற்கு உணவின்றி கால்நடைகள் வாடிக்கொண்டிருக்கின் றன. நீரினைப் பெற்ற கிணறுகள் அனைத்தும் நீ ர்வற்றி வெறும் கிணறுகளாக காணப்படுகின்றன. இதனால் வீடுகளிலும், வீட்டுக்கு அண்மையிலும், பொதுவான கிணறுகளிலும் நீரினைப் பெற்றவர் கள், இப்போது ஐந்து,, ஆறு கிலோமீற்றருக்கும் அதுக்கும் அப்பாலும் நீ ண்ட தூரம் சென்று குடி நீரைத்தேடி செல்கின்ற நிலை உருவாகியுள்ளது. குடிநீருக்காக நீண்ட தூரம் சென்று குடிப்பதற்காக மட்டும் குடிநீரைப் பெற்றுக்கொண்டாலும், குளிப் பதற்கு மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் பாடசாலை மாணவர்கள் விடுமுறைக்கு முன்பு பெரும் துன்பங்களை எதிர்கொண்டிருந்த னர். நேரத்திற்கு பாடசாலைக்கு செல்லமுடியாது. நீரைப்பெறுவதற்கு காடுகளையும், மேடுகளையும், வயல்வெளிகளையும் கடந்து அதிகாலைப்பொ ழுதில் செல்ல வேண்டியவர்களாகவிருந்தனர். ஒருநாளில் ஒருநாள் பொழுதில் குளிப்பதில் கூட வாய்ப்பில்லாதவர்களாக அல்லல் உற்றுக்கொண்டி ருக்கின்றனர். பிரதேசசபைகளின் ஊடாக பொது வான இடங்களில் குடிநீரினை வைத்தாலும் அக்கு டிநீர்போதுமானதாகவில்லை.

புரட்டாதி மாதம் அளவிலே நீர்வற்று ஏற்பட்டு அதிகம் வறட்சி ஏற்படுவதுண்டு என மட்டக்களப் பின் படுவான்கரைப்பகுதி மக்கள் கூறுகின்றனர். ஆனால் இந்த வருடம், சித்திரைக்கு முன்னிருந்தே நீரின் தட்டுப்பாடும், தாவரங்கள் நீரின்றி வாடி யமையும் நடந்தேறின. கடந்த காலங்களில் ஒரு மாதத்தில் இரண்டு மூன்று மழையாவது நீர் தேங்கி பிடிக்க கூடிய வகையில் பெய்யும். ஆனால் இந்த வருடம் அவ்வாறு பெய்தமை மிகமிக குறைவே. கடந்த வருடம் குளங்கள் முழுதும் நிரம்பியிருந் தன. ஆனால் இந்த வருடம் குளங்களிலே நீரே இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கே குடிநீரினை வழங்குகின்ற உன்னிச்சைக்குளமும் என்றும் இல்லாதவாறு இந்தவருடம் நீர் வற்றியுள்ளது. இதனால் உன்னிச்சைக்குளத்தில் இருந்து பிறபகு திகளுக்கு கொடுக்கப்படும் குடிநீருக்கும் தட்டுப் பாடு நிலவுகின்றது. இதன்காரணமாக நீர்வெட்டு அறிவிப்பினையும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச பை அறிவித்துள்ளது. குறிப்பாக உன்னிச்சைக் குளத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்து வருவவதாகவும், இன்னும் ஒரு மாதத்திற்கு விநி யோகிக்க தேவையான நீரே காணப்படுவதகாவும், இதன்காரணமாக மறு அறிவித்தல் வரும் வரை பின்வரும் நீர் விநியோக திட்டங்களில் உடன் (01.08.2019) அமுலாகும் வகையில், நீர் வெட்டு குறிப்பிட்ட மணித்தியாலங்களில் அமுல்படுத் தப்படும் எனக்குறிப்பிட்டுள்ளனர். அதற்கமைய, வவுணதீவு நீர் வழங்கல் திட்டத்தில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 வரையும்,

I2 ஆம் பக்கம் பார்க்க....



# நல்ல வீட்டுச் சூழலே சிறுவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன



மானிட வாழ்க்கை பல பருவங்களை கடந்து செல்கிறது. அப்பருவங்களில் மிக முக்கியமானது குழந்தை பருவம். இப்பருவம் வாழ்வுக்கான பொறுப்புணர்ச்சியை வழங்கவேண்டியதுடன் வாழ்வின் திசை எது என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பருவமாகவும் உள்ளது. இப்பருவத்தில் ஊட்டப்படும் அனைத்தும் அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகிறது. இதில் முதலாவது வீட்டுச் சூழல் பாரிய தாக்கத்தை அவர்களில் ஏற்படுத்துகிறது. அவர்களது சிந்தனை, ஒழுக்கம், உணர்வு, நடத்தை, பழக்கவழக்கங்கள் என்பன நல்ல வகையாக அல்லது நெறிபிறழ்ந்ததாக அமைய வழி பிறக்கிறது.

றாசிக் நபாயிஸ்
(BA,MA) சமூகப்பணியாளர்,
மருதமுனை

குடும்பம் என்பது சிறு அளவிலான சமூகமாகும். அது சமூகங்களின் அடிப்படை அலகாக இருந்து வருகிறது. குடும்பத்தில் அன்பார்ந்த ஒரு சூழல் நிலவி வருதல் அவசியமாகும். அதன் உள்ளார்ந்த இயல்பும் அதுவாகும். இங்கு அன்பும் அரவணைப்பும் இரக்க குணமும் ஆட்சி புரிய வேண்டும். சாந்தி, சமாதானம், நிம்மதி, மகிழ்ச்சி என்பவற்றில் ஒரு கோட்டையாக குடும்ப வாழ்க்கை அமைய வேண்டும். நம்பிக்கை, விசுவாசம், பாதுகாப்பு, நேர்மை என்னும் சக்கரங்களில் அது ஓடுகிறது. அவை நிம்மதியான ஒரு வாழ்க்கையும் சிந்தனைக்கும் புகழிடத்தையும் அளிக்கின்றன.

வாழ்க்கை என்பது ஒரு பிரச்சினை அல்ல மாறாக அது ஒரு சவால் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள துணிச்சல் வேண்டும். எனவே மிகச் சிறந்த வாழ்க்கை ஆற்றல்களை தகமைகளை குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். துணிச்சலும் ஒன்றை செய்வதற்கான தகைமையும் இல்லாதவிடத்து பெரும் நற்குணாதிசயங்கள் மட்டும் எதையும் சாதித்து விட முடியாது. எந்த ஒரு நற்குணத்தையும் ஒரு இரவில் குழந்தையிடம் கட்டியெழுப்ப முடியாது. அது படிப்படியாக செயற்பட வேண்டும். குழந்தையின் செயற்பாடாகவே அது வளர்ச்சி அடையும் நற்குணங்கள் ஒரு பழக்கமாகவே ஆரம்பிக்கப்படுகின்றன.

சிறுவர்களை கொள்கையை பற்றுள்ளவர்களாக ஒழுக்க நெறி தவறிடாதவர்களாக, பண்பாடுமிக்கவர்களாக வளர்க்க வேண்டும். அவர்களின் வாழ்வு ஆரோக்கியமாவதற்கான அல்லது சீரழிவதற்கான காரணங்களில் முக்கிய ஒன்றாக நட்பு உள்ளது.

ஒரு சிறுவனின் வாழ்வில் சிந்தனை ரீதியாக, உளரீதியாக, நடத்தை ரீதியாக, சட்டரீதியாக பல் வகையில் நட்பு பாதிப்பை ஏற்படுத்துகிறது. சிறார்களின் வாழ்வில் அதிக அளவு அனுகூலம் ஏற்பட நல்ல குடும்பத்தின் நட்பு துணைபுரிகிறது. அல்லது தீய குடும்பமாக இருப்பின் தீய குடும்பத்தின் தீய பண்புகள் படிப்படியாக அவனில் தாக்கம் செலுத்தும். நமது சிறுவர்கள் பலரின் வாழ்வில் வெளிச்சமான பகுதி இருண்டு விடுவதற்கு அவர்கள் சரியான நட்பை நாடி, உண்மையான குடும்ப உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள தவறியமையே காரணமாகி விடுகிறது. குடும்பத்துடன் சிறந்த முறையில் சிறுவர்கள் வளர்த்தெடுக்கப்படுகின்ற போது தான் அவர்களுக்கு சிறந்த வீட்டுச் சூழலை உருவாக்கிக் கொடுத்த பெருமை குடும்பத்தைச் சாரும்.

கல்வி என்பது ஒரு சமூகத்தின் உயிர்நாடி இந்த உயிர் நாடி சிறுவர்களுக்கு



தேவை.

'கண்ணுடைரென்பர்
கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்'என வள்ளுவர் கல்வியின் மகிமையைப் பற்றிக் கூறுகின்றார். சீர் கல்வி என்பது மேலான கல்வி என்பது மட்டும் அர்த்தமல்ல ஒழுக்கமுள்ள கல்வி என்பது தான் அதன் முழுமையான கருத்து. ஒரு சிறுவனின் கல்வியோடு ஒழுக்கம் சேரும் போதுதான் கல்வி முழுமை பெறும். ஒரு சிறுவனின் ஆரம்பப் பள்ளிக்கூடம் வீடாகும். இதுகுறித்து ஒரு அறிஞர் இப்படிக் கூறுகிறார் 'ஒரு குழந்தையின் முதல் பள்ளிக்கூடம் தாயின் மடிதான்'அந்தத் தாய் பாலோடு பாசத்தை ஊட்டுவதோடு இல்லாமல் உணர்வோடு ஒழுக்கத்தையும் ஊட்ட வேண்டும் குழந்தைக்கு நல்ல பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுக்க வேண்டும் இத்தோடு தந்தையின் அன்பு கலந்த கண்டிப்பும் அக்குழந்தையும் அவசியமாகிறது.

சிறுவர்கள் வாழுகின்ற சமகால தேசிய, சர்வ தேச சமூக அமைப்புக்கள் சிறுவர்களுக்கு முற்றிலும் முரணான விதத்தில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. நமது சமூக அமைப்பில் அரங்கேற்றப்படும் அரக்கத்தனமான ஆபாச அலை மாபெரும் புயலாக ஆர்த்தெழுந்து எம்மையும் எம் சிறார்களையும் மூழ்கடிக்க முனைகிறது.

நாகரீகம் என்ற பெயரில் எங்கள் மீது எறியப்படுகின்ற தகவல் தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி காரணமாக நாம் அதன் தீமைகளுக்கு இலகுவில் ஆளாகி ஒரு மோசமான சூழலில் வாழ்கிறோம். நவீன ஊடக தூவப்படும் நச்சுக் கருத்துக்கள் ஊடாக ஒழுக்கச் சீர்கேடுகள் எமது சிறார்களை மாசுபடுத்தும் வகையிலேயே இருக்கும். எனவே இத்தகைய சவால்களை அவர்களுக்கு குடும்பம் உணர்த்த வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் காரணமாக அதனுடைய தீமைகளை சிறார்களுக்கு உணர்த்துகின்ற விடயத்தில் அக்கறை செலுத்துதல் வேண்டும்.

குடும்பத்தின் முக்கியஸ்தரான பெற்றோர்கள் குழந்தையின் மீது அக்கறை செலுத்தாத போது அக்குழந்தை சமூகத்தின் சீரழிவிற்கு சென்றுவிடும் என்பதில் ஐயமில்லை. குழந்தையுடன் பெற்றோர்களும் சேர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதில் இன்று பெற்றோர்கள் மும்முரமாக செயற்பட்டு கொண்டிருக்கின்றர். இதனால் ஆரோக்கியமான இதயம் மற்றும் நுரையீரல் உருவாகுவது பாதிக்கப்படுகின்றது என்பதை சிந்திக்க பெற்றோர்கள் தவறுகின்றனர்.

பொருத்தமான வீட்டுச் சூழல் ஒன்று இல்லாமல் வளரும் குழந்தைகள் குணப்படுத்த முடியாத பல மன அதிர்ச்சிகளுக்கு ஆட்படுகின்றனர்.

நாம் வாழும் இந்த நவீன உலகில் பொருத்தமான இடம் பயங்கரமான வன்முறைகளும் மலிந்துள்ளன. இந்த பாதகங்களுக்கு மத்தியில் ஒரு குழந்தையின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதும் அன்பும் அரவணைப்பும் மிகுந்த ஒரு சூழலில் அதன் மென்மையான உணர்வுகளுக்கு ஊறு ஏற்படாமல் அதை போஷித்து வளர்ப்பதும் மனிதன் எதிர் கொண்டுள்ள மிக முக்கியமானதும் அடிப்படையானதுமான ஒரு பணியாக அமைந்துள்ளது.

மழலையர் பள்ளிகளுக்கும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் எத்தகைய நவீன உபகரணங்களை கொண்டிருந்த போதிலும் உளவியல் ரீதியில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவை ஒரு போதும் ஒரு தாயின் ஸ்தானத்தை பூர்த்தி செய்து வைக்க முடியாது. தாயின் பினைப்பினை பெற்றுக் கொள்ளாத பிள்ளை உளவியல் ரீதியில் காயங்களை அனுபவிக்கிறது.

சிறுவர்கள் கள்ளம் கபடமற்றவர்கள்.

குழந்தை சிறு வயதில் இருந்தே பெற்றோரிடமே பழக்க வழக்கங்களையும், அன்பை, இரக்கத்தை, பணிவை கற்க ஆரம்பிக்கிறது. எனவே பெற்றோர் நல்ல பழக்கவழக்கங்களை இங்கிதங்களை பிள்ளை பார்த்து அறிவதற்கு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். 'எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'என்ற கவிஞர் கூற்றுப்படி அவர்களின் அத்திவாரம் நன்றாக இடப்படுமானால் அவர்களிடம் நல்ல பண்பு பெருகும்.

சிறுவர்கள் சிறுவயதிலிருந்தே சிறு சிறு காரியங்களை செய்யக்கூடியவாறு பழகுவதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கை உண்டாகிறது. அந்த உலகத்திலேயே எதிர்நீச்சல் போட்டு வாழக்கூடிய தன்மை உண்டாகிறது. பிற உயிர்களிடமும் அன்பு காட்டுதல், ஆசிரியர்களுக்கு பணிதல், மூத்தோருக்கு மரியாதை அளித்ததல் போன்ற நல்ல பண்புகளை வீட்டில் ஒவ்வொருவரும் செயல்முறையாக காட்டும்போது சிறுவர்களும் அதனை பின்பற்றி தாமும் நடப்பர். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் சிக்கல்களை அன்புடன் அணுகி அதனை தீர்த்து ஆலோசனைகள் கூறி உதவி செய்யும் போது பிள்ளைகளின் குழப்பம் நீக்கப்படுகிறது. இதனால் அவர்கள் தனது திறைகளில் செயல்பட. முடிகிறது குடும்பம் நிர்வாகிகளும் அவர்களுக்கு பொறுப்புகள் வழங்கி வழிகாட்டுதல் மூலம் அவர்களின் திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியும். சிறுவர்களின் நற்பழக்கங்களில் அடித்தளம் வீடுச்சூழல் என்றால் மிகையாகாது.

மற்றவர்களுக்கு உதவும் தன்மையை ஊக்குவிக்கப்படுகிறது. வேலை செய்யும் ஆற்றல் அவரிடம் பணிவும் பக்தியும் உண்டாகிறது. விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் உடல் வலிமை ஆரோக்கியம் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு முன்வைக்கப்படுகின்றன பதவிகள் வைப்பதன் மூலம் தலைமைத்துவப் அன்புடன் பொறுமை மற்றவர்கள் பிரச்சினைகளை அணுகும் ஆற்றல் என்பது பற்றி வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு கல்வியுடன் மட்டுமல்லாது வாழ்க்கைக்கு வேண்டிய பழக்க வழக்கங்களை வழங்குவதன் மூலம் ஆசிரியர்களை அவர்களை ஓர் அழகான கட்டிடம் ஆக்குகின்றனர் என்றால் மிகையாகாது.

எல்லா சமயங்கலும் அன்பை போதிக்கின்றன. எனவே சமய வழிபாட்டு இடங்களுக்கு சிறுவர்கள் செல்வதன் மூலம் அவர்கள் மனதில் கருணை இரக்கம் அமைதி என்பது உண்டாக வழி வகுக்கும் என்று நம்பிக்கையை மனிதாபிமானம் உறுதியாக இருக்கிறது தத்தம் மதக்கோட்பாடுகளையும் தத்துவங்களையும் அவர்கள் அறிவதன் மூலம் தமது மனதை செம்மைப்படுத்த முடியும் முக்கியமாக மத காரணங்களினால் சிறுவர்களுக்கு ஒழுக்கத்தின் அவசியம் உணர்த்தப்படுவதுடன் அவர்களின் வீட்டுச் சூழலே அவர்களை சிறந்தவர்களாகவும் நற்பிரஜைகளாக உருவாக்கி சிறந்த எதிர்காலம் உடையவராக மாற்றுகிறது என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

---

## மட்டு..

II ஆம் பக்கத் தொடர்ச்சி

மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 04.00 மணி வரையும,; செங்கலடி. வாழைச்சேனை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 05.00 மணி வரையும் ஏறாவூர் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 11.00 மணி தொடக்கம் காலை 05.00 மணி வரையும் ஆரையம்பதி காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 05.00 மணி வரையும் காத்தான்குடி காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 04.00 மணி வரையும், கல்லடி காலை 09.00 மணி தொடக்கம் பகல் 12.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 06.00 மணி வரையும், இருதயபுரம் காலை 08.00 மணி தொடக்கம் மாலை 05.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 04.00 மணி வரையும் தினமும் நீர் வெட்டு அமுல்படுத்தப்படும் என்ற அறிவிப்பினையும் அறிவித்துள்ளனர். அதேவேளை களுவஞ்சிகுடி மண்டூர் மற்றும் கல்லாறு போன்ற நீர் விநியோக திட்டங்களில் மேற்படி நீர் வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது எனவும் நீர் வெட்டு அமுலாகும் நீர் வழங்கல் திட்டங்களிலுள்ள பாவனையாளர்கள் நீரினை சேமித்து விரையமின்றி பாவிக்குமாறும் பிராந்திய முகாமையாளர் மேலும் கேட்டுள்;ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று வறட்சி தாண்டவம் ஆடுகின்றது. மக்கள் அல்லல் உறுகின்றனர். என்று கூறிக்கொள்கின்றோம். வருடாந்தம் மட்டக்களப்பின் படுவான்கரைப்பகுதி வறட்சிக்கு உள்ளாகின்றமை தவிர்க்கமுடியாததொன்றாகவே அமைந்து வருகின்றது. இதனை தவிர்ப்பதற்கான வழியென்ன என்பது குறித்து அரசாங்கமோ, இங்குள்ள மக்களோ எவ்விதமான திட்டங்களையும் முன்மொழிந்ததாக தெரியவில்லை. நிலத்தடி நீர் என்பதும் எப்போதும் இருந்து கொண்டிருப்பதில்லை. அதுவும் குறைந்து கொண்டே செல்லும். இந்தியாவில் கூட நிலத்தடி நீரின்றி சொல்லொண்ணாத்துயரையும், நிலடித்தடி நீரை சேமிப்பதற்கான முயற்சிகளிலும், மழைநீர் சேகரிப்பு என பல திட்டங்கள் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். எதிர்காலம் நீருக்கான போராட்டமே இந்த உலகில் ஏற்படக் கூடும் என பலரும் கூறிக்கொண்டிருக்கின்ற நிலையில், இலங்கை நாட்டிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதியில் உள்ள மக்களும் நீரினை சேமித்து வைப்பதற்கான, நீரினை பேணி வைப்பதற்கான திட்டங்களையும், செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையெனில் எதிர்கால இளம்சந்ததிகள் நீரின்றி இறப்பதை தவிர்க்க முடியாது போகும்.

உடலுக்கு தேவையான நீர் சரியான அளவில் கிடைக்காதுவிடின் உடலில் பல்வேறு நோய்கள் ஏற்படுவதனை தவிர்க்கமுடியாமல் செல்வதுடன், உடல் இறப்பினையும் எதிர்கொள்ள வேண்டியே ஏற்படும். இறைவனால் கொடுக்கப்பட்ட இயற்கை வளங்களை அதற்கேற்ற சமனிலையுடன் பேண வேண்டியது மக்களின் கடமை, அரசின் தலையாய பொறுப்பும் கூட, இயற்கை சமனிலை பேணப்படாத நிலையினாலேயே வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களை மக்கள் எதிர்கொள்ள வேண்டி உள்ளனர். காடுகளில் செல்கின்றவர்கள், நீருக்காக நீரினை சேமித்து வைக்கின்ற மரங்களை பிழிந்தே நீரினைப் பெற்று அருந்திய வரலாறுகள் உள்ளன. அவ்வாறான இயற்கை வளங்கள் இன்று அழிக்கப்பட்டு செல்கின்றமையினால் நீரினை சேமிக்க முடியாத நிலை இயற்கையாக இல்லாமலாகியிருக்கின்றன. காடுகள் பலவும் ஒவ்வொரு நாட்களும் அழிக்கப்பட்டுதான் வருகின்றன. அவ்வாறு அழிக்கப்படும் காடுகளுக்கு பதிலாக மரங்கள் நடப்படவில்லை. இதனால் பல குடியிருப்பு இடங்களில் இருக்கமுடியாதளவு வெப்பமாக உள்ளது. குடியிருப்புக்களை அமைத்துக்கொள்ள விரும்புகின்றவர்கள் மரங்களையே முதலில் அழிகின்றனர். மரங்களை வைத்து குடியிருப்புக்களை அமைப்பதற்கு முயற்சிக்கவில்லை. அதேவேளை குடியிருப்பு பகுதியில் மரங்களை நடுவதற்கு ஆர்வம்காட்டாதுள்ளனர். எத்தனையோ விஞ்ஞானிகளோ, வைத்தியர்களையோ வேறு வேறு துறைசார்ந்தவர்களையோ உருவாக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கனவு காண்கின்றனரே தவிர அவ்வாறான தமது பிள்ளைகள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த சிந்திக்கவில்லை. பிள்ளைகள் உயிரோடு இருந்தால்தான் அவ்வாறானவர்களாக உருவாக்க முடியும் என்பதனை மறந்து செயற்படுகின்றனர். பல அரிய வகை மரங்களை அழித்துவிட்டனர். சிறுவிதையில் முளைக்கும் ஆலமரம் எத்தனைபேருக்கு உதவி செய்கின்றது. எத்தனைபேரை வாழவைக்கின்றது என்பதையும் உணராதவர்களாக உள்ளனர். இன்று சுவாசிக்ககூடிய ஒட்சிசனைக்கூட மரங்களை அழிப்பதனால் பெற்றுக் கொள்ள முடியாத நிலைகூட உருவாகும். இதுபற்றியும் சிந்திக்கிறார்கள் இல்லை.

அரிய ஈரநிலங்கள், நீர் ஏந்தும் பிரதேசங்கள் போன்றன மனித ஆக்கிரமிப்பு காரணமாக மூடப்பட்டு குடியிருப்பு நிலங்களாகவும், வயல் நிலங்களாகவும் மாற்றி அமைக்கப்படுகின்றமையும் வறட்சியை எதிர்கொள்வதற்கு காரணமே. நாம் மட்டும் வாழந்துவிட்டால் போதும், எமக்கு பின்னால் வாழப்போகின்றவர்கள் பற்றி தூரதரிசனத்துடன் சிந்திகாதவர்களாக, சுயநலம் உள்ளவர்களாக செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட்டால், நமது பிள்ளைகளுக்கு நாமே கொள்ளி வைக்கின்றோம் என்பதனையும் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இயற்கை சமனிலையாகவே உள்ளது. அச்சமனிலையினை பேணுவதன் மூலம் இப்புவியில் குடியிருக்க முடியும். இல்லாதுவிடின் எத்தனை கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்தாலும் இயற்கை அனர்த்தத்தினை தடுக்க முடியாது. இந்த உண்மையினை புரிந்து கொண்டு, வறட்சி, வறட்சி என்று பேசிக்கொண்டு, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவை கொடுத்துவிட்டு, மீண்டும்மொரு வறட்சி வருகின்ற போது, அதுபற்றி பேசுகின்றவர்களாக இருக்காமல் வறட்சியில் இருந்து மக்களை காப்பாற்ற முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் பற்றி உடன் சிந்தித்து செயற்படுத்த வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.













# பசுக்களின் மர்ம மரணம் காரணம் என்ன?

**மஸ்கெகலியா நிருபர் செ.தி.பெருமாள்**

அவுஸ்ரேலியாவில் இருந்து கிராமிய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஊடாக கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி கஃவை பசுக்கள் 1994கும் அதே வருடம் டிசம்பர் மாதம் 27ஆம் திகதி கறவை பசுக்கள் 3024வும் நமது இலங்கை நாட்டிற்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு நமது நாட்டின் 67 பண்ணையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்த கறவை பசுக்களின் தலா ஒன்றின் விலை 5,27000 ரூபாய் பெறுமதியானவற்றை பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அரசு 2,00000 ரூபாய்க்கு வழங்கியது.இவ்வாறு வழங்கப்பட்ட கறவை பசுக்களில் 40 வீதமானவை இறந்துள்ளது என பால்பண்ணையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த பசுக்கள் சம்மந்தமாக எமக்கு சட்ட விரோதமான தகவல் வழங்கியதாகவும் எம்மை ஏமாற்றி வஞ்சித்ததாகவும் 26 பால்பண்ணையாளர்கள் ஜனாதிபதியின் விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு மேற்கொண்டனர். அவர்களின் அந்த முறைப்பாட்டில் எமக்கு பெற்று கொடுத்த கறவை பசுக்களும் அதன் கன்றுகளும் மைக்கோ பிலஸ்மா மற்றும் பீவீபி நோயால் பீடிக்கப்பட்டன. ஆகையால் தான் அநத கறவை பசுக்கள் அறந்ததாக கூறி எமக்கு நீதி கிடைக்கவும் எம்மை ஏமாற்றியவர்களுக்கு தண்டணை பெற்று கொடுக்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாகும்.

ஆந்த முறைப்பாட்டின் படி ஜனாதிபதியின் விசேட விசாரணை கமிசன் பிரிவின் இளைப்பாறிய நீதிபதி உப்பாலி அபேயரத்ன தலைமையில் ஐவர் கொண்ட நீதிபதிகள் குழு மடுகலவை சந்தித்து 2019 பெப்ரவரி மாதத்திலிருந்து சாட்சிகள் மற்றும் முறைப்பாட்டை பதிவு செய்ய ஆரம்பித்தனர்.

அதில் அரச சாட்சியாக சாட்சிகாரர் வழங்கிய பண்ணையாளர்களின் பண்களை ஜனாதிபதியின் விசாரணை பிரிவின் தலைவரான நீதிபதி உப்பாலி அபயரத்ன உடன் கொண்ட நீதிபதிகள் கொண்ட குழுவினர் கடந்த 19ஆம் திகதியன்று பரிசோதனைக்காக மஸ்கெலியா லெமன்மோரா தோட்டத்தில் அமைக்கப்பட்ட பண்ணையை பார்வையிட வந்தனர்.

அவுஸ்ரேலியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 200 கறவை பசுக்கள் இந்த பண்ணையில் இருந்தது எனவும் இருந்த போதும் தற்போதைய நிலையில் அவை அனைத்தும் மரணித்துவிட்டது. அவை அந்த காணியில் புதைத்துள்ளதாக அந்த பால்பண்ணையை நடாத்தி வந்தவர் ஜனாதிபதி கமிசன் முன்னிலையில் கூறியுள்ளார். நீதவான் அடங்கிய விசாரணைக்காக மஸ்கெலியா லெமன்மோர் தோட்டத்தில் அமைக்கப்பட்ட பால்பண்ணையை பார்வையிட்ட பின்னர் அங்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடும் கிடைக்கபெற்ற படங்களையும் பார்த்தனர்.

சம்பவத்தின் போது உயர் நீதிமன்ற சிரேஸ்ட ஓய்வு பெற்ற நீதியரசர் உப்பாலி அபயரத்ன ஜனாதிபதி கொமிசன் அங்கத்துவ நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன,கொமிசனரான எம்.பி.தர்மரத்ன,விஜய அமரசிங்க,ஏ.பிஏ.ஜினசேன மற்றும் லெமனடமோர் பண்ணையாளர் அமில சூரியகே ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.



தொடர்ந்து என்னால் இவற்றிக்கு பதில் அளிக்க முடியாது அது பயன் அற்று போய்விடும். நாள்தோறும் எனது பண்ணையில் கறவை பசுக்கள் இறந்த வண்ணம் உள்ளது. எனது பண்ணைக்கு கொண்டுவந்த பசுக்களின் 200இல் 60 இறந்துவிட்டது. குறைந்த பட்சம் இந்த கறவை பசுக்கள் இறக்க காரணம் என்ன என்று எமக்கு தெரிவியவில்லை.

இது விடயமாக கால்நடை அபிவிருத்தி அமைச்சிடம் கேடடோம்,அவர்கள் எமக்கு கூறியது; ஒப்பந்தப்படி இரண்டு நாட்டு அரசுக்கே தெரியும் அது இரகசிய தகவல் அவற்றை வெளிப்படுத்த முடியாது நாங்கள் தகவல் தேவை என கேட்டோம்.மேலும் தகவல் அறியும் சட்டத்தின் படி கால்நடை அபிவிருத்தி அமைச்சிடம் எங்களது கமிசன் சபை கோரியது அதற்கும் அவர்கள் இனங்கவில்லை. ஒப்பந்தங்களை ஒழித்து மறைத்தனர் ஏன் என்று தெரியவில்லை. அந்த ஒப்பந்தத்தில் 21 நிபந்தனைகள் உள்ளது.அவற்றில் 15 நிபந்தனைகளை வேல்டார் நிறுவனம் நிறைவேற்றவில்லை.வோல்டர் நிறுவனத்தை 2002ஆம் ஆண்டில் கருப்பு பட்டியலில் அவுஸ்ரேலியாவில் இணைத்துள்ளனர்.

இருந்தபோதும் அரசாங்கம் அது சம்பந்தமாக ஆராய்ந்து பார்க்காமல் அல்லது ஆரம்பிக்வுள்ள நடைமுறை பசுக்கள் இறக்குமதியால் பெரும் இலாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு 2002ஆம் ஆண்டில் அன்றைய அரசு இவற்றை முறையாக தேர்வு செய்து பரிசிலனை மேற்கொள்ளாது எம்மை பாரிய படுகுழியில் தள்ளியுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் படி அவுஸ்ரேலியாவில் கறவை பசுகளை இறக்குமதி செய்யும் முன்னர் அதற்கான பொறுப்பினை ஏற்று கொண்டிருக்க வேண்டும். அதன் படி 3030 கறவை பசுக்களை பரிசீலனை மேற்கொள்ள வேல்டார் நிறுவனத்தின் பயண செலவு ஐந்து நாட்கள் மட்டுமே. ஆனால் ஒருவரினால் இது மேற்கொள்ள முடியாது. நாள் ஒன்றுக்கு 50 பசுக்களை பரிசோதனை செய்ய வேண்டும் அவ்வாறு பரிசோதனை செய்வதற்கு இரு மாத காலம் தேவை. இந்நிலையில் அவர்கள் எம்மிடம் அவ்வாறு பரிசோதனைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்புகள் உள்ளது போன்று தெரிகின்றது.

இது இவ்வாறு இருக்க பசுக்கள் சினை பட்டாலும் அவை கன்று பிரசவிப்பதில்லை,அவ்வாறு கரு தரிக்கும் காலத்தில் நோய் ஏற்பட்டு இறந்து விடுகின்றன. அதற்கான காப்புறுதியோ நட்ட ஈட்டையோ இவர்கள் வழங்கவில்லை. ஒப்பந்தப்படி இவை நடைபெறவில்லை. அது தெளிவான விடயமாகும்.

இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யும் அனைத்து விலங்குகளும் முற்றிலும் இந்த நாட்டிற்கு உகந்ததா,பொருத்தமானதா,காலநிலைக்கு இந்த நாட்டில் வளர்க்க முடியுமா,நோயற்றதா என ஆராய்ந்து கொண்டுவரவில்லை என்பது உறுதியாகின்றது.

ஆகவே இதற்கு முறையான விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து நட்ட ஈட்டை பெற்று தர வேண்டும் இல்லை எனில் பண்ணையாளர்கள் 26 பேரும் இணைந்து நீதி மன்றத்தை நாட உள்ளோம் என மஸ்கெலியா லெமன்மோர் தோட்ட பண்ணையாளர் அமல் சூரிய தெரிவித்தார்.

# அழகூட்டப்படும் மஸ்கெலியா நகரம்

**மஸ்கெலியா நிருபர்**

மஸ்கெலியா பிரதேசத்தை இனி வரும் காலத்தில் தூய்மையானதாக மாற்றி எப்போதும் அதனை பசுமையாக வைத்திருப்பதற்கும் சூழலை நேசிக்கும் மனிதர்களாக அனைவரையும் மாற்றுவதற்கும் மஸ்கெலியாவில் தற்போது சூழலை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல பிரதேச சபை தவிசாலரும் அங்கு பணிப்புரிவோரும் முன்னெடுத்து வருகின்றனர்.

மரம் நடுதல் கழிவு முகாமைத்துவம் நீர்நிலைகளை சுத்தமாக வைத்திருத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் இதன்மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ் வேலைத் திட்டத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரது வழிகாட்டலின் பேரில் மத்திய மாகாண ஆளுனர் மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் மஸ்கெலியா இளைஞர் கழகம் பாடசாலைகள் ஏனைய மஸ்கெலியா அரச தனியார் வர்த்தக நிறுவனங்கள் மதகுருமார் மற்றும் பொது மக்கள் இதற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

அடிப்படை விடயமான அன்றாட எம் வீட்டு கழிவுகளை சூழழுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அப்புறப்படுத்துதலை முக்கிய கவனமெடுத்து முறையாக அகற்றுவதே இவ்வேலைத்திட்டத்தின் முதல் நோக்கம். இதனை நிவர்த்தி செய்யும் முகமாக ஒவ்வொரு தோட்டங்கள் தோறும் ஒரு இடத்தை ஒதுக்கி அதில் உக்கும் உக்காத பொருட்கள் என தரம் பிரித்து குப்பைகளை இடுதலை வழக்கமாக கொண்டு இயற்கை பசளை தயாரிக்கும் முறை மஸ்கெலியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன். மேலும் சமய கலாச்சார திருமண நிகழ்வுகளில் பொலித்தின் பிளாஸ்டிக் பொருட்களை பாவிக்காமல் இலை மற்றும் கோப்பைகளைக் பயன்படுத்துமாறு நிகழ்வுக்கு பொறுப்பானவர்களிடம் கலந்துரையாடப்பட்டு அது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

ஒரு சில நிகழ்வில் இவ்வேலைத்திட்டத்தின் அங்கத்தவர்கள் கலந்துக் கொண்டு உதவி வருவதுடன்; சிவனொலிபாத மலை பருவ காலத்தின் போது பொலித்தின் பிளாஸ்டிக் பாவனை குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது மஸ்கெலிய நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தினுடாகவும் மவுசாகெல இராணுவ முகாமைச் சேரந்;த இராணுவத்தினுடாகவும் மஸ்கெலியா அதிரடி படையினர் ஊடாகவும் பாடசாலை மாணவர்களை இணைத்துக் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். கழிவுகளை அகற்றவும் இதன் முலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மஸ்கெலியா நகரில் அசுத்தமடைந்திருந்த பகுதிகளை சுத்தப்படுத்தி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் பொது மக்களிடமிருந்து பாவனைக்குதவாத பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி போத்தல்களை மீழ்சுழற்சிக்காக பெற்றுக் கொள்ளும் பொருட்டு பொது மக்கள் மஸ்கெலிய பிரதேச சபையின் குப்பைகளை அகற்றும் வாகனங்களில் ஒப்படைத்து இந்நகரை தூய்மையான நகராக மாற்றுவதற்கு அனைவருடைய ஒத்துழைப்பையும் வழங்குமாறு மஸ்கெலிய பிரதேச சபை தவிசாளர் செம்பகவள்ளி அவர்கள் கேட்டுக் கொள்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தொடரும் புறக்கணிப்பு!

**மஸ்கெலியா நிருபர்**

பெருந்தோட்ட நிர்வாகத் துறையில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு தோட்டத் துறையுடன் எதுவித தொடர்புமற்ற வெளியாரே நியமிக்கப்படுகின்றனர். இதனால் தோட்டத் தொழிலாளர்களின் படித்த இளைஞர் யுவதிகளுக்கு தோட்ட நிர்வாகத் துறையில் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாமல் போவதாக தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பெருந்தோட்டக் கைத்தொழிலானது கடந்த மூன்று தலைமுறைக்கு மேலாக மாறி மாறி வந்த நிர்வாகங்களினால் தொழிலாளர்களின் பிள்ளைகள் தோட்டத் தொழிலைத் தவிர வேறு தொழில்களில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முடியாததொரு காலக்கட்டம் இருந்தது.

தோட்டங்கள் ஆங்கிலேயர்களால் நிர்வகிக்கப்பட்ட காலப் பகுதியில் கங்காணிமார் தொழிலாளர்களை வழிநடத்தினர். வெள்ளைக்கார துறைமாருக்கு உதவியாக தோட்ட அலுவலகங்களில் ஆங்கிலம் தெரிந்த தோட்டத் துறையுடன் தொடர்புடையவர்களும் வடக்கைப் பிறப்பிடமாக கொண்டவர்களும் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். 1974 களில் தோட்டங்கள் பெருந்தோட்ட மயமாக்கப்பட்ட பின்னர் தோட்ட கைத்தொழில் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியது.

அப்போதைய அரசாங்கத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்ட பெருந்தோட்டத்துறை நஸ்டத்தில் இயங்கியதுடன் நிர்வாகத்தினர் கிடைத்த வளங்களைப் பயன்படுத்தி சுகபோக வாழ்க்கையை அனுபவித்ததைத் தவிர அதனால் தொழிலாளர்களுக்கு எதுவித பலனும் ஏற்படவில்லை சில தோட்டங்கள் காடாகி கவனிப்பாரற்ற நிலையில் மூடப்பட்டன. தோழிலாளர்கள் வேலையிழக்க நேரிட்டது. சம்பளம் வழங்காமல் தொழிலாளர்களை வேலை வாங்கிய நிர்வாகத்திற்கு எதிராக பல போராட்டங்களும் நடத்தப்பட்டன.

தோட்ட அலுவலகங்களுக்கு தோட்டத் துறையுடன் எதுவித அனுபவமுமற்ற வெளியார் நியமிக்கப்பட்டனர். அவர்களின் வரவால் காலங்காலமாக இருந்து வந்த சமூகக் கட்டமைப்பில் மாறுதல்களும் கலாச்சார சீரழிவுகளும் ஏற்பட காரணமாயின. அக்காலப்பகுதியில் தொழிலாளர்களின் பிள்ளைகள் ஐந்தாம் தரத்திற்கு மேல் கற்க முடியாததற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன.

இந்நிலையில் தோட்டங்கள் மீண்டும் தனியாருக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டன. முன்னணி தொழிற் சங்கமாக விளங்கிய இ. தொ. காவின் தலைவராக இருந்த அமரர் சௌமியமூர்த்தி

14 ஆம் பக்கம் பார்க்க....

# மாறுமோ இந்த நிலை?



ஆணுக்கு நிகர் பெண் என்றிருக்கும் இக் காலகட்டத்திலே சீதனம் மட்டும் போதும் எனும் நிலையில் பெரியதொரு மாற்றம் நிகழ்கிறது. நம் நாட்டு பெண்கள் பாரதி கண்ட கனவை நனவாக்கியும் பாரினிலே தம் மழலைகள் நலம் பெற திட்டங்கள் தீட்டியும் இல்லறத்தில் இணையும் வரை சட்டங்கள் காத்தும் புதுமைப் பெண் என்று புறத்திலே பேசிவிட்டு பேரம் பேசுவதை மட்டும் நிறுத்தவில்லை.

மணமாலை சூடும் வயது வந்துவிட்டால் பணமாக எவ்வளவு தருவீர்கள்? வீடு காணி உள்ளதா? என்றுதான் முதலில் கேட்கின்றார்கள். பேசாத பெண்ணை பேச வைத்து அவளை பேதலிக்க வைத்து காசுதான் வேண்டும் என்றில்லை. காசும் வேண்டும் தானே என்று சொல்லி சின்னதாய் ஒரு வீடு கொஞ்சம் நகை வாகனம் இவ்வளவும் போதும் என்கிறார்கள்.

அனைவர் மத்தியிலும் சீதனத்துக்கான எதிர்ப்பு நிலவிக் கொண்டிருக்கும் போதிலும் வாங்குபவர்களும் கொடுப்பவர்களுக்கும் குறைவேஇல்லை. இது தன்னந்தனியே ஒரு பெண்ணுக்கான பிரச்சனை மட்டுமல்ல ஆண்களும் முக்கிய இடம் பெறுகின்றனர்.

**எஸ்.ஜெனுசா**
ஊடககற்கைகள் நெறி, பல்கலைக்கழக வளாகம்
திருகோணமலை

தந்தையானவன் தன் மகளை திருமணபந்தத்தில் இணைத்து வைக்க பெரும் பாடுபடுகின்றான். அண்ணன் தனது தங்கையினை கரை சேர்க்க சீதனத்தை எதிர்பார்த்து நிற்கிறான். ஒரு மீழ்சுழற்சியின் அடிப்படையிலே இது தொடர்ச்சியாக நிகழ்கிறது. பலர் சீதனப்பிரச்சனையால் தங்களது உறவுகளை கரை சேர்க்க முடியாத நிலையில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். அது மட்டுமல்லாமல் பிரம்மச்சாரிகளாகவும் முதிர்கன்னிகளாகவும் வாழ்கின்றனர். அத்துடன் காலம் கடந்து திருமணம் செய்து குழந்தை பாக்கியம் அற்றும் அவஸ்தைப்படுகின்றனர்.

பலர் கடன் தொல்லையில் மாட்டிக் கொள்கின்றனர். இது இவ்வாறு இருக்க பல பெண்கள் தனக்காக உறவுகள் கஸ்ரப்படுவதை பார்த்து வாழ்க்கையில் தவறான முடிவுகளை எடுக்கின்றனர். அனேகமான பிரதேசங்களில் திருமணத்தின் பின் பெண் ஆண்வீட்டுக்கு செல்வதே வழமை. ஆனால் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் ஆண்களே பெண் வீட்டிற்கு செல்கின்றனர். இப்பிரதேசங்களிலே அதிகளவான சீதனப் பிரச்சனை நிகழ்கிறது. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு சீதனப் பெறுமதி உண்டு. கேட்பதற்கு கேலியாக இருந்தாலும் சிலரது வாழ்க்கையில் கசப்பான உண்மை என்பதில் சந்தேகம் இல்லை. காதல் திருமணங்களில் கூட மறைமுகமாக பின்பற்றப்பட்டு வருகின்றது என்பது கசப்பான உண்மை.

கன்னியரின் பாதுகாப்பு கவசமாக விளங்கும் கல்யாண வாழ்விலே சீதனம் என்னும் சிக்கலான விடயம் கட்டுப்படுத்த முடியாத நோயாக இருக்கின்றது. முதுகெலும்பு இல்லாதவர்களின் முகவரி என்று இழிவாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு வந்தாலும் சிலருக்கு பெருமையாகவும் உள்ளது. சீதனம் வாங்காவிட்டால் தன் மரியாதை குறைந்துவிடுமோ என்று அச்சப்படுபவர்களும் உண்டு.

எதிர்மறையான சிந்தனைகளை முதலில் நாம் அகற்ற வேண்டும். சீதனம் எனும் பதம் ஆண் பெண் பேதமற்று அனைவரையுமே பாதிக்கின்றது. சீதனத் தீயிலே மூழ்காமல் குணமான துணைவியிடம் பணத்தை எதிர்பார்க்காமல் கண்ணிலே கருணையுடன் எண்ணத்தில் தூய்மையுடன் பெண்ணைப் பார்க்க வேண்டும். இனிவரும் காலங்களிலே இதனை இல்லாதொழித்து மக்கள் மத்தியில் சம உரிமையை பேணிவோம்.

சீதனம் எழுத்தில் மட்டுமல்ல எண்ணத்திலிருந்தும் அழிப்போம்.

# தாய்ப்பாலூட்டலினால் முழுமை பெறும் தாய்மை

மனித உயிர் மண்ணுக்கு வந்ததும் முதல் உணவாக ஊட்டப்படுவது தாய்ப்பாலாகும் இதனால்தான் தாய்ப்பால் குழந்தைக்கு மிகவும் சிறந்த உணவாகவும், பானமாகவுமுள்ளது. தாய்ப்பாலூட்டல் என்பது மனித தோன்றத்துடன் ஆரம்பமானது அன்றய காலத்து தாய்மார்கள் தாய்ப்பாலூட்டலை தமது கடமையாக உணர்ந்து செயல்பட்டனர் அதன் காரணமாக பத்து குழந்தைகளை பெற்ற தாய்மார்களும் கூட தனது பத்து குழந்தைகளுக்கும் சுமார் இரண்டு வருடங்கள் தாய்ப்பாலூட்டினர் இதன் பொருட்டு அவர்களுக்கு பெரிதாக அறிவூட்டலோ,கட்டாயப்படுத்தலோ காணப்படவில்லை மாறாக பாசம் மற்றும் மார்க்கத்துக்காகவுமே செய்தார்கள்.ஆனால் இன்றய இளம் தாய்மார்களில் பலர் நாகரிக வளர்ச்சி எனும் போலியான வாழ்வில் மூழ்கி உள்ளதால் தன்னால் பெற்றெடுத்த பிள்ளைக்கு இரண்டு வருடங்கள் தாய்ப்பாலூட்டுவதை கஸ்டமாக கருதி புட்டிப் பால்மாக்களை வழங்குகின்றனர் இதற்கு அவர்கள் கூறும் காரணங்களாக தாய்ப்பாலூட்டுவதால் இளமையும் அழகும் குறைதல்,வேலைக்குச் செல்லுதல் என்பனவாகும். தகுந்த காரணமின்றி தாய்ப்பாலூட்டாமல் விடுவது குழந்தையின் உரிமையை பாதிக்கும் செயலாகும்.

**ஒலுவில் இஸட்.ஏ.றஹ்மான்**
**வர்த்தக முதுமாணி**

தாய்ப்பால் மிகவும் முக்கியமானது என்பதால் குழந்தைகளை பெற்ற தாய்மார்கள் அக் குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் தாய்ப்பாலூட்ட வேண்டும் என்பதை விழிப்பூட்டும் முகமாக சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரம் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் 1--7 ம் திகதி வரை கொண்டாடப்படுகிறது இது முதல் முதலில் 1992 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தற்போது சுமார் 120 நாடுகளில் இவ் வாரம் கொண்டாடப்படுகிறது. விசேடமாக ஐக்கிய அமெரிக்காவில் ஓகஸ்ட் மாதம் 1 தொடக்கம் 31 வரைக்கும் தேசிய தாய்ப்பாலூட்டல் மாதமாக 2016 ம் ஆண்டிலிருந்து கொண்டாடப்படுகிறது.2019 ம் ஆண்டுக்கான சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரத்தின் கருப் பொருளாக' தாய்ப்பாலூட்டலை ஊக்கப்படுத்தி உலகிலுள்ள குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு வலுவூட்டுவோம்' என்பதாகும்.

பிறந்த பிள்ளைக்கு மிகவும் சிறந்த உணவு தாய்ப்பாலாகும் ஏன்எனில் தாய்ப்பாலிலுள்ள விசேட பதார்த்தமான Immuno Globul-in பிள்ளைகளை நோய்க் கிருமிகளிலிருந்து பாதுகாப்பதுடன் அவர்களின் மூளை வளர்ச்சிக்கு தேவையான Cysteine, Taurineஆகிய சத்துக்களும் தாய்ப்பாலில் சரியான அளவில்உள்ளன. குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்றால்போல் இறைவன் தாய்ப்பாலில் பதார்த்தங்களை இலகுவானதாக படைத்துள்ளான் ஏன்எனில் இக் குழந்தைகளுக்கு பசுப்பால் ஊட்டினால் அதிலுள்ள செறிவான பதார்த்தங்களின் காரணமாக சிறு நீரகங்கள் பாதிப்படைவதாக மருத்துவ உலகம் கூறுகிறது.

தாய்ப்பாலூட்டல் எனும் தகுதி தாய்மை பெற்ற பெண்களுக்கு மட்டும் இறைவன் கொடுத்த அரிய வாய்ப்பாகும் இதன் மூலம் தனது சிசுவுக்கு அருமருந்தான உணவை வழங்குகிறாள் இதனால்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் தாய் முதன்மை யானவளாக கருதப்படுகிறாள். ஆனால் தற்பொழுது தாய்ப்பாலூட்டல் சில பெண்களினால் வீழ்ச்சி அடைந்துள்ளது இதனால் தாய்,சேய் உறவுகளில் அன்பு,பாசம் என்பனவும்அருகி வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

தாயின் கருவறையிலுள்ள குழந்தைகளுக்கு தாயானவளின் தொப்புள் கொடி மூலம் உணவு வழங்கும் வகையில் ஏற்பாடு செய்துள்ள இறைவன் அது பிறந்தவுடன் தாயின் மார்பகங்களில் அற்புதமான முறையில் பாலை சுரக்க வைத்து அதனை குழந்தைகளுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளான். இவ்வாறு படைத்தவனே ஏற்பாடு செய்திருக்க அதனை மறுப்பதற்கு என்ன அதிகாரம் தாய்ப்பாலூட்டலை மறுக்கும் அல்லது குறைக்கும் தாய்மார்களுக்கு உள்ளது.உலகைப் படைத்து அதில் கோடிக்கணக்கான ஜீவராசிகளைப்படைத்து அவற்றை இனவிருத்தி செய்து அவற்றை வாழவைக்கும் வல்லமை கொண்ட இறைவன் ஒவ்வொரு உயிரினத்தையும் வெவ்வேறு வழியாக செயல்படவைக்கிறான் ஓர் உயிர் உலகுக்கு வருமாகயிருந்தால் அதனை உயிர் வாழ வைக்க பல வழிகளில் அவற்றிற்கான ஆகாரத்தை ஏற்பாடு செய்கிறான் அவற்றிலொன்றுதான் இந்த தாய்ப்பாலூட்டலும். இதனை வையகத்திலுள்ள ஏறக்குறைய நாலாயிரத்தி ஐனூறு (4500) வகையின முலையூட்டிகளும் சிரமம்,அலுப்பு,சாட்டு,அறிவூட்டல் என்பன இல்லாமலே பாசத்துடன் பாலூட்டுகின்றன ஆனால் மனிதன் அறிவைப்பயன்படுத்தி இதற்கு மாற்றீடு செய்வது வேதனையான விடயமட்டுமல்லாமல் அவர்களுக்கு பாதகமான விடயமுமாகும் ஏன்எனில் தற்போதைய சுகாதார ஆராய்ச்சி ஆய்வின் படி தாய்ப்பாலூட்டலினால் சேய் மட்டுமன்றி தாயும் சிறந்த ஆரோக்கியம் பெறுவதாகவும் தாய்ப்பாலூட்டலை தவிர்க்கும் தாய்மார்களுக்கு மார்பக புற்றுநோய், கர்ப்பப் புற்றுநோய், நீரழிவு,இதய நோய்கள் ஏற்படுவதாகவும் நிறுபிக்கப்பட்டுள்ளது.மேலும் உலகில் வருடாந்தம் மார்பக புற்றுநோயால் சுமார் இருபதாயிரம் ( 20000 ) தாய்மார் இறப்பதாகவும் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.மதங்களிலும்தாய்ப்பாலூட்டல் வலியுறுத்தப்பட்டுள்ளது இதனால்தான் அன்றய தாய்மார் பாலூட்டலில் பக்தியாக நடந்து கொண்டார்கள். இன்று நாகரிக மோகம் மதப்போதனைகளைக்கூட மதிப்பதில்லை இதனால்தான் இன்றய இளந் தாய்மார் பாலூட்டலில் சிரத்தை எடுப்பதில்லை. எனவே அனைவரும் தாய்ப்பாலூட்டலுக்கு உதவி செய்பவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் உலகில் பலயீனமான சிறுவர்களும்,நோயான தாய்மார்களும் அதிகரிப்பர் என்பதில் ஐயமில்லை.



இந்தாண்டின் சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரத்தினூடாக உலகம் நேசமான மற்றும் பலமான சிறுவர்களையும், பாசமான மற்றும் ஆரோக்கியமான தாய்மார்களையும் உருவாக்க முயற்சிக்கட்டும் எல்லாம் வல்ல இறைவன் இதற்கு ஆசிர்வதிக்கட்டும்.

## தொடரும்...

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

தொண்டமான் ஒரு தனிபெரும் தலைவராக இருந்து பல வரலாற்று சாதனைகளை புரிந்தார் என்றால் மிகையாகாது. தொலைநோக்குச் சிந்தனையுடன் அவர் முன்னெடுத்த தொழிற்சங்க அரசியல நடவடிக்கைகள் இன்றும் தொழிலாளர்கள் மத்தியில் பேசப்படுகிறது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானால் முன்னெடுக்க திட்டங்களில் வீடமைப்பு திட்டங்கள் ஆசிரியர் நியமனங்கள் கிராம சேவை உத்தியோகத்தர் நியமனங்கள் ஆகியன மலையக சமூகத்தின் மத்தியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தொடர்ந்து முன்னெடுத்து செல்ல தற்போதைய தலைமைத்துவம் முன்வர வேண்டியது அவசியமாகும் பெருந்தோட்டப் பகுதிகளில் படித்த இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரியர் தொழிலைத் தவிர வேறு அரச நிர்வாகத் துறையில் தொழில் புரிவதற்கான தகைமைகள் அவ்வாறான இளைஞர்களை அரச சேவையில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகளுக்கு கைக்கொடுப்பதில்லை என கூறப்படுகிறது.

மஸ்கெலியா மவுசாகலை தோட்ட முகாமைத்துவ காரியாலயத்திற்கு லிகிதர் பதவிக்காக விண்ணப்பித்த தொழிலாளர்களின பிள்ளைகளுக்கு தேவையான தகுதிகள் இருந்த போதிலும் நேர்முக பரீட்சைக்கு தோற்றி வேலைவாய்ப்பு கிடைக்குமென பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

நேர்முக பரீட்சைக்கு குறிப்பிட்ட தினத்தில் சமூகமளிக்காத சில வெளியாருக்கு நியமனம் வழங்கபபட்டுள்ளதாக தொரிவிக்கப்படுகிறது. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாரபற்சம் காட்டும் இவ்வாறான அதிகாரிகளை தோட்ட கம்பனிகளோ தொழிற்சங்கங்களோ கண்டுகொள்வதில்லை.

## சிறுபான்மை..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

கலந்துகொள்ளாததால் அவர்கள் யாரை ஆதரிப்பார்கள் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதே போல சிறிலங்கா பொதுஜன முன்னணியின் எம்.பிக்களான சுசில் பிரேம ஜயந்த,சனத் நசாந்த பெரேரா,மற்றும் முன்னணியின் பிரமுகர்களும் யாழ்ப்பாணம் வந்து பிரசாரம் செய்துள்ளனர்.தமது ஆட்சியில் வடக்கில் இடம் பெற்ற புனரமைப்பு பணிகளை சுட்டிக் காட்டினர்.

வடக்கில் ஐக்கிய தேசிய கட்சி இதுவரை ஜனாதிபதி தேரதல் குறித்து எந்த பிரசாரத்தையும் செய்யவில்லை. ஆனால்,ஆயிரம் பௌத்த கோயில்களை வடக்கில் கட்டப்போவதாக கடந்த ஆண்டு கட்சி அறிவித்தது. தற்போது வடக்கில் பல இடங்களில் பௌத்த கோயில்கள் கட்டப்படுவதை பலரும் எதிர்க்கின்றனர். அத்துடன் காணாமல்போனோர் பிரச்சினை,தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை,அரசியல் தீர்வு இழுத்தடிப்பு போன்றனவும் இக் கட்சியின் தேர்தல் பணிகளை பாதிக்கும்.சில தமிழ் கட்சிகள் இதனையே பிரசாரம் செய்கின்றன.இதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இக்கட்சிக்கு ஆதர

வை அளிக்குமாறு கேட்கமுடியாது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சில அரசியல்வாதிகள் எமது பிரச்சினைகள்,அரசியல் தீர்வு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பவர்களுக்கு ஆதரவை வழங்கலாம் என தற்போது கூறுகின்றனர். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கோரிக்கையின்படி வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கப்போவதில்லை என்றே கூறலாம்.

முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி,குமார் பொன்னம்பலத்தின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகியனவும் இத்தேர்தல் தொடர்பாக எதனையும் மக்கள் முன் தெரிவிக்கவில்லை.ஆனால்,இந்த அரசு கடந்த நான்கு வருடங்களாக தமிழ் மக்களுக்கு எதனையுமே செய்யவில்லை, அவர்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாதுகாத்து வந்ததே என கூறிவருகின்றனர்.இதவும் ஐக்கிய தேசிய கட்சியின் வாக்குகளை பாதிக்கும். சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவின்றி நாம் ஆட்சி அமைப்போம் என தெற்கில் ஆதரவை பெற பேசியவர்கள்,இன்று சிறுபான்மையினத்தவர்களின்

ஆதரவுடன் வெற்றிபெறுவோம் என்கின்றனர்.வடக்கு,கிழக்குக்கு வருகின்றனர். ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் சம்பவங்களால் முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.பலர் சந்தேகத்தில் கைதாகி சிறையில் உள்ளனர். அவர்களுக்காக அமைச்சு பதவிகளை துறந்த முஸ்லிம் அரசியல்வாதிகளில் சிலர் மீண்டும் தமது பதவிகளை ஏற்றுள்ளனர். எனவே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுபவர் 50 வீதமான வாக்குகளை பெறவேண்டியது அவசியம். ஆனால், தமிழ்,முஸ்லிம் சிறுபான்மை வாக்குகளை இம்முறை பெறமுடியுமா? இந்த வாக்குகள் இன்றைய அரசியல் நிலைமைகளால் முன்னரைப்போல ஒன்றுபடுமா,அல்லது பிளவுபடுமா என்ற கேள்வியும் உள்ளது.

பேராயர் மலக்கம் ரஞ்சித் ஆண்டகை,கடந்த கால ஆட்சி,தற்போதைய ஆட்சியை விமர்சித்துள்ளார். இவர்களை வீட்டுக்கு அனுப்புங்கள். எதுவித கொள்கைகளும் இல்லாத தலைவர்கள்,புதியவர்களை தெரியுங்கள்.தற்போதுள்ள அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கை கொள்ளமுடியாது.சுதந்திரத்தின் பின் நாடு இரத்த பூமியாக மாறியுள்ளது. இந்த நிலை தொடருமானால் நாடு பல நாட்கள் நிலைத்திருக்காது.நாடு முழுவதும் ஊழல்,மோசடிகள்.இதற்கு காரணம் நாட்டின் அரசியலின் ஒழுக்கமின்மையே என்று பலதை கூறியுள்ளார்.இதனை நாட்டில் உள்ள கத்தோலிக்க மக்களும் புரிந்து கொள்வார்கள்.எனவே சகல இன மக்களும் இணைந்து ஒரு சிறந்த தலைவரை தெரிவு செய்யவேண்டியது அவசியம் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஜெர்மி கோர்பினும் போரிஸ் ஜோன்சன் பதவிக்கு வருவதும்

இது எப்படி நடந்தது? என்று கேட்பதுதான், போரிஸ் ஜோன்சன் பழமைவாத கட்சியின் தலைமையை ஏற்றதன் மீதும் மற்றும் பிரதம மந்திரி ஆனதன் மீதும் தொழிலாளர்களிடைய நிலவும் ஒரு பொதுவான எதிர்வினையாக உள்ளது.

வேலைகள், கூலிகள் மற்றும் வேலையிட நிலைமைகள் மீது நாசகரமான பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து'உடன்படிக்கை எட்டப்படாமல்' வெளியேறுவதற்காக அர்ப்பணித்துள்ள, பிரிட்டிஷ் வரலாற்றிலேயே மிகவும் வலதுசாரி அரசாங்கத்திற்கு ஜோன்சன் தலைமை தாங்குகிறார். கீழ்மட்டத்தினர்'மீது அவரின் வெறுப்பை மூடிமறைக்க முடியாத ஒரு வயதான எத்தோன் மாணவரான அவர், மில்லியன் கணக்கான தொழிலாளர்களால் வெறுக்கப்படுகிறார். இருப்பினும் இப்போது அவர் உயர் அரசியல் பதவியை ஏற்றுள்ளதுடன், சில வெற்றி வாய்ப்புகளுடன், அக்டோபர் 31 இல் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற்றுவதற்கான அதிகாரத்தை பாதுகாத்து, பின்னர் பெருவணிகங்கள் மற்றும் செல்வந்தர்களுக்கான அவரின் வரி வெட்டு திட்டநிரலை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு முன்கூட்டிய தேர்தல் குறித்து சிந்தித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோன்சன் மற்றும் அவரது மந்திரி சபையின் தாட்சரிச சிந்தாந்தவாதிகளது ஏறுமுகத்திற்கான அரசியல் பொறுப்பை ஜெர்மி கோர்பின் மீது சுமத்த வேண்டியுள்ளது. இவர் தான் ஜோன்சன் அரசாங்கத்திற்கு அரசியல் செவிலித்தாயாக செயல்பட்டுள்ளார், பெருவணிகங்கள் மற்றும் அதன் அரசியல் பாதுகாவலர்களுக்கு எதிரான ஒரு போராட்டத்தைத் தொடுப்பதற்கான தொழிலாளர்களின் அனைத்து முயற்சிகளையும் அவர் நசுக்கியதற்கு அவர்கள் நன்றி கூறுவார்கள்.

தொழிற் கட்சி தலைவராக கோர்பினின் நான்காண்டுகள் பிரிட்டிஷ் மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு மூலோபாய படிப்பினையாகும். ஆளும் வர்க்கத்தின் சார்பாக வர்க்கப் போராட்டத்தின் மீது பொலிஸ் வேலை செய்யும் தொழிற் கட்சி மற்றும் தொழிற் கட்சி அதிகாரத்துவத்திற்கு எதிரான எந்தவொரு அரசியல் சவாலையும் தடுப்பதில் 'இடது' என்று கூறப்படுபவை வகிக்கும் முக்கிய பாத்திரத்தை அவை உறுதிப்படுத்துகின்றன.

அவர், அவரின் மூன்று பிளேயரிச எதிர்ப்பாளர்களுக்கு எதிராகவும் மற்றும் அவர்களின் 'மிதமான சிக்கன நடவடிக்கை' கொள்கை மற்றும் ஏகாதிபத்திய இராணுவவாதத்திற்கு எதிராகவும் நிலவிய ஓர் அரசியல் எதிர்வினையிலிருந்து, பெருவாரியாக 59.5 சதவீத முதல்தர வாக்குகளுடன் 2015 செப்டம்பரில் கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜூன் 2016 இல் பிளேயரிசவாதிகள் 172 நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையில்லா வாக்குகளைக் கொண்டு அவரைப் பதவியிலிருந்து நீக்க நகர்ந்தபோது, அது திருப்பித் தாக்கியது. கோர்பின் 2015 ஐ விட 62,000 இக்கும் அதிகமான வாக்குகளுடன், 61.8 சதவீத வாக்குகளைப் பெற்று ஜெயித்தார். 2017 வாக்கில் தொழிற் கட்சி அரை மில்லியனுக்கும் அதிக உறுப்பினர்களுடன் ஐரோப்பாவின் மிகப்பெரிய கட்சியாக ஆகும் வகையில், நூறாயிரக் கணக்கான தொழிலாளர்களும் இளைஞர்களும் அதில் இணைந்தனர்.

2017 இல், பிரதம மந்திரி தெரேசா மே ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஓர் ஆதாயமான பிரெக்ஸிட் உடன்படிக்கையைப் பெறுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் ஆதரவை அணிதிரட்ட முடியுமென கணக்கிட்டு, ஒரு முன்கூட்டிய பொது தேர்தலுக்கு அழைப்புவிடுத்தார். ஆனால் அதற்கு தலைகீழாக தொழிற் கட்சியின் வாக்குகள் 40 சதவீதம் அதிகரித்தன - இது 1947 இல் கிளெமென்ட் அட்லிக்குப் பிந்தைய மிகப்பெரியளவிலான பத்து சதவீத அதிகரிப்பாகும். டோரி கட்சியினர், ஜனநாயக ஒன்றியக் கட்சியின் (ஈக்க) 10 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைச் சார்ந்துள்ள ஒரு சிறுபான்மை அரசாங்கமாக சுருங்கிப் போனார்கள்.

பிளேயரிச வலதுக்கு எதிராக ஒரு போராட்டத்தைத் தொடுக்கவும் பின்னர் டோரிக்களுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுக்கவும், தொழிற் கட்சியினது வேறெந்த தலைவருக்கும் இதுபோன்றவொரு மிகவும் சாதகமான சூழ்நிலை அமைந்ததில்லை. சிக்கன நடவடிக்கைக்கு எதிரான மற்றும் இராணுவவாதத்திற்கு எதிரான ஓர் இடதுசாரி உணர்வலையின் மீது கோர்பின் அமர்ந்திருந்தார், அது அவரை பதவிக்குக் கொண்டு சென்றிருக்கும். ஆனால் சிரியப் போர் மீது சுதந்திர வாக்கெடுப்புக்கு அனுமதித்தும், நேட்டோ அங்கத்துவத்தை மற்றும் முப்படைகளுக்கான அணுஆயுத ஏவுகணை அமைப்பை ஏற்றுக் கொண்டும், தொழிற் கட்சி நிர்வகிக்கும் உள்ளாட்சி நிர்வாகிகள் விசுவாசமாக டோரி-கட்டளையிட்ட வெட்டுக்களை திணிக்க வலியுறுத்திய கோர்பின், பிளேயரிச வாதிகளின் அவ்வப்போதைய வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டதுடன், அவர்களை வெளியேற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் தடுப்பதே அவரின் மத்திய நோக்கமாக இருந்தது.

செல்வாக்கின் உச்சத்தில் இருந்த கோர்பின், பிளேயரிசவாதிகளுக்கு எதிரான அனைத்து எதிர்ப்புகளையும் நிறுத்த நகர்ந்தார். 2018 இல், அவர் பிளேயரிச நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்டாய மறுதேர்வுக்கான கோரிக்கைகளை எதிர்க்க தொழிற்சங்க அதிகாரத்துவத்துடன் ஒன்றிணைந்து செயல்பட்டார், அதேவேளையில் நிழலமைச்சரவை சான்சிலர் ஜோன் மெக்டொன்னல் இலண்டன் நகர ஆதரவை வெல்வதற்கு முனைந்தார்.

இந்தாண்டு ஏப்ரலில் பிரெக்ஸிட் மீதான டோரி நெருக்கடி, மே இன் வீழ்ச்சியை அச்சுறுத்திய போது, கோர்பின் அவர் அரசாங்கத்தைக் காப்பாற்ற முன்நகர்ந்தார். ஒரு பொது தேர்தலுக்கான அழைப்புகளை நிராகரித்த கோர்பின், தேசிய நலனை?? பாதுகாக்கும் பெயரில் மே உடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். அது கடுமையாக வெளியேறுவதை ஆதரிக்கும் மேயின் சொந்த கட்சியினது கன்னை மேக்கு மரண அடி வழங்க செய்து, இறுதியில் 2016 இக்குப் பின்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத இரண்டாவது டோரி பிரதம மந்திரியாக ஜோன்சன் பதவியேற்றதில் போய் முடிந்தது.

இப்போதும் பிரெக்ஸிட் மீது ஆழமாக பிளவுபட்டுள்ள வெறும் மூன்று ஆசனங்களின் பெரும்பான்மையில் உள்ள ஓர் அரசாங்கத்திற்குத் தான் ஜோன்சன் தலைமை கொடுக்கிறார். ஆனால் கோர்பினோ அவரது சொந்த கட்சியின் அரசியல் முன்முயற்சிகளைப் பிளேயரிசத்திடம் ஒப்படைத்துள்ளார், இவர்கள் யூத-எதிர்ப்புவாதம் என்ற மோசடி கூற்றுகளின் அடிப்படையில் இடது நோக்கி சாயும் தொழிற் கட்சி உறுப்பினர்களை வேட்டையாடுவதிலும் மற்றும் கோர்பினை வெளியேற்ற செயலூக்கத்துடன் சதித்திட்டம் தீட்டுவதிலும் மும்முரமாக உள்ளனர். தொழிற் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரூபேர்ட் முர்டோக்கின் கூடனு குதண பத்திரிகைக்கு 'தனிப்பட்டரீதியில் கூறியதாவது', திரு ஜோன்சன் எண் 10 அலுவலத்தில் நுழைந்திருப்பது ஏறத்தாழ நிச்சயமாக தொழிற் கட்சி தலைவரை மாற்றுவதற்கான சதி முயற்சிகளை 'வேகப்படுத்தும்'. ஒருவர் கூறினார்: 'போரிஸை வைத்திருப்பது எங்களுக்கு நன்மையாக அமையும் ஏனெனில் என்ன நடக்க வேண்டுமோ அதை அது வேகப்படுத்தும்.'



தொழிற் கட்சி ஐரோப்பிய ஒன்றியத்தில் தங்கியிருப்பதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென பிளேயரிசவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். தாராளவாத ஜனநாயகவாதிகள், ஸ்காட்டிஷ் தேசிய கட்சி மற்றும் வேல்ஸ் கட்சியான Plaid Cymru ஆகியவற்றுடன் இணைந்த ஒரு தேசிய நல்லிணக்க அரசாங்கம் என்பதே அவர்களின் முன்னோக்காக உள்ளது. இது, 2016 கருத்து வாக்கெடுப்பை 'வெஸ்ட்மின்ஸ்டர் உயரடுக்கு' காட்டிக்கொடுத்ததன் மீதான வெறுப்பை மையமாக கொண்ட ஒரு தேசியவாத பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு, நைஜல் ஃபாராஜின் பிரெக்ஸிட் கட்சி உடனான ஒரு கூட்டணியில், டோரிக்கள், ஒரு முன்கூட்டிய இலையுதிர்கால தேர்தலில் வெற்றி பெற அனுமதிக்கும்.

வெளியேறலாம் என்று 26 இல் இருந்து 34 சதவீதத்தினர் வாக்களிக்கப்பட்டிருந்த போதினும், அதிலேயே தங்கியிருக்கலாம் என்று வாக்களித்த பெரும்பாலான தொழிற் கட்சி ஆதரவாளர்கள் பெரும்பாலும் வடக்கில் தொழிலாள வர்க்க பகுதிகளில் உள்ளனர், அப்பகுதி பிரெக்ஸிட் கட்சியால் இலக்கு வைக்கப்படலாம். கோர்பின் உருவாக்கிய குழப்பமும் நோக்குநிலை பிறழ்ச்சியும் சேர்ந்த கலவை மே 26 ஐரோப்பிய தேர்தல்களில் எடுத்துக் காட்டப்பட்டது, அதிலேயே தங்கியிருப்பதை ஆதரிக்கும் தொகுதிகளைத் தாராளவாத ஜனநாயகவாதிகளிடமும், பிரெக்ஸிட்டை ஆதரிக்கும் பகுதிகளை ஃபாராஜின் வெளிநாட்டவர்-விரோத வெறியூட்டும் கட்சியிடமும் தாரை வார்த்ததால், தொழிற் கட்சியின் வாக்குகள் 15 சதவீதம் அத்தேர்தல்களில் சரிந்தது.

பிரிட்டன் வெளியேறுவதை ஆதரிக்கும் 40 இக்கும் அதிகமான தொழிற் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வெளியேறுவதற்கான வாக்கெடுப்பில் ஜோன்சன் அரசாங்கத்தை ஆதரிக்கக்கூடும் என்ற கரோலைன் ஃபிளின்ட் இன் வாதத்தின் படி பார்த்தால், ஜோன்சன் ஒருவேளை ஒட்டுமொத்தமாக தேர்தல்களுக்கு அழைப்பு விடுப்பதையே கூட தவிர்க்கக்கூடும். கோர்பின் தலைமையின் கீழ் என்ன இல்லை என்றால், இரண்டாம் உலக போருக்குப் பின்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முகங்கொடுக்கும் ஆட்சிக்கான மிகப்பெரிய நெருக்கடியில் தொழிலாள வர்க்கத்தினது அதன் சொந்த நலன்களுக்கான தலையீடு இல்லை.

கோர்பின் வகிக்கும் பாத்திரத்தில் தனித்துவம் ஒன்றுமில்லை. அவர் கிரீஸில் சிரிசாவின் அரசியல் அடியொற்றி செல்கிறார், அது ஐரோப்பிய ஒன்றிய பின்புலத்திலான சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிராக போராடுவதற்கு சூளுரைத்து ஜனவரி 2015 இல் அதிகாரத்திற்கு வந்ததும், அதற்கு முன்பிருந்த வலதுசாரி புதிய ஜனநாயக கட்சியை விட ஆழ்ந்த வெட்டுக்களை மட்டுமே திணித்தது. பிரிட்டனில் கோர்பின் ஆகட்டும் அல்லது அமெரிக்காவில் பேர்ணி சாண்டர்ஸ் ஆகட்டும், உத்தியோகபூர்வ 'இடது' என்பது ஒவ்வொரு இடத்திலும் வர்க்க போராட்டத்தை நசுக்கவும் மற்றும் அரசியல் வெற்றியை வலதிடம் ஒப்படைக்கவும் செயலாற்றுகின்றன-அவ்விதத்தில் தான் பிரிட்டன் இப்போது டொனால்ட் ட்ரம்புக்கு இணையான 10 டவுனிங் வீதியில் அமர்ந்திருக்கும் அதன் அரசியல் நபரைக் கொண்டுள்ளது.

ஒவ்வொன்றும், தொழிலாள வர்க்கம் அவசியமான அரசியல் தீர்மானங்கள் எடுப்பதைச் சார்ந்துள்ளது.

தொழிற் கட்சியானது ஏகாதிபத்திய ஆட்சிக்கான ஒரு கட்சி என்பதோடு, சாமானிய கட்சி தொண்டர்களினது அழுத்தத்தைக் கொண்டு அதை சிக்கன நடவடிக்கைகள், இராணுவவாதம் மற்றும் போரை எதிர்க்கும் ஒரு கருவியாக மாற்றிவிட முடியாது. கோர்பின் போன்ற'இடதுகள்'முதலாளித்துவ வர்க்கத்தின் விசுவாசமான பாதுகாவலர்கள் ஆவர். அவர்களின் கட்டுப்பாட்டை விட்டு வெளியேறி சென்றுவிடக்கூடிய தொழிலாள வர்க்க இயக்கத்தை அணிதிரட்டும் அபாயத்தை எடுப்பதைக் காட்டிலும் அவர்கள் அவர்களின் சொந்த ஆதரவாளர்களை வெளியேற்றுவதை வேண்டுமானால் ஒழுங்கமைப்பார்கள்.

கோர்பின் பாதுகாக்கும் பலவீனமான சீர்திருத்த உதிரித்திட்டங்களோ, அல்லது ஐரோப்பிய ஒன்றியத்திலேயே தங்கியிருக்கலாம் அல்லது வெளியேறலாம் என்பதை ஆதரிப்பதோ, தொழிலாள வர்க்கம் முகங்கொடுக்கும் கடுமையான சமூக நெருக்கடிக்கு விடையளிக்காது. ஒட்டுமொத்த உலகையும் இராணுவ மோதலுக்குள் மூழ்கடிக்க அச்சுறுத்துகின்ற தீவிரமடைந்து வரும் வர்த்தக போரில் அமெரிக்காவுடன் கூட்டு சேரலாமா அல்லது ஜேர்மனி மற்றும் பிரான்சுடன் கூட்டு சேரலாமா என்பது தான் பிரெக்ஸிட் சம்பந்தமாக ஆளும் வட்டாரங்களில் நடக்கும் மோதலாகும். உலகளாவிய போட்டித்தன்மைக்காக என்ற பெயரில், சிக்கன நடவடிக்கைகளை அதிகரிப்பதும் மற்றும் அதிவலதின் வளர்ச்சியுமே இதற்கான விலையாக இருக்கும்.

சோசலிசத்திற்காக பிரிட்டிஷ் தொழிலாள வர்க்கம், ஐரோப்பிய மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஓர் ஒருங்கிணைந்த இயக்கம் மட்டுமே ஒரு முன்னோக்கிய பாதையை வழங்குகிறது. வர்க்க போராட்டம் நசுக்கப்பட்டு வந்துள்ள பல தசாப்தங்களுக்குப் பின்னர், உலகம், ஒரு நாடு மாற்றி ஒரு நாட்டில் நடக்கும் வேலைநிறுத்த அலையில், மதிப்பிழந்த இந்த சமூக ஜனநாயகவாத கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு எதிரான ஓர் அரசியல் கிளர்ச்சியின் ஆரம்ப வெளிப்பாடுகளைக் கண்டு வருகிறது. ஓர் இடது மாற்றீட்டைப் பிரதிநிதித்துவம் செய்வதாக கோர்பினின் கூற்று அப்பட்டமாக அம்பலமாவது, இந்த மேலெழுந்து வரும் இயக்கத்தில் சோசலிச சமத்துவக் கட்சி தலைமையின் கீழ் பிரிட்டன் தொழிலாளர்கள் அவர்களின் இடத்தை எடுக்க அவர்களுக்குப் பாதையைத் திறந்து விடுகிறது.

நன்றி: உலக சோசலிச இணையத்தளம்

# அணுஆயுத ஒப்பந்தம்: புதினுக்கு அதிர்ச்சி அளித்த டிரம்ப் - அடுத்தது என்ன?

ரஷ்யா மற்றும் சீனா இருநாடுகளும் ஒரு புதிய அணு ஆயுத ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

இந்த யோசனை தொடர்பாக தான் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய இருநாடுகளுடனும் பேசியிருப்பதாக கூறும் அதிபர் டிரம்ப், இதுகுறித்து அந்நாடுகள் மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுடன் அமெரிக்கா மேற்கொண்டிருந்த ஒரு முக்கிய அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறியதை அடுத்து அதிபர் டிரம்பின் கருத்துகள் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் முடிவு இருநாடுகளுக்கு இடையே ஒரு புதிய ஆயுதப் போட்டியை உருவாக்கும் என அஞ்சப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே பனிப்போர் காலத்தில் செய்து கொள்ளப்பட்ட மத்திய தூர அணு ஆயுத ஒப்பந்தத்தின் படி, 500 கி.மீ. முதல் 5,500 கி.மீ தூரம் வரை சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை இந்த ஒப்பந்தம் தடை செய்தது.

புதியவகை சீரியங்கு ஏவுகணைகளை (குரூய்ஸ் மிசைல்) பயன்பாட்டுக்கு கொண்டுவந்ததன் மூலம் இந்த ஒப்பந்தத்தை ரஷ்யா மீறியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியதை தொடர்ந்து, அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது.

ஆனால், ஒப்பந்தத்தை மீறவில்லை என்று ரஷ்யா மறுத்து வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அமெரிக்க அதிபர், தனது நிர்வாகம் ரஷ்யாவுடன் ஒரு அணு ஆயுத ஒப்பந்தம் குறித்து பேசி வருவதாகவும், இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் மாற்றங்களை செய்ய விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 'ஏதேனும் ஒரு கட்டத்தில் அணு ஆயுத ஒப்பந்தத்தில் சீனாவை நிச்சயமாக சேர்க்க வேண்டும்,' என்றும் கூறியுள்ளார்.

'சீனாவும், ரஷ்யாவும் இந்த புதிய ஒப்பந்தம் குறித்து பேசுவதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள்' என்று இறுதியாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார் டிரம்ப்.

முன்னதாக, சர்ச்சைக்குரிய 9M729 ஏவுகணைகள் பலவற்றை ரஷ்யா பயன்பாட்டுக்கு கொண்டுவந்திருப்பது தொடர்பாக தங்களிடம் ஆதாரங்கள் இருப்பதாக அமெரிக்கா சொல்லியது. இந்த வகை ஏவுகணைகளை நேட்டோ, SSC 8 வகை ஏவுகணைகள் என்று புரிந்துவைத்திருந்தது. அப்போது இந்த குற்றச்சாட்டை தமது கூட்டணி நாடுகளின் அமைப்பான நேட்டோவிடம் அமெரிக்கா தெரிவித்தது. அமெரிக்காவின் குற்றச்சாட்டை நேட்டோ நாடுகள் ஏற்றுக்கொண்டன.

இந்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததற்கு ரஷ்யாவே முழு காரணம் என்று அமெரிக்க வெளியுறவு செயலாளர் மைக் பாம்பேயோ ஓர் அறிக்கையில் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

முறைப்படி ஒப்பந்தம் 'இறந்துவிட்டதாக' ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் உறுதி செய்யப்பட்டது.

ரஷ்யாவின் சர்ச்சைக்குரிய 9M729 ஏவுகணையால் நேட்டோ நாடுகளின் பாதுகாப்புக்கு உண்டாகும் இடர்களுக்கு பொறுப்பான, அளவான முறையில் பதிலடி தரப்படும் என்று நேட்டோ அமைப்பின் தலைமைச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் குறிப்பிட்டார்.








# எமது சிந்தனைகளும், முயற்சிகளும் பரந்த அமைப்பில் திகழ வேண்டும்!

**எஸ்.அஷ்ரப்கான்**

அரசாங்கத்தின் பாரிய நடைமுறையே இன்றைய தினம் பட்டாதாரிகளுக்கு வழங்கப்படும் தொழில் நியமனங்களாகும். இருந்த போதிலும் நாம் குறுகிய வட்டத்தினுள் சுழலும் மனிதர்களாகவே செயற்படுகின்றோம்;. பொருளாதாரத்தை விசாலமாக்க வேண்டியது தற்கால அவசியம்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் எஸ்.எம்.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு (01) அம்பாறை ஹாடி வளாகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்,

இலக்குகளுக்கு அப்பால் நமது செயற்றிறன்களே வலுவான பொருளாதர முன்னேற்றத்தை பிரசவிக்கும். இன்றைய தினம் அரசாங்கத்தினால் ஆயிரக்கனக்கானோருக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றினால் அரசாங்கம் பல மடங்கு தொகைப் பணங்களை செலவு செய்ய வேண்டியுள்ளது.

அவ்வாறு செய்யப்படும் செலவுகளுக்கு பிரதிபலிப்பாக ஆசியாவிலேயே அதி சிறந்த நாடாக வரலாறு கண்டுவரும் ஜப்பான் போன்று எமது நாடும் தொழில்சார் முன்னேற்றங்களை கான வேண்டும். ஒரு நியமனம் என்பது சாதாரன விடயமல்ல தொழிலின் போது சம்பளம், பின்னர் ஓய்வூதியம், இறந்த பின்னரும் இழப்பீட்டுத் தொகைகள், ஏதேனும் விபத்துக்களின் போது காப்புறுதி இப்படி எத்தனையோ விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

இவை அத்தனையும் பொருளாதார ரீதியிலான வெளிப்பாடுகளையே தாங்கி நிற்கின்றன. இருந்த போதிலும் இக் காலகட்டத்தில் அரசாங்கத்தினால் இவ்வாறான நியமனங்களும், தொழில் வாய்ப்புக்களும் வழங்கி வைக்கப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம் என்றார்.

# மட்டு. மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை

**அமிர்தகழி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி சிப்தொற புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கு மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை வெள்ளிக்கிமை (2ம் திகதி) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. ஜெயக்குமணன், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் தங்கத்துரை, சமுர்த்தி முகாமையாளர் ரஜிந்தினி, சமுர்த்தி சமூக பாதுகாப்பு விடய உத்தியோகத்தர் கு.ஜெயக்குமார் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கல்விப் பொதுத் தராதரம் கற்பதற்கென இவ்வருடம் 2019ஆண்டில் இணைத்துக் கொள்ளப் பட்ட மாணவர்களுக்கு சமுர்த்தி திணைக்களத்தினால் இரண்டு வருடங்களுக்கு அவர்களின் கல்வி மேம்படுத்துவதற்காக மாதாந்தம் 1500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 24 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்தும் 237 மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

சமுர்த்தி சிப்தொற எனும் புலமைப் பரிசில் திட்டம் சமுர்த்தி திணைக்களத்தினால் வருடந்தோறும் உயர் கல்விக்காக மாணவர்களுக்கு வருகின்றது.

# குச்சவெளி பிரதேசத்தில் சமுர்த்தி உரித்து படிவங்கள் வழங்கும் நிகழ்வு



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமுர்த்தி உரித்துப் படிவம் வழங்கும் வைபவம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலும் வழங்கி வைக்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப் பட்ட பயனாளிகளுக்கு சமுர்த்தி உரித்துப் படிவங்களை (02) குச்சவெளி பிரதேச செயலகத்தில் வைத்து துறைமுகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதிய மைச்சர் அப்துல்லா மஃறூப் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

குச்சவெளி பிரதேச செயலாளர் தனேஸ்வரன் தலைமையில் குறித்த நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் தேசிய திட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் இது வரைக்கும் 5935 புதிய சமுர்த்தி பயனாளிகள் தகுதி பெற்று ஆரம்ப வைபவத்தில் பத்திரங்களை பெற்றுள்ளனர்.

இக் குறித்த ஆரம்ப வைபவத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம், கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சன்தித் சமரசிங்க, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டார்கள்.

# பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு

**மருதமுனை நிருபர், றாசிக் நபாயிஸ்**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வழிகாட்டலில் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் வேலையற்ற பட்டதாரி பயிலுனர்களுக்கானநேர்முகப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்பட்ட உள்வாரி, வெளிவாரி பட்டதாரிகள் 16,800 பேர்களின் நியமனக்கடிதங்கள் அலரிமாளிகை மற்றும் மாவட்டச் செயலகங்கள் ரீதியாக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 631 பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அம்பாறை ஹாடி உயர் தொழிநுட்ப கல்லூரின் கேட்போர் கூடத்தில் 2019.08.01 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர், டி.எம்.எல்.பண்டாரநாயகா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பெற்றோலிய வள அபிவிருத்தி பிரதியமைச்சர் அனோமா கமகே, விஷேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர், கலாநிதி, எஸ்.எம். இஸ்மாயில், மேலதிக மாவட்ட செயலாளர்களான ஏ.எம்.அப்துல் லத்தீப், வோ. ஜெகதீஸன், அம்பாரை மாவட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் பட்டதாரிகள் என பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில்



பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதத்தை பிரதம அதிதி பிரதி அமைச்சர் அனோமா கமகே,கலாநிதி, எஸ்.எம்.இஸ்மாயில், வழங்கி வைப்தை காணலாம். இதில் மும் மொழி மூல பட்டதாரிகளும் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இதன் மூலம் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் இதர அலுவலகங்களுக்கு இரண்டாம் திகதி முதல் தங்களது கடமையை பொறுப்போற்கும் வகையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

# பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்

## கல்முனை முதல்வர் றகீப்

**சாய்ந்தமருது நிருபர்**

இலங்கையில் 02 வீத மானோருக்கு மாத்திரமே பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கிறது. அப்படியென்றால் ஏனைய 98 வீதமானோரின் எதிர்காலம் தொடர்பில் என்ன செய்யப்போகின்றோம். இது குறித்து நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டியுள்ளது. அவர்களது எதிர்காலத்திற்காக கல்விச் சமூகம் வழிகாட்ட வேண்டும் என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் ஏ.எல்.தின விழா வியாழக்கிழமை (01) சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் கல்லூரி அதிபர் யூ.எல்.எம்.அமீன் தலைமையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு கல்முனை முதல்வர் தனதுரையில் மேலும் கூறியதாவது;

பெண்கள் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில், பல்வேறு சுமைகளை தாங்கிக் கொண்டே தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதனை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற ஒரு சொற்ப தொகையானோர் அரச தொழில் வாய்ப்பு மற்றும் உயர் பதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். பெரும்பாலான பெண்கள் குடும்ப சுமை காரணமாக வீடுகளில் முடங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் பல சவால்களுக்கு மத்தியிலேயே பெண்கள் தொழில்களுக்கு சென்று வருகின்றனர். குறிப்பாக இந்த நாட்டில் நமது முஸ்லிம் பெண்கள் அபாயா, புர்கா போன்ற ஆடைகளை அணிவதில் இன்று பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். முஸ்லிம் பெண்கள் தமது இஸ்லாமிய மார்க்கப்படியான கலாசார ஆடைகளை அணிவதில் இருந்து தடுப்பதற்கு பேரினவாதிகள் திட்டமிட்டு சூட்சுமமாக செயற்படுகின்றனர். இது குறித்து நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இது இவ்வாறிருக்க பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த மாணவர்களின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. மஹ்மூத் மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளில் இருந்து கூடுதலானோர் பல்கலைக்கழகம் செல்கின்றனர் என்பதற்காக நாம் திருப்தியடைந்து விட முடியாது. நாட்டில் ஒட்டு மொத்தமாக இரண்டு வீதமானோரே அந்த வாய்ப்பை பெறுகின்றனர். அப்படியென்றால் ஏனையோர் படிப்பை கைவிட்டு ஒதுங்கிச் செல்வதா என்று கேட்க வேண்டியுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, கல்முனைப் பிராந்திய இளைஞர், யுவதிகளின் நலன்கருதி அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரியை இங்கு அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். எமது கல்முனை மாநகரம், ஜேர்மன் நியுரம்பேர்க் நகரின் சகோதர நகராக இணைக்கப்பட்டுள்ளது. அந்த நகரின் தூதுக்குழுவினர் அண்மையில் கல்முனைக்கு விஜயம் செய்திருந்தனர். இத் தொழில்நுட்ப கல்லூரியை அமைப்பதற்கு உதவுமாறு நான் வேண்டுகோள் விடுத்தபோது, அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அத்திட்டம் நிறைவேறும் என்று எதிர்பார்க்கின்றேன் என முதல்வர் ஏ.எம்.றகீப் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம். ஜாபிர், கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.பி.எம்.நஸ்றியா ஆகியோர் கௌரவ அதிதிகளாக பங்கேற்றத்துடன் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் மாணவிகளின் கலை, கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன் கல்வி மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவிகள் பலர் இதன்போது அதிதிகளினால் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மாநகர முதல்வர் றகீப் அவர்கள், இதன்போது கல்லூரி சமூகத்தினால் நினைவு விருது வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# கடேற் பயிற்சி பெற்று வெளியேறியவர்கள் கௌரவிப்பு

**துறைநீலாவணை நிருபர்**

போரதீவுப்பற்று பிரதேச வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மாணவர் படையணி (கடேற்) பயிற்சி பெற்று வெளியேறிய 25 மாணவர்களை வாழ்த்தி கௌரவிக்கும் விழா, வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலயத்தில் அண்மையில் (29) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ச.கணேசமூர்த்தி





தலைமையிலான இந்நிகழ்வில், போரதீவுப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி த.அருள்ராஜா பிரதம அதிதியாகவும் 38வது பிரிவின் கடேற் பயிற்சி பொறுப்பதிகாரி லெப்டினன்ட் ச. காண்டீபன், பட்டிருப்பு கல்வி வலய விஞ்ஞானப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். நடேசமூர்த்தி, வலய உதவிக் கல்வி பணிப்பாளர் பா.வரதராஜன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையில் கடேற் பிரிவை தொடக்கி வைத்த வித்தியாலய அதிபர் மற்றும் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்கள், அதிதிகளால் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

# தேசியத்திற்கு தெரிவான ஆறு மாணவர்கள் கௌரவிப்பு

**துறைநீலாவணை நிருபர்**

பாடசாலை கல்வி சமூகத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் இரு தங்கப் பதக்கத்தினையும் ஆறு வெண்கலத்தினையும் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகிய சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, தேசிய பாடசாலை முன்றலில்(01) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் மாகாண மட்டத்தில் 18 வயதுக் குட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியிலும் முப்பாய்ச்சலிலும் முதலாம் இடத்தினைப் பெற்று இரு தங்கப் பதக்கங்களை தனதாக்கிக்கொண்ட எம்.ரீ. றோஸன், 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்ற வசீம் லுத்பீ, 18 வயதுக்குட்பட்ட நீளம் பாய்தலில் 03 ஆம் இடத்தினை சுவீகரித்த இம்ஸான் மற்றும் 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான அஞ்சலோட்டப் போட்டியில்(4 ஐ100) 3 ஆம் இடத்தினையும் பெற்ற மாணவர்கள், மாகாண மட்டத்திற்கு தெரிவாகி தேசியத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



பாடசாலை அதிபர் ஏ.சீ.ஏ. மொஹமட் இஸ்மாயில் தலைமையிலான இந்நிகழ்வில், சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். ஜாபீர் பிரதம அதியாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தார்.

நிலை அடிப்படையில் இரு தங்கத்தினையும் ஆறு வெண்கலத்தினையும் பெற்றவர்கள், மாணவர்கள் மத்தியில் அதிதிகளால் பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் பயிற்றுவித்த ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

# ஜனாதிபதி செயலகதேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி நிலக்கடலைஉற்பத்தி அறுவடைவிழா



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையில் ஜனாதிபதி செயலகம் அமுல்படுத்தும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் மட் டக்கள ப்பு மாவட்டத்தில் மறுபயிர் ஊக்குவிப்பு அடிப்படையில் நிலக்கடலைஉற்பத்திசெய்கை மாவட்ட செயலகத்தின் மாவட்ட விவசாயதிணைக்களத்தின் மேற்பார்வையில் 13 பிரதேச செயலகப்பிரிவில் சுமார் 345ஏக்கரில்மேற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான மாணிக்கம் உதயகுமாரின் வேண்டுகோளின்பேரில் நிலக்கடலை உற்பத்திசெய்கைக்கு இங்கு ஜனாதிபதி செயலகம் சுமார் 48 இலட் சம்ரூபாவை ஒதுக்கீடு செய்துமுழுக்க மானிய உதவியில் 700 விவசாயிகளுக்கு சுமார்13 ஆயிரத்தி 600 கிலோ கிராம்விதை நிலக்கடலை அன்பளிப்பாக வழங்கப் பட்டது .

குறித்த நிலக்கடலை அறுவடைவிழா (25) ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவின் மாவடியோடைவேப்பவட்டவான் பகுதியில் நடைபெற்றது. மாவட்ட விவசாய பணிப்பாளர் வை.வீ. இக்பால்தலைமையில் நடைபெற்ற இந்த அறுவடைவிழாவில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் என்.வில்வரத்தினம் மட்டக்களப்பு விவசாய பிரதிப்பணிப்பாளர்.வீ..பேரின்பராசா தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கிழக்கு மாகாணஒருங்கிணைப்பாளர் கே.ஜெ.செகமனசிங்க தேசிய உர செயலக உதவிப்பணிப்பாளர் கே.எல். எம்.சிறாஜுன்.பிரதேச கணக்காளர்.ஜோ. ஆனந்த ராஜ் உட்பட பல அதிகாரிகளும் விவசாயிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 04.08.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# அக்கரைப்பற்று முகத்துவாரம் பகுதி சிரமதானம் மூலம் துப்பரவாக்கப்பட்டது





**ஏ.ஜி.ஏ.கபூர்,அக்கரைப்பற்று**

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தி;ல் உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்தி உல்லாசப் பயணிகளின் வருகையை ஊக்குவிக்கும் நோக்கிலும் சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலும் அக்கரைப்பற்று முகத்துவாரம் உள்ளிட்ட கடற்கைரைப் பிரதேசம் மாபெரும் சிரமதானத்தின் மூலம் காலை (02) வெள்ளிக்கிழமை துப்பரவு செய்யப்பட்டது.

இராணுவத்தின் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள 241வது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேட் கொமாண்டர் கேர்ணல் டபிள்யு.பி.ஜே.கே. விமலரட்ன அவர்களின் வழிகாட்டலின் கீழ் 241வது படைப் பிரிவின் இராணுவ சிவில் இணைப்பாளர் மேஜர் யூ.எல்.சந்திம ஜெயசிங்க அவர்கள், மேஜர் புண்ணியசிரி அம்பாரை மாவட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர முகாமைத்துவ திணைக்கள பிராந்திய பொறியியலாளர் கே.எம். றிபாஸ், அக்கரைப்பற்று பொலிஸ், அக்கரைப்பற்று மற்றும் ஆலையடி வேம்பு பிரதேச செயலகம், ஆலையடி வேம்பு பிரதேச சபை என்பவற்றுடன் இணைந்து இச் சிரமதானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இராணுவத்தின் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள 241வது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேட் கொமாண்டர் கேர்ணல் டபிள்யு.பி.ஜே.கே.விமலரட்ன, இராணுவ சிவில் இணைப்பாளர் மேஜர் யூ.எல்.சந்திம ஜெயசிங்க உட்பட இராணுவத்தின் 241வது படைப்பிரிவு முகாம் இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், கரையோரம் பேணல் மற்றும் கரையோர முகாமைத்துவ திணைக்கள பிராந்திய பொறியியலாளர் கே.எம்.றிபாஸ், தென் கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.சமீம், ஹற்றன் நெஷனல் வங்கி அஷ்ஷ+ரன்ஸ் முகாமையாளர் கே.சசிதரன், அக்கரைப்பற்று மாநகர சபை உத்தியோகத்தர்கள், ஆலையடிவேம்பு பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் கே.லவநாதன், நிருவாக உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர் உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கோளாவில் விளையாடடுக் கழக சமன் ராஜபக்ஷ தலைமையிலான உறுப்பினர்கள், சமுர்த்தி பயனாளிகள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கடற்கரைப் பிரதேசத்தில் காணப்பட்ட வெற்று பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் பைகள், சொப்பின் பேக்,உணவுக் கழிவுகள், பியர் டின்கள், கடதாசிகள், கடற்கரை மணலில் பகுதியாகப் புதைந்த நிலையில் காணப்பட்ட ஏராளமான தென்னோலைகள், குறும்பைகள் என்பன அகற்றப்பட்டு கடற்கரைப் பிரதேசம் துப்பரவு செய்யப்பட்டது.




# உடன் அமுலாகும் வகையில் நீர் வெட்டு



மட்டக்களப்பு பிராந்தியத்தில் தொடர் வரட்சியான காலநிலை நிலவுவதனால் இப்பிராந்தியத்திற்கு பிரதானமாக குடிநீரை வழங்கும் உன்னிச்சை குளத்தினது நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்து வருவதோடு இன்னும் ஒரு மாதத்திற்கு விநியோகிக்க தேவையான நீரே காணப்படுவதனால் மறு அறிவித்தல் வரும் வரை பின் வரும் நீர் விநியோக திட்டங்களில் உடன் (01.08.2019) அமுலாகும் வகையில் நீர் வெட்டு குறிப்பிட்ட மணித்தியாலங்களில் அமுல்படுத்தப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் டீ.ஏ.பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் வவுணதீவு நீர் வழங்கல் திட்டத்தில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 04.00 மணி வரையும் செங்கலடி. வாழைச்சேனை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 05.00 மணி வரையும் ஏறாவூர் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 11.00 மணி தொடக்கம் காலை 05.00 மணி வரையும் ஆரையம்பதி காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 05.00 மணி வரையும் காத்தான்குடி காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 04.00 மணி வரையும்ரூபவ் கல்லடி காலை 09.00 மணி தொடக்கம் பகல் 12.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 06.00 மணி வரையும்ரூபவ் இருதயபுரம் காலை 08.00 மணி தொடக்கம் மாலை 05.00 மற்றும் இரவு 10.00 மணி தொடக்கம் காலை 04.00 மணி வரையும் தினமும் நீர் வெட்டு அமுல்படுத்தப்படும். அதேவேளை களுவஞ்சிகுடி மண்டூர் மற்றும் கல்லாறு போன்ற நீர் விநியோக திட்டங்களில் மேற்படி நீர் வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது எனவும் நீர் வெட்டு அமுலாகும் நீர் வழங்கல் திட்டங்களிலுள்ள பாவனையாளர்கள் நீரினை சேமித்து விரையமின்றி பாவிக்குமாறும் பிராந்திய முகாமையாளர் மேலும் கேட்டுள்ளார்.

# நிலக்கடலை அறுவடை




**என்.ஹரன்**

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பி பி ஜி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு மூன்று ஏக்கர் பரப்பில் சியக்காய் பண்ணப்பட்ட நிலக்கடலை அறுவடை நிகழ்வானது கடந்த 25ம் திகதி இடம் பெற்றது

தம்பிலுவில் விவசாய போதனாசிரியர் சி.சுஜிகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தம்பிலுவில் விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழ் வரும் உதவி விவசாய பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் டி எம் எஸ் பி திசநாயக்க உதவி விவசாய பணிப்பாளர் பாடவிதான உத்தியோகத்தர் உடன் தங்கவேலாயுதம் விவசாயிகள் கோமாரி தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு இருப்பதினை படத்தில் காணலாம்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிகள் நியமனம்



தேசியகொள்கைகள், பொருளாதாரநடவடிக்கை மீள்குடியேற்றம் புனர்வாழ்வு, வடமாகாணஅபிவிருத்திமற்றும் இளைஞர் விவகாரத்தின் அமைச்சின் ஏற்பாட்டில் நாடெங்கும் 16800வேலையற்றபயிலுனர் பட்டதாரிகளுக்கு பயலுநர்நியமனம் வழங்கும்விசேடதிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 277 பட்டதாரிகள் புதிதாக பயலுனர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தவிசேடதிட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டபயிலுனர் பட்டதாரிகளுக்குநியமன மகடிதம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்புமாவட்ட அரசாங்கஅதிபர்மாணிக்கம் உதயகுமார் தலைமையில் டேவாமண்டபத்தில் 01.08.2019 நடைபெற்றது.

இந்தவிசேடநிகழ்வில் விவசாயபிரிபாசன இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி பிரதம அதிதியாக கலந்துசிறப்பித்தார். மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்களானஎ.யோகேஸ்வரன்,பு.ஸ்ரீநேசன், மற்றும் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் கௌரவ அதிதியாக கலந்துகொண்டனர். இது தவிர பிரதமர் ரணில் விக்ரமசிங்கதலைமையில்அலரிமாளிகையில் நடைபெற்றவிசேடநிகழ்வில் இவ் மாவட்டத்தைசேர்ந்த74 பட்டதாரிகளுக்குநியமனம் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் இம் மாவட்டத்தில் 277பேருக்குநியமனம் வழங்கப்பட்டுள்ளது.



இலங்கை வங்கியின் 80 வருட பூர்த்தியினை முன்னிட்டு காரைதீவு இலங்கை வங்கி கிளையிலும் முகாமையாளர் பகீரதி மோகனராஜா தலைமையில் நிகழ்வுகள் வியாழன் இடம்பெற்றது இதில் வாடிக்கையாளர் பலரும் கலந்துகொண்டு நிகழ்வினைச் சிறப்பிப்பதனைப் படங்களில் காணலாம்.

படம்: காரடித்தோட்ட நிருபர்

# வெற்றியை கொண்டாடும் வாகனப் பேரணி



**மூதூர் நிருபர்**

அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரியானது மாகாண ரீதியாக நான்காம் இடத்தினையும் 6 தங்கப்பதக்கங்கள் உள்ளடங்கலாக 14 பதக்கங்களை வெற்றி பெற்றதோடு மாகாணமட்ட உதைப்பந்தாட்ட போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்று மூதூர் மண்ணில் வரலாற்று சாதனையினை நிலை நாட்டியுள்ளது.

இதனை முன்னிட்டு பாடசாலை பழைய மாணவர்கள் சங்கம், பாடசாலை அபிவிருத்தி குழு மற்றும் ஆசிரியர்கள் இணைந்து வாகனப்பேரணி (01/08/2019) வியாழன் ஒழுங்கு செய்து நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனம் வழங்கும் வைபவம்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

திருகோணமலை மாவட்ட பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

தேசிய கொள்கைகள் பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி,இளைஞர் விவகார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இப் பட்டதாரி பயிலுனர் வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஷ்பகுமார தலைமையில் (01) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மொத்தமாக திருகோணமலை மாவட்டத்தில் 193 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது இதில் 40 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் பட்டதாரிகளுக்கான பிரதமர் தலைமையில் இடம் பெற்ற தேசிய நியமனம் வழங்கும் நிகழ்வின் போது வழங்கப்பட்டுள்ளதுடன் மிகுதியான 153 பட்டதாரி பயிலுனர்கள் (01) வழங்கப்பட்டன.



இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் அவர்கள் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை இதன் போது வழங்கி வைத்தார்.

மேலும் இக் குறித்த நிகழ்வில் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திப் சமரசிங்க,முன்னால் மாகாண அமைச்சர் ஆரியவதி கலபதி உட்பட பிரசேச செயலாளர்கள், அரச உயரதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டார்கள்.







உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டின் கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான சங்கீத மற்றும் நடனப் போட்டிகள் நாளாவிய ரீதியில் தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நாடாத்தப்பட்டது. கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராம கிருஷ்ணா மிசன் பெண்கள் பாடசாலை மாணவர்கள் நடன, சங்கீதப் போட்டியில் தேசிய மட்டத்தில் தெரிவாகியுள்ளனர். இம் மாணவிகளுக்கு பாடசாலை அதிபர்; திரு.எஸ்.மணிமாறன் உபஅதிபர். கற்பித்த ஆசிரியர் ஆகியோரல் வெற்றிக்கிண்ணம், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

படம்: காரைதீவு நிருபர்

# வைத்திய அத்தியட்சகருக்கு ஒய்வுநிலை கௌரவம்

**சியாத்.எம்.இஸ்மாயில்**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராக பணியாற்றி ஓய்வுபெற்ற ஏ.எம். ஜௌபர் பணியைப்பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட தாதி உத்தியோகத்தருமான ஏ.சீ.நக்கீப் தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இன் நிகழ்வில் வைத்தியசாலை அத்தியட்சகர் ஐ.எம்.ஜவாஹிர், பொது சத்திரசிகிச்சை நிபுணர் பி.கே.ரவீந்திரன், தர முகாமைத்துவ அலகின் பொறுப்பு வைத்தியர் எம்.ஜே.நௌபல், தாதிய பரிபாலகர் பி.ரீ.நௌபர் நிருவாக உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.நிசாம், கணக்காளர் எம்.ஆர்.நஸிமுஹக் உட்பட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள், தாதி உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஓய்வுநிலை வைத்திய அத்தியட்சகருக்கு கலந்து கொண்டவர்களால், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.






## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு முடிவுக்கு வரவில்லை

**சாய்ந்தமருது நிருபர்**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது என்பதில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு எந்தவிதமான இறுதித் தீர்மானத்திற்கும் இன்றுவரை வரவில்லை. பொதுவாக ஜனாதிபதி வேட்பாளர்களை நிறுத்துகின்ற அரசியல் கட்சிகளோடு பேச்சுவார்த்தை யில் ஈடுபடுவது என்ற அடிப்படையில்தான் அண்மையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு னவுடன் எமது சந்திப்பு நிகழ்ந்தது அன்றி அக்கட்சியுடன் முழுமையாக சங்கமித்துக் கொள்வதற்கல்ல என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பிரதித் தலைவர் நஸார் ஹாஜி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் ஊடகங் களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது;

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஒரு தீர்மா னத்தில் இருக்கின்றது. அது வேட்பாளரை முன்னிறுத்திய தீர்மானம் அல்ல. இலங் கையின் சிறுபான்மைச் சமூகத்தில் ஒன் றான முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற இன நெருக்கடிகளுக்கு நிரந்தரமான தீர்வுகளை எட்டக்கூடிய தீர்வுகளை முன்வைக்கக்கூடிய கட்சிக்கும் அதன் வேட்பாளருக்குமே எமது கட்சியின் ஆதரவை வழங்குவது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

வெறும் அரசியல் பதவிகளைக் கருத் திற்கொண்டு அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காக ஐக்கிய சமாதானக் கூட்டமைப் புக் கட்சி தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்ல. முஸ்லிம் மக்களின் தேவைகள் குறித்து அர சியல் செய்வதற்கான அதிகாரமுடைய நமது அரசியல் களமும் நமது அரசியல் பிரதிநிதி களும் இல்லாமலிருக்கின்றனர். இதனால், மக்கள் நலன் சார்ந்த அரசியல் நகர்வுகள் நமது சமூகத்திற்குள் ஏற்படுவது தூரமாகிக் கொண்டே இருக்கின்றது.

இந்நிலையை மாற்றியமைத்து மக்கள் நலன் சார்ந்த அரசியல் போக்குக்கு நமது மக்களை வழிநடாத்திச் செல்லும் பொறுப் புடையவர்களாக நமது கட்சியினர் இருக்க வேண்டும் என்கின்ற தூய நோக்கோடு எமது பயணம் தொடங்கப்பட்டிக்கின்றது. அதற் கிணங்க முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினை களை இணங்காண்பதற்கும் அவற்றினை படிப்படியாக செயலுறுப்படுத்துவதற்கும் எந்தக் கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைக்கின்றதோ அந்தக் கட்சியையும் அதன் வேட்பாளரையும் ஆதரித்துக் கொள் வதற்கு என்றும் நாம் தயாராக இருக்கின் றோம்.

அல்லது நாம் அடையாளம் கண்டிருக் கின்ற பிரச்சினைகளான கரையோர மாவட் டம், கிழக்கில் முஸ்லிம்களை பெரும்பான் மையாகக் கொண்ட மாகாண அமைப்பு முறைமை மற்றும் தேவையான பிரதேச செயலகங்கள் உள்ளூராட்சி அலகுகள், காணி போன்ற விடயங்களை முன்னிறுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட் பாளர்களை முன்னிறுத்தும் கட்சிகளோடு நாம் உரையாடவுள்ளோம். அதன்போது எமது கோரிக்கைகளுக்கு நெருக்கமாக வரக் கூடிய கட்சியையும் அதன் வேட்பாளரையும் ஆதரித்துக் கொள்வதென்றே தீர்மானித்துள் ளோம்.

இந்த வகையில் சில அரசியல் கட்சிகள் எம்மைச் சந்திப்பதற்கான நேர ஒதுக்கீகளை வழங்கியிருக்கிறது. அதன் ஒரு கட்டமா கவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவு டனான அண்மைய சந்திப்பாகும். அது மீண்டும் ஒரு சந்திப்புக்கான நேர ஒதுக்கீட் டில் இருக்கிறது. அந்த சந்திப்பில்தான் எமது தேவைகள் குறித்தான கோரிக்கை முன்வைக் கப்படவுள்ளன. இதேபோன்று இன்னும் பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கான முஸ்தீபுகள் இடம்பெற்று வருவது குறிப்பி டத்தக்கது.

ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு எனும் கட்சியானது இதுவரை எந்தத் தரப் பிற்கும் எமது முழு ஆதரவை தெரிவித்து உடன்பட்டுக் கொள்ளவில்லை என்பதே இன்றைய நிலைப்பாடாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை வங்கியின் 80வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுணதீவு கிளையினால் பழமரக் கன்றுகள் வழங்கிவைப்பு

**அமிர்தகழி எஸ்.சதீஸ்**

இலங்கை வங்கியின் 80வதுஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் மரக்கன் றுகள் வழங்கிவைத்து கேக் வெட்டி கொண்டாடப்பட் டது.

வங்கி முகாமையாளர் தா.பிரியதர்ஷன் தலைமை யில் வியாழக்கிழமை 01ம் திகதி நடைபெற்ற இந் நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் எஸ். சண்முகராஜா, வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி. நிச ாந்த அப்புகாமி, மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ரி. நிர்மலராஜ் மற்றும் பிர தேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட வங்கி உத்தியோகத்தர்கள், வாடிக்கை யாளர்கள் என பலர் கலந்துகொண்ட னர்.





இலங்கை வங்கியின் 80 வது ஆண்டு நிறைவினை சிறப்பிக்குமுக மாக நாவற்காடு பிரதேச வாடிக்கை யாளர்களுக்கு 80 பழமரக் கன்றுகளும், கன்னங்குடா பிரதேச வாடிக்கையாளர் களுக்கு 80 பழமரக் கன்றுகளும் வழங் கிவைக்கப்பட்டது.

## சந்தைப்படுத்தலில் விவசாயிகளின் பிரச்சினைகள்

**தி.ஜெய்சுதன்**

நாட்டில் ஏற்பட்ட காலநிலை மாற் றத்தின் காரணமாக பல்வேறுபட்ட தொழிலாளர்களின் நிலமை கவலைக் கிடமான நிலையில் காணக்கூடியதாக வுள்ளது.

இதன் ஓர் அங்கமாக மட்டக் களப்பு மாவட்டத்தில் சந்தைப்படுத் தல் என்பது ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகவே உள்ளது.பொதுவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் விவசாயிகளே சந்தைப்படுத்தலில் பிரச்சினைக்குட்படுவதோடு பாரியள வான நஸ்டங்களை எதிர்நோக்கின் றனர். சிறுவேளாண்மையின் போது வரட்சி நிலமை காரணமாக தண்ணீர் தட்டுப்பாடு நிலமை காணப்படுவ தால் விவசாயிகளின் நெல் விளைச்சல் குறைந்தளவிலே காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவு ணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட உன்னிச்சை குளத்தை நம்பி பயிர் செய்கை செய்யும் விவசாயிகள் குறைந்தளவான நெல்லினை தங்கள் சிறுபோக வேளாண்மையின் போது பெறுகின்றனர்.

இதனால் தங்களது வேளாண்மை விளைச்சலின் போது நெல்லை மாத் திரம் அறுவடை செய்யாமல் அத னோடு சேர்த்து களை நெல் (பன்றி நெல்)யும் சேர்த்து அறுவடை செய் தமையால் நெல் சந்தைப்படுத்தலில் பாரிய இடரினை சந்தித்து வருகின் றனர். பெரும் போகத்தில் மாத்திரம் தான் பன்றி வெல்லாமை வளரக்கூடிய சாத்தியம் இருந்தது. ஆனால் தற் போது சிறுபோக வேளாண்மையிலும் வளர்ந்து வருகின்றது. இதன் காரண மாக விவசாயிகள் நெல்லை நெல் வியாபாரிகளிடம் விற்பனை செய்யும் போது நெல்லை கொள்வனவு செய்வ தில் தயக்கம் காட்டிவருவதாக விவசா யிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் விவசாயிகள் இவ்வா றான பிரச்சினைகள் காரணமாக பாரி யளவிலான நஸ்டங்களை எதிர்கொள் கின்றனர். அத்துடன் விவசாயிகள் நெல்லை சந்தைப்படுத்துவதில் தரம் பிரிக்க வேண்டிய துப்பாக்கி நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

தங்களது நெல்லை சந்தைப்படுத்து தல் வேண்டும் என்ற நிபந்தனையின் பிரகாரம் கலப்படம் செய்யப்பட்ட நெல்லை தரம் பிரித்து சந்தைப்படுத் துதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வரு கின்றனர். இவ்வாறான கலப்படம் கலந்த நெல்லை காரணம் காட்டி நெற் கொள்வனவாளர்கள் நெல்லை குறைந்த விலைகளின் அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்கின்றனர்;.

எனவே இவ்வாறான சந்தைப்படுத் தல் பிரச்சினைகளிலிருந்து விவசாயி களை மீட்டு எடுப்பதற்காக அரசாங்க மானது விவசாய திணைக்களங்கடாக விழிப்புணர்வை ஏற்படுத்தம் பட்சத் தில் விவசாயிகளின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளை தடுப்பதற்காக அதா வது நியாயமான விலையில் நெல்லை கொள்வனவு செய்வதற்கு வழிவகுக் கும். மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளே முன்னிலை பெற்றுவருவதோடு மீனவர்களும் அதனை சார்ந்து நிற்கின்றனர். தற் போது ளுசடையமெய நவெநசிச ளைநள மூலம் வாகரை பிரதேசத்தில் பிப்பிங்காய் செய்கையும் முன்னிலை பெற்றுவருகின்றது.

எனவே குறித்த உற்பத்திகளை சி றந்த முறையில் நடைமுறைபடுத்தி னால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய சந்தைப்படுத்தலை சிறப்பாக பெற்று மக்களின் வறுமை நிலமைக ளையும் குறைத்து கொள்ளக் கூடியதா கவுள்ளது.

## வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்பாள் ஆலய வேட்டைத் திருவிழா

**ந.குகதர்சன்**





வாழைச்சேனை புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத் தின் வேட்டைத் திருவிழா புதன் கிழமை மாலை இடம்பெற்றது.

கடந்த 25ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்து டன் உற்சவம் ஆரம்பமாகி வேட்டைத் திருவிழா புதன்கிழமை மாலை இடம் பெற்றதுடன், பத்து நாட்கள் திருவிழா இடம் பெற்று தீமிதிப்பு மற்றும் தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

இதன்போது வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்று அம்பாள் வெளி வீதி வலம் வந்தது, வேட்டைத் திருவிழா இடம்பெற் றதுடன், வேட்டைத் திருவிழாவில் பாரா ளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மற்றும் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஆலய உற்சவத்தின் வேட்டைத் திரு விழா மற்றும் பூசைகள் யாவும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலை குரு முதல்வர் ஆன்மீக அருள்ஜோதி சிவஸ்ரீ ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெற்றது.

அத்தோடு இலங்கையில் வேட்டைத் திருவிழா உற்சவத்தில் சிவஸ்ரீ ஸ்ரீ ஐயப்ப தாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் பிரசித்தி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.





**திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ இரத்தினசிங்க பிள்ளையார் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவத்தில் திருகோண மலை கடற்கரையில் தீர்த்தமாடல் நிகழ்வு இடம் பெறுவதையும் அடியார்களையும் படங்களில் காணலாம்.**

**படம்: சேனையூர் நிருபர்**

## இனங்களுடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்குடைய பொது கலந்துரையாடல்

**பாறுக் ஷிஹான்**

நாட்டில் அண்மையில் இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலையையின் பின்னர் இனங்களுடையே நல்லிணக் கத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்பும் நோக்கோடு இந்த கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட மனித உரிமை கள் ஆணைக்குழு மற்றும் இளைஞர் அபிவிருத்தி அகம் இணைந்து ஏற் பாடு செய்த 3 நாள் கலந்துரையாடலில் முதலாம் நாள் செய லமர்வு கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஏ.எல். இஸ்ஸதீன் இளைஞர் அபிவி ருத்தி அகம் திட்ட முகாமையாளர் க.லவகுகராஜா ஆகியோரின் தலைமை யில் இடம்பெற்றது.




இந்நிகழ்வானது கிருஸ்ரா இல்லத் தில் புதன்கிழமை (31) புதன்கிழமை காலை 10 மணிக்கு சர்வ மத பிராத்த னையுடன் ஆரம்பமானது.

மூன்று கட்டமாக இடம்பெறவுள்ள இச்செயலமர்வில் முதல் கட்டமாக அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ, சிவில் அமைப்புகளின் தலைவர்கள் மதத் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதில் இன ரீதியான அல்லது சமய ரீதியான பிணக்குகள் இந்த சமூகத்தில் அண்மை காலமாக வெளிவந்த வண் ணம் உள்ளது என்பதை எவ்வாறு ஆராய்ந்து தீர்க்க வேண்டும் என்பது தொடர்பாகவும் இந்த கலந்துரையாட லின் போது கருத்துக்கள் பெறப்பட் டன.

மேலும் தற்போது முஸ்லிம் சமூகத்தை ஏனைய சமூகங்கள் பார்க் கும் பார்வை தான் கடந்த 10 வரு டங்களுக்கு முன் தமிழ் சமூகத்தை ஏனைய முஸ்லிம் சிங்கள சமூகங்கள் பார்த்தனர். இது பகைமை உணர்வு அல்ல அச்ச உணர்வு மாத்திரமே என வளவாளர்களால் கலந்துரையாடலில் விளக்கமளிக்கப்பட்டது. அவசரகால சட்டத்தில் தனிமனித எவ்வாறு பாதிக் கப்பட்டுள்ளது குறித்தும் ஆராயப்பட் டன.

இந்த நிகழ்வில் இளைஞர் அபிவி ருத்தி .அகம் நிறுவன திட்ட முகா மையாளர் கண்டுமணி லவகுசராசா, அமைப்பின் திட்ட இணைப்பாளர் அ.மதன் சிவில் அமைப்பாளர்கள்,மத் தலைவர்கள் என பலர் கலந்துகொண் டனர்.

## முஸ்லிம் பிரதேசத்துக்கான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளராக பி.சர்மில் ஜஹான் நியமனம்

**மருதமுனை நிருபர்**

**றாசிக் நபாயிஸ்**

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி யின் புதிய அமைப்பாளர்கள் (27) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஸ்ரீ சுதந்திர கட்சியின் தலைவர் ஜனாதி பதி மைத்ரிபால சிறிசேன விடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

ஸ்ரீ சுதந்திர கட்சியின் கல்முனை மத்திய குழுவின் உப தலைவராகவும், கிராமிய அபிவிருத்தி பிரதிநிதியாகவும் செயற் பட்டு வந்த மருதமுனையைச் சேர்ந்த பி.சர்மில் ஜஹான் அவர்கள் அம் பாறை மாவட்டம் முஸ்லிம் பிரதேச ங்களுக்கான அமைப்பாளருக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண் டார்.



இந்நிகழ் வில் அம்பாறை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்தி ரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிரியானி விஜே விக்ரம, கட்சி யின் செயலாளர் ஜயசறி ஜயசே கர, முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர்,எம். எல். ஏ.எம் ஹிஸ்புல்லா மற்றும் கிழக்கு மாகாண அமைப்பாளர்களும் என பலரும் கலந்து கொண்டனர்.

## பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்களுக்கான வேண்டுகோள்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

கிழக்கு மாகாண தொண்டராசிரியர் நியமனத்தின் போது பாதிக்கப்பட்ட மிகுதி தொண்டராசிரியர்கள் 2018 ம் ஆண்டு நேர் முகப் பரீட்சைக்கு தோற்றியிருந்தும் நியம னம் கிடைக்காதவர்கள் தன்னை தொடர்பு கொள்ளுமாறும் இது தொடர்பில் இறுதிப் பட்டியல்கள் அடங்கிய ஆவணங்கள் தயா ரிக்கும் பணி இடம் பெறுவதாகவும் கிழக்கு மாகாண தொண்டராசிரியர் சங்கத்தின் தலை வர் தி.ஹரிஸ்ரன் தெரிவித்துள்ளார்.

2008 ம் ஆண்டளவில் நேர்முகப் பரீட்சை க்கு தோற்றியிருப்பின் அது தொடர்பானதும் ஏனைய மூலப் பிரதிகளையும் பரிசீலனை செய்து கொள்ளுமாறும் எதிர் வரும் 05/08 /2019 க்கு முன்பு தலைவரை தொடர்பு கொள்ளுமாறும் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்தோர்களே இவ்வாறு நடவடிக்கை களில் ஈடுபடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்,2018 நேர் முகப் பரீட்சை க்கு தோற்றியிருத்தல், 2007 க்கு முன் சுற்று நிருபத்துக்கு அமைவாக மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் உள்ளிட்ட விடயங்களை கவனத்திற் கொண்டு குறித்த தகவல்களை கவனத்திற் கொள்ளுமாறும் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அனைத்து ஆவணங்களும் மீள் பரிசீ லனை செய்யப்பட்டு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு இறுதிப் பட்டி யல் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

தொடர்புகளுக்கு- தி.ஹரிஸ்ரன் 0779364538

# திருகோணமலை துறை முக அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

ஜப்பான் நாட்டின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள திருகோணமலை துறை முக அபிவிருத்தி சம்மந்தமான கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் மற்றும் துறை முக அதிகார சபையின் தலைவர் காவன் ரத்நாயக்க ஆகியோருக்கிடையே கொழும்பு துறை முக அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இக் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

ஜப்பான் நாட்டின் நிதி உதவியின் மூலம் திருகோணமலை துறை முகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதை அடுத்து பிரதியமைச்சர் இது தொடர்பில் துறை முக அதிகார சபையின் தலைவருக்கு இது விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசித்தார்.

திருகோணமலை துறை முகத்தின் அபிவிருத்திக்கான மாதிரி வரைபடங்கள் ஊடாக தலைவர் பிரதியமைச்சருக்கு இதன் போது விளக்கமளித்தார்.

இக் குறித்த கலந்துரையாடலில் பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர்களும் உடனிருந்தார்கள்.




# முரண்பாடுகளை அறிக்கையிடுதலில் ஊடகவியலாளர்களின் பங்கு செயலமர்வு

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

இலங்கை பத்திரிகை சபையினால் முரண்பாடுகள் அறிக்கையிடுதல் தொடர்பில் ஊடகவியலாளர்களின் பங்கு எனும் தலைப்பிலான மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு இடம் பெறவுள்ளது. திருகோணமலை மாவட்ட செயலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ள செயலமர்வானது 10/08/2019 அன்று திருகோணமலை ஜேஹப் பார்க் ஹோட்டலில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை இடம் பெறவுள்ளதாக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.அருந்தவராஜா அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதம் கிடைக்கப் பெற்ற பிரதேச ஊடகவியலாளர்கள் இதில் கலந்து கொள்ளுமாறும் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சம்பூர் மகா வித்தியாலய மாணவர்களுக்கான பிரத்தியேக பாடநூல்கள் வழங்கி வைப்பு

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை, மூதூர் கிழக்கு சம்பூர் மகா வித்தியாலய க.பொ.த.சாதாரண தரம் மற்றும் க.பொ.த.உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கடந்த கால வினாத்தாள் கோவை புத்தகங்கள் மற்றும் பிரத்தியேக பாடநெறி புத்தகங்கள் சமூக அபிவிருத்தி கட்சியினுடைய செயலாளர் ஓ.பிரகாஸ் மற்றும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குணா மற்றும் கட்சியினுடைய உறுப்பினர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.



சமூக அபிவிருத்தி கட்சியினுடைய செயலாளர் ஓ.பிரகாஸ் கருத்து தெரிவிக்கையில் கடந்த காலங்களில் நாட்டின் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் உடல் ரீதியாகவும் சரி உள ரீதியாகவும் சரி பாரிய வீழ்ச்சி கண்டு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இந் சம்பூர் மக்கள் இன்னமும் மீண்டு வருகிறது என்பது அவர்களுக்கு கடினமாகவே அமைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் அங்கு அமைந்துள்ள தமிழ் பாடசாலையான சம்பூர் மகா வித்தியாலய மாணவர்கள் கஷ்டப்பட்டு பின் தங்கிய நிலையிலும் கூட தமது கல்வி நடவடிக்கையை மேற்கொண்டு கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் சிறந்த சித்திகளை பெற்று சிறந்த மாணவர்களை பல்கலைகழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர் இந்த நிலையில் தற்பொழுது க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்கள் பிரத்தியேக பயிற்சிகளை வழங்குவதற்கு சமூக அபிவிருத்தி கட்சியினரிடம் கோரிக்கை விடுத்திருந்த வேளையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் முகமாக கடந்தகால வினாத்தாள் கோவைகள் பாடநெறி பயிற்சி புத்தகங்கள் வழங்கி வைத்ததாக சமூக அபிவிருத்தி கட்சியின் பொது செயலாளர் ஓ. பிரகாஸ் தெரிவித்தார். மேலும் அப்பாடசாலையின் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து தருவதாகவும் மற்றும் ஆங்கில கற்கை நெறி தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அதற்கான ஒழுங்குகளை மிக விரைவில் எடுப்பதாக கட்சியின் செயலாளர் மாணவர்களிடையே கருத்து தெரிவிக்கும் போது கூறியிருந்தார் இவ் நிகழ்வு இடம் பெற்றது.

# கட்டிட நிர்மாணத்திற்கான ஆகக்குறைந்த நிலத்தை வரையறுக்கும் தீர்மானம் கல்முனை மாநகர சபையில் நிறைவேற்றம்

**சாய்ந்தமருது நிருபர்**

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வீடு ஒன்றை நிர்மாணத்திற்கான ஆகக்குறைந்த நிலத்தின் அளவு 03 பேர்ச்சாகவும் வர்த்தக நிலையங்களுக்கு 0.5 (அரை) பேர்ச்சாகவும் அமைந்திருப்பது போதுமானது என்று கல்முனை மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு செவ்வாய்க்கிழமை (30) பிற்பகல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோதே நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் பரிந்துரைப்பதற்கான இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

தற்போது வீடு அல்லது வர்த்தக நிலைய கட்டிடம் ஒன்றை நிர்மாணத்திற்கான ஆகக்குறைந்த நிலத்தின் அளவு 06 பேர்ச்சாக இருக்க வேண்டும் எனும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறை அமுலில் இருந்து வருகின்றது. எனினும் இவ்விதிமுறை காரணமாக நிலத்தட்டுப்பாடு நிலவுகின்ற கல்முனையில் பொது மக்களும் வர்த்தகர்களும் தமது வீடுகள், கடைகள் மற்றும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு மாநகர சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் கிழக்கு மாகாண காணித் திணைக்களத்தின் வேண்டுகோளின் பிரகாரம் கல்முனை மாநகர சபையின் மாதாந்த சபை அமர்வின்போது, கட்டிட நிர்மாணத்திற்கான நிலத்தின் அளவைக் குறைக்கும் பிரேரணை முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்டு, மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



ஏனைய தீர்மானங்கள்:

அதேவேளை பட்டதாரி நியமனங்களின்போது வெளிவாரி பட்டதாரிகள் அனைவரும் உள்வாங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை கோரி மாநகர சபை உறுப்பினர் நஸ்ரின் முர்ஷித்தினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையும் இந்த சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் சாய்ந்தமருது பிரதான வீதியின் ஒரு பகுதியில் செயலிழந்துள்ள அலங்கார மின்விளக்குகளுக்கான மின்னிணைப்புத் தொகுதியை மீளமைப்பு செய்வது எனவும் இந்த அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.றபீக் இவ்விடயத்தை பிரஸ்தாபித்து உரையாற்றியதையடுத்து, முதல்வரினால் மின்னிணைப்புத் தொகுதியை மீளமைப்பதற்கான உத்தேசத் திட்டம் முன்மொழியப்பட்டது.

திண்மக்கழிவகற்றல் சேவையை மேம்படுத்தும் திட்டத்திற்கமைவாக மேலும் ஒரு ட்ரம் ட்ரக் வாகனம் விரைவில் கொள்வனவு செய்யப்படும் எனவும் கல்முனை நகரில் தனியார் வாகனங்களினால் சேதமாக்கப்பட்ட 05 மின் கம்பங்கள் விரைவில் மாற்றப்படும் எனவும் தெரு விளக்குகள் பராமரிப்பில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்படும் எனவும் முதல்வர் ஏ.எம். றகீப் சபையில் அறிவித்தார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

**சியாத்.எம்.இஸ்மாயில்**

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் தேசிய உளவளத்துணை மையமும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உளவளத்துணை அலகும் இணைந்து அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இயங்கி வரும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வு முன்பிள்ளைப் பருவ உளவியல்சார் பிரச்சினைகளை விளக்கிக் கொள்ளுதல் மற்றும் நிர்வகித்தல் எனும் தலைப்பில் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.அப்துல் கனி நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.இஸ்மாயில், மற்றும் உளவள உத்தியோகத்தர் மனூஸ் அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டு ஆசிரியைகளுக்கு விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

# அட்டாளைச்சேனையில் முதியோருக்கான இலவச மருத்துவ முகாம்

**சியாத்.எம்.இஸ்மாயில்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோருக்கான இலவச மருத்துவ முகாம் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.கைஸ் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் ஜே. லியாகத்அலி தலைமையில் அட்டாளைச்சேனை 16ம் பிரிவிலுள்ள பல்தேவைக் கட்டிடத்தில் நடைபெற்றது. இவ்வைத்திய முகாமில் அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலை, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி (தொற்றா நோய்) வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்திய அதிகாரிகள்,கலந்து கொண்டனர்.



நிகழ்வில் நிந்தவூர் ஆயுர்வேத (தொற்றா நோய்) வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம். நக்பர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஐ. இஸ்மாயீல் ஆகியோரினால் முதியோருக்கான தொற்றா நோய், முதியோர் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் எஸ்.கியாஸ்தீன் உள்ளிட்ட வைத்தியர்களினால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பிரதேச முதியோர்கள் பலரும் கலந்து கொண்டு நன்மையடைந்தனர்.

# வாகனேரி மக்களுக்கு பவுசர் மூலம் தண்ணீர் விநியோகம்



**ந.குகதர்சன்**

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பல வறுமையில் வாடும் கிராமங்கள் குடி நீருக்கு கஷ்டப்படும் நிலை தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது.

அந்தவகையில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி மக்கள் குடி நீருக்கு பல்வேறு இன்னல்களை தினமும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் வாகனேரி வட்டாரத்திற்கான ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.யோகேஷ்வரனின் அயராத முயற்சியின் காரணமாக வாகனேரி மக்கள் குடி நீர் பிர்சனையை தீர்க்கும் வகையில் வவுசர் மூலம் குடிநீரை வழங்கினார்.

ஓட்டமாவடி பிரதேச சபையினால் மக்களுக்காக வழங்கப்படுகின்ற குடிநீர் பற்றாத வேளையில் தனது சொந்த முயற்சியில் வாகனேரி மக்களின் குடிநீர் பிரச்சனையை ஓரளவேனும் தீர்க்கும் வகையில் குடிநீரினை வழங்கியதாக ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.யோகேஷ்வரன் தெரிவித்தார்.

வாகனேரி மக்கள் வாகனேரி குளத்தின் அருகில் பூவல் மூலம் குடி நீருக்கான நீரை பெற்று வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு சித்தர் ஆலயத்தின் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி 68வது குரு பூசை



**காரைதீவு நிருபர்**

ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவமி அவர்கள் ஈழமணித் திருநாட்டின் இல்லமெல்லாம் நடமாடித்திரிந்து தன்னை ஒரு பித்தனாகவும் கேலிக்குரியவனகவும் வெளிக்காட்டி உள்ளன்புடன் நாடிவந்த மெய்யடியார்களின் மனோநிலைக் கேற்ப அருளுரைகளையும் சித்துக்களையும் புரிந்தவர் இவர் இலங்கைக்கு வருகை தந்து இலங்கையிலேயே இறுதியாக அம்பாறை மாவட்ட காரைதீவிலே 1951 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 21ஆம் நாள் சுவாதி நட்சத்திர தினத்தன்று சமாதி எய்தினார். அவர் சமாதியடைந்த இடத்தில் ஜீவசமாதி ஆலயம் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இடம் காரைதீவு என குறிப்பிடத்தக்கது

ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி அவர்களின் 68வது குரு பூசை காரைதீவில் புனித பதியின் மூலகுரு மூர்த்தியாய் ஜீவசமாதி நிலையில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்ற ஜீவ சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி ஆலயத்தில் 07.08.2019திகதி புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளதை முன்னிட்டு 04.08.2019 ஞாயிறுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்ரீ சித்தானைக் குட்டி சுவாமியின் பட்டய அறிவிப்பு விழாவும் அதனைத்தொடர்ந்து. மேலும் 05.08.2019 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு முத்துச் சப்பிரம் காரைதீவு தேரோடும் வீதி வழியாக ஊர்வலமும் 06.08.2019 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அபிஷேகம். கோமாதபூசை. யாகபூசை. அன்னதானமும் மாலை 6.00மணிக்கு திருவிளக்குப் பூசையும். மறுநாள் 07.08.2019 புதன்கிழமை அதிகாலை 5.30மணிக்கு காரைதீவு ஸ்ரீ காரையடி அம்பாறைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குடபவனியும் இடம்பெற்று பின்னர் ஆலயத்தின் அபிஷேகம் பஜனையும் முற்பகல்10.00மணிக்கு கல்விச் சாதனையாளர்களை கௌரவிப்பு ஆன்மிகவுரை மதியம்; 12.00மணிக்கு சுவாமியின் குருபூசை நிகழ்வுகளும் அன்னதானமும். மாலை5.30மணிக்கு சித்தர் பெருமானின் திருவூஞ்சல். காலை நிகழ்ச்சிகளும். 08.08.2019 வியாழக் கிழமை மாலை7.00மணிக்கு வைரவருக்கான இடும்பன் பூசையும் வழிபாடுதலும் இடம்பெறவுள்ளது.

# பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தின் மூன்று மாடி கட்டிடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

**முள்ளிப்பொத்தானை நிருபர்**

எனது முயற்சியால் அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் மூலம் முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடி வகுப்பறை கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ ஆர் எம் சாதிக்கீன் தலைமையில் இடம்பெற்றது.



இக்கட்டிட நிர்மாண பணிகளுக்கென முதல் கட்டமாக 14 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்போது எனது நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலையின் சுற்றுமதில் திறந்துவைக்கப்படடதோடு பாடசாலையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சரத் லோரன்ஸ், கிண்ணியா வைத்திய அதிகாரி அஜித், ஐக்கிய தேசிய கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள், வேட்பாளர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தளபாடங்கள் வழங்கல்



**முள்ளிப்பொத்தானை நிருபர்**

திருகோணமலை மாவட்டத்துக்கு உட்பட்ட தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்னசிங்கம் அவர்களின் நிதிஒதுக்கீட்டில்முள்ளிப்பொத்தானை பாடசாலைக்கான கதிரைகள் கிராமஅபிவிருத்திச் சங்கங்களுக்கான கதிரைகள் விளையாட்டுக்கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்கள் (29) தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளர் ஜே ஸ்ரீபதி தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர் வி குமார் அவர்களின் கோரிக்கைக்கு அமைய தம்பலகாமம் பிரதேச தவிசாளர் எஸ் எம் சுபீயான் உறுப்பினர்கள் பிரதேசசெயலாளர் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர் அரசியல் பிரமுவர்கள் அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டு பயணாளிகளுக்கு தள பாடங்கள் விளையாட்டு உபகரணங்களை கையளிப்பதை படத்தில் காணலாம்




## வவுனியாவில் தீக்கிரையான வீட்டினை பார்வையிட்டார் அமைச்சர் மனோகணேசனின் தேசிய இணைப்புச் செயலாளர்

**வவுனியா நிருபர்**



வவுனியா சிதம்பரபுரம் கற்குளம் முதலாம் யுனிட் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் வீடு ஒன்று முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளது.

தாய் மற்றும் தந்தை வீட்டில் இல்லாத வேளை பிள்ளைகள் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த வேளையே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் தெய்வாதீனமாக எந்த உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதுடன் நான்கு பிள்ளைகளை கொண்ட இக்குடும்பத்தின் நிலை கேள்விக் குறியாக உள்ளது பிள்ளைகளின் கற்றல் உபகரணங்கள் உட்பட அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த கௌரவ அமைச்சர் மனோ கணேசன் அவர்களின் தேசிய இணைப்புச் செயலாளர் ஜனகன் விநாயகமூர்த்தி, மற்றும் வட மாகாண இணைப்பாளர் விமலசந்திரன் அவர்கள் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டதுடன் அமைச்சரின் ஆலோசனைப்படி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதாகவும், அவர்களின் வீட்டுத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் காணியற்ற மக்களுக்கு காணி வழங்க நடவடிக்கை

**வவுனியா நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் காணியற்ற மக்களுக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக காணி வழங்கி குடியேற்றுவதற்கான நடடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வர்த்தக கைத்தொழில், நீண்டகால அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இணைத்லைமையில் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா, வெண்கல செட்டிகுளம், வவுனியா வடக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வாழும் காணியற்ற மக்களுக்கு அப் பகுதிகளில் உள்ள கைவிடப்பட்ட மற்றும் எல்லையோர கிராமங்களில் காணப்படும் காணிகளை வழங்கி குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேச செயலகங்கள் ஊடாக காணியற்ற மக்களின் விபரங்களைப் பெற்று குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் இதன்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

## கிளிநொச்சி விவசாயிகளிடமிருந்து உரிய முறையில் நெல் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடு

கிளிநொச்சி விவசாயிகளிடமிருந்து உரிய முறையில் நெல் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிக்கின்றார்.

குறித்த விடயம் தொடர்பில் விவசாயிகளிற்கு தெளிவூட்டப்பட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். கிளிநொச்சியில் தற்போது சிறுபோக நெல் அறுவடை இடம்பெற்ற வரும் நிலையில், விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு விவசாயிகள் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## வடமாகாணத்தின் மிகக் குறைந்த வயது குத்துச்சண்டை சாதனையாளனுக்கு கௌரவிப்பு



**வவுனியா நிருபர்**

வடமாகாணத்தின் மிகக்குறைந்த வயதில் குத்துச்சண்டையில் தங்கப் பதக்கம் வென்ற சாதனையாளனை கௌரவிக்கும் நிகழ்வு (01) வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியில் இரண்டாம் தரம் பயிலும் ஏழு வயதான மாணவன் ஆர்.கே. மைக்கல் நிம்றொத் 2019 யூன் 28 ஆம் திகதி மாத்தறையில் நடைபெற்ற தேசிய ரீதியிலான குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கத்தை சுவீகரித்ததுடன், 15 இலிருந்து 20 கிலோகிராம் உட்பட்ட எடைப்பிரிவில் 2019 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை சம்பியனாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

தேசிய ரீதியில் நடைபெற்ற கிக் பொக்சிங் குத்துச்சண்டையில் கலந்து கொண்டு தங்கப்பதக்கத்தை வென்று வடமாகாணத்திற்கும், கல்வி கற்றும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

குறித்த மாணவனின் சாதனையை பாராட்டி கௌரவிக்கும் முகமாக கல்லூரி அதிபர் பி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜி.ரி.லிங்கநாதன் கலந்துகொண்டிருந்தார்.

வடக்கு மாகாணத்தில் மிகச்சிறிய வயதில் சாதனை படைத்த மாணவனான ஆர்.கே. மைக்கல் நிம்றொத் வடக்கு மாகாணத்தின் வூசூ பொக்சிங் பயிற்றுவிப்பாளரும், ஏழாம் அறிவு தற்காப்பு கலை சங்கத்தின் தலைவருமான எஸ்.நந்தகுமாரின் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அதிதிகள், மாணவர்களின் திறமைகளை சிறுவயதில் இனங்கண்டு பெற்றோர்கள் அவர்களை சரியான பாதையில் வழி நடத்த வேண்டும். ஆர்.கே.மைக்கல் நிம்றொத் குத்துச்சண்டையில் சிறு வயதில் சாதனை படைத்தமையானது வடமாகாணத்திற்கு மாத்திரமல்ல இலங்கைக்கே பெருமையான விடயம் இவ்டறான சாதனை புரிந்த மாணவர்களை ஜனாதிபதி பாராட்டி கௌரவப்படுத்த முன்வரவேண்டும் என தெரிவித்தனர்.

வடமாகாணத்தின் மிகச்சிறிய வயது குத்துச்சண்டை வீரன் மைக்கல் நிம்றொத்தை பலரும் சந்தித்து பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஓமந்தை தனியான பிரதேச செயலகமாக மாற்றப்பட வேண்டும்: வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் கூட்டாக தீர்மானம்

**வவுனியா நிருபர்**



வவுனியாவின் ஓமந்தை பகுதி தனியான பிரதேச செயலாகமாக மாற்றப்பட வேண்டும் என வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் கூட்டாக தீர்மானம் எடுத்துள்ளனர்.

வர்த்தக கைத்தொழில், நீண்டகால அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் குழுக்களின் பிரதி தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே குறித்த தீர்மானம் எட்டப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்து தெரிவித்த போது, புதிய பிரதேச செயலகங்களை உருவாக்கும் திட்டத்தின் ஓமந்தை தனியான பிரதேச செயலகமாக மாற்றப்பட வேண்டும். செட்டிகுளம், நெடுங்கேணி என்பன 20 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது. ஆனால் வவுனியா மாத்திரம் 42 கிராம அலுவலர் பிடவுகளைக் கொண்ட 219 க்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளது. ஆகவே அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன் படி ஓமந்தை ஒரு தனியான பிரதேச செயலகமாக கொண்டு வருவதற்கு இதில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, ஓமந்தை பிரதேச செயலகமாக பிரிக்கும் போது உள்ளடங்கும் கிராமங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவில் உள்ள எந்தவொரு கிராமத்தையும் உள்வாங்காது வவுனியா பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராமங்களை உள்ளடக்கி மட்டும் ஓமந்தை பிரதேச செயலகம் பிரிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். இக் கருத்தை பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அவர்களும் வலியுறுத்தரினார்.

இதன்படி வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 14 கிராம அலுவலர் பிரிவுகளை பிரித்து ஓமந்தை பிரதேச செயலகமாக மாற்றுவது என அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து தீர்மானமாக நிறைவேற்றியதுடன் இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் ஊடாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர குணவர்த்தன அவர்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவது என தீதர்மானிக்கப்பட்டது.

அத்துடன், வவுனியா வடக்கு வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்திற்கு செல்லும் மலைக்கு செல்வதற்கு வடமாகாண சபையால் கொடுக்கப்பட்ட ஏணியை அமைப்பது எனவும் தீர்மானம் எட்டப்பட்டதுடன், வவுனியாவில் காணியற்ற மக்களுக்கு அரச காணிகளை வழங்கி அவர்களை குடியமர்த்துவது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இவற்றுடன், வீட்டுதிட்ட பிரச்சனை, குளப் புனரமைப்பு, வனஇலாகாவின் பிரச்சனை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் இத் திணைக்களங்கள் மாவட்ட அரச அதிபருடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலும், பொது மக்களை பாதிக்காத வகையில் செயற்படுவது குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

## வவுனியாவில் இடம்பெற்ற பொதுஜனபெரமுன கட்சியினரின் மக்கள் சந்திப்பு

**வவுனியா நிருபர்**

தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் பொதுஜன பெரமுன கட்சியினரின் மக்கள் சந்திப்பு வவுனியாவில் இடம்பெற்றது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரட்ண அவர்களின் பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பொதுஜன பெரமுன கட்சியியைச் சேர்ந்த கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுரத்த அவர்கள் இதில் விசேட அதிதியாக கலந்து கொண்டு அடுத்து வரும் தேர்தலை வன்னியில் எவ்வாறு எதிர்கொள்வது, புதிய கூட்டுக் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவது மற்றும் மக்களது பிரச்சனைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டிருந்தது.



இதில் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அதன் கூட்டுக் கட்சிகளில் ஒன்றாகிய ஈரோஸ் கட்சியின் மாவட்ட அமைப்பாளர், தமிழ் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சசிதரன், ஈரோஸ் கட்சி உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபால, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரட்ண, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர் வசந்த, மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## இலங்கை ரோட்டறியை வழிநடத்த ஆளுமைமிக்க தொழில் அதிபர்

**என்.ஹரன்**




2019/2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை மற்றும் மாலைதீவுக்கான புதிய ரோட்டரி மாவட்ட ஆளுநராக முன்னணி வணிக ஆளுமையுடைய செபஸ்ரியன் கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நா பொதுச் சபையில் இடம் பெற்ற ஒரே சேவை அமைப்பான ரோட்டரி, உலகளாவிய ரீதியில் 34,282 கழகங்களையும், 1.2 மில்லியன் அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. இலங்கையில், 73 கழகங்களும் 1900 அங்கத்தவர்களும் உள்ளனர்.

உலகெங்கிலும் போலியோவை ஒழிப்பதற்கான வேலைத்திட்டத்திற்கு ரோட்டரி அளப்பெரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது, ஆப்கானிஸ்தான், நைஜீரியா மற்றும் பாகிஸ்தானில் மட்டுமே இந்த ஆபத்தான வைரஸ் பரவுகிறது.

ரோட்டரி தற்போது நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை, பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு, அமைதி மற்றும் மோதல் தீர்வு, அடிப்படை கல்வி மற்றும் கல்வியறிவு, தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியம், மற்றும் நீர் மற்றும் சுகாதாரம் ஆகிய ஆறு மையப் பகுதிகளுக்கு தன்னை அர்ப்பணித்துள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் கருணாகரன் பான் ஓடியோ குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் மற்றும் சியோன் கூட்டுத்தாபனத்தின் சிங்கப்பூரின் தலைவர் ஆவார்.

கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் கல்வி கற்று, கருணாகரன் ஒரு சிறந்த தொழில் வாழ்க்கையை கொண்டிருந்தார்.

இரசாயனவியலில் பி.எஸ்சி பட்டத்தையும் மற்றும் வணிக மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் எம்.பி.ஏ பட்டத்தையும் பெற்று அவர் ஒரு சிறந்த தொழில் அதிபரானார்,

1982 இல் பான் ஓடியோ பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தைத் தொடங்கினார். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வணிகத்தில் புகழ்பெற்ற பான் ஓடியோ தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சாதனங்கள், தரவு சேமிப்பு, இமேஜிங், பாதுகாப்பு தீர்வுகள் மற்றும் விளக்கக் காட்சி அமைப்புகள். 10 க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற உலகளாவிய தொழில்நுட்ப நல்ல தரமான உள்ளூர் பிரதிநிதி மற்றும் ஒரே விநியோகஸ்தர் ஆவார்.

1996 இல் ரோட்டரியில் சேர்ந்த கருணாகரன், பல ஆண்டுகளாக சிறந்த உறுப்பினராக இருந்து, கழக மற்றும் மாவட்ட அளவில் பல முக்கிய பதவிகளை வகித்து வருகிறார். 2012/2013 இல் கழக தலைவராக நியமிக்கப்பட்ட அவர், மிகச் சிறந்த தலைவர் விருதையும், சிறந்த சமூக சேவை இயக்குனருக்கான விருதையும் பெற்றார்.

இதன் பின் கருணாகரன் தனது அர்ப்பணிப்பு மற்றும் ரோட்டரியில் செய்த சாதனைகளுக்கு ஏராளமான பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். சிறந்த மாவட்ட செயலாளர், சிறந்த தொழில்சார் சேவை இயக்குனர் மற்றும் ஆண்டின் சிறந்த ரோட்டேரியன் ஆகியோருக்கான விருதுகள் இதில் அடங்கும். பின்னர்

உதவி ஆளுநராக பணியாற்றினார், 2016 ஆம் ஆண்டில் சிறந்த உதவி ஆளுநருக்கான விருதைப் பெற்றார். கருணாகரன் தலைமையிலான வெற்றிகரமான சமூக சேவை திட்டங்களில், வடமத்திய மாகாணத்தில் பதவியாவில் சிறுநீரக டயாலிசிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது, அங்கு அதிக சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டுள்ளது . இந்த திட்டத்தின் செலவு சுமார் ரூ .27 மில்லியன் ஆகும்.

அவர் சார்ட் பவுண்டேஷனின் உந்து சக்தியாக இருந்தார், இந்த முயற்சியின் கீழ், கிராமப்புற பிள்ளைகளுக்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கப்பட்டுள்ளன

மற்றும் 500 க்கும் மேற்பட்ட மடிக்கணினிகள் பல தொலைதூர பகுதிகளில் உள்ள கிராமப்புற பாடசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

குருநாகலிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் அமைந்துள்ள கேதவாலாக கனிஷ்ட வித்தியாலயத்தில் 1000 சதுர அடியில் நூல் நிலையம் மற்றும் கணினி ஆய்வகம் அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்தார்.


இலங்கையிலும் இந்தியாவிலும் தனிப்பட்ட முறையில் தேசிய காத்திருப்பு பட்டியலிலுள்ள 50 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைக்கு உதவுவதில் கருணாகரன் முக்கிய பங்கு வகித்துள்ளார். மாவட்ட ஆளுநராக இருக்கின்ற காலத்தில் அதாவது இந்த ஆண்டு அந்த எண்ணிக்கையை இரட்டிப்பாக்க அவர் பணியாற்றி வருகிறார்.

ட்ரீம் கிரிக்கெட் என்ற திட்டத்தின் சிறந்த தூதராக உள்ளார், அங்கு மாற்றுத்திறனாளி பிள்ளைகள் விளையாட்டில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இலங்கை முழுவதும் ஐந்து இடங்களில் ட்ரீம் கிரிக்கெட் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆளுநராக தனது ஆண்டிற்கான திட்டங்களை கோடிட்டுக் காட்டிய கருணாகரன், தீக்காயமடைந்த நோயாளிகளுக்கு உதவுவதற்காக ஒரு தோல் வங்கியையும், முதிரா குழந்தைகளை அதி தீவிர சிகிச்சையில் காப்பாற்ற ஒரு மனித தாய்ப்பால் வங்கியையும் முன்னுரிமை அடிப்படையில் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளது என்றார். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மருத்துவமனைகளில் பிறவி இதய நோய்களால் பிறந்த 3000 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளை வழங்குவதற்கும், உதடு / அண்ணப் பிளவு குறைபாட்டுடன் பிறந்த குழந்தைகளுக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்வதற்கும் அவர் ஒரு திட்டத்தை முன்னெடுப்பார்.

## சந்திரசேகரீச்சரத்தில் சிறப்பாக இடம்பெற்ற ஆடிஅமாவாசை தீர்த்தம்

**வவுனியா நிருபர்**





வவுனியாவின் பழமை வாய்ந்த வரலாற்று சிறப்பு மிக்க வெளவாலை சந்திரசேகரீச்சரம் ஆலயத்தில் இந்துக்களின் விசேட தினங்களில் ஒன்றாகிய ஆடிஅமாவாசை வழிபாடு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் ஈழத்தின் பழமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகிய வெளவாலை சந்திரசேகரீச்சரம் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் வரலாற்று சிறப்பு மிக்கதும், செட்டிகுளம் பிரதேசத்தின் ஆரம்ப ஆலயமாகவும் கருதப்படுகின்றது.

குறித்த தொன்மை வாய்ந்த ஆலயத்தில் இந்துக்கள் தமது தந்தையர்களுக்கு பிதிர் கடன் செலுத்தி வழிபடும் விசேட தினமாகிய ஆடிஅமாவாசை இன்று சிறப்பாக இடம்பெற்றது. வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன் அவர்களின் வழிப்படுத்தலில் ஆலயத்தின் பிரதம குருராஜேஸ்வர குருக்கள் அவர்களின் தலைமையில் விசேட அபிடேகம் மற்றும் பிதிர் கடன் பூஜைகள் இடம்பெற்று சந்திரசேகரீஸ்வரப் பெருமாள் வெளவாலை தீர்த்தக் கேணியில் ஆடி அமாவாசை தீர்த்தம் ஆடினார். இதில் பெருமளவிலான இந்துக்கள் கலந்து கொண்டு தமது இறந்த தந்தையர்களுக்கு பிதிர்கடன் செலுத்தி சந்திரசேகரீஸ்வரப் பெருமானின் அருட்காடாச்சங்களைப் பெற்றுக் கொண்டனர். வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சண்முகானந்தம், மாவட்ட காலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி, செட்டிகுளம் பிரதேச இந்து சமய கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திரகுமார், செட்டிகுளம் கலாசார உத்தியோகத்தர் சச்சுருவேணு மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் இந்த சிறப்பு பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

# ஓமந்தை ஏ9 வீதியில் மோட்டர் சைக்கிள் - துவிக்சக்கர வண்டி மோதி கோரவிபத்து: இருவர் படுகாயம்

**வவுனியா நிருபர்**

வவுனியா, ஓமந்தை ஏ9 வீதியில் மோட்டர் சைக்கிள் மற்றும் துவிச்சர வண்டி என்பன மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து ஏ9 வீதி வழியாக யாழ் நோக்கி பயணித்த மோட்டர் சைக்கிள் ஓமந்தை, கள்ளிக்குளம் சந்திக்கு அண்மையில் வீதியைக் கடக்க முற்பட்ட துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த 14 வயதான நொச்சி மோட்டையைச் சேர்ந்த உருத்திரகுமார் திவாகர் மற்றும் மோட்டர் சைக்கிள் சாரதியான சுப்பிரமணியம் வெங்கடசரணியன் (வயது 35) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்திளயசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து குறித்து ஓமந்தைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

## அரசியல் கைதிக்கு வீடு

சபரிமுத்து லோகநாதன் என்ற அரசியல் கைதியின் குடும்பத்திற்கான வீடு ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கையளித்தார். அரசியல் கைதியான சபரிமுத்து லோகநாதனின் குடும்ப நிலையை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, அவர்களின் குடும்பத்திற்காக புதிய வீடு ஒன்றை நிர்மானித்த அவர்களிடம் கையளித்தார். இந்நிகழ்வில் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## நாங்கள் செய்தது அபிவிருத்தி!

நாங்கள் செய்தது அபிவிருத்தி. இவர்கள் கிராமத்தை அழிவுக்குள் கொண்டு செல்கின்றனர் என கிளிநாச்சியில் நாமல் ராஜாபக்ச தெரிவித்தார். கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வுகளின் பின்னர் ஊடகவியலாளர் வடக்கின் வசந்திதற்கும், கம்பெரலியவிற்கும் என்ன வேறுபாடு என வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியுார் செல்வாநகரில் விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், கிளிநொச்சி நகரில் நிர்மானிக்கப்பட்டு கைவிடப்பட்ட விளையாட்டு மைதானம் ஆகியவற்றை பார்வையிட்டார். கிளிநொச்சிக்கு விஜயம் மெற்கொண்ட அவர் செல்வாநகரில் இயற்கை விவசாயத்தில் சிறப்பாக ஈடுபட்டு தேரிய விருதுகளை பெற்றுக்கொண்ட எஸ்.ராஜகோபால் என்பவரின் விவசாய செய்கையை பார்வையிட்டார். தொடர்ந்து அப்பகுதியில் விவசாயத்தில் ஈடுபடும் மக்களுடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து மகிந்தராஜபக்ச அரசாங்கத்தின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி விளையாட்டு மைதானம் தொடர்பில் நேரடியாக பார்வையிட்டனர். குறித்த விளையாட்டு மைதானம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த விஜயத்தின்போது நாமல்ராஜபக்ச மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்தனர்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் போராட்டம்



**வவுனியா க.மதி**

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கபட்டிருந்தது. சர்வதேசமே எமக்கு நீதி விசாரணை வேண்டும் நிலையான தீர்வு வேண்டும் என்ற பலமான கோரிக்கையின் அடிப்படையில் குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்;

பல வருடங்கள் கடந்தும் எமது கோரிக்கைகளுக்கு தீர்வு வராதநிலையில் நீதிக்கான போராட்டத்தில் தொடர்ந்தும் நாம் ஈடுபட்டுள்ளோம்.

முல்லைத்தீவில் மரணடைந்த திரேசம்மா என்ற எமது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினருடன் இதுவரை 38 பேர் இந்த போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மரணித்துள்ளனர்.38 பேர் இறந்த நிலையில் இன்னும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பலர் உடல் தளர்வுற்ற நிலையில் காணப்படுகின்றனர். இந்த நிலையில் தான் நாம் நீதியை கோரி நிற்கின்றோம். வவுனியாவில் மொத்தமாக 420 பேர் காணாமல் ஆக்கபட்டுள்ளனர் எனவே அவர்கள் காணாமல் ஆக்கபட்ட காலங்களில் பணியாற்றிய தளபதிகளிடம் விசாரணை நடாத்தினால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள முடியும். கடத்தபட்டு காணாமல்ஆக்கபட்டு பல ஆண்டுகள் கடந்தநிலையிலும் இன்றும் நீதிக்காக நாம் ஏங்கிகொண்டிருக்கும் அவல நிலையில் தீர்வை வழங்கவேண்டியவர்கள் அசமந்தமாகவே இருக்கிறார்கள். எனவே இந்தவிடயங்களை ஊடகங்கள் வாயிலாக சர்வதேச சமூகத்திற்கு கூற முனைகின்றோம் என்று தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் படைவீரர் எழுவரையும் தண்டிக்காத அரசு எமக்கு நீதிவழங்குமா,கையிலே ஒப்படைத்தவரை திரும்பிதருவதற்கு எதற்கு ஓம்எம் பி?, கடத்தியவர்களை நீதியின் முன்நிறுத்து, போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

## புத்தகத் திருவிழா

வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய இலங்கை புத்தக விற்பனையாளர்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் புத்தகத் திருவிழா 2019 எதிர்வரும் ஆகஸ்ட் 27ஆம் திகதி முதல் செப்டம்பர் 1ஆம் திகதி வரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மிகப்பிரமாண்டமாக இடம்பெறவுள்ள இந்த புத்தகக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், ஈழத்துப்படைப்புக்கள் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் இந்திய மூத்த எழுத்தாளர்களின் புத்தகங்களும் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## வவுனியாவில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்




**வவுனியா நிருபர்**

சம்பள முரண்பாடு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் (30.07.2019) ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை முன்னெடுத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் யாழ் பல்கலைக்கழத்தின் வவுனியா வளாக கல்விசாரா ஊழியர்களும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பூங்கா வீதியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழத்தின் வவுனியா வளாகத்திற்கு முன்பாக (30.07.2019) காலை 9.30 மணி தொடக்கம் 10.00 மணிவரை சுமார் 30 நிமிடங்கள் தனது கோரிக்கைகள் அடங்கிய பாதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் கவன ஈர்ப்பு போராட்டம்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். குறித்த போராட்டம் கிளிநாச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களது புகைப்படங்களை ஏந்தியவாறு மக்கள் கவன ஈர்ப்பில் ஈடுபட்டதுடன், ஊடகங்களிற்கும் கருத்து தெரிவித்தனர்.



அண்மையில் ஆ.முல்லைதிவ்யனின் ஒன்பதாவது நூலான 'வள்ளிபுனத்து ஆலமரம்' நூல் வெளியிடப்பட்டது.பொலிகண்டி மக்கள் படிப்பக முன்புள்ள முன்றலில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.சரவணபவன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் வெளியிட கிருபாலேணர்ஸ் உரிமையாளர் திரு.கிருபாகரன் பெற்றுக்கொண்டார்.

# புறக்கணிக்கப்பட்ட தீவகம் கிராம சக்தியினால் தத்தெடுப்பு





யாழ்ப்பாணம் வேலணை பிரதேச செயலகத்தில், கிராம சக்தி மீளாய்வு குழு கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

யாழ் கிளிநொச்சி மாவட்ட கிராம சக்தி செயற்திட்ட ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் மீளாய்வு கூட்டம் நடைபெற்றது.

இவ் கூட்டத்தில் கிராம சக்தி கிராம சங்கங்களின் நிர்வாகத்திடம் தமது சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள் ஆராய்ந்திருந்தார்.

சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் தமது சங்கத்தின் நடவடிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரியப்படுத்தியதுடன் தமது சங்கங்களின் தேவைகளாக, பனைசார் கைபணி உற்பத்தி பொருட்கள், மிளகாய் செய்கை மற்றும் பதனிடல், பால் விற்பனை, கால் நடைகளுக்கான புல் வளர்த்தல், கடலட்டை பண்ணை ஆகியவற்றோடு கடற்தொழில், விவசாயம், கைத்தொழில் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விசேடமாக ஜனாதிபதியின் தேசிய செயற்திட்டங்களின் மூலம் நடைமுறைப் படுத்தக் கூடிய சொட்டு நீர்பாசன முறைமை மூலமான வெங்காய செய்கை, மற்றும் உருளைகிழங்கு மானியம் தொடர்பாகவும் தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் , கிராம சக்தி செயற்திட்ட மாவட்ட இணைப்பாளர் வன்னியசிங்கம் கபிலன், நாடாளுமன்ற உறுப்பினரின் ஒருங்கிணைப்பு செயலாளர் குலேந்திரன் சிவராம் ,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## இந்திய மீனவர்களை பார்வையிடுவதற்காக வவுனியா சிறைச்சாலை சென்ற அனந்திசசிதரன்

**வவுனியா க.மதி**

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் ஏழு பேரை சந்தித்து அவர்களின் விடுதலையை துரிதப்படுத்தவதற்காகவும், ஆறுதல் தெரிவிப்பதற்காகவும் வவுனியா சிறைச்சாலைக்கு முன்னாள் வடமாகாண சபை அமைச்சர் அனந்திசசிதரன் சென்றுள்ளார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் ஏழுபேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு மீனவர்களையும் நேரில் சென்று சந்தித்து அவர்களின் விடுதலையை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்காக இன்று வவுனியா சிறைச்சாலைக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த (27.07) அதிகாலை தொழில் நிமித்தம் கடலுக்குச் சென்ற இந்திய மீனவர்களின் படகில் டீசல் இல்லாத காரணத்தினால் தரித்து நின்ற படகை இலங்கை கடற்படையினால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள குறித்த ஏழு மீனவர்களையும் பார்வையிடுவதற்காகவும் மதுரையிலுள்ள பிரபல்யமான சட்டத்தரணி தீரன் திருமுருகனின் வேண்டுதலுக்கு அமைய நேரில் சென்று பார்வையிடுவதற்காக சென்றுள்ளதாகவும் டீசலை வழங்கி இலங்கை கடற்படையினர் தங்களை திரும்பி அனுப்பியிருப்பார்கள் என்று கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் நம்பியிருந்தவர்களை இவ்வாறு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தமது குடுபத்தினருக்கு இத்தகவல்களை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தணைத்துதுவர் பாலச்சந்திரனுடனும் கதைத்துள்ளதாகவும் இவர்களின் விடுதலை தொடர்பான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் நாடு திரும்பவுள்ளதாக நம்புவதாகவும் அவர்களுக்கு ஆறுதல்களையும் தெரிவித்து வந்துள்ளதாக மீனவர்களைப்பார்வையிட்டுள்ள அனந்தி சசிதரன் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# மலையக தந்தி

## மலையக ஆலயங்களுக்கு பொருட்கள் அன்பளிப்பு

**ஹட்டன் கே,சுந்தரலிங்கம்**



மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் விசேட பிராந்திங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வி.ராதாகிருஸ்ணன் அவர்களின் 67 வது பிறந்த தினத்தினையொட்டி மலையகத்தில் உள்ள 40 தோட்ட ஆலங்களுக்கு முதற்கட்டமாக சமையல் உபகரணங்கள்,ஒலி பெருக்கி கருவிகள் சிலைகள் வழங்கும் நிகழ்வும,; மலையக மக்கள் முன்னணியின் புதிய அலுவலகம் திறப்பு விழாவும் அமைச்சர் கலாநிதி வேலுசாமி ராதாகிருஸ்ணன் தலைமையில் (01) ஹட்டன் தொழிடளர் பொழில் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது மலையக மக்கள் முன்னணியின் கட்சி காரியாலயம் ஒன்றும் அமைச்சர் ராதாகிருஸணன் அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டன.

மக்களை மகழ்விக்கும் வகையில் இசை நிகழ்ச்சியொன்றும் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து உள்நாட்டு வெளிநாட்டு முக்கியஸ்த்தர்களின் வாழ்துரைகள் இடம்பெற்றதுடன் மக்கள் கேக் வெட்டி அமைச்சர் அவர்களின் பிறந்த நாளினையும் கொண்டாடினர்.

இதன் போது சுமார் 90 லட்சத்திற்கும் அதிகமான ஆலய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் இந்த நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார்,மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸத்தர்கள் உட்பட வெளிநாட்டு உள்நாட்டு பிரமுகர்கள் மதத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## ஆசிய ஆணழகன் போட்டியில் வெண்லகப் பதக்கத்தை வென்ற மலையக இளைஞனுக்கு இ.தொ.கா கௌரவம்



**க.கிஷாந்தன்)**

ஆசிய ஆணழகன் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்று வெண்லகப் பதக்கத்தை வென்ற மலையகத்தில் லபுக்கலை கொண்டகலை பிரிவில் வசிக்கும் இளைஞரான மாதவன் ராஜ்குமார் என்பவரை ஊக்குவிக்கும் வகையில் அவரை வரவேற்று அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்க பணத்தை இ.தொ.கா தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் 02.08.2019 அன்று கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைத்தார்.

இலங்கை - இந்திய சமுதாய பேரவையும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இணைந்து இந்த அன்பளிப்பினை வழங்கியுள்ளது. அத்துடன் எதிர்வரும் காலத்தில் டுபாய் நாட்டில் நடைபெறவுள்ள ஆணழகன் போட்டியில் பங்குபற்றுவதற்காக செல்லவுள்ள இவருக்கு விமான பயணசீட்டும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதி பொது செயலாளர் ஜீவன் தொண்டமான், கொட்டலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாத், உப தலைவர், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.

## நுண்கடன் நிறுவனங்களிலிருந்து அரச ஊழியர்கள் கடன் பெறுவதை தவிர்த்து கொள்ளுமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

மலையகப்பகுதியில் நுண்கடன் நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவோரின் தொகை அதிகரித்து வருவதாகவும் இதனால் அரச ஊழியர்கள.; குறித்த நிறுவனங்களின் அலுத்தத்திற்கு நாளாந்தம் உட்படுத்தி வருவதாகவும் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் தொழிற்சங்கங்கள் அரச ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

குறித்த நிறுவனங்களில் கடன் பெற்று பலர் தங்களது தங்க நகைகளையும் அடகு வைத்து தவணைக்கட்டணங்கள் செலுத்தி வருவதாகவும், மேலும் சிலர் கடனை அடைப்பதற்கு மேலும் மேலும் கடன் பெற வேண்டிய சூழ் நிலைக்கு அலுத்தங்கள் காரணமாக தள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மலையகப் பகுதிகளில் நுண்கடன் வழங்கம் நிறுவனங்கள் அதிகரித்த உள்ள நிலையில், இந்த நிறுவனங்கள் குறிப்பாக பாடசாலைகளைக்ளுக்கும் அரச நிறுவனங்களுக்கும், சென்றும் கவர்ச்சிகரமான துண்டு பிரசுரங்களை வழங்கி அரச ஊழியர்களை கடன் பெற தூண்டுவதாகவும்.இதற்காக பாடசாலைகளில் மற்றும் அரச நிறுவனங்களில் இயங்கும் நலன்புரி அமைப்புக்களுக்கு அற்ப சொற்ப சலுகைகளை வழங்கி கடன் தூண்டுவதாகவும் அதனை தொடர்ந்து.

கடன் பெற்றவர்களிடம் கடன் பெற முன் தெரிவித்ததை விட வட்டி வீதத்தினை விட வட்டி அறவிடப்படுவதாகவும்,அத்தோடு அறவிடப்படும் தவணைக்கட்டணம் ஒருநாள் அனுப்புவதற்கு தாமதம் அடைந்தாலும் அதற்காக மேலும் வட்டி அறவிடப்படுவதாகவும். தொலைபேசிகள் மூலம் கடமை நேரங்களில் அலுத்தங்கள் கொடுத்து வருவதாகவும் இதனால் பலர் பல்வேறுபட்ட அலுத்தங்களுக்கு நாளாந்தம் உட்பட்டு வருவதாகவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகமான ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அரச ஊழியர்கள் தங்களுடைய அவசர தேவை கருதி இலகுவாகவும் மிக விரைவாகவும் கடன் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் குறித்த நிறுவனங்களிடம் மாட்டிக் கொண்டு முழிப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

எனவே அதிபர்கள்,மற்றும் அரச நிறுவன்தின் தலைவர்கள் இவ்வாறான நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தினுள் நுழைவதனை அனுமதிக்க வேண்டாம் என தொழிற்சங்கங்கள் ஆலோசனை வழங்கியுள்ளன.

அரச ஊழியர்களுக்கு கடன் உதவி தேவைப்படும் பட்சத்தில் தங்களுடைய நிறுவனங்கள் சார்ந்த நலன்புரி அமைப்புக்களில் கடன் பெறுவதற்கு எத்தனையோ வழிகள் காணப்படுகின்றன.எனவே அதனூடாக அல்லது ஏனைய நிறுவனங்களினூடாக அல்லது நம்பிக்கையான அரச வங்கிகள் ஊடாக தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் வீணான அலுத்துங்களிலிருந்து தவிர்த்துக்கொள்ளலாம். என மேலும் தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அத்தோடு அரச ஊழியர்களுக்கு கடன் பெறுவதற்கான இலகுவான வழிகளை அரச வங்கிகளும் இடர் கடன் வழங்கும் நடவடிக்;கைகளை அரச நிறுவனங்களில் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கல்விசார் ஊழியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கையினையும் முன்வைத்துள்ளது.

## அக்கரப்பத்தனை பெல்மோரல் தோட்டமக்கள் மன்றாசி வைத்தியசாலைக்கு செல்ல தற்காலிக பாதை அமைக்க அக்கரப்பத்தனை பிரதேச சபை இனக்கம்

**அக்கரப்பத்தனை நிருபர்**



அக்கரபத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட மன்றாசி பொது வைத்திசாலையில் கடந்த வாரம் ஏற்பட்ட வீதி பிரச்சினை காரணமாக பெல்மோரல் தோட்ட மக்கள் வேலை நிறுத்த போராட்டத்தினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தனர்,

இத்தோட்டத்தின் ஊடாக 150 வருடகாலமாக வைத்திய சாலைக்கு சென்ற பாதையினை நாட்டில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக வைத்தியசாலை நிர்வாகம் தற்காலிகமாக இப்பாதையினை மூடியது இதையடுத்து தொடர்ந்து பாதையினை திறக்க முடியாது.

என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்ததையடுத்து தோட்ட மக்கள் உடனடியாக பாதையினை திறக்குமாறு கோரி இரண்டு முறை போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன்போது அக்கரபத்தனை பிரதேச சபை தலைவர் சுப்பிரமணியம் கதிர்ச்செல்வன் அக்கரபத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் வருகை தந்து மக்களுடனும் வைத்தியசாலை நிர்வாகத்துடனும் கலந்துறையாடலில் ஈடுப்பட்ட போது குறுக்கு வீதி தொடர்பாக ஏழு நாட்களுக்குள் தீர்வு பெற்று தரப்படும் என பிரதேச சபை தலைவர் மக்கள் மத்தியில் வாக்குறுதி வழங்கியதற்கு அமைவாக. உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு இப்பிரச்சனையை கொண்டுச்செல்லபட்டார்.

அதனையடுத்து வைத்தியசாலை அதிகாரிகள்இபொலிஸார் மற்றும் அக்கரபத்தனை பிரதேச சபை தலைவர் ஆகியோர்களால் நடத்திய கலந்துரையாடல் காரணமாக அதே இடத்தில் தற்காலிகமாக மாற்று வீதி ஒன்றை வழங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

இவ்வீதியை அக்கரபத்தனை பிரதேச சபை தலைவரின் உதவியுடன் மக்கள் பயன்படுத்த கூடிய வகையில் புணரமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பாக சபை தலைவர் கதிர்செல்வன் தெரிவிக்கையில் ஏப்ரல் மாத தாக்குதலின் பின்னர் பாதுகாப்பு காரணமாக பல ஆண்டு காலமாக பயன்படுத்திய வீதியை வைத்தியசாலை நிர்வாகம் தற்காலிகமாக மூடியது.

தற்போது சுமூகமான நிலை ஏற்பட்டுள்ளமையினால் அவ்வீதியை பயன்படுத்தும் நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய வீதியை திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யபட்டுஇநுவரெலிய மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்திலும் இது தொடர்பாக கலந்துறையாடப்பட்டது.

இவ்வீதியை திறப்பதற்கு வைத்திய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லபட்ட வேளையில் பொது மக்கள் ஒன்று திரண்டு வீதியை திறக்க முற்பட்டமையினால் வைத்தியசாலை நிர்வாகம் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டு வேலை நிறுத்ததிலும் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அன்றைய தினம் மீண்டும் உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்று தற்போது அதே இடத்தில் மாற்று வீதி ஒன்றை பெற்று கொடுத்துள்ளோம்.

வைத்தியசாலை நிர்வாகம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமையினால் பொலிஸ் விசாரணை முன்னெடுக்கபடுகின்றது.

இவ்விசாரணைகள் முடிவடையும் வரையில் தற்காலிகமாக மக்கள் பயன்படுத்தகூடிய வகையில் அதே இடத்தில் மாற்று வீதி ஒன்றினை பெற்றுக்கொடுத்துள்ளோம் என அக்கரபத்தனை பிரதேச சபை தலைவர் கதிர்ச்செல்வன் தெரிவித்தார்.

## கெட்டபுலா பகுதியில் ஐந்து குடும்பங்களை சேர்ந்த 20 பேர் வெளியேற்றம்

**க.கிஷாந்தன்**

நாவலபிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெட்டபுலா தெரிசாகல உனுகல் ஒயா பகுதியில் நிலம் தாழிறக்கம் காரணமாக ஐந்து குடும்பங்களை சேர்ந்த 20 பேர் வெளியேற்றபட்டுள்ளதாக நாவலபிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிக்கு அருகாமையில் நிலம் தாழிறங்குவதை அவதானித்த பிரதேச மக்கள் நாவலபிட்டி பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்கபட்டமை தொடர்பில் கிராம உத்தியோகத்தரின் ஊடாக கொத்மலை பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து ஐந்து குடும்பங்களை சேர்ந்த 20 பேர் இவ்வாறு வெளியேற்றபட்டுள்ளதாக கொத்மலை பிரதேச செயலாளர் சுரங்கி பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை வெளியேற்றபட்ட மக்கள் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்கள் கொத்மலை ஓயா அமைக்கபட்ட காலபகுதியில் வெளியேற்றபட்டு குறித்த பகுதியில் குடியேற்றபட்டதாக பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவித்தனர்.

## சிறிய சுவிஸ்சர்லாந்தின் நுழைவாயில் குப்பையால் சீரழிவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

உலகின் சிறிய சுவிஸ்சர்லாந்து என அழைக்கப்படுவது இலங்கையின் நுவரெலியா நகரமாகும்.இந்த நகரத்தின் நுழைவாயிலாக காணப்படுவது ஹட்டன் நகரமாகும். ஆனால் கடந்த சில வாரங்களாக ஹட்டன் நகர சபையினரால் சேகரிக்கப்படும் குப்பைகள் ஹட்டன் நகரில் அமைந்துள்ள சன நடமாட்டம் அதிகமாக காணப்படும் ஹட்டன் பஸ் தரிப்பு நிலையத்தின் ஓரத்தில் கொட்டப்படுவதனால் பல்வேறு சுகாதார சீர் கேடுகள் ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





ஹட்டன் நகில் சுமார் நாலொன்றுக்கு மூன்று தொடக்கம் நாலு தொன் குப்பைகள் சேர்கின்றன. இவற்றில் இரண்டரை தொன் மாத்திரமே ரிகாடன் பகுதிக்கு சேதனைப்பசளை தயாரிப்பதற்க்காக அனுப்பி வைக்கப்படுவதாகவும் ஏனைய ஒன்றைரை தொன் குப்பைகள் இவ்வாறு சன நடமாடும் பகுதியில் கொட்டப்பட்டு நகர சபையின் ஊழியர்களால் குறிப்பிட்ட ஒரு பகுதி தீயிடுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குப்பை கொட்டும் பகுதியில் மரக்கறி கடைகள் உணவகங்கள்,இறைச்சிக்கடைகள் ஆகின அமைந்திருப்பதனால் நோய் காவிகள் மூலம் பல்வேறு நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக காப்படுகின்றன.

குறித்த குப்பையிலிருந்து துர்நாற்றம் வீசுதவனால் பஸ் தரிப்பிடத்திற்கு வரும் பொது மக்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வரும் நுகவோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த துர்நாற்றம் காரணமாக பயணிகள் தமது மூக்கினை மூடிக்கொண்டு மிகவும் கஸ்டத்திற்கு மத்தியில் பஸ்ஸி;னுள் அமர்ந்திருப்பதாக பஸ் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மற்றும் சிவனொளி பாதமலை,எல்ல போன்ற சுற்றலா பிரதேசங்களுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பிராயாணிகளும் இப்பிரதேசத்திலிருந்தே பஸ்களுக்கு ஏறுவதனால் எமது நாடு பற்றிய சிந்தனை ஆரம்பித்திலேயே தவறாக எண்ணப்படுவதை எவரும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே மாறியுள்ளன.

ஹட்டன் நகரித்தின் குப்பை பிரச்சினை இன்று நேற்று தோன்றியதல்ல பல வருடகாலமாக காணப்பட்ட போதிலும் நுவரெலியா மாவட்டத்தினை பிரதிநிதித்துவம் படுத்தும் அமைச்சர்கள் மூன்று பேரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேரும் இருந்த போதிலும் இது வரை இந்த குப்பை பிரச்சினைக்கு கூட தீர்வு காண முடியவில்லை என பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மலையகத்தின் பல தோட்டங்கள் காடாக மாறி வரும் நிலையில் பல இடங்கள் பயிர் செய்யப்படாக காணிகள் காணப்படும் நிலையில் மலையக குப்பை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியாதிருப்பது மிகவும் கவலையளிப்பதாக பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து நகரசபை அதிகாரிகளிடம் வினவிய போது பல இடங்கள் குப்பை கொட்டுவதற்காக தெரிவு செய்த போதிலும் அதற்கு பொது மக்கள் எதிர்;ப்பு தெரிவிப்பதன் காரணமாக சரியான இடத்தினை தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும,மிக அண்மையில் வட்டவளை பகுதியில் தனியார் காணி ஒன்றை குத்தகைக்கு பெற்று குப்பை கொட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அதற்கு பௌத்த மத குரு ஒருவரின் எதிர்ப்பின் காரணமாக அந்த முயற்சியும் கைவிடப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

எது எவ்வாறான போதிலும் இது ஒரு உள்ளுராட்சி சபையின் பிரச்சினை மாத்திரமன்று. இது ஒரு சமூக பிரச்சினையாகும். குறித்த குப்பை காரணமாக நோய் வாய்பட்டால் அதனை குணப்படுத்தப்பட வேண்டியதற்கான செலவீனங்களையும் அரசாங்கமே செய்ய வேண்டியிருக்கும். அத்தோடு பாரிய அளவில் சூழல் பாதிப்புக்களும் ஏற்படும் எனவே அரசியல் பேதங்களுக்கு அப்பாற்பட்டு இது எமது நகரம.; இது எமது சமூகம் என எண்ணி, கட்சி பேதங்களை மறந்து அனைவரும் இணைந்து இதற்கு நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என பொது மக்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு

**மஸ்கெலியா நிருபர்**


மஸ்கெலிய பிரதேச தவிசாளர் கோவிந்தன் செம்பகவள்ளி அவர்களின் அனுசரனையுடன் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்தத்தை யொட்டி தரம் 5 மாணவர்களுக்கு முன்னோடி பரீட்சையை கடந்த ஞாயிற்று கிழமை கோட்டம் 3ல் உள்ள புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றுவிக்கும் 950 சிரார்களுக்கு 8 மத்திய நிலையங்களில் பரீட்சை நடாத்தப்பட்டு இதன் மூலம் சகல மாணவர்களுக்கும் இருதிப் பரீட்சையில் எவ்வாறு முகம் கொடுப்பது தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டது.

நடாத்தப்பட்ட பரீட்சை பெருபேருகளின் படி அனைத்து மாணவர்களும் 100க்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றமையும் இதன்மூலம் சகல பாடசாலைகளிளும் கற்றல் நடவடிக்கை முறையாக இயங்குகின்றது என தவிசாளர் கோ. செம்பகவள்ளி நன்றிகளை தெரிவித்தார்.

# வடபுலத்தின் வினைத்திறன் மிக்க கல்விக்கு உதவும் பின்னணிகள்

**கடந்தவாரத் தொடர்ச்சி**

எந்தவொரு விடயமும் வினைத்திறன் மிக்கதாக காணப்படுகின்றபோதுதான் அதன் பலனும் பயனுள்ளதாக இருக்கும். வினைத்திறன் இல்லையெனில் அதில்; எவ்விதமான பயனும் கிடைக்கப் போவதில்லை. ஒரு பாடசாலையில் 100 மாணவர்கள் தரம் ஐந்தில் கல்வி கற்கின்றனர். இரவுபகல் என்று ஆசிரியர்கள் மூவர் போட்டிபோட்டுக் கற்பிக்கின்றனர். அந்தப் பாடசாலையோ அப்பிராந்தியத்திலேயே அனைவராலும் பாராட்டப்படுகின்ற ஒரு பாடசாலை. குறிப்பாக மிகவும் தரமான பாடசாலை என்கிற பேரும் உண்டு. ஆனால் இந்தத் தொகையில் பாதிப்பேராவது குறித்த பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெறவேண்டும் என்று எதிர்பார்த்து மாதாந்தம் பல ஆயிரங்களைச் செலவு செய்து கற்றும் வருகின்றனர். இறுதியில் இரண்டு கைவிரலளவுதான் தேறுவார்கள். மீதிப்பேர் அப்போவென்றாகிவிடும். காரணம் கேட்டால் ஆசிரியர் தொடக்கம் அதிபர் வரையிலும் இவ்வருடத்தின் மாணவர்கள் மோசமானவர்கள். கடந்தவரும் தரம் 4க்கு கற்பிக்க ஆசிரியர் இருக்கவில்லை. காரியாலயத்தினர் எங்களை ஒழுங்காகக் கவனிக்கவில்லை. இடமாற்றம் சென்ற ஆசிரியருக்கு பதிலாக ஆசிரியர் கிடைக்கவில்லை. இவ்வாறு பல்வேறு காரணங்களைக் காண்பித்து தப்பித்துக் கொள்வார்கள். இனியென்ன அடுத்த ஒக்டோபர் முடிவடைவதற்கிடையில் மீண்டும் அடுத்த புலமையாளர்களுக்கான வகுப்புக்கள் தயார். பணமும் நேரமும், அலைச்சலும் தொடங்கும். பெற்றோரும் வரிந்து கட்டிக்கொண்டு பிள்ளையை ஒரு பிடி பிடிப்பார்கள்.



இந்த நிலைமைதான் கிழக்கின் பல பாடசாலைகளில் நடைபெறுகின்ற தரம் 5 வகுப்புக்கான பல்லவியாகும். ஆனால் நாம் வடபுலத்திற்குச் சென்று பார்வையிட்ட பாடசாலைகளில் சற்று வித்தியாசமான அணுகுமுறையுடன் இடம்பெறுவதைப் பார்த்தபோது மிகவும் சந்தோசமாக இருந்தது. காரணம் தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்காவென்று வித்தியாசமான செயற்பாடுகள் எதுவும் பாடசாலை வேலைகளில் இடம் பெற்றதாகக் காணவில்லை. ஒரு பாடசாலையில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு மணித்தியாலய வகுப்பும், பாடசாலை முடிவடைந்தும் இந்த குறித்த மாணவர்களுக்காக மாலை மூன்று மணி வரையுமான ஒரு விசேட கற்றலை நாம் அவதானிக்க நேர்ந்தது. மாலைவேளைகளில் சில இடங்களில் ஒரு குறித்த தொகை மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடாத்தப்படுவதாகவும், அப்பிரதேச மக்களின் வாழ்வாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இலவசமாக, சிறியதொகை பணத்தை அறவீடு செய்தும் தியாகத்துடன் பல இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள் இவ்வாறான வகுப்புக்களை நடாத்துவதாகவும் அந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

**அட்டாளைச்சேனை**
**எஸ்.எல். மன்சூர்**

உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயம். இவ்வாறு கற்ற மாணவர்கள் பலர் கூடிய புள்ளிகளைப் பெற்று சாதித்திருக்கிறார்கள். ஒரு வகுப்பறையில் 14 மாணவர்கள் உள்ளனர். கடந்த வருடம் நான்கு மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர். 70க்கு கீழ் புள்ளிகள் பெறவில்லை. வகுப்பறையில் தரமான முறையில் தங்களுடைய வழமையான கற்றல் கற்பித்தலை சிறந்த முறையில் ஆசிரியர் கைந்நூல், அரசினால் வழங்கப்படுகின்ற நூல் போன்றவற்றுடன் சில துணைநூல்கள் ஆசிரியர் மேசையில் காணப்படுவதையும் அவதானித்தோம். அதாவது மாணவர்களும், ஆசிரியரும் ஒன்றிப்போன நிலையில் கற்கின்றனர். கற்பிக்கப்படுகின்றனர். இந்த தோற்றுவாய் மாணவர்களின் எதிர்கால கல்வி எழுச்சிக்கு வித்திட்டதாக அமையுமல்லவா! ஆதலால்தான் வினைத்திறன்மிக்ககல்வி வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டையும், அதன் முகாமைத்துவத்தையும் முன்னேற்றமடையச்; செய்யும். இந்த இலக்குத்தான் ஒரு ஆசிரியரின்; அடிப்படை இலக்காக இருக்க வேண்டும். இத்தகைய ஆசிரியர் பல எதிர்பார்ப்புக்ளை அதிபரிடமிருந்தும் பெற முயற்சிப்பார். இதை வழங்க அதிபர் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். இக்கூட்டுறவானது இறுதியில் ஒருபயன் தரும் பாடசாலையை உருவாக்குமென எரிக் (நுசடிஉம 1988 : 98) என்கிற அறிஞர்கூறுகிறார்.

இவ்வாறாக நாம் பார்க்கிறபோது ஆசிரியரே ஒரு வகுப்பறையின் முன்னுதாரணமாக அமைகின்றார். ஆசிரியரே மாணவரின் மாடலாகின்றார். இதனால்தான் ஆசிரியர் என்பது பணி அல்ல, ஒரு தொண்டு. மாணவர்களின் அறியாமை எனும் இருளை நீக்கி அவர்களது வாழ்வில் ஒளியேற்றுகின்றனர். மாணவர்கள் கல் என்றால், ஆசிரியர்கள் சிற்பிகளாவர். ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுகிறது என்பதுதான் உண்மை. தன்னிடம் படிக்கும் மாணவர்களை, சமுதாயத்துக்கு ஏற்ற வகையில் மனிதனாக மாற்ற வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. மாணவனுக்கு சமூகத்தில் கிடைக்கும் வெற்றிதான் கற்பித்த ஆசிரியரின் வெற்றியாகக் கருதப்படுகின்றது.

உண்மைதான் நாம் பளைப் பிரதேத்திலுள்ள பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்திற்குச் சென்றபோது அந்தப் பாடசாலை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட சிறிய பாடசாலையாகும். தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புக்கள் மாத்திரம் காணப்படும் இந்தப் பாடசாலையில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்கின்றனர். அந்தப் பாடசாலையின் சுற்றுப்புறம் மிகவும் அழகாக காட்சியளிக்கின்றது. பாடசாலையைச் சுற்றிவர மதில்களை இல்லை. பனை மட்டையும் இடையிடையே முட்கம்பியும் காணப்படுகின்றது. இடைவெளியின்றி மிகவும் நேர்த்தியாக பின்னப்பட்டு வேலி காணப்படுகின்றது. உள்ளே செல்லும்போது மலர் வாசம் மூக்கைத் துளைக்கிறது. நித்தியக் கல்யாணி, சவுக்கு போன்ற பலதரப்பட்ட மரங்களுக்கு அருகில் அந்த மரத்தின் பெயரும், அதன் குடும்பம், விஞ்ஞானப்பெயர், அதனை சிங்களத்தில் சமஸ்கிருதத்தில் என்று ஏகப்பட்ட விளக்கத்துடன் அச் செடிகள் ஒவ்வொன்றும் காணப்படுவதைப் பார்த்தபோது புல்லர்த்தது. மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு பக்கம் இயற்கைத் தீயணைப்பு உபகரணத் தொகுதி என்று அறிவிப்புடன் நான்கு வாளிகளில் மண்ணும், நீரும் காணப்படுகின்றன. பாடசாலையின் முற்றத்தில் அழகிய நீர் தடாகம் அதனைச் சுற்றிவர பசுமையான புல்வெளியொன்றும் பார்ப்போரை பரவசப்படுத்தியிருந்தது. நீர் தடாகத்தில் கொக்கு, மீனவன். மீன் போன்றவற்றையும் காணமுடிந்தது.

முற்றத்தில் மாணர்வர்கள், ஆசிரியர்கள் ஓய்வாக இருந்து படிக்க ஒரு ஓலைக் குடிசை ஒன்றும் காணப்பட்டது. மிகவும் இரம்மியமான ஒரு சூழல் அந்தப் பாடசாலையில் காணப்படுவதைப் பார்த்தபோது மிகவும் அதிசயமாக இருந்தது. 300க்கும் மேற்பட்ட ஒரு பாடசாலைக்குள் நுழைந்தால் முதலில் கேட்பது மாணவர்களின் இரைச்சலும் கூச்சலுமாகும். ஆசிரியர் இல்லை என்றாலும் மாணவர்கள் கற்கின்ற நிலையை ஆசிரியர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நாம் சென்ற அன்றைய தினம் ஒரு வகுப்பறையில் மாணவர் சந்தை ஒன்றும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளையின் மாதிரிக் கடையில் பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டிருந்தார்கள். அத்தனை மாணவர்களும் வியாபாரிகளாக மாறியிருந்தார்கள். ஆசிரியர் வழிப்படுத்திக் கொண்டிருந்தார். இவ்வாறு அனுபவம் ஊடாக செயற்பாடுகள் ஊடாக, மாணவர்கள் கற்கின்ற ஒரு சூழல் பாடசாலையில் காணப்படுகின்றது. இதுதான் இன்றைய தேர்ச்சிமையக் கலைத்திட்டம் எதிர்பார்க்கின்ற கல்வியாகும்.

இதனை விட்டுவிட்டு ஆரம்பகல்விக்கும் ஆரம்பக்கல்வியை எட்டிப்பார்க்காத பலர் எழுதுகின்ற புத்தகங்களை வாங்கி அதனைக் கொண்டு கற்பிக்கின்ற பல ஆசிரியர்கள் எம்மத்தியில் காணப்படுகின்றனர். கேட்டால் அதில் நிறையவே இருக்கிறதுசார். அப்படியானால் ஆசிரியர் கைந்நூல்



எதற்கு? இதுதான் இன்றைய கிழக்கின் நிலை. இது மாறவேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் தியாகத்துடன், சமூக சிந்தனையுடன், நான் என்ன செய்ய வேண்டும். நான் எவ்வாறு கற்பித்தால் மாணவரைத் தேர்ச்சியடையச் செய்யலாம் என்கிற புதுப்புது நுட்பங்களை வழங்கி அதன் மூலம் சிறந்த எதிர்கால சந்ததிகளை இந்நாட்டுக்கு வழங்க முடியும் அல்லவா?

ஒரு காலகட்டத்தில் யாழ்மண் கல்வியின்; விளைநிலமாக இருந்தது. படிப்பு உச்சாணியில் இருந்த காலமது. யுத்தம் எல்லாவற்றையும் இழக்கச் செய்தது. ஆனால் கல்வியை மட்டும் அது அழிக்கமுடியாமல் போய்விட்டது. அந்தக் கல்விதான் இன்று வடபுல மக்கள் உலகமெலாம் பரந்து வாழ துணைபுரிந்திருக்கிறது. உருக்குலைந்த பனையின் தலைகள் கருத்துப்போன் நிலையில் பளைப் பிரதேசம் உயர்ந்த வடலிகளை விட தென்னையும், இளம் வடலிகளின் உயிர்ப்புக்களும் பச்சைப் பசேலென் காண்கிறபோது சற்று ஆறுதல் அடையச் செய்தது. நேர் வகுப்பறை முகாமைத்துவத்தின் தனி;ச்சிறப்புக்களை வகுப்பறையில் காணமுடிகிறது. மாணவர்களுடைய ஒழுக்க விடயங்கள், அவர்கள் வகுப்பறையிலும், வெளியே செல்கின்போதும் கைக்கொள் கின்றார்கள். அமைதியும், சாந்தமும், பக்தி கலந்த மாணவர்களின் நெற்றியில் காணப்படும் விபூதியும் வடபுலத்தின் கல்வியை இன்னும் சில வருடங்களில் இலங்கையின் முன்னிலைக்குக் கொண்டு செல்லும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

**அடுத்தவாரமும் தொடரும்**

# போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் மற்றும் போதைப் பொருளை தம்வசம் வைத்திருப்போருக்கு எதிராக மரண தண்டனை வழங்கப்படவேண்டுமா?

மக்கள் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாகிய அளவில் எழுந்திருக்கும் பிரச்சனைதான் இந்த போதைப்பொருட்கள். ஆரோக்கியம் என்பது இறைவன் நமக்குக் கொடுத்த மிகப்பெரும் அருட்கொடை ஆகும். நம் உடல் ஆரோக்கியத்திற்கு நாமே தீங்கிழைத்துக் கொள்ளக் கூடாது.போதைப் பொருட்களினால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன. 1000 இற்கு 1 என்ற அடிப்படையில் மாணவர்கள் புகைத்தல் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் மூலம் அறியமுடிகின்றது. இலங்கையில் 13-15 வயதுக்கு உட்பட்ட அதிகமான பாடசாலை மாணவர்கள் புகைத்தல் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளரர்கள்.

**சி.திவியா**

இலங்கையில் போதைவஸ்து நுகர்வின் நிலை

2018 ஆம் ஆண்டு இலங்கையில் போதைப் பொருட்கள் சம்பந்தமான குற்றச்செயல்களுக்காக கைது செயப்பட்டவர்களின் எண்ணிக்கை 82,482ஆவதோடு இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25 சதவீத அதிகரிப்பாகும். இவர்களில் 32 சதவீதம் ஹெரோயினை வைத்திருந்ததற்காகவும் 63 சதவீதம் கஞ்சா தொடர்பான குற்றச்செயல்களுக்காகவும் கைது செயப்பட்டனர். மேலும் பெரும்பான்மைக்குற்றச்செயல்கள் மேல் மாகாணத்தில் 60 சதவீதம் பதிவாகியது. அதைத் தொடர்ந்து தென் மாகாணத்தில் 10 சதவீதம், மத்திய மாகாணத்தில் 8 சதவீதம் என்ற வீதங்களில் காணப்பட்டன. மாவட்ட அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் 43 சதவீதம், கம்பஹா மாவட்டத்தில் 14 சதவீதம், கம்பஹா மாவட்டத்தில் 14 சதவீதம், மற்றும் குருநாகல் மாவட்டத்தில் 4 சதவீதம், என்ற வீதங்களில் காணப்பட்டன. 2018ஆம் ஆண்டில் போதை வஸ்த்துக்கள் தொடர்பான குற்றச்செயல்களுக்கு கைதானவர்களின் வீதம் மொத்த சனத் தொகையில் ஒப்பிடுகையில் ஓர் இலட்சம் பேருக்கு 400 என்ற அளவில் காணப்பட்டது.தன் சிந்தனையை போதையில் புதைத்து மனமயக்கத்தையும், குழப்பத்தையும் தன்னைத்தானே மனிதன் ஏற்படுத்திக் கொள்கின்றான். போதைப் பொருட்களில் மது, ஹெரோயின், பெத்தனால் ஊசி, கஞ்சா, புகையிலை, பான் மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் இன்னும் பல வகைகள் அடங்கும்.

மரண தண்டனைச் சட்டம் நாட்டில் உள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி எத்தகைய விமர்சனங்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் சமூக நலனைக் கருத்திற் கொண்டு போதைப் பொருள் குற்றத்திற்கு மரண தண்டனை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பௌத்தர் என்ற ரீதியில் மனத்தாங்கலுக்கு உட்பட நேர்கின்ற போதும் பிள்ளைகளினதும் பெற்றோரினதும் கனவு, மற்றும் நாட்டின் நற்பெயரைப் பாதுகாக்கும் வகையில் மரண தண்டனைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அதேவேளை உலக வளர்ச்சிக்குப் பொருத்தமான



வகையில் கல்வித்துறையில் மாற்றம் ஏற்படுத்தப்போவதாகவும் அறிவை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையை அதிகரிப்பதன் மூலம் தோதைவஸ்த்துபாவனையைகுறைக்கலாம் எனவும்

நமது இலங்கையர்கள் எந்தவொரு நாட்டு மக்களுக்கும் இரண்டாம் பட்சமான வர்களல்ல. உலகிலுள்ள கல்விமான் மற்றும் நிபுணர்களை எடுத்துக்கொண்டாலும் இலங்கையர் எவ்வகையிலும் அவர்களுக்கு இரண்டாம் பட்சமானவர்களல்ல.

எமது மக்களிடம் பிற மனிதரை அன்பு செய்யும் பண்பு உள்ளது. மனிதாபிமானம், கருணை, தியாக மனப்பான்மை போன்றவை எம்மவரிடமே அதிகமாக உள்ளது. வெளிநாடுகளில் இவற்றைக் காணக்கிடைப்பதில்லை.

பல்கலைக்கழக பட்டத்துடன் தொழில் வாய்ப்பின்றி போராட்டங்கள், ஆர்ப் பாட்டங்களில் ஈடுபடுவதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அது ஆர்ப்பாட்டக்காரர்களின் தவறல்ல எமது கல்வி முறையிலுள்ள குறைபாடே.

தற்போதுள்ள எமது சமூக பொருளாதார சூழலில் உலகம் பயணிக்கும் வேகத்துடன் நாமும் முன் செல்ல வேண்டிய தேவை உள்ளது. இன்று நவீன பொருளாதார முறையில் உலகம் முன்னேறி வருகிறது.

எமது நாட்டைப் பொருத்தவரை வருடாந்தம் மூன்றரை இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பாடசாலைகளில் இணைகின்றனர். எனினும் இவர்களில் இறுதியாக 25,000 பேரே பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.மிகுதமாகின்றவர்கள் வழிதவறிப்பயனிக்கின்றார்கள்.

ஒருசிலர் கல்வித்துறையில் கவனம் செலுத்துவது போல மறுபக்கம் சமூகத்தில் நிலவும் வேறுபாடான செயற்பாடுகளில் சிந்திக்க தொடங்கிவிடுகின்றார்கள்

போதைப்பொருள் ஒழிப்பு செயற் பாடுகளுக்காக பல விசேட திட்டங்களை வகுத்து செயற்பாட்டு நடவடிக்கை எடுத்துவரப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை இத்திட்டத்தை 1989 ஆம் ஆண்டு முதல் போதைப்பொருள் துஷ்பிரயோகம், சட்டவிரோத கடத்தலுக்கு எதிராக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

போதைப் பொருட்களில் மதுபானம், புகையிலை, அபின், ஹெரோயின், கஞ்சா, பான் மசாலா, ஐஸ் போதைப்பொருள், போதை தரும் இன்ஹேலர்கள் என பல வகைகள் அடங்கும். உலக போதைப்பொருள் பாவனையாளர்கள் தொடர்பான அறிக்கையின் புள்ளிவிபரப்படி உலகில் 2 கோடி பேர் ஹெரோயின் போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் இருப்பதாக அறியவருகின்றது. உலக அளவில் மது அருந்துவோர் சுமார் 140 மில்லியன் பேர் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு (ஙிஜஙி) மதிப்பிட்டுள்ளது. மது பாவனையை பொறுத்தவரையில் உலக தரப்படுத்தலில் இலங்கை 4 ஆவது இடத்தில் இருக்கின்றது.

போதைப்பொருள் வியாபாரம் உலகில் எங்கு நடந்தாலும் அது அந்த நாட்டை அரசியல், பொருளாதார, கலாசார வீழ்ச்சியை நோக்கியே நகர்த்தும். அரசியல்வாதிகளும், பொலிசாரும், நீதித் துறையினரும் போதைப்பொருள் மாபியாக்களின் வலையில் வீழ்ந்து விட்டால் நிலைமை இன்னும் பாரதூரமானது.

இலங்கையில் அதிகூடிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்ட ஆண்டாக கடந்த 2018 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது. கடந்த வருடம் முழுவதும் ஏறத்தாழ 738 கிலோ 560 கிராம் நிறையுள்ள போதைப்பொருட்கள் இலங்கையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டே அதிகூடிய போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட ஆண்டாக பேசப்பட்டுவந்தது. அவ்வாண்டில் 350 கிலோ 554 கிராம் அளவே அதிகூடிய நிறையாக பதிவாகியிருந்தது. தென்னாசிய பிராந்தியத்தில் வளர்ந்து வரும் நாடான இலங்கைக்கு இது ஒரு பாரிய சவால்.

யுத்த முடிவுக்கு பின்னர் வடக்கு, -கிழக்கு பகுதிகளின் ஊடாக கடந்த ஐந்து வருடங்களில் பாரியளவில் போதைப் பொருட்கள் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக ?கேரள கஞ்சா? உட்பட மன்னார் கடற்பிராந்தியம் ஊடாக அதிகளவான போதைப் பொருட்கள் ஹெரோயின், கொக்கைன், பீடி இலைகள் என சட்டவிரோதமான பல பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றன. மன்னார் தீவகப் பகுதியானது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு காணப்படுவதனால் அயல் நாடுகளில் இருந்து நேரடியாக போதைப் பொருட்களை உள்நாட்டிற்குள் கொண்டுவருவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அதிகாலை 1 மணி தொடக்கம் 3 மணி வரையான நேரத்தை மையப்படுத்தியே போதைப் பொருட்கள் கரைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

குறிப்பாக, இந்தியாவின் கேரளா, தமிழ்நாடு. தனுஷ்கோடி, இராமேஸ்வரம், போன்ற பகுதிகளில் இருந்தும் பாகிஸ்தானில் இருந்துமே இவை வருகின்றன. ஒரு தொகுதி ஆபத்தான போதைப் பொருளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஒரு வார காலப்பகுதிக்கும் மேல் தேவைப்படுகின்றது.

பெரும்பாலும் ஆபத்தான தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் புத்தளம் மாவட்ட கற்பிட்டி கடற்கரைப் பிரதேசத்தை அண்டிய கடற்பரப்பில் இருந்து கொண்டு வரப்படுகின்றன.கடந்த ஆண்டில் போதைப்பொருள் கடத்தலுடன்

**27 ஆம் பக்கம் பார்க்க....**



# 40 கோடியை உதறிய விஜய்

நடிகர் விஜய் தேவரகொண்டா ரூ. 40 கோடி பட வாய்ப்பை ஏற்க மறுத்துள்ளார். விஜய் தேவரகொண்டா, ரஷ்மிகா மந்தனா நடிப்பில் கடந்த மாதம் 26ம் தேதி வெளியான டியர் காம்ரேட் தெலுங்கு படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. படம் தள்ளிப் போய் தள்ளிப் போய் ஒரு வழியாக ரிலீஸானது.

இந்நிலையில் அந்த படத்தின் இந்தி ரீமேக் உரிமையை பிரபல பாலிவுட் இயக்குநரும், தயாரிப்பாளருமான கரண் ஜோஹார் ரூ. 6 கோடி கொடுத்து வாங்கியுள்ளார். முன்னதாக விஜய் மும்பைக்கு சென்று கரண் ஜோஹாரை சந்தித்து பேசினார். அப்பொழுது கரண் டியர் காம்ரேட் படத்தை பார்த்தது மட்டும் அல்லாமல் விஜய்யை பாலிவுட்டில் அறிமுகம் செய்து வைக்க விரும்பி நீங்களே ரீமேக்கில் நடித்துவிடுங்களேன் என்று தெரிவித்துள்ளார். மேலும் ரூ. 40 கோடி சம்பளம் தருவதாகவும் கரண் ஜோஹார் விஜய் தேவரகொண்டாவிடம் தெரிவித்தாராம்.

எத்தனை கோடி கொடுத்தாலும் ரீமேக்கில் நடிக்கும் ஐடியா இல்லை என்று கூறிவிட்டாராம் விஜய். முன்னதாக அர்ஜுன் ரெட்டி இந்தி ரீமேக்கான கபிர் சிங்கில் நடிக்க விஜய்க்கு வாய்ப்பு கிடைத்தது. ஒரே கதாபாத்திரத்தில் மீண்டும் நடிக்க விருப்பம் இல்லை என்று கூறிவிட்டார் அவர். கபிர் சிங் படம் வெளியாகி சூப்பர் டூப்பர் ஹிட்டாகியுள்ளது. ஆனால் அந்த படத்தை விஜய் தேவரகொண்டா பார்க்கவில்லை. ஏன் பார்க்கவில்லை என்று கேட்டதற்கு, தெரிந்த கதை தானே அதை போய் மறுபடியும் என்னத்த பார்க்க என்று கேட்டு அதிர வைத்தார். இந்தி படங்களில் நடிப்பது குறித்து விஜய் தேவரகொண்டா கூறியதாவது, இந்தி படங்களில் நடிப்பது சுவாரஸ்யமானது தான். ஆனால் தெலுங்கு மற்றும் இந்தி என்று இரு தரப்பு ரசிகர்களுக்கும் ஏற்ற வகையில் ஏதாவது செய்ய வேண்டும். ஹைதராபாத்தில் இருந்து மும்பைக்கு வந்து அபார்ட்மென்ட்டில் தங்க எனக்கு இஷ்டமில்லை. என் நண்பர்கள் ஹைதராபாத்தில் தான் உள்ளனர். மும்பையில் வாழ்க்கை ரொம்பவே வேகமாக உள்ளது. எனக்கு அது ஒத்து வராது என்று தெரிவித்துள்ளார்.

# ஹீரோக்களுக்காக

ஹீரோக்கு ஜால்ரா அடிக்கிறது மாதிரி இல்லாம, படத்தோட கதைக்கு என்ன தேவையோ அத மட்டும் செய்யுங்க என்று இயக்குநர் சுந்தர் சி. பேசியிருக்கிறார். ஒரு நடிகர மனசுல வச்சிக்கிட்டு ஸ்க்ரீன்ப்ளே எழுதாதீங்க. கெடச்ச நடிகரோட பாடி லாங்குவேஜுக்கு ஏத்த மாதிரி அந்த படத்தோட கேரக்டர இம்ப்ரூவ் பண்ணுங்க என்றும் கூறியிருக்கிறார். தமிழ் சினிமா உலகத்துல 20 வருஷங்களா தொடர்ந்து சக்சஸ்ஃபுல் டைரக்டரா இருந்துகிட்டு வர்ற சுந்தர்.சி. ஒரு ஃபங்ஷன்ல நஷ்டப்படாம சினிமா எப்படி எடுக்கணும்னு சொல்லியிருக்கார். துணை இயக்குநர்களுக்கான சினிமா பாடத்திற்கான டிப்ஸ் இது.

அசிஸ்டெண்ட்டா இருக்குறப்போ ஓவரா சீன் போடாதீங்க. வேலை செய்றது மாதிரியே பில்டப் காட்டாதீங்க. ஆனா சின்சியரா வேலை செஞ்சா பல பேர் கண்ணெல்லாம் உங்க மேல தான் இருக்கும். அதனால் உங்களுக்கு வாய்ப்பும் தேடி வரும். நம்பிக்கையோட வேலைய பாருங்க. ஒவ்வொரு படம் ஆரம்பிக்கும்போதும், பென்ச் மார்க்கா ஏற்கனவே வந்த ஒரு படத்தை மனசுல வச்சிக்கோங்க. பழைய காதலிக்க நேரமில்லை தான் என்னோட உள்ளத்தை அள்ளித்தா படத்துக்கு பெஞ்ச் மார்க். லொகேசன்ல திடீர் திடீர்னு டிசைட் பண்ண வேண்டியிருக்கும். அதனால சிச்சுவேஷனக்கு ஏத்தமாதிரி முடிவெடுக்க மனசளவுல தயாராகிக்கோங்க. நம்ம எடுக்கப்போற படத்துக்கு பக்காவா ஸ்க்ரீன்ப்ளே ரெடியா இருந்த நிச்சயம் சக்ஸஸ் தான். படத்தோட சீன் எல்லாம் துண்டு துண்டா இருந்தா ஆடியன்ஸ் படத்தோட லயிக்க முடியாது. எனவே சீகுவென்ஸ் **(Sequence)** போல சில சீன்கள் இருக்க வேண்டும். அப்பதான் எல்லாருக்கும் புரியும். காமெடிங்கறது கதைய நகத்துறதுக்காக, கதைக்குள்ளேயே காமெடியாக இருக்கணும். கதையில வர்ற கேரக்டர் ஒன்னு காமெடியனா இருந்தா, ஆடியன்ஸும் படத்தோட லயிச்சி போவாங்க. இல்லாட்டி அடிக்க
திரிச்சி போய் தம் அடிப்பாங்க.

வின்னர் படத்தோட ஒரிஜ
ஸ்க்ரிப்ட் படி, இன்ட்ரவெல் **(I**
**mission)** வரை தான் வடிவேல
காமெடி வரும். ஆனா, அப்ப
ாந்தோட மார்கெட் கொஞ்சம்
டிச்சதுனால வடிவேலு படம் மு
வர்றது மாதிரி ஸ்க்ரிப்ட மா
டோம். (நா முன்னாடியே சொ
மாதிரி சிச்சுவேசனுக்கு ஏத்த
டிஸைடு பன்றதுக்கு உதார
ஹீரோக்கு ஜால்ரா அடிக்கிறது
இல்லாம, படத்தோட கதைக்கு
தேவையோ அத மட்டும் செய்
மத்த படங்களோட இன்ஸ்பிரே
**(Inspiration-)** தான் சில சுந்
லொகேசன்ல நம்பிக்கையோட
காகவும் நீங்க பயப்படாதீங்க.
இன்னிக்கு இந்த அளவுக்கு
முக்கிய காரணம் அவங்க டை
யாத தான். சில நேரத்துல லாஜ
டிமெண்ட்டும் **(Dramatic effec**
எல்லா சீனும் லாஜிக்கா இருக்க
ணாச்சலம் படத்துல ஃபைவ்
ரஜினியை நைட்டு 12 மணிக்கு
ால்லும் சீன் இதுக்கு நல்ல உதா
எல்லா ரூல்சையும் தெரிஞ்சுக்கி
பட்டா மீறிக்கலாம் **(Know the**

# மீண்டும் தாய் மொழியில்



தமிழ் படங்களில் எதிர்பார்த்த அளவுக்கு வரவேற்பு இல்லாததால, கீர்த்தி சுரேஷ் திரும்பவும் தன்னோட தாய் மொழியான மலையாளப் படத்துல நடிக்கிறதுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்காங்க. மலையாள நடிகர் மோகன்லால் பையன் பிரணவ் நடிக்கிற படத்துல ஹீரோயினா கமிட் ஆகியிருக்காங்களாம். கோலிவுட், டோலிவுட், மல்லுவுட் படவுலகத்துல முன்னணி நடிகையா இருந்துட்டு வருபவர் கீர்த்தி சுரேஷ். இவங்களோட அம்மா மேனகாவும் முன்னாள் நடிகைதான்.

தமிழ்ல இவர் சூப்பர் ஸ்டார் ரஜினியோட நெற்றிக்கண் படத்துல ஹீரோயினா நடிச்சிருக்காங்க.

கீர்த்தி சுரேஷ் முதல் முதலா குழந்தை நட்சத்திரமா பைலட்ஸ் ங்குற மலையாளப் படத்துல நடிச்சாங்க. சில வருஷத்துக்கு முன்னாடி 'இது என்ன மாயம்' தமிழ் படத்துலதான் ஹீரோயினா நடிச்சாங்க.

2016ஆவது வருஷத்துல நடிச்ச ரஜினி முருகன் படமும், ரெமோ படமும் தான் ஓரளவுக்கு வெற்றியடைஞ்சது. சாவித்திரியின் வாழ்க்கை வரலாறு படத்தில நடிச்ச கீர்த்திக்கு நல்ல பெயர் பெற்றுத்தந்த படம்.

ஆஹா ஓஹோ அழகு ஹீரோயின் என்று பேசப்பட்ட கீர்த்தி சுரேஷ்க்கு 2017 , 2018 வருஷத்தில எந்த படமும் பயங்கர வசூலை தரலை. தமிழ்ல விஜய் கூட நடிச்ச பைரவா, சர்க்கார் படங்களும், சூர்யா கூட நடிச்ச தானா சேர்ந்த கூட்டம் படமும் எதிர்பார்த்த வெற்றிய தரலை. அதுக்கு அப்புறம் பெருசா கமிட் ஆசலை. இதனால தமிழ் படத்துக்கு கொஞ்சம் கேப் விட்டுட்டு தன்னோட தாய் மொழியான மலையாள படத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறதா தெரியுது.

தான் நெனச்ச மாதிரி தமிழ் படங்கள் கை கொடுக்காததுனால, தமிழ் படங்களுக்கு கொஞ்சம் கேப் விட்டுட்டு சொந்த ஊரான மலையாள தேசத்து பக்கம் கவனத்தை திருப்பியிருக்காங்க. ஐந்து வருஷத்துக்கு அப்புறமா ஒரு மலையாள படத்துல நடிக்கிறதுக்கு கமிட் ஆகியிருக்காங்க. இந்தப் படத்துல ஹீரோவா நடிகர் மோகன்லாலோட மகன் பிரணவ் நடிக்கிறார்.

இந்தப் படத்த டைரக்ட் பண்ணப் போறது பிரபல மலையாள பட நடிகர் கம் டைரக்ட்ரான சீனிவாசனோட வாரிசான வினீத் ஸ்ரீனிவாசன். இந்தப் படத்துல இருக்குற இன்னொரு விஷேசம் என்னன்னா, ஹீரோவா நடிக்கிற பிரணவ், டைரக்டர் வினீத் ஸ்ரீனிவாசன் கீர்த்தி சுரேஷ் மூணு பேருமே சின்ன வயசுல இருந்து டீப் ஃபிரண்ட்ஸ்.

இந்தப் படத்துல நடிகர் மோகன்லால் கெஸ்ட் ரோல் பண்ணுவார்னு எல்லோரும் எதிர்பாக்குறாங்க. அதனால் இந்தப் படம் ரெடியாகுறத மோகன்லாலும் ரொம்ப ஆவலோட பாத்துக்கிட்டு இருக்காரு. கீர்த்தி சுரேஷ் 5 வருஷத்துக்கு முன்னால பிரியதர்சன் இயக்கத்துல மோகன்லால் ஜோடியாக நடிச்சாங்க.

மரைக்கார் வரலாற்று படத்திலும் மோகன்லால் கூட கீர்த்தி சுரேஷ் நடிக்கிறாங்க. இப்போ அவரோட மகனுக்கு ஜோடியாக நடிக்கப்போறங்க.

இந்தப் படத்தை பல வித்தியாசமான லொக்கேஷனுக்கு போய் ஷூட் பண்ண படக்குழுவினர் முடிவு பண்ணியிருக்காங்க. சினிமா உலகத்துல வாரிசுள் ஒண்ணு சேர்ந்து பல வெற்றிப் படங்கள கொடுத்திருக்கிறத நாம ஏற்கனவே பாத்திருக்கோம். அதே மாதிரி, மல்லுவுட் படவலகத்துல இருக்குற மூணு பேரோட வாரிசுகள் சேர்ந்து எடுக்குற படம்கிறதால மக்கள் எல்லோருமே ரொம்ப ஆவலோட எதிர்பாத்து காத்திருக்காங்க.



# முத்தமழையில் நனைந்த துருவ் விக்ரம்

நடிகர் விக்ரமின் மகன் துருவ் இளம் நடிகை இந்துஜாவும் ஜோடி நடிச்சிக்கிட்டு இருக்குற சூப்பர் டூப்பர் படத்துல ஒரு முத்தம் தான் திருப்புமுனையை தரப்போகுதாம். காலைல இருந்து சாயந்திரம் வரைக்கும் அந்த முத்தம் கொடுக்குற சீன் மட்டுமே எடுத்திருக்காங்கலாம். இந்தப் படத்துல ஹீரோ, ஹீரோயின் இரண்டு பேருக்கும் செமயா கெமிஸ்ட்ரி ஒர்க்அவுட் ஆனதாவும் துருவ் சொல்லியிருக்கார். இந்தப் படத்துல ஸ்ரீராம் பார்த்தசாரதி பாடுன மெலடி சாங்க இந்துஜா தான் தன்னோட பிறந்த நாளான ஆகஸ்டு 1ஆம் தேதி தன்னோட ட்விட்டர் மூலமா ரிலீஸ் பண்ணிருக்காங்க.

இப்போ படத்தோட சூப்பர் சீன்ஸ் பத்தியும் நாயகி இந்துஜாவ பத்தியும் சூப்பர் டூப்பர் நாயகன் துருவ் சும்மா புகழ்ந்து தள்ளியிருக்கார்.

சூப்பர் டூப்பர் படத்துல இந்துஜா நடிக்க மொதல்ல சம்மதிக்கவே இல்ல. ஏன்னா நான் புதுமுக நடிகர் அப்படிங்கிறத மனசல நெனச்சிக்கிட்டு, என்னோட நடிக்கிறது சரியா வருமா அப்படின்னு ரொம்ப தயங்குனாங்க.

ஆனா நா தொடர்ந்து ஒரு மாசமா விடாம போராடி, அவங்கள நடிக்குறதுக்கு சம்மதிக்க வச்சேன். சூப்பர் டூப்பர் படத்துல நடிக்கிறப்போ ரெண்டு பேருக்குமே, பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பையாலஜி எல்லாம் பக்காவா ஒர்க்கவுட் ஆச்சி. இந்தப் படத்துல நடிக்குறப்போ இந்து ஜாவோடி கவர்ச்சிய பாத்து நான் அப்டியே மெர்சலாயிட்டேன்.

இந்த படத்துல முக்கியமான டர்னிங் பாய்ன்ட்டே, இந்துஜாவ இறுக்கமா கட்டிப் பிடிச்சி முத்தம் கொடுக்குற சீன்தான். அந்த சீன் மட்டுமே நாள் முழுக்க திரும்ப திரும்ப எடுத்தாங்க. முத்தம் சீன் ரொம்ப தத்ரூபாமா வரணும்கிறதுக்காகவே திரும்ப திரும்ப எடுத்திருக்காங்க அதிலிருந்தே எவ்வளவு முக்கியமான திருப்புமுனையா இருக்கும்னு படம் பாத்தா தான் நமக்கெல்லாம் புரியும். இந்துஜாவை முத்தம் கொடுத்து நடிக்கிற சீன்ல நடிக்கிறதுக்கு முன்னாடி ஒரு துணை இயக்குநரை கட்டிப்பிடிச்சி ட்ரயல் பார்த்தோம்.

சூப்பர் டூப்பர் படம் 1990ல இருந்து 2000ஆவது வருஷம் வரைக்கும் வந்த தமிழ் படத்துல இருக்குற மாதிரியே, ஹீரோவே, ஆக்சன், காமெடி, ஹீரோயிசம் எல்லாம் சேந்து பண்ணினது மாதிரியே பண்ணியிருக்கோம். அதே மாதிரி இந்தப் படத்தோட பலமே அதோட ஸ்க்ரீன்ப்ளே தான் அப்பிடின்னு எல்லாரும் பேசிக்கிறாங்க. படத்தோட டைரக்டர் அருண் கார்த்திக்கின் சொந்த ஊரு, ஈரோடு பக்கம். இவர் பேங்க் வேலையை ரிசைன் பண்ணிட்டு சினிமா மேல இருக்குற அளவுக்கு மீறுன ஆசையில, ரொம்ப நாளா ட்ரை பண்ணி இந்த சான்ஸ வாங்கியிருக்காரு. ரொம்ப பொறுமை சாலியான மனுசன், அப்பிடின்னு துருவ் பாராட்டு பத்திரம் வாசிச்சிருக்கார் படம் ரிலீசாகி வந்ததுக்கு அப்புறம் தான் தெரியும். படத்தோட டர்னிங் பாய்ன்ட்டான அந்த முத்தம் கொடுக்குற சீன் எப்பிடி வந்திருக்குன்னு.



# தோற் போன திட்டம்

காஜல் அகர்வால், தமன்னா இ
தயாரிப்பதுதான் அந்த திட்டம். இத
என்று கூறப்பட்டு வந்த நிலையில் த
கான பணிகள் தொடங்கிய சில நாட்
வுக்கு வந்திருக்கிறார்.

எப்படியாவது படத்தை தயாரித்து
தயாரித்து அதை ரிலீஸ் செய்வது கடி
டிருக்கிறார். கோடிக்கணக்கில் பணத்
வழியை பார் என்று குடும்பத்தினர்

அவர்கள் சொல்லும்போது அதுப
ரவென நோட்டுகள் பறக்கவே ஆழ
கரைய ஆரம்பித்தவுடன் சட்டி சுட்ட
அகர்வால்.



திரைப்படங்களில் பிரபல நடிகர், நடிகைகள் யாருக்காவது செல்போன் எண்ணை சொல்வதுபோல் காட்சி வந்தால் உபயோகத்தில் இல்லாத நம்பராக சொல்வது வழக்கம். சமீபத்தில் கவர்ச்சி நடிகை சன்னி லியோன் ஒரு படத்தில் வேறு ஒருவருக்கு தனது செல்நம்பர் என்று கூறி ஒரு எண்ணை கூறினார். அந்த எண்ணை அர்ஜுன் பாட்டியா என்பவர் உண்மையிலேயே பயன்படுத்தி வருகிறாராம்.

படத்தில் சன்னி லியோன் சொன்னது அவரது உண்மையான நம்பர் என எண்ணி தினமும் சுமார் 100 போன்கால்கள் அர்ஜுனுக்கு வருகிறதாம். இது சன்னி லியோன் நம்பர் இல்லீங்க என்று சொல்லிச் சொல்லி அந்த நபர் நொந்துபோயிருக்கிறார். இந்த தொல்லையிலிருந்து விடுபட வழி தெரியாமல் தவிக்கும் அர்ஜுன் பாட்டியா சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடுக்க முடிவு செய்துள்ளாராம்.



# நடிகைக்கு பதிலடி

பெரும்பாலும் கவர்ச்சி படங்களை தட்டிவிடும் நடிகைகளுக்கு மத்தியில் பாயல் ராஜ்புத் புதுபாணியை கையாண்டிருக்கிறார். ஒரே சமயத்தில் இரண்டு சிகரெட் புகைத்து மூக்கிலும், வாயிலும் சுருள் சுருளாக புகைவிடும் போட்டோவை வெளியிட்டிருக்கிறார் பாயல். தெலுங்கில் வெளியான விஜய்தேவர கொண்டாவின் அர்ஜூன் ரெட்டி இந்தி ரீமேக்கான கபிர் சிங் படத்தை பார்த்த மூடில் இருக்கும் பாயல். அதே போல் ஒரு வெற்றியை தனக்கும் பெறும் முயற்சியாக சிகரெட் புகைக்கும் ஸ்டில்லை வெளியிட்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஆனால் அவரோ, இது தான் நடிக்கும் அடுத்த படத்துக்கு போல்டான காட்சி என்று குறிப்பிட்டிருக்கிறார். யாராவது வம்பிழுத்துவிடுவார்களோ என்ற சந்தேகத்தில் சிகரெட் புகைப்பது உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கும் என்ற அட்வைஸும் செய்திருக்கிறார். அவரது அட்வைஸை பார்த்த ரசிகர் ஒருவர், எங்களுக்கு மட்டும் அட்வைஸ் பண்ணாதே, சிகரெட் புகைப்பது உன்னுடைய (பாயல் ராஜ்புத்) உடல் நலத்துக்கும் கேடானதுதான் என்று பதிலடி தந்திருக்கிறார். பாயல் தமிழில் ஏஞ்சல் என்ற படத்தில் நடிக்கவிருக்கிறார்.



# அனுபமாவின் கவலை

நானி, நிவேதா தாமஸ் நடித்த தெலுங்கு படம் நின்னு கோரி. இந்த படம் தமிழில் ரீமேக் ஆகிறது. கண்ணன் இயக்கத்தில் அதர்வா ஜோடியாக அனுபமா பரமேஸ்வரன் நடிக்கிறார்.

இந்த பட ஷூட்டிங் சமீபத்தில் தொடங்கியது. இது குறித்து அனுபமா பரமேஸ்வரன் கூறும்போது, 'கொடி படத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடித்தேன். அதன்பிறகு நல்ல வாய்ப்பாக இந்த படம் அமைந்துள்ளது.

நிவேதா தாமஸ் ஒரிஜினலில் சிறப்பாக நடித்திருந்தார். நான் எப்படி நடித்தாலும் அவரோடு ஒப்பிடுவார்கள்.

ஆனால், எனது நடிப்பு பாணியிலேயே நான் நடிப்பேன். படத்தில் பரதநாட்டிய கலைஞராக நடிக்கிறேன். கிளாசிக்கல் நடனம் கற்றதால் இந்த வேடம் எனக்கு பிளஸ்ஸாக அமையும். சரியான தருணத்தில் எமோஷனை வெளிப்படுத்தும் விதமான கேரக்டர் இது. அது புரிந்து நடித்து வருகிறேன் என்றார்.



பாலாவின் உதவி இயக்குனர், நந்தன்
கிறது. படத்தின் புரமோஷன் நிகழ்ச்சிக்கு
படக்குழு அழைப்பு விடுத்தது. ஹீரோ வ
அஸ்மிதாவின் அம்மா திடீரென படக்குழுவ
லவ் பண்ணுகிறேன் என்ற பெயரில் லவ் ப
வர மாட்டாள் என தெரிவித்துள்ளார்.

இந்த புகார் சினிமா வட்டாரத்தில் சல
வராத பட்சத்தில் நான் மட்டும் எதற்காக வ
விளம்பரம் அமைவதே கஷ்டம். ஹீரோ, ஓ
ஷன் செய்ய முடியும் என்று தயாரிப்பாளர்

# கதை எழுதாதீர்கள்!

டி எந்
ஜினல்
Inter-
லோட
பிரச
டல்ல
முழுக்க
த்திட்
ன்னது
மாதிரி
ணம்).
மாதிரி
என்ன
யுங்க.
சன்ல



ஒரு விஷுவல் மீடியம். அதனால ஆடியன்ஸ் விஷுவலா புரிஞ்சுக்கிற விசயத்துக்கு போய் தேவையில்லாம மைண்ட் வாய்ஸை யூஸ் பண்ணாதீர்கள்.

ஒரு நடிகர மனசுல வச்சிக்கிட்டு ஸ்க்ரீன்ப்ளே எழுதாதீங்க. கெடச்ச நடிகரோட பாடி லாங்குவேஜுக்கு ஏத்த மாதிரி அந்த படத்தோட கேரக்டர இம்ப்ருவ் பண்ணுங்க. எப்ப ஒருத்தன் தன்னோட ரெண்டு கைய மறக்குறானோ, அப்போதான் அவன் ஒரு நல்ல நடிகனா ஆகுறான். சினிமாங்குறது கடைசி வரைக்கும் செதுக்கிட்டே இருக்க வேண்டிய விசயம்கிறத புரிஞ்சிக்கோங்க. டைட்டானிக், 40 நாள்ல ஷூட்டிங் முடிஞ்ச படம். தெளிவா பிளான் பண்ணி எறங்கினா 60 நாள்லயே ஒரு படத்தோட ஷூட்டிங்க முடிச்சிடலாம். ஒரு நாளைக்கு 5 நிமிஷத்துக்கான ஃபுட்டேஜ் எடுத்தாக்கூட போதுமே! பட்ஜெட்ட எப்பவுமே மனசுல வச்சுக்கோங்க. படம் ஓடனா கூட, ஓவர் பட்ஜெட்டால நஷ்டம் வந்துடும். நல்ல டைம் எடுத்துக்கிட்டு ப்ரீ-புரடக்சன்/ப்ளானிங்க பக்காவா செஞ்சுக்கோங்க. ஷூட்டிங்ல இம்ப்ருவ் செஞ்சா மட்டும் போதும். புதுமுகங்கள வச்சி படம் எடுக்குறப்போ, ஒர்க்ஷாப் ரிகர்சல் மூலமா ட்ரெய்னிங்க கொடுங்க. இந்த ஜெனர் தான் அப்பிடின்னு லிமிட் எதுவும் வச்சுக்காதீங்க நமக்கு எது சரியா வரும்னு போகப்போகத்தான் தெரியும். ஒரு படத்த முடிக்கும்போதே, அத்தோட அதுலருந்து வெளியில வந்துடுங்க. செண்டிமெண்ட்டலா அதுலயே அட்டாச் ஆயிடாதீங்க. ஒரு படம் முடியிற ஸ்டேஜ்ல இருக்குறப்பவே அடுத்த படத்தோட வேலையில டப்பா எறங்கிடுங்க. பாக்கியராஜ் சார் எழுதுன 'வாங்க, சினிமா பற்றிப் பேசலாம்' புக்க எல்லாரும் வாங்கி படிங்க. டெக்னாலஜி வளர்ச்சியினால படம் எடுக்குற டைம் கண்டிப்பா குறையணும். மொதல்ல சிஜி சம்பந்தப்பட்ட ஷாட்கள முடிச்சா, மேக்கிங் டைமை தாராளமா கொறைக்கலாம். ஷூட்டிங்கப்பவே எடிட்டிங்கையும் முடிச்சிக்கலாம். விமர்சனத்த பெருசா எடுத்துக்காதீங்க. அவங்க வேலைய அவங்க பாக்குறாங்க. அவ்வளவு தான். மீடியா. நெட்டில் வர்றத படிக்கலாம். அத பெருசா எடுத்தக்காதீங்க.

நான் விமர்சனங்கள படிக்கிறதில்லெ. படத்த முடிச்ச பின்னாடி, அத கரெக்ட் பண்ண முடியாது. படைப்பாளிங்க ஃபேஸ்புக், ட்விட்டர்னு சோசியல் மீடியாவுல இருக்குறது அவ்வளவு நல்லதில்ல. ஃபேஸ்புக் மாதிரி சோசியல் மீடியாவுல ரொம்ப இன்வால்வ்மெண்ட்டோட இருக்காதீங்க. எதுக்கு சொல்றேன்னா, அதுல இருக்குற 20 பெர்சன்ட் ஆடியன்சை திருப்திபடுத்த படம் எடுத்தா, வெளிய இருக்குற 80 பெர்சன்ட் ஆடியன்சை நாம இழக்க வேண்டி வரலாம். ஒவ்வொருத்தருக்கும் படம் எடுப்பது ரொம்ப கஷ்டமான விசயம். மெஜாரிட்டி மக்களுக்கு பிடிக்கிற மாதிரியான விசயங்கள படத்துல வச்சா போதும். ஒவ்வொருத்தரோட விமர்சனங்களையும் கண்டுக்கவேண்டிய அவசியமே இல்ல. ஒவ்வொது படத்த எடுக்குறப்பவும், இது என்னோட முதல் படம்னு மனசுல பயம் இருக்கணும். மொத படம் பல வருஷம் கஷ்டப்பட்டு ரெடி பண்றது. அதுல ரொம்ப ஈசியா ஜெயிச்சுரலாம். ஆனா அதுக்கப்புறமா இந்த ஃபீல்டுல நிக்கிறது தான் ரொம்ப கஷ்டம். நம்மளோட ஒரு படம் ஓடிச்சின்னா நமக்கு நாலு பேர் கை கொடுப்பாங்க. அதே படம் ஓடலைன்ன நாலாயிரம் பேர் எழுவு வீட்ல துக்கம் விசாரிக்கிறது மாதிரி விசாரிப்பாங்க. இது தாங்க சினிமா ஒலகம். டைரக்ஷன் அப்படிங்கறது 24 மணி நேரமும் ஒர்க் பண்றது. அதனால எப்பவுமே அலார்ட்டா வேல பாக்கணும். யூடியூப் போல ஆன்லைன்ல டெக்னிகல் சம்பந்தப்பட்ட விசங்கள்லாம் சும்மா கொட்டிக்கெடக்குது. அத படிச்ச நெறைய கத்துக்கோங்க.

ர்.சி படங்கள் உருவாயிருக்கு.
வேலைய செய்ங்க. யாருக்
ரஜினி சார், கமல் சார் இவங்க
வளந்திருக்காங்கன்னா அதுக்கு
ரக்டர்ங்களுக்கு கொடுக்குற மரி
ிக்க விட, சுவாரஸ்யமும் செண்
ct) தான் முக்கியம். படத்தோட
ணுங்குற அவசியம் இல்ல. அரு
ஸ்டார் ஹோட்டல் மேனேஜர்,
எழுப்பி வெளியே போகச் செ
ரணம். சினிமா எடுக்குறதுக்கான
ிட்டு அப்புறம் அதை தேவைப்
**Rules to Break them).** சினிமா

# காதோடு...காதாக...

3 நடிகைகளால் அவர்களின் அம்மாக்களுக்கு தூக்கம் போய்விட்டதாம். தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து வரும் இரண்டு நடிகைகளும், இந்த இரண்டு மொழி தவிர இந்தி படத்திலும் நடித்து வரும் நடிகை ஒருவரும் இன்னும் சிங்கிளாக உள்ளனர். மூன்று நடிகைகளுக்கும் வயது ஏறிக் கொண்டே போகிறது. 30 வயதிற்கு மேல் ஆகியும் அவர்களுக்கு இன்னும் திருமணமாகவில்லை. ஒரு நடிகை காதலித்து தோல்வி அடைந்தார். இன்னொரு நடிகை பிரபலம் ஒருவரை காதலிக்கிறார் ஆனால் அவரோ அம்மணியை கண்டுகொள்வது இல்லை. மூன்றாவது நடிகை ஒரு பிரபலத்தின் கட்டுப்பாட்டில் உள்ளார். அந்த 3 நடிகைகளுக்கும் திருமணம் செய்து வைக்க அவர்களின் அம்மாக்கள் ஆசைப்படுகிறார்கள். ஆனால் நடிகைகள் திருமணம் செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவது இல்லை. திருமணம் செய்து கொண்டால் நடிப்புக்கு முழுக்கு போட வேண்டி வருமோ என்ற பயத்தால் திருமதி ஆக அவர்கள் தயாராக இல்லையாம். இதனால் அவர்களின் அம்மாக்கள் தான் நிம்மதி இல்லாமல் உள்ளனர். நடிகைகளுக்கு உயிர் இருக்கும் வரை படங்களில் நடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது தான் லட்சியம். இதற்கு யார் இடையூறாக வந்தாலும் பொறுத்துக்கொள்ள மாட்டார்களாம். மூன்றில் இரண்டு பேர் நடிப்பில் ராட்சசிகள், ஒருவர் பாவம் என்ன தான் நடித்தாலும் தொடர்ந்து கேலி, கிண்டல்களுக்கு ஆளாகி வருகிறார். அவரை நம்பி வெயிட்டான கதாபாத்திரத்தை கொடுக்க இயக்குநர்கள் யாரும் தயாராக இல்லை. மேலும் அவரின் மார்க்கெட் நிலவரமும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. இருப்பினும் அம்மணி தனது கெரியர் சூப்பராக சென்று கொண்டிருப்பது போன்று நினைத்துக் கொண்டிருக்கிறார்.

★★★★★

அழகும், திறமையும் வாய்ந்த பிரபல நடிகை இயக்குநர் ஒருவரை தெறித்து ஓடச் செய்துள்ளார். அழகும், திறமையும் வாய்ந்த நடிகை அவர். நடிக்க வந்த போது எப்படி இருந்தாரோ தற்போதும் அதே போன்று தான் உள்ளார். அவர் அழகின் ரகசியத்தை தெரிந்து கொள்ள பலரும் ஆவலாக உள்ளனர். ஹீரோக்களுக்கு மிகவும் பிடித்த நடிகை என்று பெயர் எடுத்துள்ளவர் அந்த அழகி. அந்த நடிகை தமிழ், தெலுங்கு, இந்தி படங்களில் நடித்து வருகிறார். பிரபல நடிகை ஒருவரை வைத்து படம் ஒன்றை இயக்கத் துவங்கினார் அந்த அக்கட தேசத்து இயக்குநர். படப்பிடிப்பில் கலந்து கொண்ட ஹீரோயின் ஒரு நாள் என்னால் முடியாது என்று கூறிவிட்டு நடையை கட்டிவிட்டார். இதையடுத்து இயக்குநருக்கு நம்ம சமத்து அழகி நடிகையின் நினைவு வந்து அவரை அணுகியுள்ளார். இயக்குநர் நடிகையை சந்தித்து கதை சொல்லியுள்ளார். நடிகையும் பொறுமையாக கதையை கேட்டுவிட்டு ஒரு பெரிய தொகையை சம்பளமாக கேட்டுள்ளார். அவர் சொன்ன தொகையை கேட்டு இயக்குநருக்கு ஒரு நிமிஷம் தலையே சுத்திருச்சாம். இவ்வளவு பெரிய தொகையை கொடுக்க என்னால் முடியாது என்று கூறிவிட்டு இயக்குநர் கிளம்பிச் சென்றாராம். அந்த நடிகை ஹிட் படம் கொடுத்தே இரண்டு ஆண்டுகள் ஆகிறது. மார்க்கெட் நிலவரமும் அப்படி ஒன்றும் சரியாக இல்லை. இதில் அவருக்கு இம்புட்டு பெரிய தொகை கேட்குதா என்று இயக்குநர் தனக்கு தெரிந்தவர்களிடம் எல்லாம் கூறி புலம்புகிறாராம். சமத்துப் பொண்ணு என்று நினைத்தால் இப்படி அதிர வைக்கிறாரே என்கிறாராம் இயக்குநர். நடிகை அதிர்ச்சி கொடுத்ததை அடுத்து புது ஹீரோயினை தேடிக் கொண்டிருக்கிறாராம் இயக்குநர். ஹீரோக்கள் படப்பிடிப்பு எவ்வளவு லேட்டாக வந்தாலும் கோபப்படாமல் பொறுமையாக நடித்துக் கொடுத்து தான் சமத்து நடிகை என்று பெயர் எடுத்தார். மேலும் இயக்குநர்கள், தயாரிப்பாளர்களிடம் பெரிதாக கன்டிஷன் போடாமல் இருந்து வந்தவர் திடீர் என்று பெரிய தொகையே கேட்டது அக்கட தேசத்தில் உள்ளவர்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

★★★★★

நடிகை ஒருவரின் பேட்டியை பார்த்த ரசிகர்கள் தங்களுக்கு பிடித்த அந்த நடிகர் தப்பித்தார் என்று நிம்மதி அடைந்துள்ளனர். பல திறமைகள் கொண்டவர் அந்த நடிகர். அவர் திறமைக்கு எங்கோ சென்றிருக்க வேண்டும். அவர் வாழ்வில் ஏதேதோ நடந்து தற்போது தான் ஒரு வழிக்கு வந்துள்ளார் நடிகர். நடிகருக்கும், காதலுக்கும் எப்பொழுதுமே ஏழாம் பொருத்தமாகவே உள்ளது. நடிகர் வாழ்வில் காதல் வருவதும் போவதுமாக உள்ளது. அவரே ஆசைப்பட்ட காதல் கூட முறிந்துவிட்டது. இருப்பினும் காதல் மீதான நம்பிக்கையை மட்டும் அவர் கைவிடவில்லை. நடிகர் ஒரு பிரபல நடிகையை காதலித்தார் என்று செய்திகள் வெளியாகின. அது குறித்து அறிந்த ரசிகர்களோ இந்த காதலாவது கல்யாணத்தில் முடிய வேண்டும் என்று எதிர்பார்த்தனர். நடிகரும், நடிகையும் சீரியஸாக காதலிப்பதாக கூறப்பட்ட நிலையில் அப்படி எதுவும் இல்லையாம். நடிகை செய்யும் சில, பல செய்கைகளால் அவரின் இமேஜ் தொடர்ந்து டேமேஜாகிக் கொண்டிருக்கிறது. அவரின் கெரியரும் படுத்து தூங்கத் துவங்கியுள்ளது. இந்நிலையில் அவர் தனக்கு யாரும் தேவை இல்லை என்று கூறியுள்ளார். நடிகை தெரிவித்தது குறித்து அறிந்த அந்த நடிகர்களின் ரசிகர்களோ நல்ல வேளை எங்க தலைவன் தப்பிச்சான் என்று சந்தோஷமாக உள்ளனர். இந்த நடிகையை நம்ம தலைவன் திருமணம் செய்திருந்தால் அவரின் வாழ்க்கை நாசமாக போயிருக்கும். எல்லாம் நன்மைக்கே என்கிறார்கள் ரசிகர்கள். நடிகருக்கு திருமணம் செய்து வைத்து பேரன், பேத்தியை பார்க்க அவரின் பெற்றோருக்கு ஆசையாக உள்ளது. ஆனால் அந்த ஆசை மட்டும் நிறைவேறுவதாக தெரியவில்லை. அவர்கள் தங்கள் மகனுக்காக சில இடங்களில் பெண் தேடிப் பார்த்தும் பலனில்லை. நடிகர் இது எதையுமே கண்டுகொள்ளாமல் என் வழி தனி வழி என்று சென்று கொண்டிருக்கிறார்.



ணைந்து சமீபத்தில் புதிய திட்டம் தீட்டினர். இருவரும் இணைந்து சொந்த படம்
ற்காக கதை, இயக்குனர் தேர்வு செய்தனர். சீக்கிரமே தயாரிப்பு பணி தொடங்கிவிடும்
ற்போது இருவரும் பட தயாரிப்பிலிருந்து பின்வாங்கியிருக்கிறார்கள். பட தயாரிப்புக்
களிலேயே தமன்னா அதிலிருந்து எஸ்ஸாகி நடித்தால் மட்டும்போதும் என்ற முடி

ுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் காஜல் இருந்தார். தற்போதுள்ள சூழலில் படம்
னமான விஷயமாக இருப்பதை அறிந்து காஜலும் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்
தை தயாரிப்பில் முதலீடு செய்து இழப்பதைவிட தொடர்ந்து நடித்து சம்பாதிக்கிற
அட்வைஸ் செய்துள்ளார்களாம்.
ற்றி புரியாமலிருந்த நிலையில் தயாரிப்புக்கான ஆரம்ப கட்ட பணிகளுக்கே சரச
ம் தெரியாமல் காலை விடுகிறோமோ என்று யோசிக்க ஆரம்பித்துவிட்டார். காசு
தடா கைவிட்டதடா பாணியில் தயாரிப்பு ஐடியாவை டிராப் செய்துவிட்டாராம் காஜல்



# மலையாளத்தில் அர்ஜுன்

மலையாளத்தில் வந்தே மாதரம் படத்தில் அர்ஜுன் நடித்திருக்கிறார். இப்போது நீண்ட இடைவெளிக்கு பிறகு ஜேக் டேனியல் என்ற மலையாள படத்தில் நடிக்க அவர் ஒப்பந்தமாகியுள்ளார். இதில் திலீப்புடன் அவர் நடிக்கிறார். வந்தே மாதரம் படம் 2010ல் வெளியானது. 9 ஆண்டுகள் கழித்து மீண்டும் அவர் மலையாளத்தில் நடிக்கிறார்.

இந்த படத்தில் வில்லன் வேடத்தில் அவர் நடிப்பதாக கூறப்படுகிறது. இரும்புத்திரை படத்துக்கு பிறகு அவருக்கு வில்லன் வேட வாய்ப்புகள் அதிகம் வருவதாகவும் அவற்றில் சில படங்களை மட்டுமே ஏற்பதாக அர்ஜுனுக்கு நெருங்கியவர்கள் கூறுகின்றனர்.

# மீண்டும் புலிகேசி?



ரஜினி, கமல், விஜய், விக்ரம் என பிரபல ஹீரோக்களை வைத்து பிரமாண்ட படங்களை இயக்கிய ஷங்கர் சொந்த பட நிறுவனம் மூலம் படங்கள் தயாரிக்கிறார். தனது நிறுவனத்தில் வடிவேலு நடித்த இம்சை அரசன் 23ம் புலிகேசி படத்தை தயாரித்தார். சிம்புதேவன் இயக்கிய அப்படம் ஹிட்டானது. இதையடுத்து இதன் 2ம் பாகமாக இ.அ. 24ம் புலிகேசி படத்தை தயாரிக்க முடிவு செய்தார். வடிவேலுவும் நடிக்க ஒப்புக்கொண்டு படப்பிடிப்பிலும் பங்கேற்றார். சிம்புதேவன் இயக்கத்தில் காட்சிகள் படமாகின.

படப்பிடிப்பின்போது பட தரப்புக்கும், வடிவேலுக்கும் இடையே சில பிரச்னை ஏற்பட்டது. இதனால் இரு தரப்பிலும் யார் பெரியவர் என்ற ஈகோ ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இந்த பிரச்னையால் படத்தில் தொடர்ந்து நடிக்க வடிவேலு மறுத்துவிட்டார். இதையடுத்து தயாரிப்பாளர் சங்கத்தில் ஷங்கர் புகார் அளித்தார். முதலில் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்ட வடிவேலு தற்போது நடிக்க மறுப்பதால் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து வடிவேலுவிடம் தயாரிப்பாளர் சங்கம் சமரச பேச்சுவார்த்தை நடந்தியது. இதில் உடன்பாடு ஏற்படாததால் வடிவேலுவை புதிய படங்களில் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று முடிவு செய்ததாக தெரிகிறது. வடிவேலுவும் கடந்த 2 வருடமாக புதிய படம் எதிலும் நடிக்காமல் ஒதுங்கியிருக்கிறார். பல்வேறு சமரச பேச்சுகளுக்கு பிறகு வடிவேலு ஒரு வாக்குறுதி அளித்திருக்கிறாராம். அதாவது ஷங்கரின் 2 படங்களில் சம்பளம் வாங்காமல் நடித்து நஷ்டத்தை ஈடுகட்டுவதாக கூறியிருக்கிறாராம். இந்த சமரசம் இருதரப்பிலும் ஏற்கப்படும் பட்சத்தில் பிரச்னை முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தெலுங்கில் இருந்து தமிழுக்கு டப்பிங் செய்யப்பட்ட டியர் காம்ரேட் படத்தில் நடித்துள்ள ராஷ்மிகா மந்தானா, அடுத்து விஜய் ஜோடியாகவும், தெலுங்கில் மகேஷ் பாபு ஜோடியாகவும் நடிக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில், 'எப்போதுமே என்னை மிகப் பெரிய நடிகையாக நான் நினைத்ததில்லை. நல்ல கதைகளை கேட்கிறேன். அதில் எனக்கு பொருத்தமான கேரக்டரை தேர்வு செய்கிறேன். ஷூட்டிங்கில் கவனம் செலுத்தி நடிக்கிறேன். மற்றபடி வீண் விவகாரங்களில் ஈடுபட மாட்டேன்.

எவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தாலும், ஒரு நிமிடம் கூட என்னால் சோகமாக இருக்க முடியாது. இதை வைத்து, படத்தில் எனக்கு அழத் தெரியாது என்று சிலர் கிண்டல் செய்தனர். அவர்களுக்கு பதில் சொல்லும்விதமாக டியர் காம்ரேட் படத்தில் என் நடிப்பு அமைந்துள்ளது. சோகமான காட்சிகளில் என் நடிப்பு எப்படி இருந்தது என்று ரசிகர்கள் சொல்லி வருகிறார்கள் என்றார். தற்போது தீவிரமாக தமிழ் கற்று வருகிறார்.

# ஹீரோவால் மகளுக்கு தொல்லை

சுப்பராயன் இயக்கியுள்ள படம் மயூரன், நாளை வெளியாக இருக்
கதாநாயகன் அஞ்சன் தேவ், கதாநாயகி அஸ்மிதா இருவருக்கும்
ருவதாக இருந்தால் என் பெண்ணை அனுப்ப மாட்டேன் என்று
ினரிடம் கூறியுள்ளார். தன் மகள் கோடீஸ்வரி என்பதால், அவரை
ார்ச்சர் கொடுத்து வருகிறார். அதனால் புரமோஷனுக்கு என் மகள்

லப்பை ஏற்படுத்தியுள்ளது. புரமோஷன் நிகழ்ச்சிக்கு ஹீரோயின்
ரவேண்டும் என்று அஞ்சன் தேவ் வர மறுத்துள்ளார். படத்திற்கு
ஹீரோயின் இப்படி செய்தால் எப்படி எங்கள் படத்திற்கு புரமோ
தரப்பு புலம்புகிறது.



# சிலம்பம் கற்கும் சந்தானம்

அதர்வா நடிக்கும் படத்தை முடித்துவிட்டு, சந்தானம் ஹீரோவாக நடிக்கும் படத்தை இயக்குகிறார், கண்ணன். தற்போது டகால்டி படத்தில் நடித்து வரும் சந்தானம், அடுத்து இப்படத்தில் நடிக்கிறார். கிராமத்து காதல் கதை கொண்ட முழுநீள காமெடி படம் என்பதால், தற்போது ஸ்டன்ட் இயக்குனர் ஸ்டன்ட் சில்வாவிடம் சந்தானம் சிலம்பம் கற்றுக்கொள்கிறார்.

# பதற்றத்தை போக்கும் உணவுகள்

மனிதர்கள் இப்போது பெரும்பாலும் பதற்றம் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பதற்றம் தென்படுகிறது. சிலவகை உணவுகளை சாப்பிட்டால், பதற்றம் குறையும்.

முட்டை: பதற்றம் மற்றும் மன அழுத்தத்தை கட்டுப்படுத்த முட்டை உதவும். மேலும் இதில் இருக்கும் டிரைப்டோபன், செரோடானின் போன்றவை தூக்கம், மனநிலை, நடத்தை ஆகியவைகளை சீராக்கும்.

பூசணி விதை: இதில் பொட்டாசியம் அதிக அளவில் இருக்கிறது. ரத்த அழுத்தத்தை நிர்வகிப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது. அத்துடன் மன அழுத்தம் மற்றும் பதற்றத்தை குறைக்கவும் உதவுகிறது.

சாக்லேட்: டார்க் சாக்லேட்டில் இருக்கும் கோகோ மனநிலையை மேம்படுத்த உதவுகிறது. மேலும் மன அழுத்தத்தையும், பதற்றத்தையும் குறைக்கவும் செய்யும். இதில் பாலிபினால்கள், பிளாவோனோய்டுகள் அதிகமிருக்கிறது. அவை நரம்பு அழற்சியை கட்டுப்படுத்துவதற்கும், மூளையில் செல்கள் இறப்பு குறைவதற்கும் உதவுகின்றன. அத்துடன் சாக்லேட்டில் இருக்கும் டிரைப்டோபன் மன நிலையை மேம்படுத்தவும், நரம்பியல் கடத்திகளின் செயல்பாடுகளை அதிகரிக்கவும் உதவுகிறது. டார்க் சாக்லேட் வாங்கும்போது அதில் 70 சதவீதத்துக்கும் அதிகமாக கோகோ கலந்திருக்க வேண்டும்.

தயிர்: பதற்றமான மனநிலை கொண்டவர்கள் உணவில் தயிரை அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது. மனநிலையை மேம்படுத்தவும் உதவும். மூளையின் இயக்கம் சீராக நடக்கவும் தயிர் துணைபுரியும். நான்கு வாரங்கள் தொடர்ந்து தினமும் இரண்டு முறை தயிர் சாப்பிட்டு வந்தால் மூளையின் செயல்பாடு சிறப்பாக இருக்கும் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. வாழைப் பழங்கள், ஓட்ஸ், சியா விதைகள், சிட்ரஸ் பழங்கள், குடை மிளகாய் மற்றும் பாதாம் போன்றவற்றை சாப்பிடுவதும் மூளையின் ஆரோக்கியத்திற்கு நல்லது.

# கம்பியூட்டரும் கண்களும்



கம்ப்யூட்டரை அதிக நேரம் உபயோகிப்பதால் ஏற்படும் கண் பிரச்சினைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து கம்ப்யூட்டர் விஷன் சின்ட்ரோம் என அழைக்கப்படுகிறது. இந்த பாதிப்பு உள்ளவர்களிடம் காணப்படும் முக்கிய அறிகுறிகள்

கண் சோர்வு, கண் வலி, தலைவலி, கண் எரிச்சல், கண் நீர் வடிதல், பார்வைகோளாறு, கழுத்து மற்றும் தோள்பட்டை வலி போன்றவை ஆகும்.

### யாருக்கு பாதிப்பு ஏற்படும்

தினமும் 3-4 மணி நேரத்திற்கு மேல் கணினி உபயோகிப்பவர்களில் 75 சதவீதத்தினருக்கு இந்த பாதிப்பு ஏற்படுகிறது. கம்ப்யூட்டரினால் பாதிப்பு ஏற்பட பல காரணங்கள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை கம்ப்யூட்டர் மற்றும் அருகில் உள்ள விளக்குகளில் இருந்து ஏற்படும் ஒளி சிதறல்கள். கண் சிமிட்டாமல் மானிட்டரை பார்ப்பது, கண் பார்வை கோளாறு உள்ளவர்கள் அதற்குரிய சரியான கண்ணாடி அணியாமல் வேலை செய்வது போன்றவை ஆகும்.

### கண் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கும் முறைகள்

கம்ப்யூட்டர் மானிட்டர் கண்களில் இருந்து 25 இன்ச்க்கு மேலான தொலைவில் இருக்க வேண்டும். மானிட்டர் கண்களில் மட்டத்தில் இருந்து 6 இன்ச் தனிவாக இருக்க வேண்டும்.

### 20-20-20 விதி

கம்ப்யூட்டரில் தொடர்ந்து வேலை செய்பவர்கள் 20 நிமிடத்திற்கு ஒரு முறை, 20 வினாடிகளுக்கு, 20 அடிக்கு மேலான தொலைவில் உள்ள பொருட்களை பார்க்க வேண்டும். தொலைவில் பார்ப்பது கண்களுக்கு ஓய்வு தரும். அரு காமையில் பார்ப்பது கண்களுக்கு அதிக வேலை கொடுப்பதற்கு சமமாகும். பழைய சி.ஆர்.டி மானிட்டர்களை பயன்படுத்துவோர் ஆன்டிகிளார் ஸ்க்ரீன் மானிட்டருக்கு முன்பாக மாட்டிக் கொள்ளலாம். புதிய எல்.இ.டி மானிட்டர்களுக்கு இது தேவையில்லை. மின் விளக்குகள் மற்றும் ஜன்னல்கள் கண்களுக்கு எதிராக இருப்பதை தவிர்க்க வேண்டும். ஏர் கண்டிஷனர் ஏசி காற்று நேராக முகத்தில் அல்லது கண்களில் படும் படியாக அமரக்கூடாது.

நாம் கண்களை அடிக்கடி சிமிட்ட வேண்டும். இதனால் கண்கள் உலர்ந்து போவதை தவிர்க்க முடியும். இருக்கைகள் பின்னால் சாய்ந்து அமர வசதியாக இருக்க வேண்டும். பாதங்கள் தரையில் படும் படியாக இருக்க வேண்டும்.

### கண் கண்ணாடிகள்

எல்லோருக்கும் பொருந்த கூடிய கம்ப்யூட்டர் கண்ணாடி என்று எதுவும் கிடையாது. ஒவ்வொருவருக்கும் இயற்கையாக ஏதாவது பார்வை கோளாறு உள்ளதா என்று கண்டறிந்து அவரவர் தேவைக்கு ஏற்பவும், வயதிற்கு ஏற்பவும் கண்ணாடிகள் அணிந்து கொள்வது அவசியம். கண்ணில் எரிச்சல், நீர் வடிதல், கண்கள் உலந்து இருப்பது போல் உணருதல் போன்ற பிரச்சினைகள் உள்ளவர்கள் மருத்துவரை ஆலோசித்து சொட்டு மருந்துகள் உபயோகிக்கலாம்.

கம்ப்யூட்டரை தவிர்ப்பது மிகவும் கடினம். ஆனால் அதனால் ஏற்படக்கூடிய இந்த கம்ப்யூட்டர் விஷன் சிண்ட் ரோமை நிச்சயம் தவிர்க்கலாம். கம்ப்யூட்டரை கவனமாக பயன்படுத்துங்கள்! கண்களை பாதுகாத்து கொள்ளுங்கள்.




# எலும்புகள் பற்றிய அதிசய தகவல்கள்



நம் உடலில் உள்ள எலும்புகள் உடலைத் தாங்கிப் பாதுகாக்கும் பணியைச்செய்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம் உடல் எலும்புகள், உருவ அமைப்பை வரையறுப்பது மட்டுமன்றி மேலும் பலசெயல்களைச் செய்கிறது. ரத்த செல்களை உருவாக்குவதோடு, உடல் உள்ளமைப்பை கட்டுப்படுத்தும் வேலைகளை எலும்புகள் செய்கிறது. மேலும் நம் மூளை, இதயம் மற்றும் நுரையீரல்களுக்கு பாதுகாவலனாக உள்ளது.

மனிதன் குழந்தையாக இருந்து வளரும்போது உடலில் ஏராளமான மாற்றங்கள் ஏற்படுகிறன. உடல் வளர்ச்சி, உடல் இயக்கங்கள் என மனித வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் உடலில் உள்ள எலும்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உடலுக்கு அடிப்படையாக மட்டுமல்லாமல், நம் உடல் வாழ பல முக்கியமான செயல்பாடுகளைச் செய்கிறது உடல் எலும்புகள். சிவப்பு மற்றும் வெள்ளை ரத்த அணுக்கள் எலும்பின் மஜ்ஜையில் உற்பத்தியாகின்றன. நுரையீரல் மற்றும் உடலின் பல பாகங்களுக்கு ஆக்சிஜனை ஏந்திச்செல்லும் பணியை சிவப்பு ரத்த அணுக்கள் செய்கின்றன. அதேபோல் வெள்ளை அணுக்கள் நோய்களை ஏற்படுத்தும் வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களுடன் போர் புரிகின்றன. இந்த வேலைகளை ஒரு சமநிலையில் வைத்திருப்பது என்பது ஒரு சுலபமான காரியம் அல்ல. இதற்குத்தான் எலும்புக்கூட்டில் பல விதமான எலும்பு கள் உள்ளன.

மனிதன் தன் வாழ்நாளில் ஒரு சில எலும்புகளை இழக்கின்றான். ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது சுமார் 300 எலும்புகளுடன் பிறக்கின்றான். ஆனால் இறக்கும்போது இருப்பது 206 எலும்புகள் மட்டுமே.

ஒரு குழந்தைக்குத் தேவை வளைந்து கொடுக்கக் கூடிய எலும்புக்கூடு. குழந்தை கருவில் சுற்றிவரவும், பிரசவத்தின் போது வெளியே வரும் பாதையைக் கடக்கவும் வளைந்து கொடுக்கக்கூடிய எலும்புகள் தேவைப்படுகிறது. இதற்கு குறுத்தெலும்புகள் மிக அவசியம். இந்த குறுத்தெலும்புகள் குழந்தை பிறந்தவுடன் இணைந்து, அந்தக்குழந்தை வளரவளர வலுவான எலும்பாக மாறும்.

இந்த எலும்பு மாற்ற நிகழ்வை 'ஆஸ்சிபிகேசன்' **(Ossification)** என்பர். இது குழந்தை உருவான 13-வது வாரத்திலிருந்து தொடங்கி 20-வது வாரம் வரை நீடிக்கும். அதேநேரத்தில் வாழ்நாள் முழுவதும் எலும்பு மீளுருவாக்கம் நடைபெறும்.

மனித உடலுக்குள் எலும்புகளின் சுயசிகிச்சை முறை நடைபெறுகிறது. அதாவது, நம் எலும்புகள் உடலுக்குத் தேவையான கால்சியத்தை சேமித்து, பின்னர் வழங்கும் தன்மை பெற்றவை. இதனால் வளையும் தன்மையை மனித உடல் பெறுகிறது. மேலும், சுமார் 10 வருட காலத்தில் எலும்பு செல்கள் மீளுருவாக்கம் அடைகின்றன. முன்னர் கூறியபடி ஒவ்வொரு தசாப்த காலத்திலும் நமக்கு ஒரு புது உடல் கிடைக்கிறது என்று சொல்லலாம். ஆனால் நம் பற்கள் மட்டும் மீளுருவாக்கம் அடையாதவை. பல் மருத்துவர் கூறுவதுபோல் தினசரி இரு முறை பல் தேய்த்து அவற்றை பாதுகாப்பது மிக அவசியம்.

நம் மணிக்கட்டு வரை ஒவ்வொரு கையிலும் 27 எலும்புகளும், அதே போல் நம் பாத மணிக்கட்டு வரை ஒவ்வொரு காலிலும் 26 எலும்புகளும் உள்ளன. அதாவது, நமது இரு கை கால்களில் மட்டும் 50 சதவீத எலும்புகள் உள்ளன.

அடுத்து, நமது காது கேட்கும் திறனுக்கு மூல காரணமாக இருப்பதும் எலும்புகள் தான். காதிலுள்ள 'ஸ்டேப்ஸ்' **(Stapes)** என்னும் எலும்புதான் உடலிலேயே மிகச்சிறிய எலும்பு ஆகும். இது, 2.5 மில்லி மீட்டர் அகலம் உள்ளது. அளவில் சிறியதாக இருந்தாலும்,'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பதுபோல் காதில் ஒலி அதிர்வலைகளை ஏற்று, காது கேட்க வைப்பது இந்த எலும்புதான். இதனால் தான் அனைத்து ஒலிகளையும் நம்மால் கேட்க முடிகிறது.

சில நேரங்களில் நமது முழங்கை எதன் மீதாவது இடித்துவிட்டால் மின்சார 'ஷாக்' அடித்தது போல வலியுடன் கூடிய அதிர்ச்சி ஏற்படும். இதற்கு காரணம் முழங்கையில் உள்ள எலும்பில் இணைந்துள்ள 'உல்னார்' என்ற நரம்பில் **(Ulnar Nerve)** அடிபடுவது தான். நமது முழங்கையில் உள்ள நீண்ட எலும்பின் பெயர் ஹுமரஸ் **(Humerus)**. இந்த எலும்பின் கீழ் இந்த நரம்பு அமைந்துள்ளது. இந்த நரம்பு தான் உடலிலேயே பாதுகாக்கப்படாத நரம்பு ஆகும்.

மனித உடலில் நாக்கின் கீழ் ஒரு எலும்பு உள்ளது. இதை 'வி' **(V)** எலும்பு என்பார்கள். மனித உடலில் உள்ள எலும்புகளில் இது ஒன்றுதான் வேறு எலும்புடன் சேராமல் தனியாக அமைந்துள்ளது.

நாம் பார்க்கும் எலும்புக்கூடெல்லாம் பயமுறுத்துவது போல இருந்தாலும் மேற்கூறிய பல தீவிரமான வேலைகளைச் செய்ய எலும்புகள் உதவுகின்றன. உடலில் ஏற்படும் பதற்றத்தை தணிக்கவும் எலும்புகள் உதவுகின்றன. உடலில் உள்ள திசுக்களுக்கு கால்சியம் தந்து காப்பாற்றுகிறது.

நீங்களும் உங்கள் பங்கிற்கு எலும்பின் வளர்ச்சிக்கு உதவலாம். அதற்கு கால்சியம் சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுங்கள், அன்றாடம் உடற்பயிற்சி செய்யுங்கள். உடலில் உள்ள எலும்புகளில் அடிபடாமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

# வயிற்றுப்புண்ணை குணமாக்கும் கோவைக்காய்



கோவை இலைக்கும், கோவைக்காய்க்கும் மருத்துவ குணங்கள் அதிகம் உண்டு. இவை பல்வேறு நோய்களுக்கான சித்த மருந்துகளில் பயன்படுத்தப்படுகின்றன.

கோவை இலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து, தேன் கலந்து ஒரு மண்டலம் உண்டு வந்தால் இழந்த தாதுவை மீண்டும் பெறலாம். கோவை இலை சாறுடன் வெண்ணெய் சேர்த்து பூசி வந்தால் சொறி, சிரங்கு, நாள் பட்ட புண் போன்றவை குணமாகும். கோவைக்காய் மலிவான விலையில் கிடைக்கும். கோவைக்காய் வாங்கி சமைத்து உண்டால் அனைத்து நோய்களையும் குணப்படுத்தி விடலாம்.

கோவை மூலிகையானது சிறுநீர், வியர்வை ஆகியவற்றை மிகுதிப்படுத்தும் குணமுடையது. வாந்தியை உண்டாக்கும் தன்மை உடையது. மேலும் ரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த வல்லது. கோவைக் கிழங்கு சாறு 10 மி.லி. அளவில் காலையில் மட்டும் குடித்து வந்தால் இரைப்பு இருமல், கபரோகம், மார்புச்சளி, மதுமேகம், கண்டமாலை, வீக்கம் ஆகியவை தீரும். கோவைக்காயை நறுக்கி, வெயிலில் நன்கு காயவைத்துப் பொடி செய்து ஒரு தேக்கரண்டி வீதம் மூன்று வேளை சாப்பிட்டால் சர்க்கரை நோய் கட்டுப்படும்.

சிறு சிறு துண்டுகளாக நறுக்கி கோவைக்காய் பச்சடி செய்து, வாரம் இரண்டு நாள் பகல் உணவில் சேர்த்தால் வாய்ப்புண் குணமாகும். நிறையப் பேர் கோவைக்காயை உணவில் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுங்கி விடுகிறார்கள். நாக்கு சுவையை மட்டுமே கருதாமல் உடல் நலத்தையும் கருத்தில் எடுத்துக் கொண்டால் எல்லா உணவுகளுமே விருப்பம் உடையதாகும். பச்சையாகவே கோவைக்காயை மென்று துப்பிவிட்டாலே வாய்ப்புண் ஆறிடும்.

வயிற்றுப்புண் இருப்பவர்கள் வாரம் இரண்டு நாள் கோவைக்காயை சேர்த்துக் கொள்ளலாம். கோவைக்காயை பீன்ஸ் போல பொரியல் செய்து சாப்பிட்டாலும் சுவையாக இருக்கும். ஒரே ஒரு கோவைக்காயை எடுத்து மோருடன் அரைத்து குடித்தாலும் மேற்சொன்ன பலன்களை பெறலாம். முக்கியமாக முற்றின கோவைக்காய் வாங்கக்கூடாது. பிஞ்சு காயாக பார்த்து வாங்க வேண்டும். பிஞ்சு காய் இளம்பச்சை நிறத்தில் இருக்கும்.

# தினமும் சிறிதளவு மது ஆரோக்கியமா?



மருத்துவம் பற்றிய பல மூட நம்பிக்கைகள் காலம், காலமாக உண்டு. சாதாரண மனிதர்களிடம் காணப்படும் மூட நம்பிக்கைகளை தாண்டி, மருத்துவ உலகிலும் சில நம்பிக்கைகள் நிலவி வருவதை பார்க்கிறோம். அதில் ஒன்று தான் தினமும் சிறிதளவு மது அருந்தினால் அது உடல்நலனுக்கு நல்லது என்பதும். ஆனால், இது பொய்யான நம்பிக்கை என்பது ஆராய்ச்சியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் அதிகப்படியான உடல்நல பாதிப்புகளுக்கும், உயிரிழப்புகளுக்கும் மது முக்கிய காரணமாக இருந்து வருகிறது. ஆனால், மதுவினால் நன்மை உண்டு. அதனை அளவோடு சிறிதளவில் தொடர்ச்சியாக பயன்படுத்துவதன் மூலம் அதன் பயன் கிடைக்கும் என்று சொல்லி வந்தார்கள். இதனை கண்டறியும் பொருட்டு ஆராய்ச்சியில் இறங்கியது 'குளோபல் பர்டன் ஆப் டிசீஸ் இஞ்சுரிஸ் அண்ட் ரிஸ்க் பேக்ட்டர்ஸ் ஸ்டெடி' என்ற அமைப்பு. இதற்காக உலகம் முழுவதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. உலகமெங்கும் உள்ள முக்கியமான 195 நகரங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக ஆண், பெண் இருபாலருமாக 7 லட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தார்கள். 1990-ம் ஆண்டு முதல் 2016-ம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட முயற்சியில், இறுதியாக 694 தகவல் அறிக்கைகள் தயாரானது. இவற்றில் இருந்து கிடைத்த முடிவுகள் அதிர்ச்சி தரும் வகையிலேயே இருந்தது. மது அருந்துகிறவர்களுக்கு புற்றுநோய் மற்றும் உயிரிழப்பு அபாயம் அதிகம் என்பதையே அந்த ஆய்வுகள் புரிய வைத்தது.

ஒரு துளி மதுவாக இருப்பினும், ஒரு கோப்பை மதுவாக இருப்பினும் அதன் தீய விளைவுகள் ஒன்றுதான். சம்பந்தப்பட்டவரின் மரபியல் காரணிகள், நோய் எதிர்ப்பு சக்தி போன்றவற்றின் காரணமாக பாதிப்பின் விகிதத்தில் மாறுபாடு ஏற்படலாமே தவிர, பாதிப்பே ஏற்படாது என்று கூறமுடியாது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். மதப் புனித நூல்கள் சிலவற்றில் கூட ஒயின் அருந்துவது உடலுக்கு நல்லது என்று சொல்கின்றன. இந்த கருத்துக்கும் விளக்கமளித்திருக்கிறது இந்த ஆய்வு. அதன்படி, ஒயின் வகை மதுக்கள் திராட்சைப் பழங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுபவை.

எனவே, திராட்சையில் இருக்கும்'ஆன்ட்டி ஆக்சிடென்டுகள்' உடலுக்கு நன்மை செய்யும் என்ற கோணத்தில் மது ஆரோக்கியமானது என்ற நம்பிக்கை பரவி இருக்கிறது. அதில் உண்மையில்லை. அதற்கு பதிலாக நேரடியாகவே திராட்சையை உண்டு வந்தால் ஆரோக்கியத்துக்கு உத்தரவாதம் கிடைக்கும். மதுவால் ஏற்படும் பாதிப்புகளும் நம்மை அண்டாது என்று பரிந்துரைத்திருக்கிறது'குளோபல் பர்டன் ஆப் டிசீஸ் இஞ்சுரிஸ் அண்ட் ரிஸ்க் பேக்ட்டர்ஸ் ஸ்டெடி'.

மிக முக்கியமான இந்த ஆய்வு முடிவு 'லான்செட்' மருத்துவ இதழில் வெளியாகி இருக்கிறது. ஆக, எந்தவகையில் மது நம் உடலுக்குள் சென்றாலும் கெடுதி தான். உலக வர்த்தக நிறுவனங்கள் மதுவை தனது லாபத்திற்காக ஊக்குவிக்கின்றன. அந்த வலையில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதே இளைஞர்களுக்கு ஆரோக்கியம் என்று மேலும் கூறுகிறது.

# திசைகள் எங்கும் வழிகள்

அன்றைய மின்னஞ்சலை பிரித்து பார்ப்பதற்கே, அச்சமாக இருந்தது, வாசுவுக்கு.

கம்பெனி ஒன்றில், நேர்காணல் போய் ஒரு மாதம் ஆகிறது. அவர்கள் முடிவு சொல்லியிருப்பர். 'ஸ்டார்ட் - அப்' கம்பெனிக்காக, ஒரு யோசனையை, தனியார் வங்கிக்கு அனுப்பி இருந்தான். அதற்கும் பதில் தெரிய வேண்டிய நேரம் நெருங்கி விட்டது.

கண்களை மூடினான், அப்பாவின் முகம் மனதில் வந்தது.

'அப்பா... உங்கள் வசதிக்கு மீறி, என்னை, பி.டெக்., படிக்க வைச்சீங்க... நிலைமை உணர்ந்து, படித்து, என்னால் முடிந்த மதிப்பெண் வாங்கி, தேர்ச்சி பெற்றேன். ஆனால், இக்கால அசுர ஓட்டப்பந்தயத்தில், என்னால் வெற்றி பெற முடியவில்லையே...

'உங்கள் கடைசி கால செலவுகளை கூட, கடன் வாங்கி தான் செய்ய முடிந்தது. நானும் நம்பிக் கையை விடாமல் தான் முயற்சிக்கிறேன்... ஒரு சிறு, ஒளி இழை கூட தெரியவில்லை. வேலை தேடுவதை கூட விட்டு விட்டேன். சிறு தொழில் முயற்சி தான் மேற்கொள்கிறேன்.

'ஆனால், எதுவுமே வசப்படவில்லை... எதிர் காலம் என்ன, நிகழ்காலமே அச்சுறுத்தக் கூடியதாக இருக்கிறதே..' அவன் பயந்தது போலவே, மின்னஞ்சல்கள், தலையில் மண்ணை வாரிக் கொட்டியிருந்தன.

'வெச்ச காபி அப்படியே இருக்கு... முகம் வெளுத்து கிடக்கு... என்னப்பா?' என்று, அவன் தலையை வருடினாள், அம்மா.

'புதுசா ஒண்ணுமில்லம்மா!'

'இதோ பாருப்பா... காலம் இப்படியே போயிடாது. சீக்கிரமே நல்லது நடக்கும். முயற்சி பண்ணிகிட்டே இரு'என்று புன்னகைத்தாள்.

'அதெல்லாம் ஒண்ணும் இல்லம்மா... நாலு வருஷமா நடக்காதது, இனி எப்படி நல்லா நடந்துடும். எனக்கு நம்பிக்கை விட்டுப் போச்சு... கை வலிக்க வலிக்க, பள்ளிக்கூடம், சமையல் வேலை செஞ்சு, எடுத்து வர்ற சொற்ப சம்பளத்துல உக்காந்து சாப்பிடற போக்கிரிம்மா,'என்றான்.

'அய்யோ... என்னப்பா... என்னெல்லாமோ பேசுறே?' என்று பதறினாள்.

புடவைத் தலைப்பால், முகம் துடைத்து விட்டாள்.

'மறந்துட்டியா... சின்ன வயசுல, எவ்வளவு அறிவா இருப்பே தெரியுமா... எல்லாரும் அரச மர இலைல, பீப்பீ செஞ்சா, நீ தென்னை ஓலை, வாழை இலைன்னு செய்வே... பம்பரத்த, தரையில சுத்த விடும்போது, நீ காத்துல, 'விர்'ருன்னு சுத்த வெப்பே... 'கேரம் போர்டு'ல முதல் அடிலயே, நாலு ஓட்டைலயும் காய் விழும்...

'எனக்காக, வண்டலூர் காட்டுல இருந்து பெரிய மூங்கில் குழாயை எடுத்துட்டு வந்து, நம் வீட்டு கிச்சன்ல புகை போக்க வெச்சு கொடுத்தே... இந்த மாதிரி, சின்ன சின்ன ஆராய்ச்சி எம்புட்டு செஞ்சே தெரியுமா... எல்லாரும் சொல்லுவாங்க, 'உன் பையன், பெரிய கண்டுபிடிப்பாளன் ஆகப் போறான்; பரிசெல்லாம் வாங்கப் போறான்...'னு, எனக்கு, அவ்ளோ பெருமையா இருக்கும்.'

விரக்தியுடன் சிரித்தான்.

'சொல்லுவாங்களே, கழுதை கூட பிறக்கும் போது, அழகாகத்தான் இருக்கும்ன்னு... அப்படித் தாம்மா இருந்திருக்கேன். இப்ப, பொதி சுமக்கக் கூட லாயக்கு இல்லாத கழுதையா மாறிட்டேன்.'

'அய்யோ... என்னப்பா இதெல்லாம்... காலம் கை கூடி வரும்பா. நான் இருக்கேன்ல, தைரியமா முயற்சி பண்ணு. டிபன் செய்யலே, சோறும், வெண்டக்கா காரக்குழம்பும், அப்பளமும் தான். சாப்பிட்டு வேல செய்... வரேம்பா' என்று, அவன் தலையைக் கோதியபடியே கிளம்பினாள்.

கம்பெனி நேர்காணலுக்கு போன போது, அங்கே, 'கடினமான நேரங்களில், ஏதாவது செய்யுங்கள். அது செயல்பட்டால், இன்னும் சிலவற்றை செய்யுங்கள். அது செயல்படவில்லை என்றால், வேறு ஏதாவது செய்யுங்கள். ஆனால், தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருங்கள்...'என்று உணர்ந்தான்.

தனக்காகவே சொல்லப்பட்டதைப் போல இருந்தது.

அப்படித்தான் செய்து கொண்டிருக்கிறான்... நான்கு ஆண்டுகளாக, எவ்வளவு முயற்சி, அனுபவங்கள்... அத்தனையிலும் எஞ்சி நிற்பது கசப்பு தான். வெறும், 6,000 ரூபாய் சம்பளத்திற்குக் கூட வேலைக்கு போனான். நஷ்டக் கணக்கு சொல்லி



நிறுத்தினர்.

பாதி நிறுவனங்கள், நேர்காணலுடன் மறைந்து போயின. பல நிறுவனங்கள், சுயவிபரங்களை பார்த்துவிட்டு, 'எம்.டெக்., படிக்கவில்லையா, சி.எஸ்., டிப்ளமா இல்லையா, கிராஷ் கோர்ஸ் செய்யவில்லையா...' என்று குறுக்கு விசாரணை செய்கின்றன.

அவனோ, பி.டெக்., பட்டதாரி. எத்தனை விலாவாரியான படிப்பு அது. இந்த வெள்ளை காலர் வேலைகளே வேண்டாம்டா சாமி என்ற முடிவுக்கு வந்தான். படிப்பு, அனுபவத்தை வைத்து, கார்களில், 'பிரேக்கிங் சிஸ்டம்'இன்னும் பாதுகாப்பாக எப்படி இருக்கலாம்...

'டேஷ்போர்டில்' இணைய வசதி எப்படி ஏற்படுத்தலாம், தரைப்பகுதிகளை தெளிவாக பார்க்கும், 'கிரவுண்ட் வியூ சிஸ்டம்' எப்படி மேம்படுத்தலாம் என்று, தன் தொழில்நுட்ப அறிவை கசக்கி கசக்கித் தான், ஒவ்வொரு அம்சத்தையும் உருவாக்கினான்.

ஆனால், எந்த கார் கம்பெனியும் திரும்பிக் கூட பார்க்கவில்லை. அடுத்ததாக, திரைப்படங்களை திருட்டுத்தனமாக வெளியிடும், 'பைரசி'யை தடுக்கும் நுட்பம் ஒன்றை, மென்பொருளாக எழுதினான். படிகளில் ஏறி சுத்தம் செய்யும், 'வாக்குவம் கிளீனர்' மாடல், பேட்டரிகளை இன்னும் மேம்பாட்டுத் திறனுடன் வடிவமைப்பது...

சைக்கிள்களுக்கான தனிவழி எப்படி என்று, எவ்வளவு திட்டங்களை எழுதினான். ஆதரவும் கிடைக்கவில்லை; ஒரு நிறுவனமும் கை நீட்டவில்லை.'ஸ்டார்ட் - அப்' யோசனைகளை வைத்து, நெஞ்சில் பாரத்துடன் கண்ணீர் வடிக்க மட்டும் தான் முடிந்தது.

ரப்பர் செருப்பை தேய்த்து நடந்து வரும் சத்தத்திலேயே, அம்மா வருவது தெரியும்.

இன்று, கூடவே ஒரு புதிய ஓசை.

'வாசு... வந்துருக்கிறது யாருன்னு பாரேன்' என்று, முகமெல்லாம் சிரிப்பாக வந்தாள், அம்மா.

'நம்ம நளினிப்பா... அப்பா கூட வேல செஞ்சாரே, காசி மாமா, அவங்க பொண்ணு... உன் கூட அஞ்சாம் வகுப்பு வரை படிச்சுதே.'

'நளினியா...' சட்டென்று, உள்ளே ஒரு தீபம், சுடர் போல தெரிந்தது. எவ்வளவு அன்பான சிறுமி, விழிகளின் மென்மையும், கனிவும், இன்னும் நினைவிலேயே இருக்கின்றன.

வாசலில் மிகப்பெரிய, 'டிஸ்கவரி ஸ்போர்ட்' கார்; அடர் சிகப்பு நிறம். காரிலிருந்து இறங்கி, வீட்டுக்குள் அவள் நுழையும் காட்சி தெரிய, வியப்புடன் எழுந்து வந்தான்.

நீல வண்ண உடையும், நீல கற்கள் பதித்த ஜிமிக்கியும், பளீர் சிரிப்பும், திருப்தியான வாழ்வை பறை சாற்றின.

'வாசு... எப்படி இருக்கே?'

கடல் தேவதை போல இருந்தாள்.

'நளினி... எப்படி இருக்கே... நம்பவே முடியலே... வா வா... ஏதோ இருக்கேன்... உக்காரு,'என்றான்.

'அம்மா, சொன்னாங்க... பி.டெக்.,ன்னு, சூப்பர் வாசு,' என்றபடியே வந்தமர்ந்தாள்.

'பெண்கள் அமைப்பு சார்புல, என்னை சிறப்பு விருந்தினரா அழைச்சு, பள்ளிக்கூடத்துல, ஒரு விழா நடத்துனாங்க... அங்க தான், அம்மாவ பாத்தேன்... ஏன், வாசு, 'டல்'லா இருக்கே... உடம்பு சரியில்லயா?'

'இல்ல, நளினி... அதை விடு,' என்றான்.

'வேலை, சுயதொழில் எதுவும் சரியா அமையலேன்னு, அம்மா சொன்னாங்க... சொல்லேன் என்ன பிரச்னை, வாசு?' என்றாள்.

அந்த தொனியும், அக்கறையும், நேரிடையாக மனதை தொட்டதில், சடாரென்று உடைந்து, கொட்டித் தீர்த்தான்.

'நாம எப்பவும் நம்புகிற விஷயம், நடந்தே தீரும்னு சொல்லுவாங்க... ஆனா, எப்போ நடக்கும் நளினி?'

'கொஞ்சம் புத்தியை, கூர் தீட்டினா நடக்கும், வாசு!'

'என்ன சொல்றே?'

'நீ செஞ்சதெல்லாம் சரி தான்... அதாவது, உன் அனுபவங்கள், படிப்பு, தொழில்நுட்ப திறமை, உன் தேவை, வரையறை இப்படித்தான் இருக்கு... ஆனால், 'ஸ்டார்ட் - அப்' மாதிரி கம்பெனி துவங்கணும்ன்னா, முக்கியமான தகுதி வேற ஒண்ணு, வாசு!' என்றாள்.

'புரியலே, நளினி!'

'இதுல, உன்னை விட, வாடிக்கையாளர் தான் முக்கியம். அவங்களுடைய தேவையை, உன் பொருள் தீர்த்து வைக்கிறதா என்பது முக்கியம்... அந்த தேவை என்னன்னு நீதான் கண்டுபிடிக்கணும்.'

'என்ன?' திகைத்தான்.

'ஆம்... உன்னை பாதிக்கிற விஷயங்களை, நீ தான் கூர்ந்து கவனிக்கணும். ஒரு உதாரணம் சொல்றேன்... தினமும் அலாரம் வைக்கிறோம். அது, காலை, 5:00 மணிக்கு அடிக்கும். எழ மனம் வராது. அது தலைல அடிச்சு, அணைத்து விடுவோம். பிறகு, தாமதமா எழுந்து, அவதி அவதியா ஓடி, அரைகுறையா போகும் அந்த நாள்.

'ஆனால், அமெரிக்கால படிச்சுக்கிட்டிருந்த, இந்திய பொண்ணு, நந்தா, இதை ஒரு சவாலா எடுத்துகிட்டு, 'கிளாக்கி' என்ற அலார கடிகாரத்தை வடிவமைச்சா... அதுல, வெறும் அலாரம் மட்டும் அடிச்சுட்டு இருக்காது; அடிச்சுகிட்டே தரையில குதிச்சு ஓடும், கட்டில் கீழ ஒளிஞ்சுக்கும், டேபிள்ல இருந்து குதிக்கும்... சத்தம் தாங்க முடியாது...

'ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு திசையில, வெவ்வேறு வேகத்துல ஓடும்... அப்படி ஒரு, 'மைக்ரோ பிராசசர்' செஞ்சு வெச்சுட்டா, அந்த குட்டி பொண்ணு... இப்போ, அவளோட, 'ஸ்டார்ட் - அப்'கம்பெனியில, பல கோடி ரூபாய்க்கு விற்பனை,'என்றாள்.

கண்கள் விரிய கவனித்தான்.

'அதே போல, இங்கிலாந்துல, ஒரு இளம் பெண்ணுக்கு, மலைல சைக்கிள் ஓட்டணும்ன்னு ஆசை... ஆனா, சந்தையில, ஆண்களுக்கு மட்டும் தான் அதற்கான பிரத்யேக உடை இருக்குன்னு தெரிஞ்சுது... பொறுமையா, தானே ஒரு உடையை வடிவமைச்சா...

'மற்ற பெண்களும் அதை கேட்க, உடனே, தொழிலாக்கி, இப்போ, மிகப்பெரிய அளவில் பண்ணுறா... 'மொபைல்போன் கூடவே சின்னதா, 'ரீடிங் கிளாஸ்' இருந்தால் நல்லா இருக்கும்...'ன்னு நெனச்ச ஒருத்தர், அந்த யோசனையை செயல்படுத்தி, அதே கண்ணாடிய வெச்சு, இப்போ வெற்றிகரமா தொழில் பண்ணுறார்,' என, தொடர்ந்தாள்...

காபியை வைத்துவிட்டு, புன்னகைத்தாள், அம்மா.

'ஒண்ணு, மக்கள் பிரச்னை அல்லது நீ சந்திக்கிற பிரச்னை... இதை, எளிமையா தீர்க்கறது எப்படின்னு யோசிச்சு, குறைவான முதலீட்டுல அதை சந்தைப்படுத்தணும்... அது தான் இதன் சூட்சுமம்... வெளில இருந்து பார்க்கும்போது, தொழிலதிபர்களின் வெற்றி, பெரிய மர்மமா இருக்கும்...

'இப்படி எல்லாம் நம்மால செய்ய முடியுமான்னு பயமா கூட இருக்கும். ஆனால், மக்களுக்கு தேவையான ஒரு பொருளை செய்து, அதை நியாயமான விலையில விற்று, தொழிலை விரிவாக்கியவர்கள் தான், வெற்றியாளர்கள்... உன்னால கண்டிப்பா யோசிச்சு செய்ய முடியும்,' புன்சிரிப்பு மாறாத மென்குரலில் சொன்னாள்.

'உன்னை போல, தொழில் படிப்பு படிக்கலே, வாசு... அப்பா போன பிறகு, அண்ணா கூட, ராஜஸ்தான் போயிட்டோம்... அங்கே, ஒரு தமிழ் குடும்பம் நட்பானாங்க... அவங்க வீட்டுல கல்யாணம் வந்தது... பட்டுப் புடவை, கரை வேட்டியெல்லாம் அங்கே சரியா கிடைக்கலே... 'ஆன்லைன்'ல வாங்கிக் கொடுத்தேன்...

'மெல்ல ஆர்வம் வந்து, 'ஆன்லைனில்' ஆடை விற்பனை ஆரம்பிச்சேன். முகநூல்,'வாட்ஸ் ஆப், டுவிட்டர்'னு, இந்தியா முழுக்க வாடிக்கையாளர்கள்... இந்த ஊர் பொண்ணுன்னு, எனக்கு, விருது தருகிற அளவுக்கு பெருகிட்டது தொழில், என முடித்தாள்.

அவள் வந்தது, பேசியது எல்லாமே கனவு போல இருந்தது.

'அம்மா,' என்று அழைத்தான்.

'நம் ரோடு வழியாத்தானே மலையடிவாரம் வரை நடை பயிற்சி போகின்றனர். திரும்பி வரும் போது, மூச்சு வாங்கி, நின்னு, நம் வீட்டுல தண்ணி வாங்கி குடிச்சுட்டு போவாங்க இல்லையா... அவர்களுக்காக, கெமிக்கல் இல்லாத, நன்னாரி வேர், ரோஜா இதழ்கள், மாம்பழம், பைனாப்பிள், ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை...'தக்காளி, நெல்லிக்காய்னு, அந்தந்த பருவத்துல கிடைக்கிறதை வெச்சு, 'சர்பத்' கடை துவங்கலாம்... நிச்சயமா மக்களுக்கும் உபயோகமா இருக்கும், நமக்கும் லாபமா இருக்கும்' என்று உற்சாகமாக சொல்லிக் கொண்டே போனான்.

ஆனந்தக் கண்ணீருடன், நளினி வந்த திசையையே பார்த்துக் கொண்டிருந்தன, அம்மாவின் விழிகள்.

**வி. சாருலதா**

---

## போதை...

23 ஆம் பக்கத் தொடர்ச்சி

சம்பந்தப்பட்ட 40,870 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 60% ஆனோர் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், 39% ஆனோர் 20 வயதை நெருங்கியவர்களாவர். கைதுகளின் அடிப்படையில் நோக்கும்போது போதைப்பொருள் வர்த்தகர்களுக்குள் காணப்படும் உள்ளக முரண்பாடுகள் காரணமாகவே அதிகளவான போதைப் பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு நிரந்தரமாக அடிமையாகியுள்ளதாக தேசிய போதைத் தடுப்பு சபை எச்சரித்துள்ளது. குறிப்பாக, சிறுவர்கள், இளைஞர்களிடையே இப்பாவனை சடுதியாக அதிகரித்திருப்பதை அது சுட்டிக்காட்டியுள்ளது.

போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் 50% திருமணமாகாதவர்களாவர். இவர்களுள் பலர் பல்கலைக்கழகம், உயர் தர, சாதாரண தர மாணவர்களாவர். 45% திருமணமானவர்கள். இதில் 50% முதல் 69% ஆனவர்கள் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சின் அறிக்கை குறிப்பிடுகிறது.

சமூக வறுமையுடன் கூடிய அவல வாழ்க்கையை மறக்க குடி ஒரு தீர்வாகக் கையாளப்படுகின்றது. குடி சமூகப் பிரச்சினைக்கு வடிகாலாகின்றது. இதன் விளைவாக நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் 43% பேர் மதுவுக்கு அடிமையாகி விட்டனர். பெருந்தோட்டப் பகுதிகளில் இது 55% உள்ளது. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 18% பேர் மதுவுக்கு அடிமையாக உள்ளனர். இது தவிர இதற்காக அவர்கள் சராசரியாக செலவழிக்கும் பணம் நாளொன்றுக்கு 950 -1000 ரூபா என்று மதிப்படப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்தக் குற்றச் செயல்களில் 38 சதவீதமானவை மதுபாவனையால் ஏற்படுகின்றன. அதாவது, போதையினால் ஏற்படுகின்றன. கடந்தாண்டில் நடந்த மொத்த வாகன விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 2,800 ஆகும். இதில் 90 சதவீதமானவை மதுவினால் நடந்துள்ளன. ஒட்டுமொத்தத்தில் சமூகவிரோத குற்றச்செயல்கள் போதைப் பொருள் பாவனையால் ஏற்படுகின்றன.

இலங்கையர் ஒரு நாளைக்கு மதுபானத்துக்கும் புகைத்தலுக்குமாகச் செலவிடும் தொகை 97 கோடி ரூபா என மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் (அஈஐஇ) தெரிவித்துள்ளது. இதில், 50 கோடி ரூபா மதுபானத்துக்கும், 9 கோடி ரூபா பியர் வகைகளுக்கும், 38 கோடி ரூபா புகைத்தலுக்கும் எனச் செலவிடப்படுவதாக இந்நிலையம் சுட்டிக் காட்டியுள்ளது. கலால் திணைக்களத்தினதும், சிலோன் டுபாக்கோ கம்பனியினதும் தகவல்களை வைத்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் புகைக்கும் பெண்களின் வீதாசாரம் 0.1 வீதமாகவும், மது அருந்தும் பெண்கள் 0.5 வீதமாகவும் உள்ளனர். நாட்டிலுள்ள ஆண்களில் 34.8 வீதத்தினர் மது அருந்துபவர்களாகக் காணப்படுவதோடு, 29.4 வீதமான ஆண்கள் புகைபிடிப்பபவர்களாகவும் உள்ளனர் என மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனையில் இலங்கையில் முதலாம் இடமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகின்றது. இது 71% ஆக காணப்படுகின்றது. இரண்டாவதாக கம்பஹா மாவட்டம் உள்ளது. இது 22% ஆக காணப்படுகின்றது. மேல் மாகாணமே முதலிடத்தில் காணப்படுகின்றது.

கடல் மார்க்கமாகப் போதைப்பொருளை கடத்துபவர்கள் ஜி.பி.எஸ். தொழிநுட்பத்தை பயன்படுத்தி போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுவதாக புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான், மியன்மார், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள கும்பல்களே ஆசியாவில் போதைப்பொருள் கடத்தலில் அதிகம் ஈடுபடும் முக்கிய நாடுகள் ஆகும். பகாமாஸ், பெலிஸ், போல்வியா, கொலம்பியா, கொஸ்டாரிகா, ஈக்வெடார், எல் சால்வேடார், கவுட்டமாலா, ஹைதி, ஹோண்டுரஸ், ஜமைக்கா, லாவோஸ், மெக்சிகோ, பனாமா, பெரு, நிகராகுவா, வெனிசூலா ஆகிய நாடுகளும் போதைப் பொருள் கடத்தும் நாடுகளில் இடம்பெற்றுள்ளன.

போதைப்பொருள் வியாபாரம் பாரியளவில் பணம் சம்பாதிக்கும் வழியாகும். பணம்தான் இன்று அதிகாரம் செலுத்துகின்றது. பயங்கரவாதிகள் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதும் அதனூடாக பணம் சம்பாதிப்பதும் அவர்களது பயங்கரவாத நடவடிக்கையை கொண்டு செல்வதற்காகவேயாகும், சர்வதேச பயங்கரவாதிகள் இன்று போதைப் பொருள் வியாபாரத்தில் பிரதான வியாபாரிகளாக இருக்கின்றனர்.

போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இலங்கை அரசு முழு வீச்சில் இறங்கியிருக்கிறது. போதைப் பொருள் விற்பனைக்கு எதிரான அதிகபட்ச தண்டனையாக மரணதண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக நிற்கின்றார். மரண தண்டனைக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டும், எதிர்கால சந்ததியினரின் வளமான வாழ்வுக்காக இதை நாம் செய்தே ஆக வேண்டும் என்ற வாதத்தை ஜனாதிபதி முன்வைக்கின்றார்.

அதில் ஒரு கட்டமாக பொலிஸ்துறை அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி எம். ஆர் லத்தீப் அவர்களின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடித்தார். இதற்குக் காரணம் எம். ஆர் லத்தீப் போதைப் பொருள் வியாபாரிகளுக்கு எதிரான பல அதிரடி நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்தார் என்பதே ஆகும்.மேலும் இலங்கை பொலிஸ் பிரிவை பாதுகாப்பு அமைச்சுக்கு கீழ் கொண்டுவந்ததன் மூலம் ஜனாதிபதி தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் எடுத்து, போதை ஒழிப்பு திட்டத்தை நேரடியாக கண்காணித்து வருகின்றார்.

உலகில் எல்லா நாடுகளும் எல்லா சமூகங்களும் போதைப்பொருள் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளன. என்னதான் நடவடிக்கைகள், திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் சில தேசத் துரோகிகளால் போதைப்பொருள் வலையமைப்பை சீர்குலைக்க முடியாதிருப்பது கசப்பான உண்மை. இத்தகைய தேச துரோகக் குற்றத்தில் சம்பந்தப்படக் கூடியவர்கள் எவ்வித தயவும் இன்றி தண்டிக்கப்பட வேண்டும். இவற்றை கண்டறிய புதிய உபாய மார்க்கங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். போதைப்பொருள் பயங்கரவாதத்தை இலங்கையிலிருந்து ஒழிக்க அதிகார மட்டம் முதல் சாதாரண குடிமகன் வரை அனைவரும் தங்கள் ஆதரவை முழுமையாக வழங்க வேண்டியது கட்டாயக் கடமை.

வடக்கில் மாணவி வித்யாவின் படுகொலையின் பின்னணியிலும் போதைப் பொருளின் பங்களிப்பு உள்ளதை நாம் உணர வேண்டும்.

இந்த மோசமான சம்பவம் முழு இலங்கையில் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

தற்போது சட்டப்படி அனுமதி பெற்று விற்பனை செய்யப்படும் மதுபானங்கள், அவை சாராயமோ, விஷ்கியோ, ப்ரண்டியோ, இவை அனைத்துமே சமூக சீரழிவிற்கே பயன்படுகின்றன. போதை வஸ்து உள்ளிட்ட போதைப்பொருட்கள் இதில் முக்கியமானவை.

கடந்த வருடத்தில் பாடசாலைச் சுற்றாடலில் விற்பனை செய்யப்படும் புதிய பானம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றினர். இத்தகைய மோசமான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பிள்ளைகளின் எதிர்காலத்தையோ பெற்றோரின் கனவுகளையோ கல்வியையோ பற்றி யோசிப்பவர்களல்ல.

எல்லா மதங்களும் நல்வாழ்வுக்கான போதனைகளையே செய்கின்றன. இத்தகைய மோசமான செயற்பாடுகளை இல்லாதொழிப்பதில் மதத்தலைவர்களின் பங்களிப்பும் பொறுப்பும் மிக முக்கியமானது.



# அழகும் மழையும்

மழைக்காலம் தொடங்கிவிட்டால் நிறைய பேர் பருகும் தண்ணீர் அளவை குறைத்துவிடுகிறார்கள். எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் போதுமான அளவு தண்ணீர் அதிகம் பருக வேண்டியது அவசியமானது. நாள் முழுவதும் சீரான இடைவெளியில் தண்ணீர் பருகி வந்தால் உடல் ஆரோக்கியமாகவும், சருமம் பொலிவோடும் இருக்கும்.

கோடை காலம் மட்டுமின்றி மற்ற பருவ காலங்களிலும் நீர்ச்சத்து கொண்ட காய்கறிகள், பழங்களை உட்கொள்ள வேண்டும். அதிலும் மழைக்காலத்தில் சாப்பிடுவது தலைவலி, தொற்றுநோய் பாதிப்புகளை தடுக்க உதவும். சருமத்தை தூய்மையாக வைத்துக்கொள்ளவும் பயன்படும். மழைக்காலத்தில் முகத்தில் அழுக்கு படியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தூங்க செல்வதற்கு முன்பு முகத்தை நன்றாக கழுவ வேண்டும். முகத்தில் அதிகபடியான எண்ணெய் படிவதும் கூடாது. பாலை கொண்டு முகத்தை சுத்தப்படுத்தலாம். அது சருமத்தை சுத்தமாக பராமரிக்க உதவும்.

மழைக்காலங்களில் 'சன்ஸ்கிரீன்' பூசுவதை நிறைய பேர் தவிர்த்துவிடுகிறார்கள். புறஊதாக் கதிர்களின் ஆதிக்கம் கோடை காலம் மட்டுமின்றி மழைக்காலத்திலும் பரவலாக இருக்கும். அதில் இருந்து சருமத்தை தற்காத்துக்கொள்ள சன்ஸ்கிரீன் பூசுவது நல்லது.

மழைக்காலத்தில் கூந்தல் பராமரிப்பில் அசட்டையாக இருந்து விடக்கூடாது. வாரத்திற்கு மூன்று முறையாவது கூந்தலை தண்ணீரில் அலசுவதோடு கண்டிஷனரையும் பயன்படுத்த வேண்டும். வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை கூந்தலுக்கு மசாஜ் செய்து வருவதும் நல்லது. அது தலைமுடியை மென்மையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும். உச்சந்தலையில் எண்ணெய் மசாஜ் செய்து வருவதும் சிறப்பானது. அது தலைப்பகுதி உலர்வடைவதை தவிர்க்க உதவும். ஈரப்பதத்தை தக்க வைக்கவும் வழிவகை செய்யும். அதேவேளையில் எண்ணெய்யை அதிகம் பயன்படுத்த கூடாது. மழைக்காலத்தில் நோய் தொற்றுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் என்பதால் உணவு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

மழைக்காலத்துக்கு ஏற்ற ஆடைகளை உடுத்த வேண்டும். எளிதில் வியர்வையை உறிஞ்சும் ஆடைகள் தான் மழைக்காலத்திற்கு ஏற்றது. அதுபோல் வெளியே செல்வதற்கு சவுகரியமான காலணிகளையும் பயன்படுத்த வேண்டும்.

பழங்கள் மற்றும் காய்கறிகளை நறுக்கினால் உடனே பயன்படுத்த வேண்டும். வெட்டி வைத்துவிட்டு வெகுநேரம் கழித்து சாப்பிடக்கூடாது. அதில் பாக்டீரியாக்கள் எளிதில் ஊடுருவிவிடும். அதுபோல் திறந்தவெளியில் பரிமாறப்படும் உணவு வகைகளை சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும்.

மழைக்காலத்தில் நீரிழப்பு பிரச்சினையும் உருவாகும். அதனை தவிர்க்க நிறைய திரவ உணவுகளை உட்கொள்ள வேண்டும். இளநீர், எலுமிச்சை ஜூஸ், பழ சாறுகள், காய்கறி சூப் போன்றவைகளை பருகலாம். அதேவேளையில் சோடா வகைகள், கார்பனேற்றம் செய்யப்பட்ட பானங்களை பருகக்கூடாது.

கர்ப்பிணி பெண்கள் தவறாமல் நீர்ச்சத்து கொண்ட உணவு வகைகளை தேர்ந்தெடுத்து சாப்பிட வேண்டும். அது சருமத்திற்கு புது பொலிவு தரும்.

உடல் சோர்வாக இருப்பதாக உணர்ந்தால் முன்கூட்டியே தூங்க செல்ல வேண்டும். அது உடல், மன ஆரோக்கியத்திற்கு உதவும்.

# கூந்தலுக்கு கண்டிஷனர் தேவையா?

ஹேர் கண்டிஷனர் என்பது இன்றைய நாட்களில் அனைவரும் பயன்படுத்தும் ஒரு பொருளாக மாறியுள்ளது. ஆனால் கண்டிஷனர் ஏன் பயன்படுத்த வேண்டும், எப்படி பயன்படுத்த வேண்டும் என்று அதனைப் பற்றிய சந்தேகம் இன்றும் நம்மில் பலருக்கு உண்டு. தலைமுடி பராமரிப்பில் கண்டிஷனரின் தேவை குறித்து ஒரு புரிதல் வேண்டும். தலைமுடிக்கான பராமரிப்பில் கண்டிஷனரின் முக்கியத்துவத்தை அறிந்துக் கொள்ளுங்கள்.



தலைமுடியை கவனமாக பராமரிக்க கண்டிஷனர் மிகவும் அவசியம். தலைமுடியை மென்மையாக மாற்றி அதனை எளிதில் நிர்வகிக்கக் கூடிய வகையில் அமைத்துக் கொடுப்பது கண்டிஷனர் ஆகும். தலையில் ஒரு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தி, கூந்தல் உடையாமல் பாதுகாக்க உதவுகிறது கண்டிஷனர்.

முடியை ஈரப்பதத்துடன் சரியான நிலையில் வைக்க உதவி முடி வளர்ச்சிக்கு உதவுவது கண்டிஷனர் ஆகும். உங்கள் கூந்தல் எந்த வகையாக இருந்தாலும் கூந்தலுக்கு கண்டிஷனர் அவசியம் தேவை. உங்கள் கூந்தலில் உள்ள ஈரப்பதத்தை பூட்டி கூந்தலுக்கு புத்துணர்ச்சியைத் தருவது கண்டிஷனர் ஆகும். கண்டிஷனர் உங்கள் கூந்தலை சுத்தம் செய்யும் முயற்சியின் முடிவாக உள்ளது. சில நேரங்களில் ஷாம்பூ பயன்படுத்தும் போது, உங்கள் கூந்தலில் உள்ள இயற்கையான எண்ணெய்த்தன்மை குறைந்து, முடி சேதமடையும் வாய்ப்பு உண்டாகும். கண்டிஷனர் பயன்படுத்துவதால், முடியில் ஈரப்பதம் அதிகரித்து, முடி உடையும் வாய்ப்பு தடுக்கப்படும்.

கண்டிஷனர் பயன்படுத்துவதால் உங்கள் கூந்தலின் தன்மை மற்றும் தோற்றத்தை அது மேம்படுத்துகிறது. சுருண்ட அல்லது வறண்ட தலைமுடியை எளிதாக நிர்வகிக்கும் வகையில் முடியை செம்மைப்படுத்துகிறது. தலைமுடியில் உள்ள சிக்கை எளிதில் போக்கி, கூந்தல் உடைவதைத் தடுக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, தலைமுடியை எளிதாகவும் விரைவாகவும் அலங்கரிக்க உதவுகிறது.

# சன்ஸ்க்ரீமின் பயன்கள்



வெயிலின் உக்கிரம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டுதான் போகிறது. அதைக் காரணம் காட்டி யாரும் எந்த வேலையிலிருந்தும் விலகியிருக்க முடியாது. குளிர்ச்சியான, நீர்ச்சத்து நிறைந்த உணவுகள் உடலைக் காக்கும். சன் ஸ்கிரீன் சருமத்தைக் காக்கும். சன் ஸ்கிரீன் தேர்ந்தெடுக்கும்போது கவனத்தில்கொள்ள வேண்டிய விஷயங்களை பார்க்கலாம்.

வெயில் காலத்தில் மட்டுமே உபயோகிக்க வேண்டியதல்ல சன் ஸ்கிரீன். குளிர்காலத்திலும் சூரியக் கதிர்களின் தாக்கம் இருக்கும் என்பதால் அந்த நாள்களிலும் சன் ஸ்கிரீன் பயன்படுத்த வேண்டியது அவசியம். காருக்குள் பயணம் செய்வோருக்கும் வெளியிலேயே வராமல் வீட்டுக்குள்ளேயே இருப்பவர்களுக்கும்கூட சன் ஸ்கிரீன் அவசியம்.

சன் ஸ்கிரீன் உபயோகிப்பது மட்டுமே வெயிலின் தாக்கத்திலிருந்து சருமத்தைக் காப்பாற்றும் என நினைக்க வேண்டாம். அது ஓரளவுக்கு சருமத்துக்குக் கேடயம் போலச் செயல்படும். முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை நேரடி வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். தினமும் மேக்கப் செய்து கொள்ளும் பழக்கமுள்ள பெண்கள் பெரும்பாலும் சன் ஸ்கிரீன் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்கள் மேக்கப் போடுவதற்கு முன் சன் ஸ்கிரீன் பயன்படுத்துவது பாதுகாப்பானது.

முகத்துக்கு மட்டுமன்றி, கழுத்து, கைகால்கள், முதுகு என வெயில் படும் எல்லாப் பகுதிகளிலும் சன் ஸ்கிரீன் தடவிக்கொள்ள வேண்டும். இவ்வளவு ஏன் உதடுகளுக்குக்கூட சன் ஸ்கிரீன் தேவை. வெயில் பட்டால் உதடுகளும் கறுத்துப் போகலாம். எனவே, அல்ட்ரா வயலட் பாதுகாப்புள்ள லிப் பாம் பயன்படுத்துங்கள்.

நீச்சல் பழக்கமுள்ளவர்களுக்கு தண்ணீரில் உள்ள குளோரினும், நேரடியாக அடிக்கிற வெயிலும் சருமத்தைக் கறுத்துப்போகச் செய்யும். அவர்கள் வாட்டர் ரெசிஸ்டன்ட் சன் ஸ்கிரீன் பயன்படுத்துவதன் மூலம் சரும ஆரோக்கியத்தைக் காக்கலாம். பெரியவர்களுக்கு உபயோகிக்கிற அதே சன் ஸ்கிரீனையே குழந்தைகளுக்கும் பயன்படுத்தக் கூடாது. குழந்தைகளுக்கு பாரா அமினோ பென்ஸாயிக் ஆஸிட், ஆக்ஸிபென்ஸோன் போன்ற ரசாயனங்கள் உள்ள சன் ஸ்கிரீன் வகைகளைத் தவிர்க்க வேண்டும்.






# மஞ்சள் நிற நகங்களை சரி செய்ய முடியுமா?

பெரும்பாலும் நகங்களில் ஏற்படுகிற இன்ஃபெக்ஷனே மஞ்சள் நிறத்துக்குக் காரணம். ரொம்பவும் அதிகமான அடர் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டால் அது தைராய்டு, சோரியாசிஸ், நீரிழிவு, கல்லீரல் கோளாறு போன்றவற்றின் அறிகுறியாகக்கூட இருக்கலாம். டெஸ்ட் செய்து பாருங்கள். எப்போதும் பளீர் நிறங்களில் நெயில் பாலிஷ் போடும் பழக்கம் உள்ளவர்களுக்கு அந்த நெயில் பாலிஷ் சாயத்தின் விளைவாகவும் இப்படி நகங்கள் மஞ்சளாகலாம்.

நெயில் பாலிஷ் போடுவதற்கு முன் பேஸ் கோட் போட்டுவிட்டு பிறகு கலர் பாலிஷ் போடலாம். நெயில் பாலிஷை அகற்ற அசிட்டோன் கலந்த ரிமூவர்களை உபயோகிப்பதாலும் நகங்கள் மஞ்சளாகலாம். அசிட்டோன் இல்லாத ரிமூவரை உபயோகியுங்கள். வைட்டமின் ஈ ஆயிலில் டீ ட்ரீ ஆயில் கலந்து நகங்களுக்கு மென்மையாக மசாஜ் செய்தால் இன்ஃபெக்ஷனும் குறையும். நிறமும் மாறும். எலுமிச்சைச் சாற்றில் நகங்களை சிறிது நேரம் ஊறவைத்துக் கழுவினாலும் மஞ்சள் நிறம் மாறும்.

# கூந்தல் வளர்ச்சிக்கு உதவும் வெங்காயம்

பெரிய வெங்காயம் சமையலுக்கு மட்டும் பயன்படுத்தப்படுவது அல்ல. முடி வளர்ச்சிக்கும் இது ஒரு சிறந்த மருந்தாக பயன்படுகிறது. வெங்காயத்திற்கு நுண் கிருமிகள் மற்றும் பூஞ்சையை எதிர்த்து போராடும் தன்மை உள்ளது. இதை தலை முடியில் பயன்படுத்துவதால் முடி கொட்டுவது தடுக்கப்படுகிறது.

வெங்காயத்தை தொடர்ந்து பயன்படுத்தும் போது முடியின் பளபளப்பு அதிகமாகிறது. தலை மற்றும் கழுத்து பகுதியில் புற்று நோய் வரும் அபாயத்தை குறைக்கிறது. பேன் தொல்லை குறைகிறது. வெங்காய சாறு பயன்படுத்துவதால் முடியின் அடர்த்தி அதிகரிக்கும்.



வெங்காயத்தை துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பின் மிக்ஸியில் நன்றாக தண்ணீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். பின் ஒரு துணியில் நன்றாக வடிகட்டி எடுத்து கொள்ளவும். பின் வெங்காய சாறை எடுத்து தலையில் நன்றாக தடவவும். விரல்களால் சுழல் வடிவத்தில் நன்றாக மசாஜ் செய்யவும். ஒரு மணி நேரம் அப்படியே விட்டு விடவும். வெங்காய வாசனை முடியில் இல்லாதவாறு வாசனையுள்ள ஷாம்பூவால் தலையை நன்றாக அலசவும். வாரம் 1 முறை 2 மாதங்களுக்கு இந்த முறையை பின்பற்றி நல்ல பலன் பெறலாம்.

வெங்காய சாறுடன் ஆலிவ் எண்ணெயை கலக்கவும். பின் தலையில் நன்றாக இந்த சாறை தடவி மசாஜ் செய்யவும். 2 மணி நேரத்திற்கு பிறகு கூந்தலை அலசவும். இதனை தொடர்ந்து செய்வதால் வலிமையான மற்றும் பொடுகு இல்லாத கூந்தலை பெறலாம்.

# சரும பளபளப்பிற்கு வாழைப்பழம்

முக்கனிகளில் ஒன்றான வாழைப் பழத்தினை சாப்பிட்டால், உடலுக்கு நல்லது என்பது மட்டுமே பலருக்கு தெரியும். ஆனால் அதன் முழு நன்மைகள் பற்றி பலருக்கு தெரியாது. உண்மையில் வாழைப்பழத்தில் எண்ணற்ற நன்மைகள் நிறைந்துள்ளன.வைட்டமின் ஏ, வைட்டமின் பி6, வைட்டமின் சி, மக்னீசியம் மற்றும் பொட்டாசியம் போன்ற சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளது. இதனால் உடலில் ஏற்படும் பல நோய்களை போக்கி, உடலை ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்ள முடியும். இதில் உள்ள மற்ற சத்துக்கள் அதனால் ஏற்படும் நன்மைகளை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

★ இயற்கை குளுக்கோஸ் என்று கொண்டாடப்படும் வாழைப்பழம் நமக்கு வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் ஈ சத்துக்களைத் தருகிறது.

★ சிலருக்கு உஷ்ண உடம்பாக இருக்கும். இவர்கள் தினமும் இரவு உணவுக்குப்பிறகு ஒரு பச்சை வாழைப் பழத்தை சாப்பிட்டு வர உடல் குளிர்ச்சி பெறும். சூட்டினால் ஏற்படும் கட்டிகளும் நீங்கும். மூட்டுவலி, வாதநோய் இருப்பவர்கள் பச்சை வாழைப்பழத்தை தவிர்க்கலாம்.

★ தினமும் பூவன்பழம் சாப்பிட்டு வந்தால் நல்ல ஜீரண சக்தி உண்டாகும். உடல் சோர்வு, தளர்வு நீங்கி புத்துணர்ச்சி உண்டாகும்.

★ மஞ்சள் காமாலை நோய் நீங்கிய பின்னும் கண்களில் வரும் மஞ்சளை நீக்கும் வல்லமை படைத்தது ரஸ்தாளி பழம்.

★ தினமும் ஒரு பேயன் வாழைப்பழத்துடன் சிறிது தேன் கலந்து சாப்பிட அம்மை நோய் வந்தபின் உள்ள கொப்புளங்களின் சிவப்பு மாறும். வெளிப்பூச்சாகவும் இதை உபயோகிக்கலாம்.

★ ஒரு பேயன் வாழைப்பழத்துடன் சிறு கொத்து வேப்பந்தளிர், கொஞ்சம் இளநீர், கஸ்தூரி மஞ்சள் பவுடர் இவற்றை சேர்த்து அரைத்து அம்மைத் தழும்புகளின் மீது பற்றுப் போட்டு வந்தால், சுவடே இல்லாமல் வடுக்கள் மறையும்.

★ செவ்வாழையில் விட்டமின் ஏ சத்து நிறைய உள்ளது. இதைத்தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டுவர, நோய் எதிர்ப்பு சக்தி கூடும். சொரி, சிரங்கு போன்றவற்றை குணப்படுத்தி சருமத்தை பளபளப்பாக்கும். நரம்பு தளர்ச்சியினால் ஏற்படும் தளர்வையும் நீக்குவதோடு, எலும்பை பலப்படுத்தி, பல் ஈறுகளில் ஏற்படும் ரத்தக்கசிவைத் தடுக்கும் வல்லமையும் செவ்வாழைக்கு உண்டு.

★ நன்றாகப் பழுத்த அரை நேந்திரம் பழத்தை தினமும் இரவு சாப்பிட்டுவர இதயம் வலிமையாகும். மூச்சு சீராகும்.

★ சிலருக்கு வாழைப்பழம் சாப்பிட்டால், சளி உண்டாவதாக நினைப்பர். அதற்கு வாழைப்பழம் சாப்பிட்டபின் ஒரு டம்ளர் சூடான தண்ணீரை பருகலாம்.

# பெண்கள்

## சுடிதாரில் அழகாக தெரிய என்ன செய்யலாம்?

இன்றைய பெண்கள் தங்களின் அழகிலும், உடைகளை அணிவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். பெண்கள் பொதுவாகவே மிகவும் ஆசைப்படுவதும், அதிகம் செலவழிப்பதும் நகைகளுக்கும், துணிகளுக்கும் மற்றும் அழகுசாதன பொருட்களுக்கும் தான்.

தான் தேர்ந்தெடுக்கும் சுடிதார்களோ, அல்லது புடைவைகளோ மிகவும் புது வரவாகவும், புது டிசைன்களிலும் இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். நாம் அணிந்து செல்லும் உடைகளை வைத்தே நமக்கு மரியாதை கொடுக்கிறார்கள். ஆகவே மற்றவர்களின் முன் நம்மை பெருமையாகவும், அடுத்தவர்களை திரும்பி பார்க்க வைப்பதும் நம்முடைய ஆடைகள் தான்.

ஒரு சிலர் அதிக ஆடம்பர டிசைன்களை விரும்பமாட்டார்கள். தான் உடுத்தும் சுடிதார் மற்றவர்களை கவர வேண்டும். ஆனால் நிறைய டிசைன்கள் இருக்க கூடாது என்று தான் எண்ணுவார்கள். ஒரு சிலர் அதிக வேலைப்பாடுகள் இருந்தால் தான் பிடிக்கும். முதலில் நாம் எடுக்கும் சுடிதார் கலர் நம்முடைய டிசைன்களுக்கு ஒத்துவருமா ? என்று பாருங்கள்.

அதை விட்டுட்டு, தேவையில்லாமல் டிசைன்களுக்கு ஆசைப்பட்டால், என்னதான் அதிக விலை கொடுத்து வாங்கியிருந்தாலும், மற்றவர்களின் முன் உங்களை டல்லாக தான் காட்டும். எனவே அதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம். முதலில் கருப்பு நிறமாக உள்ளவர்கள், லைட் நிறத்தில் உள்ள ஸ்டோன் வேலைப்பாடுகள் செய்த சுடிதாரை தேர்ந்தெடுக்கலாம்.

லைட் கிரீன், எலுமிச்சை நிறத்தில் உள்ள மஞ்சள் கலர், லைட் வைலட், லைட் சாண்டில், ஒயில் அல்லது ஏதாவது காமினேஷன் கலர் இது மாதிரி லைட் நிறத்தில் உள்ள சுடிதார்களை தேர்வு செய்யுங்கள். கொஞ்சம் கலராகவோ அல்லது மாநிறமாகவோ உள்ளவர்கள் மெரூன், இங்க் புளூ, பிங்க் கலர், ஆஷ் கலர், ஒயிட் அல்லது ஏதாவது காமினேஷன் கலரை தேர்வு செய்யலாம்.

கலராக உள்ளவர்களுக்கு டார்க் கலரில் எந்த நிறவகையான சுடிதார்கள் போட்டாலும் அழகாக தெரியும். பெரும்பாலும் நிறத்திற்கு ஏற்றார்போல் தேர்வு செய்வதை காட்டிலும், அவரவர் உடல் வாகுக்கு தகுந்தாற்போல் சுடிதார்களை எடுக்க வேண்டும். குண்டாக உள்ளவர்கள் காட்டன் சுடிதார் அணிந்தால், அது மேலும் அவர்களை குண்டாகத்தான் காட்டும்.

அதற்கு பதில், அவர்கள் நிறைய ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யாத சிம்பிளாக உள்ள சல்வார்களை போட்டாலே அழகாக தெரியும். ஒல்லியாக உள்ளவர்கள் கொஞ்சம் அதிக வேலைபாடுகள் செய்த காட்டன் அல்லது சில்க் காட்டன் சுடிதார் தேர்வு செய்யலாம். அது அவர்களை சற்று குண்டாக காட்டும்.

வெயில் காலத்தில், சிந்தடிக் வகை சுடிதார்களை உபயோகிக்க வேண்டாம். அதுமட்டுமல்ல, என்னதான் சுடிதார்களை தேர்வு செய்தாலும், அவர்கள் தைக்கும் முறை அந்த துணியின் அழகை கெடுத்து விடுகிறது. முடிந்தவரையில், சுடிதார்களை அம்பர்லா மாடலில் தைத்தால், பார்ப்பதற்கு பூக்கள் விரிந்திருப்பது போன்று அழகாக தெரியும். தேர்வு செய்யும் சுடிதாரை, நாம் அழகாக தெரிய தைக்கும் முறையும் மிக மிக அவசியம்.

# சேவல் எங்கே?



சேவல் தனக்கும் தன் குடும்பத்துக்கும் இரை தேடிக் கிளம்பியது. அழகான குஞ்சுகளை எழுப்பி, தானியங்களைச் சாப்பிடக் கொடுத்தது கோழி. கதை சொன்னது. விளையாடக் கற்றுக் கொடுத்தது. மாலை நேரம் சேவலுக்காகவும் உணவுக்காகவும் கோழியும் குஞ்சுகளும் காத்திருந்தன.

நேரம் கடந்தது. சேவலைக் காணவில்லை. குஞ்சுகளை அழைத்துக் கொண்டு, சேவலைத் தேடிச் சென்றது கோழி. நீண்ட நேரத் தேடலுக்குப் பிறகு, சேவலை நரி தூக்கிச் சென்ற விஷயம் தெரிந்தது. இதை அந்தக் கோழியால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

நான் நம்ப மாட்டேன். என் கணவர் உயிருடன்தான் இருப்பார். எப்படியாவது அவரை மீண்டும் கொண்டு வந்துவிடுவேன் என்று குஞ்சுகளுக்கு ஆறுதல் கூறியது கோழி.

சேவலைத் தேடிக் குஞ்சுகளுடன் கிளம்பியது கோழி. சரியாகச் சாப்பிடாமல், ஓய்வெடுக்காமல் வருத்தத்துடன் அலைந்த கோழியையும் குஞ்சுகளையும் கண்ட தேவதைக்குக் கவலையாகிவிட்டது. உடனே கோழிக்கு எதிரில் தோன்றியது.

கோழியே, ஏன் நீயும் உன் குஞ்சுகளும் இவ்வளவு மெலிந்து இருக்கிறீர்கள்?

என் கணவரைத் தேடுவதால், நாங்கள் சரியாக உண்பதில்லை, உறங்குவதில்லை. அவர் இருந்திருந்தால் எங்களுக்கு நல்ல உணவு கிடைத்திருக்கும் என்றது கோழி.

உன் கணவர் இருக்கும் இடத்தை நான் சொல்கிறேன். பதிலுக்கு நீ ஒரு விஷயம் செய்ய வேண்டும்.


கணவர் கிடைத்தால் போதும். என்ன வேண்டுமானாலும் செய்கிறோம் என்று முகம் மலர்ந்தது கோழி.

நான் பறந்து செல்லும்போது ஒரு மந்திர மோதிரம் கீழே விழுந்துவிட்டது. அதைத் தேடித் தந்தால், உன் கணவர் இருக்கும் இடத்தைச் சொல்கிறேன் என்றது தேவதை.

கோழியும் குஞ்சுகளும் மோதிரத்தைத் தேடித் தருவதாக ஒப்புக் கொண்டன. செல்லும் இடங்களில் எல்லாம் மண்ணை நகங்களாலும் அலகாலும் கிளறி கிளறிப் பார்த்தன. மோதிரம் கிடைக்கவில்லை. ஆனால் பூச்சி, புழுக்கள் நிறைய கிடைத்தன. அவற்றை உண்டு கொண்டே, மோதிரத்தைத் தேடியதால் விரைவில் உடல் நிலை தேறின.

நாட்கள் சென்றன. கோழி முதுமையடைந்தது. ஒருநாள் குஞ்சுகளை அழைத்து, குழந்தைகளே, என் ஆயுள் முடியப் போகிறது. உங்களுக்கு அப்பா வேண்டுமல்லவா? அதற்காகத் தேவதையின் மோதிரத்தைக் கண்டுபிடித்து கொடுத்துவிடுங்கள். இது என் இறுதி ஆசை என்றது.

அம்மாவின் பேச்சைத் தட்டாத மகன் சேவல், தினமும் 5 மணிக்கு எழுந்து 'கொக்கரகோ' என்று கூவி, உடன் பிறந்தவர்களை எழுப்பியது. எல்லாம் ஒன்றாகச் சென்று மோதிரத்தைத் தேடின. இன்றுவரை கோழிகளும் சேவல்களும் குஞ்சுகளும் மோதிரத்தைத் தேடுவதை நிறுத்தவில்லை!'



## வர்ணம் தீட்டுவோம்




## விஷத் தவளைகள் உண்டா?



விஷத் தவளைகள் இருப்பது உண்மைதான். தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் உள்ள மழைக்காடுகளில் மட்டுமே விஷத் தவளைகள் (Poison dart frog) வசிக்கின்றன. கண்கவர் வண்ணங்களுடன் அழகாகக் காட்சியளிக்கின்றன. நீலம், பச்சை, மஞ்சள் போன்ற வண்ணங்களில் கறுப்புப் புள்ளிகள் காணப்படுகின்றன. மிகவும் சிறியவை. எதிரியைக் கண்டதும் முதுகில் இருந்து விஷத்தைச் சுரக்கின்றன. இது கடுமையான விஷம் என்பதால் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை. என்னிடம் விஷம் இருக்கிறது, எச்சரிக்கையாக இருங்கள் என்று தெரிவிக்கவே இந்தத் தவளைகளுக்கு கண்கவர் நிறங்கள். 220 வகை விஷத் தவளைகள் இருக்கின்றன.



## இப்படியும் ஒரு தாவரம்!

தென்மேற்கு ஆப்பிரிக்காவில் வளரும் ஒரு வகைத் தாவரத்தின் பெயர் 'வெல்விட்ஸ்-சியா' (Welwitschia) இதன் உயரம் ஓர் அடி. சுற்றளவு பதினைந்து அடிகள். வாழ்நாளில் இரண்டே இலைகள்தான் முளைக்கின்றன. ஆனால் இதன் வாழ்நாளோ 100 வருடம்.






## மெட்டல் டிடெக்டர் எப்படி இயங்குகிறது?

'மெட்டல் டிடெக்டர்' கருவி ஓர் எலக்ட்ரானிக் கருவி. இது மின்சார சிக்னல்களை மிக அதிகமான அலைவரிசைகளில் வெளியிடுகிறது. இந்த மின்சார சிக்னல்கள் உலோகப் பொருள்களைத் தாக்கும்போது திரும்பி வந்து உள்ளே இருக்கும் அலாரத்தைத் தொடுகிறது. உடனே அலாரம் அலறுகிறது. ஆனால் உலோகமல்லாத மரம், பிளாஸ்டிக் பொருள்கள் மீது படும்போது அலாரம் எழுப்புவதில்லை. இந்த மெட்டல் டிடெக்டர் கருவி விமான நிலையங்களிலும் மற்ற இடங்களிலும் வெடிகுண்டுகள், கத்திகள் போன்ற பொருள்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

## ஒட்டக நூலகம்!

ஈரான் நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன் காசிம் இஸ்மாயில் என்ற மன்னர் இருந்தார். சிறந்த சிந்தனையாளர். போரிலும் வல்லவர். அவர் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களைச் சேகரித்து வைத்திருந்தார்.

அவர் எப்பொழுது வெளியூர்ப் பயணம் சென்றாலும் அந்தப் புத்தகங்களை 342 ஒட்டகங்களின் மீது ஏற்றிக்கொண்டு செல்வார். அகர வரிசைப்படி புத்தகங்கள் ஏற்றப்பட்டிருக்கும். அவருக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் கையை உயர்த்துவார். உடனே ஒட்டக வீரர் வந்து, என்ன புத்தகம் தேவை என்பதைக் கேட்டறிந்து, கொண்டு வந்து கொடுப்பார்.

## கிரிக்கெட்டில் பந்து வேகம் எப்படி கணக்கிடப்படுகிறது?

கிரிக்கெட்டில் பந்து வீச்சாளரின் பந்து வேகம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்று தெரியுமா? பந்து வீச்சாளரின் கையைவிட்டுப் பந்து வெளிப்படும்போது ஒரு லேசர் கதிர் பாய்ச்சப்படுகிறது. அதன் பின்பு பந்து கிரிக்கெட் மட்டையைத் தொடப் போகும்போது இன்னொரு லேசர் கதிர் வீச்சு பாய்ச்சப்படுகிறது. பந்து வீச்சாளரின் கைக்கும், மட்டைக்கும் இடையே பந்து பயணம் செய்த வேகம், இரண்டு கதிர்வீச்சுக்கு இடைப்பட்ட நேரத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இந்த இரண்டு லேசர் கதிர் வீச்சின் சராசரி பந்து வேக நேரமே, பந்து வீச்சாளரின் வேகமாகக் கணக்கிடப்படுகிறது.

## சாதனைக் காலம்!

★ தாஜ்மஹால் கட்டி முடிக்க உஸ்தாத் இசா என்ற சிற்பிக்கு 22 ஆண்டுகள் ஆயின.

★ திருமலை நாயக்கர் மஹால் கட்டி முடிக்க 23 ஆண்டுகள் ஆயின.

★ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கட்டி முடிக்க 120 ஆண்டுகள் ஆயின.

★ பைசா கோபுரம் கட்டி முடிக்க 174 ஆண்டுகள் ஆயின.

★ மோனாலிசா ஓவியம் வரைய டாவின்சிக்கு 4 ஆண்டுகள் ஆயின.

★ வால்ட் டிஸ்னி 13 ஆண்டுகால முயற்சிக்குப் பின்னரே கார்ட்டூன் படங்களைத் தயாரித்தார்.

## இன்டர் போல் என்பது என்ன?

சர்வதேசக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட போலீஸ் அமைப்புதான் இன்டர்போல். இதனுடைய தலைமையகம் பிரான்ஸில் உள்ள பாரிஸ் நகரில் இருக்கிறது. சர்வதேசக் கடத்தல், சர்வதேசத் தீவிரவாதிகள், ஒரு நாட்டில் குற்றம் செய்துவிட்டு இன்னொரு நாட்டில் தலைமறைவாகிவிடும் குற்றவாளிகள் ஆகியோரைக் கண்டுபிடிப்பதுதான் இதன் வேலை. இந்த அமைப்பு 1923-இல் உருவாக்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸ் இலாக்காக்கள் இந்த அமைப்பில் பங்கேற்று ஒத்துழைக்கின்றன.

## பொன்மொழிகள்

★ கடவுள் எங்கும் இருக்க முடியாது என்பதற்காகவே தாயைப் படைத்தார்.

- யூத பழமொழி

★ ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமானவள்.

- ஹெர்பட்

★ சொர்க்கம் என்பது தாயின் காலடியில்தான் உள்ளது.

- நபிகள் நாயகம்

★ தாயின் இதயம்தான் குழந்தைகளின் பள்ளிக்கூடம்.

- பீச்சர்

★ உலகத்தில் உள்ள செல்வங்கள் அத்தனையையும் ஒரு தட்டிலும் தாயை மற்றொரு தட்டிலும் வைத்தாலும் தாய் இருக்கும் தட்டுதான் தாழ்ந்திருக்கும்.

- லார்ட் லாங்டேல்

★ எதையும் மன்னிக்கும் நீதிமன்றம் ஒன்று உண்டென்றால் அது தாயின் இதயம்தான்.

- கேசவதேவ்

★ தாயால் உருவாக்கப்படுபவன்தான் சிறந்த மனிதன்.

- எமர்சன்

★ தாயின் அன்பை வெளியிட உலகத்தில் எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை.

- சோபின்


★ எல்லாருடைய ஸ்தானத்தையும் தாய் வகிக்க முடியும். ஆனால் தாயின் ஸ்தானத்தை யாராலும் வகிக்க முடியாது.

- மெர்ஸம்

★ இன்று நான் அடைந்துள்ளவைகளும் இனி அடையப்போகின்றவைகளும் தெய்வம் போன்ற என் தாய்க்கே சொந்தம்.

- ஆபிரஹாம் லிங்கன்

## ஆல்பர்ட் காம்யூ



1913 ஆம் ஆண்டு பிறந்த ஆல்பர்ட் காம்யூ, பிரெஞ்சு தத்துவஞானி, ஆசிரியர், பத்திரிகையாளர் மற்றும் மிகச்சிறந்த எழுத்தாளர். சிறுவயதிலேயே மிகச்சிறந்த பண்புகளையும், விவேகத்தையும் உடையவராக விளங்கினார். நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள் மற்றும் சிறுகதைகள் ஆகியன இவரது படைப்புகளில் அடங்கும். 1957 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றுள்ளார். இலக்கிய துறையில் தனது பங்களிப்பிற்காக உலக அளவில் புகழ் பெற்றவராக விளங்கினார். 1960 ஆம் ஆண்டு தனது 46 வது வயதில், ஒரு கார் விபத்தில் மரணமடைந்தார்.

எனக்குப் பின்னால் நடக்காதே, நான் வழிகாட்டுபவன் அல்ல. எனக்கு முன்னால் செல்லாதே, நான் பின்பற்றுபவன் அல்ல.என்னோடு இணைந்து நட, என்னுடைய நண்பனாய் இரு.

மகிழ்ச்சியைப் பற்றி தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருந்தால் உங்களால் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. வாழ்க்கையின் அர்த்தத்தை தேடிக்கொண்டிருந்தால் உங்களால் ஒருபோதும் வாழ முடியாது.

உங்களால் அனுபவத்தை உருவாக்க முடியாது, அதைச் செயல்பாடாக நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

அச்சத்தின் அடிப்படையில் வரும் மரியாதையை விட, அதிக வெறுக்கத்தக்க செயல் வேறு எதுவுமில்லை.

தைரிய குறைபாடு உள்ளவர்கள், அதை நியாயப்படுத்த எப்போதும் ஒரு தத்துவத்தை தேடிக் கொண்டிப்பார்கள்.

நெறிமுறைகள் இல்லாத மனிதன் என்பவன், இந்த உலகின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு காட்டு விலங்கினைப் போன்றவன்.

எனக்கு ஒரே ஒரு கடமை தெரியும், அது அன்பு செலுத்துதல். வன்முறை என்பது நியாயமற்றதும் மற்றும் தவிர்க்க முடியாததும் ஆகும். நேர்மைக்கு விதிகள் தேவையில்லை.

உண்மையான, தீவிரமான தத்துவார்த்த பிரச்சினை ஒன்று உள்ளது, அது தற்கொலை.

வாழ்க்கையின் மீது விரக்தி இல்லாமல், வாழ்க்கையின் மீது அன்பும் இல்லை.

## வீட்டிற்குள் நுழையக்கூடாத ஆமை எது தெரியுமா?

ஆமைகள் நாம் குடியிருக்கும் வீட்டிற்குள் வரக்கூடாது, அதேபோல், ஆமை நுழைந்த வீடு உருப்படாது என்றெல்லாம் சொல்வதுண்டு. இதில் ஆமை என்பது ஏதோ ஒரு உயிரினத்தைக் குறிப்பதல்ல. கல்லாமை, இல்லாமை, பொறாமை போன்ற ஆமைகள் வீட்டிற்குள் வரக்கூடாது என்பதைத்தான் இப்படி குறிப்பிட்டனர். தெய்வப்புலவர் திருவள்ளுவர், ஆமையாக மாறும்படிநம்மிடம் வேண்டுகோள் விடுக்கிறார். ஒருமையுள் ஆமைபோல் என்னும் குறளில் ஆமைபோல ஐம்புலனையும் அடக்கி ஆளச் சொல்கிறார். ஒருபிறவியில் இதனைக் கற்றுக் கொண்டால் ஏழேழு பிறவிக்கும் நம்மைப் பாதுகாக்கும் என்கிறார். எதிரியிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க, தலை, முன்னங்கால்கள், பின்னங்கால்கள் ஆகிய ஐந்தையும் ஓட்டுக்குள் இழுத்துக் கொள்வது ஆமை. அதுபோல, கண், காது, மூக்கு, வாய். உடல் என்னும் ஐந்தையும் அடக்கி வாழ்பவன் வாழ்வில் உயர்வது உறுதி. ஆமையின் சிறப்பை உலகிற்கு உணர்த்தும் விதத்தில் திருமால் கூர்மாவதாரம் எடுத்து தேவர்களைக் காத்தருளினார். அவரை வழிபட்டவர்க்கு மன அடக்கம், புலனடக்கம் ஆகிய நற்பண்புகள் ஏற்படும்.

## சிம்பொனி இசை உருவான வரலாறு

கடுமையான உழைப்பிற்குப் பிறகு ஒருநாள் பொழுது கழிந்தது. வால்ட் டிஸ்னி களைப்புடன் தூங்கச் சென்றார்.

அந்த இரவு முழுவதும் அவரால் உறங்க முடியவில்லை.

ஏனெனில் நாள் முழுவதும் சுற்றுலா சென்றுவிட்டு வந்த அவர் நண்பர்கள் உரத்த குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

அவரால் உறங்க முடியவில்லை. எனினும் குறட்டை ஒலியை ரசித்து ஒரு சிம்பொனி இசையை உருவாக்கிவிட்டார்.

## இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் தன பாவத்தில் ரவி, சப்தமத்தில் குரு சஞ்சரிப்பதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் கிட்டும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, அதிகாரம் கொள்வர். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் முதலுக்கேற்ப ஆதாய முன்னேற்றம் அடைவர். மாணவர் கல்வி, விளையாட்டுத்துறைகளில் ஊக்கமும், விடாமுயற்சியும் பெறுவர்.




ஜென்மத்தில் ரவி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இவ்வாரம் தேகாபிமானம் அவசியம் தேவை. அல்லாவிடின் வைத்தியச் செலவு ஏற்படும். தன பாவத்தில் புதன், வெள்ளி சஞ்சரிக்கையில் குரு நோக்குவதால் தனலாபம், பொருள் வரவுண்டு. வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் கொள்வர். கன்னியரின் காதல் விவகாரம் கைக்கூடி திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும்.




ஜென்மத்தில் புதன், வெள்ளி பலமடைந்து குருவின் பார்வை பெறுவதால் நோய் அகன்று தேகம் புதுப் பொழிவு பெறும். புத்திரர் உதவி, அனுகூலம் கிட்டும். புத்திச்சாதுரியம் மிகும். எக்கருமத்தையும் நிதானத்துடன் செயல்படலாம். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும், பெறமுடியும். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பூச்சி புழுக்களின் தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம்.




மாதுரு பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் மாதா நலம், கல்வி விருத்தி வாகன சுகம், மனை நலம், குடும்ப சேமம் முதலியன ஏற்படும். வெள்ளி 12 இல் மறைவு, சப்தம ஸ்தானத்தில் செவ்வாயுடன் கேது சஞ்சரிப்பதால் புருஷன், மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் அவ்வவ் போது தோன்றி மறையும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் வேலைச்சுமை குறையும்.




இவ்வாரம் உத்தியோகத்தர்க்கு வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கொள்முதல்களையும் இவ்வாரம் மட்டுப்படுத்தல் வேண்டும். வியாழ சுகயீனம், 5இல் சனி தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டாகும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு மந்த நிலையை பெறும். விவசாயிகளுக்கு கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்களை பெறுவது கஷ்டமாகும்.




தன பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் தன லாபம், பொருள் வரவுண்டு. வெளிநாட்டு நிதி வந்து சேரும் .உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாடபரிகளுக்கு கூட்டு வியாபாரம் நல்ல ஆதாயத்தை ஈட்டித் தரும். விவசாயிகளுக்கு அரச மானியம் உடன் வந்து சேரும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடும். திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும்.




இவ்வாரம் ஜென்மத்து வியாழன் , அஷ்டமத்தில் ரவி, கண்டகச் செவ்வாய், ராகு , கேது தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டாகும். உத்தியோகத்தர் சக ஊழியர்களின் உதவி, அனுசரனையைப் பெற்று வேலைச்சுமை அகலும். வியாபாரிகளுக்கு முதலுற்ற இலாபம் கிடைக்கும். மாணவர் கல்வியில் ஊக்கமும், உழைப்பும் தேவை. ஆசிரியர், மாணவர் உறவு சீராகவே இருக்கும்.




இவ்வாரம் ஏழரை கடைக்கூறு விரய வியாழன், கண்டக ரவி அஷ்டமத்தில் புதன், வெள்ளி தோஷங்கள் இருப்பதால் நவக்கிரக சாந்தி தோஷம் நிவர்த்தி செய்ய வேண்டும். உத்தியோகத்தர்க்கு அதிகாரிகளின் வேலை அழுத்தமும், வேலைப்பழுவும் உண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளை தொடங்கலாகாது. பழைய கடன்கள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். விவசாயிகளுக்கு அரச மானியம் தாமதம் ஏற்படும்.




இவ்வாரம் களத்திர சப்தம ஸ்தானத்தில் புதன், வெள்ளி சஞ்சரிக்கையில் குரு பார்ப்பதால் புருஷன், மனைவி ஐக்கியம். ஒற்றுமை வலுக்கும். புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். களத்தர சுகம் உண்டாகும். இல்லறம் நல்லறமாகும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு ,நிதி வசதிகள், வங்கி இருப்புக்கள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் தம் பணிகளில் உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர்.




இவ்வாரம் ஜீவன பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் தொழிலால் மேன்மை, இலாபம் கிட்டும். வங்கி வசதிகள் கூடும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்படைவர். உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகள் கொள்முதல்களையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பூச்சு புழுக்களின் இருந்து தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம்.




இவ்வாரம் புத்தி, புத்திர ஸ்தானத்தில் புதன், வெள்ளி இருக்கக் குரு நோக்கு வதால் புத்திபலம் கூடும். புத்திரர் உதவி, ஒத்துழைப்புகளை கிடைக்கும். குரு தர்ம ஸ்தானத்தில் சஞ்சாரஞ் செய்வதால் தர்ம, புண்ணிய கருமங்களில் ஈடுபாடு, ஆர்வம் உண்டாகும். நோன்பு, விரதம் அனுஷ்டித்தல், ஆலய தரிசனம் கிட்டும். வியாடபாரிகள் , விவசாயிகள் தத்தம் தொழிலால் கரும முயற்சியால் ஆதாய முன்னேற்றம் உண்டாகும்.




மாதுரு பாவத்தில் புதன், வெள்ளி சஞ்சரிக்கக் குரு நோக்குவதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம் , இல்லற நலம், குடும்ப சேமம் முதலியன உண்டாகும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றமடைவர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடித் திருமண சம்பந்தப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும். வியாபாரிகள், விவசாயிகள் தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் காண்பர். ஆசிரியர், மாணவர் உறவு வளரும்.

# ஐந்து சபைகள் கொண்ட சிதம்பரம்



பஞ்சபூத தலங்களில் ஆகாயத் தலமாக விளங்குவது சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயம். ஐந்து சபைகளில், பொற்சபை என்ற சிறப்பை பெற்ற திருத்தலம். 'சித்' என்றால் 'அறிவு' அல்லது 'ஞானம்', 'அம்பரம்' என்றால் 'ஆகாயம்' அல்லது 'வெளி' என்று பொருள். 'சிதம்பரம்' என்பதற்கு 'அறிவு வெளி'அல்லது'ஞான வெளி' ஆகிறது.

முன் காலத்தில் தில்லை மரங்கள் அடர்ந்த வனமாக இருந்ததால் 'தில்லை நகர்' என்றும், பெருவெளி வடிவமானதால் 'சிதம்பரம்' என்றும், புலிக்கால் கொண்ட முனிவரான வியாக்ரபாதர் வழிபட்ட தலம் ஆகையால் 'புலியூர்' என்றும், பொன் தகடுகளால் வேயப்பட்ட ஆலயம் என்பதால் 'பொன்னம்பலம்' என்றும் பல பெயர்களால் இந்த ஆலயம் அழைக்கப்படுகிறது.

முதன்மைக் கடவுளான சிவன் பரவியிருக்கும் உலகின் வடிவில், திருவாரூர் மூலதாரமாகவும், திருவண்ணாமலை மணிப்பூரகமாகவும், திருக்காளத்தி கழுத்தாகவும், திருவானைக்கா நாபியாகவும், காசி புருவ மத்தியாகவும், சிதம்பரம் இருதயமாகவும் திகழ்வதாக சொல்லப்படுகிறது.

இத்தலத்தில் நடராஜர் திருநடனம் புரியும் தூய செம்பொன்னால் ஆன சிற்சபை, விலைமதிப்பற்ற ஸ்படிக லிங்கத்துக்கு ஆறுகால அபிஷேகம் நடைபெறும் பொன்னால் வேயப்பட்ட முகடு கொண்ட பொற்சபை, பேரம்பலம் எனப்படும் பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளும் தேவசபை, சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் புரிந்த நிருத்த சபை, பக்தர்களுக்கு அபிஷேக ஆராதனைகளுடன் நடராஜப்பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ராஜ சபை எனும் ஐந்து சபைகளும் உள்ளது.

சைவ, வைணவ பேதமின்றி இங்கு வரும் பக்தர்கள், நடராஜரை தரிசித்த உடன் பெருமாளையும் தரிசிக்கும் வண்ணம் கிழக்குப் பார்த்த தில்லைக் கோவிந்தராஜன் சன்னிதி இருக்கிறது. இந்த சன்னிதி ஆழ்வார்களால் மங்களா சாசனம் பெற்றதாகும். நடராஜரின் ஆனந்தக் கூத்தினை கண்டு ஆனந்திக்க, பெருமாள் பள்ளிகொண்ட கோலத்தில் காட்சியளிக்கிறார்.

இத்தலத்தின் சிறப்பே மாயையை உணர்த்தும் சிதம்பர ரகசியம் எனும் இறையின் தத்துவம்தான். ஞானப் பெருவெளி எனும் அகண்ட வெளித் தலமானதால், உருவமற்ற அருவ வழிபாட்டைக் குறிக்கும் வகையில் 'சிதம்பர ரகசியம்' விளங்குகிறது. சபாநாயகரின் வலப்புறத் திரையை அகற்றியவுடன் தொங்கிக் கொண்டு இருக்கும் தங்கத்தால் ஆன வில்வத்தள மாலையை மட்டும் தரிசிப்பது இதனால்தான். இறைவடிவம் ஏதுமற்ற ஆகாயப் பெருவெளி வடிவில் சிவபெருமான் எங்கும் வியாபித்திருப்பதை இது குறிக்கிறது.

## அன்பின் வெளிப்பாடே பொறுமை



நீதிமொழிகள் 16:32 இவ்வாறு கூறுகிறது: வலிமை உடையவரை விடப் பொறுமை உடையவரே மேலானவர்; நகரை அடக்குகிறவரைவிடத் தன்னை அடக்குகிறவரே சிறந்தவர்.

கடவுளிடம் நாம் உலக பிரகாரமான ஆசீர்வாதங்களை பெறுவதற்கே ஜெபம் பண்ணுகிறோம். ஆனால் பொறுமை வேண்டும் என்று ஜெபம் செய்தது உண்டா?

பொறுமை இழந்தால் கோபம் பிறக்கும். எல்லா கொடிய பாவங்களுக்கும் அந்த கோபம் காரணமாக இருக்கிறது. அப்படியானால் நாம் முதலாவதாக பொறுமை உள்ளவர்களாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும் இல்லையா?

வாழ்க்கையில் நாம் திட்டமிட்டபடி அல்லது மனதில் நினைத்தது போல எல்லாம் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதில் சில குறுக்கீடுகள் வந்தால் பொறுமை இழக்கிறோம்.

இயேசுவின் சீடர்கள் குறுக்கீடுகளை விரும்பாததால் குழந்தைகளை இயேசுவிடம் செல்ல அனுமதிக்கவில்லை என்கிறது மத்தேயு 19:14. ஆனால் இயேசுவோ சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வர விடுங்கள், தடுக்காதீர்கள் என்று சொல்கிறார்.

சிரமம் இல்லாத வாழ்க்கையும், நினைத்ததை உடனடியாக சாதித்து விட வேண்டும் என்ற எண்ணமும் எல்லோருக்கும் மேலோங்கி இருக்கிறது. பொறுமையுடன் காத்திருக்க யாரும் விரும்புவதில்லை.

எரிச்சல் அடைவதற்கான காரணங்களைப் பட்டியலிட்டால், சாலை நெரிசல், சுவையில்லாத உணவு, வெயில் கொடூரம், தாமதமான வாகனம், இனிப்பு குறைந்த டீ, நண்பனின் கிண்டல், காத்திருப்பு என சொல்லி கொண்டே போகலாம்.

கடவுள் கொடுத்த விவேகம் தான் நாம் பொறுமையுடன் இருக்க கற்றுக்கொடுக்கும். நான் வெறும் ஒரு மனிதன் தான், கடவுள் அல்ல என்றும், மற்றவர்களும் என்னைப் போல தவறு செய்பவர்கள் தான் என்றும் புரிந்து கொள்ளும் மனப்பான்மை இருக்க வேண்டும்.

கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்றும், அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்ற எண்ணமும் இருந்தால் நமக்குள் பொறுமை தானாகவே வந்து விடும்.

மனிதனுடைய வாழ்க்கைப் பாதையை ஆண்டவர் அமைக்கின்றார்; அப்படியிருக்க தன் வழியை மனிதனால் எப்படி அறிய இயலும்?ʼ(நீதிமொழிகள் 20:24)

அன்பு பொறுமையுள்ளது என்று பைபிள் சொல்கிறது, அப்படியானால், பொறுமை இல்லையேல் அன்பு இல்லை என்பதே பொருளாகும். ஆதலால் அன்பில் இன்னும் ஆழமாக வாழ கற்றுக் கொள்ளுதல் பொறுமையாய் வாழ வழி வகுக்கும்.

ஒருவருக்கு ஒருவர் பொறுமையில் நிலைத்திருங்கள். ஏன் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்றால், நீங்கள் அன்பானவர்கள்.

வாழ்க்கையில் பொறுமை உள்ளவர்களாக இருக்க கடவுளைச் சார்ந்திருக்கும் ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். ஆண்டவர் முன் அமைதியுடன் காத்திரு; தம் வழியில் வெற்றி காண்போரையும் சூழ்ச்சிகள் செய்வோரையும் பார்த்து எரிச்சல் கொள்ளாதே என்று சங்கீதம் 37:7-ல் சொல்லப்பட்டுள்ளது.

பொறுமையை வீடுகளில் ஆரம்பியுங்கள். வீதிகளில் அதை விரிவுபடுத்துங்கள். வாழ்க்கை அழகானது மனமாற ரசியுங்கள். வாழ்க்கை மிகவும் விலைமதிப்பற்றது பொறுமையின்மையால் அதை அழித்து விட வேண்டாம்.

## இறைவனின் விருப்பத்திற்குரிய செயல் எது?

நம்பிக்கை கொண்டோரே! உங்களுக்கோ, பெற்றோருக்கோ! உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் நீங்கள் நீதியை நிலைநாட்டுவோராகவும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவராகவும் ஆகிவிடுங்கள். (வாதியோ, பிரதிவாதியோ) செல்வந்தராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அவ்விருவருக்கும் அல்லாஹ்வே பொறுப்பாளன். நீதி வழங்குவதில் மனோ இச்சையைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் (சாட்சியத்தைப்) புரட்டினாலோ, புறக்கணித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான் என்று திருக்குர்ஆன் (4:135) குறிப்பிடுகிறது.

மனிதர்களில் அனைவரும் சமம், அனைவருக்கும் சமநீதி என்பதே இஸ்லாம் வழங்கும் நீதிமுறையாகும். பணக்காரன்-ஏழை, உயர்ந்தவன்-தாழ்ந்தவன், வெள்ளையன்-கருப்பன் என்ற எந்தவித பாகுபாட்டையும் இஸ்லாம் கடுமையாக எதிர்க்கிறது. அதன் காரணமாக நிகழும் அநீதியையும் கண்டிக்கிறது. நீதியை அனைவருக்கும் சமமானதாக வழங்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கட்டளை.

ʻநம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, நீதிக்குச் சாட்சிகளாக ஆகிவிடுங்கள். ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க, உங்களை தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள்ʼ என்று திருக்குர்ஆன் (5:8) குறிப்பிடுகிறது.

ஒரு சமூகத்தின் மீது பகையே இருந்தாலும் அந்த சமூகத்திற்கு எதிராக அநீதியாக நடந்து கொள்ளாமல் நீதியோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதையே மேற்கண்ட இறைவசனம் சொல்கிறது.

இன்றைய காலத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எங்கும், எதிலும் அநீதிதான். தனி மனிதனிடம், சமூகத்திடம், அரசாங்கத்திடம் என எல்லா இடங்களிலும் ஒருதலைபட்சமான பாகுபாடுகள் நிறைந்திருக்கின்றன. அவர் களின் செயல்பாடுகளே அதை தெளிவாக உணர்த்திவிடுகின்றன.

உதாரணமாக ஒன்றை பார்ப்போம். அருகருகே வசிக்கும் இரு வீட்டாருக்கும் இடையே ஒரு பிரச்சினை ஏற்படுகிறது.

இரு குடும்பத்தாரும் அமர்ந்து பேசுகிறார்கள். ஆனால் தீர்வு எட்டப்படவில்லை.

பிறகு ஊர் பெரியவர்களின் முன்னிலையில் பஞ்சாயத்து செய்கிறார்கள். அங்கு எப்படி முடிவு எடுக் கிறார்கள் என்பது யாவரும் அறியாதது அல்ல. பெரும்பாலும் பணக்காரர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் சாதகமாகவே அந்த முடிவு இருக்கிறது.

இதுபோன்ற செயல்களை எல்லாம் இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, வன்மையாக கண்டிக்கிறது.

இன்று அனைத்து மக்களிடத்திலும் தெரிந்தோ தெரியாமலோ பாரபட்சமாக நடக்கும் குணம் குடிகொண்டிருக்கிறது. மற்றவர்கள் மூலம் தனது குழந்தைக்கு பிரச்சினை என்றால் அதற்கு ஒரு நிலைபாடும், தனது குழந்தையின் மூலம் பிறருக்கு பிரச்சினை என்றால் வேறு நிலைபாடும் எடுக்கிறார்கள். இது அநீதியானது; ஏற்றுக்கொள்ள முடியாதது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு நடந்து கொள்ள சொல்லவில்லை. மாறாக இது போன்ற செயல் வழிகெட்ட முன்னோர்களின் செயல் என்று கண்டிக்கிறார்கள்.

ʻஉங்களுக்கு முன் சென்றவர்கள், தங்களில் உயர்ந்தவர் திருடினால் அவரை விட்டுவிடுவார்கள். பலவீனர் திருடினால் அவருக்கு தண்டனை நிறைவேற்றுவார்கள். அதனால் அவர்கள் நாசமாயினர். அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இந்த முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் அவரது கையை நான் வெட்டுவேன்ʼ என நீதி எப்படி வழங்கப்பட வேண்டும் என்பதை நபியவர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.

ஆள் பார்த்து நீதி வழங்குவதை அவர்கள் கண்டிக்கிறார்கள். மற்றவர்கள் விஷயத்தில் மட்டுமல்ல உங்கள் குழந்தைகள் விஷயத்திலும் நீதமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே நபிகளாரின் வலியுறுத்தலாகும்.

உங்கள் குழந்தைகள் விஷயத்தில் நீதமாக நடக்க வேண்டும். யாருக்கும் எவ்விதத்திலும் அநீதம் இழைத்துவிடக் கூடாது என்பது நபியவர்கள் அறிவுரையாகும்.

இன்று எதார்த்தத்தில் ஆண் குழந்தைகளிடம் அதிக பாசமும், பெண் குழந்தைகளிடம் குறைந்த பாசமும் காட்டி வளர்க்கிறோம். அழகான குழந்தை, அழகில்லாத குழந்தை என்ற பாகுபாடும் இருந்து வருகிறது. இது களையப்பட வேண்டிய மோசமான குணமாகும்.

இன்று பல பிரச்சினைகள் இருந்து வருகின்றன. அதில் முதன்மையாக இருப்பது நிலப்பிரச்சினைதான்.

தனக்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தாலும் அடுத்தவர்களுடைய நிலங்களை ஆக்கிரமிப்பது அதிகரித்து வருகிறது. இந்த விஷயத்தில் அநீதியாக நடந்து கொள்பவர்கள் அல்லாஹ்விடம் அஞ்சிக்கொள்ள வேண்டும். அப்படிப் பட்டவர்களுக்கு இறைவன் கடுமையான வேதனையை வழங்குகின்றான்.

ஓர் அங்குல அளவு நிலத்தை அநியாயமாக அபகரித்துக் கொள்கிறவனின் கழுத்தில் ஏழு நிலங்களாக மாலையாக (மறுமையில்) கட்டித் தொங்க விடப்படும்ʼ என்று எச்சரிக்கையை நபியவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் இறைவனிடம் வேண்டுவது உடனே அங்கீகரிக்கப்படும் என்பதே அதன் பொருளாகும். எனவே யாருக்கும் எவ்வித தீங்கும் இழைக்காமல் எல்லோரிடத்திலும் நீதமாக நடந்து கொள்ள வேண்டும். நீதியாக, நியாய உணர்வுடன் யார் நடக்கிறார்களோ அவர்களைத் தான் இறைவனும் நேசிக்கிறான்.

# செல்வங்களை தரும் வரலக்ஷ்மி விரதம்



பொருளில்லாதோருக்கு இவ் உலகில்லை அருளில்லாதோர்க்கு அவ்வுலகில்லை என்பதற்கு அமைவாக இந்த கலியுகத்தில் மானிடர்களை சீர்தூக்கிப்பார்க்கும் செல்வத்திற்கு அதிபதியான மகாலஷ்மிக்குரிய விரதமான வரலெட்சுமி விரதம் சகல வீடுகள் மற்றும் ஆலயங்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றன.

பெண்களால் வரலெட்சுமி விரதம் கடைப்பிடிக்கப் படுவது சகலவிதமான செல்வயோகங்கள், சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு ,கன்னிப்பெண்களுக்கு மனம் ஒத்த கனவன், போன்ற சகல ஜஸ்வரியங்களையும் வேண்டி. ஆவனி மாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக் கிழமையான (09) வீடுகளிலும் ஆலயம்களிலும் இவ் விரதத்தினை நோற்பதுடன், ஒன்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக அனுஷ்டித்தல் விரதத்தின் நியதியும் பெண்களுக்கு சிறப்புமாகவும் அமைந்துள்ளது

வரலெட்சுமி நோன்பை முன்னிட்டு,அனைத்து இந்து ஆலயங்களிலும் சிறப்பாக அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் விசேட பூசை நிகழ்வுகள் இடம் பெறுவதுடன் சுமங்கலிப் பெண்கள் விரதமிருந்து மஞ்சள் நிறத்தால் ஆன காப்பினை பிரசாதமாக பெற்றுக் கொண்டு அணிந்து கொள்வதும் வழக்கமாகும்.

இவ் வேளையில் விரத்தின் மகிமையினை அறிந்து கொள்வது சிறப்பாகும்.

வரலட்சுமி விரதத்துக்கு புராணக் கதைகள் உண்டு. அன்னை பார்வதியின் சாபத்துக்கு ஆளான தேவர் உலகின் சித்ரநேமி என்ற கணதேவதை, அப்சரஸ் பெண்கள் கடைப்பிடித்த வரலட்சுமி விரதத்தைக் கண்டு அனுஷ்டித்து சாப விமோசனம் பெற்றார்.

பூவுலகில் சௌராஷ்டிர நாட்டின் ராணி சுசந்திரா, செல்வ வளத்தின் மமதையால், மகாலட்சுமியை அவமதித்தாள். அதனால், அனைத்து செல்வங்களையும் இழந்து வருந்தினாள். சுசந்திராவின் மகள் சாருமதி, தெய்வ அனுகூலத்தால் வரலட்சுமி விரதம் பற்றி அறிந்து, அதைக் கடைப்பிடித்தாள். அதனால் மகிழ்ந்த மகாலட்சுமித் தாய், அவளுக்கு சகல நலன்களையும் அருளினாள். சுசந்திராவும் தன் மகளைப் பார்த்து வரலட்சுமி விரதம் கடைப்பிடித்து, இழந்த செல்வத்தை மீண்டும் பெற்று வளமோடு வாழ்ந்தாள்.

இப்படி சகல வளங்களையும் தரும் இந்த வரலட்சுமி விரத பூஜையை, ஆவணி மாத பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமை அன்று செய்ய வேண்டும். முக்கியமாகச் செய்ய வேண்டியவர்கள் பெண்கள் சுமங்கலிகள், தாலி பாக்கியத்துக்காகவும், சுபிட்சம், சௌபாக்கியம் போன்றவற்றுக்காகவும் இந்த விரதத்தை மேற்கொள்ள வேண்டும்.

கேட்கும் வரங்களைத் தரும் லட்சுமிதேவியை பூஜித்தல் திருமணமான பெண்கள், தங்கள் திருமணத்தை அடுத்துவரும் வரலட்சுமி பூஜையிலிருந்து இதை ஒவ்வொரு வருடமும் செய்யவேண்டும். வரலட்சுமி விரதத்தின் போது வீட்டுக்கு விலக்காக இருந்தால் அடுத்துவரும் வெள்ளிக்கிழமை இந்த பூஜையைச் செய்யலாம். இதைச் செய்யும்போது, சிறு பெண்களும் உடனிருந்து சரடைக் கட்டிக் கொள்ளலாம். மறுநாள் அம்மனுக்கு ஆரத்தி எடுத்த பின்னர் கலசத்தை அரிசி வைத்திருக்கும் பானையில் வைக்கவேண்டும்.

எல்லோராலும் மிக விரிவாகச் செய்ய இயலாவிட்டாலும், ஈடுபாட்டோடு தெரிந்த பாடல்களைப் பாடி, மகாலட்சுமி அஷ்டோத்திரம் சொல்லி, பூக்களால் அர்ச்சனை செய்து, நிவேதனம் செய்து, நோன்பு சரடை கையில் கட்டி நிவேதனத்தை எல்லோருக்கும் கொடுத்து, வயதான சுமங்கலிப் பெண்களை வணங்கி தானங்கள் செய்து இந்த விரத பூஜையை நிறைவு செய்யலாம்.

இரத்தினம் நடராஜன்

கொஞ்சம் சாஸ்திரோக்தமாக விரதமிருந்து பூஜையைச் செய்ய விரும்பினால், விக்னேஸ்வர பூஜை தொடங்கி, சங்கல்பம், கலச பூஜை, பிராணப்ரதிஷ்டை, தியானம், ஷோடசோபசாரம், அங்க பூஜை, லட்சுமி அஷ்டோ த்ரம், தோரக்ரந்தி பூஜை, பிரார்த்தனை, ஆரத்தி என்று விரிவாகச் செய்ய வேண்டும்.

விரத்த்திற்கு தேவைப்படுபவையாவன மஞ்சள் பொடி (பிள்ளையார் பிடிக்க), நுனிவாழை இலை, அரிசி, தேங்காய், எலுமிச்சம்பழம், குங்குமம், சந்தனம், புஷ்ப வகைகள், வெற்றிலை, பாக்கு, பழம், கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, அட்சதை, வஸ்திரம், மஞ்சள் சரடுகள், பஞ்சாமிர்தம், குத்துவிளக்கு, திரிநூல், நல்லெண்ணெய், தீப்பெட்டி, தாம்பாளம், பஞ்சபாத்ரம், உத்தரிணி, கிண்ணம், கற்பூரத் தட்டு, தூபக்கால், தீபக்கால், மணி ஆகியவை.

அன்றைய தினம் நிவேதன்ங்களாக பொங்கல், பாயசம், அப்பம், வடை, கொழுக்கட்டை, லட்டு, தயிர், பசும்பால், நெய், தேன், கற்கண்டு, ஆரஞ்சு, மாதுளை, விளாம்பழம், மாம்பழம், வாழை, திராட்சை போன்றவற்றினை சிறப்பாக குறிப்பிடலாம்.

வீட்டின் கிழக்கு திசையில் ஈசான்ய மூலையில், பூஜைக்கான இடத்தை அமைத்து, நன்றாக மெழுகி, கோலமிட்டு, மண்டபம் அமைத்து, அலங்கரிக்கவும். மண்டபத்தின் கீழ் நுனி வாழை இலையில் நெல்லைப் பரப்பி, அதன் மீது ஒரு தட்டில் அரிசியை வைக்க வேண்டும். அதன் மேல் கலச கும்பத்தை வைக்க வேண்டும். அரிசி, தங்கம், ரத்தினம் ஆகியவற்றை கும்பத்தில் நிரப்பவும் (தீர்த்தத்தையும் நிரப்பலாம்). மேலே மாவிலைக் கொத்தும் தேங்காயும் வைத்து அலங்கரித்து, புதிய வஸ்திரம் சாற்றி, தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்ட நான்கு கரங்கள் கொண்ட மகாலட்சுமியின் பிரதிமை பிம்பத்தை (முக பிம்பத்தையும் வைக்கலாம்) மேலே வைத்து பூக்கள் சூட்டி அலங்கரிக்கவும் (சில இடங்களில் வீட்டின் பூஜை அறை ஒட்டிய சுவரில் வெள்ளை அடித்து அம்மனின் திருவுருவத்தை எழுதி ஆவாஹணம் செய்கிறார்கள். பூஜைக்காக வைக்கப்படும் கலசத்தில் காதோலை, கருமணி, எலுமிச்சம்பழம் முதலியவையும் போடப்படுகிறது.)

பூஜையின் முடிவில் மஞ்சள் கயிறை(சரடு) கையில் கட்டிக் கொள்கிறார்கள். மஞ்சள் கயிறு மங்கலத்தின் அறிகுறி. அஷ்ட லட்சுமிகளுடன் வரலட்சுமியையும் சேர்த்து ஒன்பது லட்சுமிகள் என்று சாஸ்திரம் சொல்கிறது. எனவே, ஒன்பது நூல் இழைகளால் ஆன, ஒன்பது முடிச்சுகள் போடப்பட்ட நோன்புக் கயிறை (சரடை) பூஜையில் வைக்க வேண்டும்.

விரதம் மேற்கொள்ளும் வெள்ளிக்கிழமை காலை 10.30க்கு முன் ராகு காலத்துக்கு முன் (சிலர் மாலை வேளையிலும் செய்வர்) ஒரு தாம்பாளத்தில் அரிசி பரப்பி, அதன் மேல் கலசம் வைத்து, பழம் வெற்றிலை பாக்கு நிவேதனம் வைத்து, வாசலின் உள் நிலைப் படி அருகே நின்று கற்பூரம் காட்டி, ஆரத்தி எடுத்து மகாலட்சுமித் தாயை வீட்டுக்கு அழைத்து வருவதாக பாவனை செய்து, பயபக்தியுடனும் அழைத்து வந்து, அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் உள்ள கலசத்தில் வைத்திருக்கும் மகாலட்சுமி பிரதிமை பிம்பத்தில் இருந்து விரத பூஜையை ஏற்று அருள் புரியுமாறு மகாலட்சுமியை வேண்டிக் கொண்டு, ஆவாஹணம் செய்ய வேண்டும். அப்போது, மங்களகரமான தோத்திரங்களைச் சொல்லி, பாடல்களைப் பாட வேண்டும்.

பூஜைக்குத் தேவையானவற்றை அருகில் வைத்துக்கொண்டு பூஜையைத் தொடங்கவும். பஞ்சாங்கம் பார்த்து, நாள், திதி, வருடம், பட்சம், மாதம் ஆகியவற்றை அறிந்து குறித்துக் கொள்ளவும்.

மேற்கொள்ளப்படும் விரத பூஜை எந்தவித இடையூறுகளும் இல்லாமல் நன்கு நடைபெற வேண்டும் என்பதற்காக, விக்னங்களைக் களையும் விநாயகரை பூஜித்து, பிறகு வரலட்சுமி பூஜையைத் தொடங்க்குதல் சிறப்பாகும்.

ஆண்டுதோறும் வரலெட்சுமி நோன்பின் போது, திருமணமான சுமங்கலிப் பெண்கள் விரதம் இருந்து, வீடுகளில் லட்சுமி ஆவகணம் செய்து வழிபாடு நடத்தி, குங்குமம், பூ, வெற்றிலை, துணிமணிகள் உள்ளிட்டவற்றை ஏனைய பெண்களுக்கு வழங்கி வழிபாடு நடத்துவது வழக்கம். அதன்படி, உலகம் முழுவதும் வாழுகின்ற இந்து மக்களால் இன்று வரலெட்சுமி நோன்பு, அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிட்த்தக்கதாகும்

இவ் புனிதமான நன்நாளில் மகாலெட்சுமி தேவியினை விரதமிருந்து பூசித்து அவளின் அருட் கடாட்சத்தினை பெற்று செல்வச் செழிப்புடன் வாழ்வோமாக.

# மட்டக்களப்பில் பேச்சியம்பாள் வழிபாடு!

மட்டக்களப்பு மாநிலத்தில் பேச்சியம்பாள் வழிபாடு பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்தே இவ்வழிபாடு இங்கு பரவியுள்ளது என்பதற்கு கம்சவதம் நிறுவி நிற்கின்றது. ஆயர் பாடியில் அவதரித்த கம்ச சங்கார காரண நாரணிக்கு தமிழ் நாட்டில் வழிபாடு ஓரிரு இடங்களிலேதான் நடைபெறுவதாக அறிய முடிகின்றது. திருநெல்வேலியில் கழுகு மலைக்கு அருகிலுள்ள பேச்சியாலயம் பற்றிக் கூறப்படுகின்றது. ஆனால் மட்டக்களப்பில் ஆகாயப் பேச்சி, பள்ளயப் பேச்சி, சுடலைப் பேச்சியென மூன்று வகையாகப் பேசப்பட்டாலும் அதிகமாகப் பள்ளயப் பேச்சி, ஆகாயப் பேச்சி வழிபாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் காணப்படும் மாரியம்பாள் ஆலயங்களிலே அதிகமாக பேச்சியம்பாளையும் ஒரு பரிபாரத் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். காளி கோவில்களிலும் பரிபாரத் தெய்வங்களிலொன்றாகவே பேச்சியம்பாள் வழிபடப்படுவதும் காணப்படுகின்றது. உதாரணமாக புன்னைச்சோலைப் பத்திரகாளியாலயம், ஆரையம்பதி வடபத்திரகாளி யாலயங்களையும் குறிப்பிடலாம்.

தின் முழுமுதற பரம்பொருளான சிவன் பன்னீராயிரம் அவதாரங்கள் எடுத்துக் காக்கும் அதேவேளை இறையின் திருவருள் சக்தியாகிய பராசக்தியும் அதற்கீடாக அவதாரங்களை எடுத்து அருளாட்சி புரிந்திருப்பதனைக் காணலாம். இறைவனது இத்தகைய அவதாரங்களுள் ஒன்றாகவே பேச்சியம்பாள் அவதார அற்புதங்களும் மனங்கொள்ளத் தக்கதாகும்.

பரமனொரு போது பன்னீராயிரம்
உருவெனத் தோற்ற
எவ்வுயிர்க் குயிராயுத்தமி
உமைவராகி உமாபதி லீலி
பித்தனாருடன் பேச்சியானவளே

எனப் பேச்சியம்பாள் அகவல் கூறி நிற்பதிலிருந்து புலனாகின்றது. பேச்சியின் அவதார நோக்கங்களுள் ஒன்றாக கம்சசங்கார காரணநாரணி பற்றியிங்கு அறிய விளைவோம். பேச்சியம்பாளுக்கு அம்மச்சி, அம்மூச்சி, பிடாரி, பணிக்கக்காரி, கருணைசொருபி யென்று பற்பல நாமங்கள் உள்ளதாக அறிய முடிகின்றது. விபுலானந்தர் யாழ் நூலை யார்ப்பதற்கு முன்னர் கல்லடி- உப்போடை பேச்சியம்பாளை வழிபட்டு பத்து விருத்தப்பா பாடியதில்

ஒரு நாள் பிரம்மா உலகத்தில் கந்தரூபர்கள் அறுவரும் பிரமனைக் கேலி செய்ததனால் கோபமுற்ற பிரமன் துபாபரயுகத்தில் பூலோகத்தில் போய்ப் பிறக்கக்கடபது எனச் சாபமிட்டார். அந்த அறுவரும் பூலோகத்தில் பிறந்து நெடுங்காலம் வாழவிரும்பாது நாரதர் பாதாரவிந்தங்களைப் பணிந்து, சுவாமி! நாங்கள் எங்கு பிறந்தாலும் அங்கு வந்து கலகம் செய்து எங்களை மீண்டும் எங்கள் பதவிக்கு அனுப்பி வையுங்கள் என்று வேண்டிக் கொண்டனர். துபாபரயுகம் ஆரம்பமானது அப்போது வடமதுராவை உக்கிரசேனன் என்ற அரசன் ஆட்சி செய்து வந்தான். அவனின் ஒரு மகன் கம்சன் கெட்ட நண்பர்களின் தீய சகவாசத்தாலும் துற்புத்தியாலும் தந்தையைச் சிறையிலடைத்து தான் ஆட்சியைக் கைப்பற்றி அதர்ம வழியிலே கொடுமைகள் புரிந்து மக்களைத் துன்புறுத்தி கொடூர ஆட்சி நடத்தினான். அக்காலை தமது குருவாகிய வாசுதேவருக்கு தமது சித்தப்பா தேவகன் மகளான தேவகியை திருமணம் செய்து வைத்து அவர்களைக் கம்சன் தேரினிலே ஏற்றி அழைத்துச் செல்கின்ற வேளை அடேய் கம்சா! உல்லாசமாய் அழைத்துச் செல்லும் உனது தங்கையின் எட்டாம் மகனாலேயே உனக்குக் கட்டாயம் மரணம் ஏற்படும் என்று ஆகாய மார்க்கமாக ஓர் அசரீரி கேட்டது. அந்த நிமிடமே கம்சன் பந்த பாசம் மறந்தான். சகோதரியின் கூந்தலைப் பிடித்து இழுத்து உடை வாளை உருவி வெட்ட முயன்ற போது பொறு, பொறு கம்சா! உனக்கு இவளா இயமன்? எமக்குப் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையையும் உன்னிடமே ஒப்படைக்கின்றோம். குழந்தைகளை எது வேண்டுமாயினும் செய்து கொள், இப்போ அவளை விட்டுவிடு என்ற குருதேவரின் கட்டளைப் படி விட்டுவிட்டான்.

முதலாவது குழந்தை பிறந்ததும் கம்சனிடம் வசுதேவர் குழந்தையைக் கொடுக்க இந்தப் பிஞ்சுக் குழந்தையா என்னைக் கொல்லப் போகிறது, எட்டாவது குழந்தையாள் தானே எனக்கழிவு? நீங்கள் கொண்டு சென்று வளருங்கள் என்று கூறிக் குழந்தையை கொடுத்து விட்டான். இவ்வாறே அடுத்தடுத்துப் பிறந்த ஆறு குழந்தைகளையும் வளர்க்கும் படி கொடுத்து விட்டான். அவனது அரச சபைக்கு வந்த நாரதரை வரவேற்ற கம்சன் ஏதாவது விசேடமா நாரதனே என வினவ, ஆறு குழந்தைகளும் உனக்கு இயமனாச்சே? ஏன் விட்டு வைத்திருக்கின்றாய்? எட்டாவது குழந்தையால் கட்டாயம் அழிவென்றால், எட்டாவது குழந்தையில் இருந்து மறுபுறமெண்ணினால் முதலாவது குழந்தையும் எட்டாவதாகத் தானே வரும் என்று நாரதர் கூறிச் செல்ல, தங்கையின் வீட்டிற்குச் சென்ற கம்சன் ஆறு குழந்தைகளையும் ஒவ்வொன்றாகக் காலில் பிடித்து சுவரில் மோதியடித்துக் கொல்ல தங்கை அழுது அரற்றியும் அவன் கேட்கவில்லை. நாரதரிடம் கந்தரூபர்கள் கேட்டுக் கொண்டபடி அவர்களின் வேண்டுகோள் நிறைவேறியது. ஆனால் தேவகி ஏழாவது கற்பமுற்றதை அறிந்த கம்சன் பயந்து, வசுதேவரையும் தேவகியையும் கால், கைகளுக்குச் சங்கிலி பூட்டிச் சிறையில் வைத்து பலத்த காவலும் வைத்தான். ஐந்து மாதக் கற்பத்தில் இருந்த குழந்தையை, பகவான் வசுதேவரின் முதலாவது மனைவியாகிய ரோகினி வயிற்றுக்கு மாற்றி விட்டார். கம்சனிடம் கற்பம் கலைந்து விட்டது என்று பொய் கூறினார்கள். எட்டாவது கற்பம் உற்றாள் தேவகி. எட்டாவது எனக்கு இயமன் எனவே எந்த வகையிலும் தப்பிக்க விடக் கூடாது என்று பாதுகாப்பை பலப்படுத்தினான். அதே சமயத்தில் ஆயர் பாடியில் யசோதரையும் கருவுற்றிருந்தாள்.

இறைவனுடைய ஆலோசனைப்படி மாயையால் உலகமாதாவாகிய ஆதிபராசக்தியை யசோதை வயிற்றில் குழந்தையாகப் பிறக்கும் படி அனுப்பி வைத்தார் பகவான். ஒரே நேரத்தில் வசுதேவர், தேவகி இருவர் கனவிலும் தோன்றி பகவானாகிய நானே உங்கள் தவப்படி பிறக்கின்றேன். நானிங்கு பிறக்கும் அதே நாளில் சில நாளிகையின் பின்னர் ஆயர் பாடியில் யசோதை வயிற்றில் எரு பெண் குழந்தை பிறக்கும் வசுதேவரே! சிறைக்கதவுகள் தானாகத் திறக்கும், விலங்குகள் விலகி வழிவிடும். என்னைக் கூடையிலே எடத்தச் சென்று ஆயர் பாடியில் யசோதையருகே கிடத்தி விடு. அங்கே இருக்கும் பெண் குழந்தையை இங்கே கொண்டு சேரும். எல்லாம் நல்ல படியாகவே நடக்கும் என்று கூறியதற்கமையவே குழந்தை பிறந்ததும், வசுதேவர் செயற்படுத்தினார். சிறைக்கதவு தானாகவே மூடிக்கொண்டது. விலங்குகள் மறுபடியும் பூட்டிக் கொண்டன. தேவகியருகில் கிடத்தப்பட்ட பெண் குழந்தை குவா குவா எனக் குரல் கொடுத்து அழுதது. குழந்தையின் அழுகுரல் கேட்ட கம்சன் எட்டாவது குழந்தை பிறந்து விட்டது என்று சத்தமிட்டபடி சிறையை நோக்கி அமைச்சர் பின் தொடர ஓடி வந்தான். கம்சனின் கொலை வெறிக் கோலத்தை கண்ட தேவகி, அண்ணா இது பெண் குழந்தையடா? இந்த குழந்தையா உனக்கு யமன்? விட்டு விடுங்கள் அண்ணா எனக் கண்ணீர் மல்கிக் கதறினாள். இல்லவே இல்லை இது எட்டாவது குழந்தை ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரிஇதனாலேயே எனக்கழிவு என்று சொல்லிக் கொல்ல நினைக்கையிலே அருகே சென்ற அமைச்சர், அரசே! குழந்தையைத் தூக்கி மேலே வீசுங்கள், வாளைத் திருப்பிப் பிடியுங்கள் குழந்தை வாளில் பட்டு வெட்டுண்டு இறந்து விடும், பாவம் உங்களுக்கில்லை என்றான். அதுவும் சரிதான்

32 ஆம் பக்கம் பார்க்க....

பேச்சியம்பாளின் அவதாரம் பற்றி இந்தியாவின் தமிழகத்திலே பல்வேறுபட்ட கர்ணபரம்பரைக் கதைகள் வெவ்வேறு பட்ட கருத்துக்களைக் கூறி நிற்கின்றன. தெய்வத்தின் குரல் என்ற புத்தகத்தில் சங்கராச்சாரியார் சுவாமிகள் பேச்சியம்பாள் பற்றிக் கூறியுள்ளார். திருநெல்வேலி பேச்சியம்பாளின் தோற்றம், உற்பத்தி பற்றியவ் வாலய வரலாறு கூறுவதிலிருந்து சங்கு, சக்கர, அபய, வரத கைகளுடன் சாந்த சொருபியாகவும், பேசாதவர்களைப் பேசவைக்கும் பேச்சியம்பாளாகவும் அதனால் சரஸ்வதி யென்னும் பெயர் பெறுகின்றாள். காரணகாரியத்தோடு பேச்சியம்பாளின் அவதார வரலாற்றினை சரியான ஒழுங்கு முறையில் கூறி எழுதுவதற்கு உத்வேகம் அளித்த மதிப்புக்கும் வணக்கத்துக்கு முரிய சுவாமி பிரமச்சாரி ஜாக்ரத்சைத்தன்யா (சின்மயா ஆச்சிரமம், இராம்போடை) அவர்கள் பேச்சியம்பாள் பற்றிச் சொன்னதையும் இங்கு கூறுகின்றேன்.

உலகில் அதர்மம் மலிந்து தர்மம் அழிந்து போகும் காலை அவ்வப் போது அதர்மத்தை அழித்து தர்மத்தை ஸ்தாபிதம் செய்வதற்கு பல வடிவங்களில் பல்வேறு அவதாரங்களை எடுத்து அருளியிருப்பதனை இந்து சமய வேதாகம, புராணங்கள் விளக்கி நிற்கின்றன. இந்த வகையில் சைவசமயத் ஐந்தாவது விருத்தப்பாவில் பேச்சியம்பாளை சாரதா தேவியராகக் காண்பதாகவும் பாடியுள்ளதை அறியக் கூடியதாக உள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

கிரேதாயுகத்தில் படியளக்கும் பரம்பொருளான பகவானிடம் பரபக்திகொண்ட பல தேவர்கள் அவரைப் பல முறைகளில் தொட்டு (பற்றி) இன்புற விருப்புக்கொண்டு பல வடிவங்களில் அவதரித்து தங்கள் தங்கள் வேண்டுகோள்களைப் பூர்த்தி செய்யும்படி தவமியற்றி வேண்டுதல் செய்தனர். கிரேதாயுக இராமபிரான் அவதாரத்தில் ஏகபத்தினி விரதனாக இருந்து ஒருவனுக்கு ஒருத்தி என்ற உன்னத நோக்கின் போக்கினை நிலைநிறுத்தி இந்த உயர்வான இலட்சியத்தை காப்பதுவே இவ்வவதாரத்தின் காரணகாரியத்தில் ஒன்றாகும் என்பதையும் துபாபரயுகத்தில் கிருஷ்ணராக அவதாரம் எடுக்கும் போது உங்களுள் தவம் பலிதமடையுமென்றும் பகவான் திருவாய் மொழிந்தருளிய படி, வாசுதேவரும் தேவகியும் பகவானே தங்களுக்;கு மகனாகப் பிறக்க வேண்டும் என்றும், நந்தபோபனும் யசோதையும் பகவானை மகனாக வளர்க்க வேண்டும் என்றும் பல காலம் தவம் செய்த பலனும்; துபாபரயுகத்தில் நிறைவேறும் என்றார்.

மூ.அருளம்பலம்
(ஆரையூர் அருள்)

# ஆகஸ்ட் 6
## அணுவாயுதம் பரீட்சித்த நாள்



என்.ஹரன்

ஆகஸ்ட் 6, 1945, இந்த உலகமே மறக்க முடியாதபடி, உலகின் முதல் அணுகுண்டு ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா நகர்மீது வீசப்பட்ட நாள். பின்னர் ஆகஸ்ட் 9, 1945 அன்று நாகசாகிமீது வீசப்பட்டது இரண்டாவது அணுகுண்டு. இதுநாள் வரையில் இதன் தாக்கங்களைச் சுமந்து கொண்டிருக்கும் ஜப்பான், இன்று ஹிரோஷிமா குண்டுவெடிப்பின் 74-வது நினைவு நாளை அனுசரித்து வருகிறது.

இரண்டாம் உலகப் போரின் காரணமாக ஜப்பான், அமெரிக்காவின் முத்து துறைமுகத்தைத் தாக்கவே அதற்குப் பதிலடி கொடுக்க விரும்பியது அமெரிக்கா. அதற்காக ஜப்பான்மீது குண்டு வீசுவதற்கான இறுதி உத்தரவு ஆகஸ்ட் 2-ம் தேதி பிறப்பிக்கப்பட்டது.



தற்காலத்தில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் கண்டனம் மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் வட கொரியா தொடர்ந்து அணு ஆயுதங்களையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் சோதித்து வந்தது. அமெரிக்கா விதித்த பொருளாதார தடைகளையும் கண்டுகொள்ளவில்லை.

அமெரிக்காவுக்கு பெரும் தலைவலியை கொடுக்க, இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் உருவானது. பின்னர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12-ம் தேதி, சிங்கப்பூரில் அமெரிக்க அதிபர் டிரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் சந்தித்து பேசினர். அப்போது, கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதங்கள் இல்லாத பகுதியாக மாற்ற வடகொரியா முன்வந்தது. இது தொடர்பாக இரு தரப்பிலும் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்பின்னர் ஆயுத சோதனைகளை வடகொரியா நிறுத்தியது.

அமெரிக்காவுடனான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், வடகொரியா மீண்டும் ஆயுத சோதனையை தொடங்கி உள்ளது. சமீபத்தில் குறுகிய தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை சோதனை செய்தது. இதற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால், இது தற்காப்புக்காக நடத்தப்பட்ட பயிற்சிதான் என வடகொரியா விளக்கம் அளித்துள்ளது.

இந்நிலையில், வடகொரியாவின் இந்த செயல் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், அணு ஆயுதங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் அது தொடர்பான சோதனை திட்டங்களை கைவிட வேண்டும் என்று 70 நாடுகள் வலியுறுத்தி உள்ளன.

இதுதொடர்பாக பிரான்ஸ் நாடு கொண்டு வந்த இந்த வரைவு அறிக்கையில், அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஆசிய நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள் என மொத்தம் 70 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. வடகொரியாவை ஆதரிக்கும் சீனாவும் ரஷியாவும் இந்த அறிக்கையில் கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹிரோஷிமா, கோகுரா, நாகசாகி மூன்று நகரங்களும் இறுதி இலக்குகளாக முடிவு செய்யப்பட்டு ஆகஸ்ட் 6-ம் தேதி அதிகாலை 1.45 மணிக்கு (ஜப்பான் நேரம்) அணுகுண்டைச் சுமந்து கொண்டு ‘எனோலா கே’ என்ற பி-29 ரக விமானம் புறப்பட்டது. ‘லிட்டில் பாய்’ என்ற அந்த குண்டு, இன்று வரை உலகம் பார்த்த மிக மோசமான பேரழிவை ஹிரோஷிமாமீது கட்டவிழ்த்தது.



இத்தாக்குதல் பல லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து இன்று வரையில் அதன் ரணங்களை விரவச்செய்து வருகிறது.

குண்டுவீச்சு தாக்குதல் நடந்த 72-வது நினைவு தினம் ஜப்பானிலுள்ள அமைதிப் பூங்காவில் இன்று அனுசரிக்கப்பட்டது. ஜப்பான் பிரதமர் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்ட இந்த அஞ்சலிக் கூட்டத்தில் உலகில் அமைதி நிலவ, அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும். இதற்கான இயக்கத்தை தலைமையேற்று வழிநடத்தவும் ஜப்பான் தயாராக உள்ளது’ என அறிவிக்கப்பட்டது.



உலக வரலாற்றில் மிகக்கொடூரமான தக்குதல் என்றால் அது ஜப்பான் மீதுஅமெரிக்க நடத்தியஅணு ஆயுதத் தாக்குதல்தான். 1945 ஆம் ஆண்டுஆகஸ்டு மாதம் 6 ஆம் தேதி ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின்மீது **little boy** என்ற அணுகுண்டை அமெரிக்காவீசியது. மூன்று நாட்கள் கழித்துநாகசாகி நகரத்தின் மீது ஹூச்ணு ஞணிதூ என்ற அணுகுண்டை வீசியது . இந்த குண்டு வீச்சினால் ஏற்பட்ட மரணங்களும் சேதமும் இன்றுவரைதுல்லியமாக மதிப்பிடமுடியவில்லை.

சுமாராகக் ஹிரோஷிமாவில் மட்டும் குறைந்தபட்சம் 1, 40,000 பேரும் 74,000 பேர் நாகசாகிலும் மரணமடைந்தனர்.இந்த தாக்குதலின் கதிர்வீச்சால் பாதிக்கப்படவர்களின் நிலை மிகவும் மோசமாயிருந்தது. குண்டு வீச்சு நிகழந்து பல ஆண்டுகள் கழித்து பிறந்த குழந்தைகள்கூட இந்த அணுகுண்டியின் கதிர்வீச்சால் பாதிப்புக்குள்ளானார்கள்.

முதல் அணுகுண்டு வீச்சு: அமெரிக்கா ஹிரோஷிமா நகர் மீது 1945ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் தேதி உலகின் முதல் அணுகுண்டை வீசியது. இதில் ஏராளமான பொருட் சேதகங்களும் உயிர் சேதங்களும் ஏற்பட்டன. அணு ஆயுதங்கள் அதிகரித்து வருவது உலக பாதுகாப்பை அச்சுறுத்துவதாக இருக்கிறது  மேலும் உலக தலைவர்கள் அனைவரும் அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை உருவாக்கம் வேண்டும் என்று கட்டுரையாளர் கேட்டுக் கொள்கிணறார்.

2 ஆயிரம் மடங்கு பெரியது குண்டு: அமெரிக்க அதிபர் ஹாரி எஸ் ட்ரூமன் குண்டு வீசப்பட்ட தகவலை அட்லாண்டிக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்ட போர்கப்பல் அகஸ்டாவிலிருந்து அறிவித்தார். இதற்கு முன் உருவாக்கப்பட்ட பெரிய குண்டை விட 2 ஆயிரம் மடங்கு பெரிய குண்டு அதிபர் எனவும் அவர் கூறினார்.

குண்டின் பெயர் லிட்டில் பாய்: ஹிரோஷிமா மீது வீசப்பட்ட குண்டுக்குலிட்டில் பாய் எனப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. முந்தைய அதிபர் ரூஸ்வெல்ட்டைக் குறிக்கும்வகையில் இந்தப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. 12-15 ஆயிரம் டன் டிஎன்டி வெடிபொருள் சக்தியை அந்த அணு குண்டு கொண்டிருந்தது. 13 சதுர கிலோ மீட்டர் பரப்பை அந்த அணுகுண்டு நாசம் செய்தது.

அமெரிக்க **B 29** உள்ளூர் நேரப்படி காலை 8.15 மணிக்கு எனோலா கே என்ற அமெரிக்க **B** - 29 விமானத்திலிருந்து இந்த குண்டு வீசப்பட்டது.

ஆவியான சம்பவம்: குண்டு விழுந்த இடத்திலிருந்து 500 அடி சுற்றளவில் இருந்த அனைவரும் அப்போதே ஆவியாகினர்.

ஜப்பான் அறிவிப்பு: இந்த குண்டு வீச்சில் 1,18,661 பொது மக்கள் கொல்லப்பட்டதாக அந்த நேரத்தில் ஜப்பான் அறிவித்தது.

1,40,000 பேர் பலி: ஹிரோஷிமாவில் வசித்த 3,50,000 பேரில் 1,40,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என அறியப்படுகிறது. இந்த குண்டு வீச்சினால் ஏற்பட்ட கதிர்வீச்சில் பலர் நீண்ட காலத்திற்கு நோய்வாய்ப்பட்டு இறந்தனர். பலர் உடல் ஊனமடைந்தனர்.

நாகசாகி மீது மீண்டும் குண்டு வீச்சு: இதற்கு மூன்று நாட்களுக்குப் பிறகு, நாகசாகி நகரத்தின் மீது மீண்டும் ஒரு அணுகுண்டு வீசப்பட்டது. இதனால் 74,000 பேர் கொல்லப்பட்டனர்.

நேசநாடுகளிடம் சரணடைந்த ஜப்பான்: இந்த அணுகுண்டு வீச்சால் ஆசிய உலகப் போர் சட்டென முடிவுக்கு வந்தது. ஆனால், குண்டை வீசுவதற்கு முன்பாகவே ஜப்பான் சரணடையும் நிலையில் இருந்தகாக விமர்சகர்கள் கூறுகின்றனர். இரண்டு அணுகுண்டுகள் வீசப்பட்டதும், 1945 ஆக்ஸட் 8ஆம் தேதியன்று ஜப்பான் மீது சோவியத் ரஷ்யா போர்ப் பிரகடனம் செய்ததும் ஜப்பானுக்கு வேறு வழியில்லாமல் போனது. அதே மாதம் 14ஆம் தேதி நேச நாடுகளிடம் சரணடைந்தது ஜப்பான்.

அணு ஆயுதங்கள் அதிகரித்து வருவது உலக பாதுகாப்பை அச்சுறுத்துவதாக இருக்கிறது  மேலும் உலக தலைவர்கள் அனைவரும் அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை உருவாக்கம் வேண்டும் என்று கட்டுரையாளர் கேட்டுக்கொள்கிணறார். எது எப்படி எனினும் இன்றுவரை தலைமைநாடுகள் ஆயுத உற்பத்தியை  இன்றுவரை நிறுத்தாமையானது கவலை தரும் விடயமே.

---

## மட்ட...

31 ஆம் பக்கத் தொடர்ச்சி

என்று ஆமோதித்த கம்சன், குழந்தையின் கால்களைப் பிடித்து மேலே வீசினான். வாளைத் திருப்பி பிடித்தான். ஆனால், மேலே நிமிர்ந்து பார்த்த கம்சன் ஆகாயத்தில் கண்ட காட்சியும் கேட்ட வார்த்தைகளாலும் வாய்பிளந்து, விழிகள் பிதுங்க மெய் மறந்து நின்றான்.

மேலே சென்ற குழந்தை உருப்பெருத்த பெண்ணாகிப் பித்துப் பிடித்தவள் போல் நின்றதையும் பித்தனாகிய சிவனார், நில்லு பேச்சி! நில்லு பேச்சி! என்று கூறியதும், கண்கள் கோபாக்கினி கொண்ட பேச்சி கோலம் மாறிப் பராசக்தி அசுரர்களை அழிப்பதற்காக எப்போதும் அவதாரம் எடுக்கும் நீலியுருக் கொண்டு, அடேய் கம்சா! நானே உன்னை அழித்திருப்பேன், ஆனால் நீ தெரிந்தோ தெரியாமலோ என் பாதங்களைப் பற்றி விட்டாய் என்பதற்காக உன்னை விட்டு விட்டேன் உன்னழிவுக்கு நானே மூலகாரணி விட்டு விட்டேனென்று மெத்தனம் கொண்டு எக்களிப்புக் கொள்ளாதே. ஆயர்பாடியில் என் அண்ணன் கண்ணன், மாயக்கிருஷ்ணன் உன்னையழிக்கவென்றே வளர்கின்றான் என்று கூறியதைக் கேட்ட கம்சன் அதிர்ச்சியால் வாயுழற நீ யார்? என்றான். தன்னையறியாமலே தன்னிரு கைகளையும் கூப்பி நின்ற கம்சனுக்கு சங்கு, சக்கரம் ஏந்திய கைகளுடன் அபய, வரதம் காட்டிய கரங்களுடனும் சாந்த சொரூபியாக காட்சியளித்து, நாராயணி தானே என உணர வைத்தாள். மருண்டு நின்ற கம்சன் மயங்கி வீழ்ந்தான். அரனார் பேச்சியை நோக்கி, நீ ஆகாய மார்க்கமாக நின்றவதாரம் காட்டியதால் இன்று முதல் ஆகாயப் பேச்சியாகி அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்வாய் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணன் படிப்படியாக தமது அவதார நோக்கை நோக்கிப் பல வகையான திருவிளையாடல்களை காட்டி, அவரின் அவதார நோக்கங்களுள் ஒன்றான தனது தங்கை பேச்சியின் கூற்றுப்படி மாமன் கம்சனை வதம் செய்ய ஆயர் பாடி மக்கள் அகம் மகிழ்ந்து கண்ணனுக்கு கனத்த விழா எடுத்ததோடு கண்ணனின் ஆஞ்சைப்படி, ஆண்டு தோறும் கம்சசங்கார காரணியான பேச்சியம்பாளுக்கு தண்ணீர்ச்சோறு, பால், தயிர், பலகாரங்கள், கூழ், சர்க்கரை, கற்கண்டு, கனிவர்க்கங்களுடன் சிறு குழந்தைகளையும் வைத்து அவர்களுக்கும் பள்ளயம் படைத்து, பூசகர்கள் கன்னிமார் பூசை செய்து பேச்சியன்னையை குளிர்வித்ததனாலேயே பள்ளயப் பேச்சி எனப் பெயர் பெற்றதாகவும், இவ்வகையான தண்ணீர்ச் சோறு, பால், தயிர், பலகாரங்கள், கூழ், கர்க்கரை, கற்கண்டு, கனிவர்க்கங்கள் சேர்ந்த படையலை மக்கள் விருந்தாக எண்ணாமல் ஆண்டுக் கொருமுறை பேச்சியன்னையர்க்கு பள்ளயமாயளித்து நோய் தீர்க்கும் மருந்தாக எண்ணி உண்டு பல வகையான நோய் நொடிகளையும் தீர்த்துக் கொள்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாநிலத்தில் கல்லடி- உப்போடை நொச்சிமுனைப் பேச்சியம்பாள், சின்ன ஊறணி ஆதிபேச்சியம்பாள், சிறுவாமுனை ஸ்ரீபேச்சியம்பாள், ஆரையம்பதிப் பேச்சியம்பாள், குருக்கள் மடம்- வெள்ளக்கட்டுப் பேச்சியம்பாள், மொறக்கட்டான்சேனை ஸ்ரீபேச்சியம்பாள், விநாயகபுரம் பேச்சியம்பாள், பெரிய நீலாவணைப்பேச்சியம்பாள், விளாவெட்டுவான் ஸ்ரீபேச்சியம்பாள், வாழைச்சேனை ஸ்ரீபேச்சி, குளுவினாமடு பேச்சியம்பாள், குடும்பிமலைப் பேச்சியம்பாள், வெல்லாவெளிப் பேச்சியம்பாள் ஆகிய கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபட்டு வரப்படுகின்றாள். மேற்கூறப்பட்ட கோயில்களில் ஆண்டுக்கொரு முறை வெவ்வேறு மாதங்களில், வெவ்வேறு எண்ணிக்கையான நாட்களில் கதவு திறத்தலுடன் சடங்கு ஆரம்பமாகிப் பள்ளயச் சடங்குடன் கும்பம் சொரிதலுடன் நிறைவு பெறுகின்றது. இவற்றுள் மிகப் பிரசித்தி பெற்ற ஆலயங்களாகவும் மட்டக்களப்பு மாநில மக்கள் மட்டுமன்றிப் புலம் பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாட்டு மக்களாலும் நம்பிக்கையோடு வழிபடப்படும் ஆலயங்களாக கல்லடி- உப்போடை நொச்சிமுனைப் பேச்சியம்பாள் ஆலயமும் ஆரையம்பதி பேச்சியம்பாள் ஆலயமும் விளங்குகின்றது.

கல்லடி- உப்போடைப் பேச்சியம்பாளின் சடங்கு ஆண்டு தோறும் ஆடியமாவாசைக்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி ஒன்பதாம் நாள் திங்கட்கிழமை மாலை பள்ளயச் சடங்கு நிறைவு பெற்று கடலில் கும்பம் சொரிதலுடன் நிறைவு பெறும். ஆரையம்பதி பேச்சியம்பாள் சடங்கு ஆடி மாதம் வரும் ஒரு வெள்ளிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி அடுத்து வரும் வெள்ளிக்கிழமை தீப்பள்ளயம் நடைபெற்றுச் சனிக்கிழமை அதிகாலை பள்ளயச் சடங்குடன் நிறைவுற்று கடலில் கும்பம் சொரிதலுடன் நிறைவு பெறும். காளி, பேச்சி, மாரிக்கு கும்பங்கள் வைத்து பத்ததி முறைப்படி வழிபாடு இயற்றுவர். பேச்சியம்பாள் வழிபாட்டுக்குரிய பத்ததியில் பள்ளயப் பேச்சிப் பத்ததி, சுடலைப் பேச்சிப் பத்ததி எனும் இருபத்ததிகளே உள்ளன. அவற்றிலேதான் ஆகாயப் பேச்சிக்குரிய பூசை முறைகளும் காணப்படுகின்றன. அதிகமான ஆலயங்களில் ஐந்து நாட்கள் அல்லது மூன்று நாட்கள் சடங்கு நடைபெற்று வருகின்றன. தேவாதிகள் ஆடி அடியவர்களுக்கு வாக்குகள், மருந்தளித்து வருவது பேச்சியம்பாள் ஆலயச் சடங்குகளில் விசேட தன்மையாகும்.

சில ஆலயங்களில் வெள்ளிக்கிழமை, பூரணைப் பூசைகள் நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 04.08.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.